876
16.x.07

வெளியீடு : 16-7-2007 Issued : 16-7-2007

சென்னை-600 009

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

**செவ்வாய்க்கிழமை, ஏப்ரல் 17, 2007—தொகுதி 29—எண்**

**Tuesday the 17th April 2007—Volume 29—No. 1**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009*

...gislative Assembly Secretariat, Chennai - 600 009

**[Price Rs. 3.00**

227569

17-4-2007

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| ஆளுநரும் அமைச்சரவையும் | iii-viii |
| Governor and Council of Ministers | ix-xiii |
| பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள் | xv-xviii |
| பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி) | xix-xxix |
| **1. வினாக்கள்-விடைகள்—** | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 1-35 |
| **2. சிறப்புக் கவன ஈர்ப்பு—** | |
| கோவிந்தவாடி அகரம் அருகில் வேன்மீது இரயில் மோதிப் பலர் இறந்தது | 35-54 |
| திரு. பி.கே. சேகர்பாபு | 36-37 |
| திரு. ஆர். காந்தி | 37-39 |
| திரு. சி. ஞானசேகரன் | 39-42 |
| திரு. கி. ஆறுமுகம் | 42-44 |
| திரு. சி. கோவிந்தசாமி | 44-47 |
| திரு. சு. குணசேகரன் | 47-48 |
| மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி | 49-54 |
| **3. தகவல் கோரல்—** | |
| (அ) தரகர்கள்மூலம் சிறுநீரகங்கள் வாங்கி விற்பனை செய்தது தொடர்பான விசாரணைக்கு உத்தரவிட்டது | 54-64 |
| (ஆ) அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்களுக்குப் பேசும் வாய்ப்பு | 72-73 |

| | பக்கங்கள் |
|---|---|
| **4. கவன ஈர்ப்பு—** | |
| (அ) தாராபுரம் தொகுதி, அரியநாச்சிபாளையம் கிராமத்தில் கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணிகள் தொடங்கப்படாதது | 64-68 |
| (ஆ) கம்பம் தொகுதி, ஆனைமலையான்பட்டி, காட்டுப் பன்றிகள் வாழை மரங்களை நாசம் செய்தது | 68-72 |
| **5. மானியக் கோரிக்கைகள், 2007–2008, விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி | |
| (அ) கோரிக்கை எண் 12–கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)<br>(ஆ) கோரிக்கை எண் 13–உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) | 73-201 |
| மாண்புமிகு திரு. எ.வ. வேலு | 73,94,120, 123-126,134-135, 139,169,171-200 |
| திரு. வே. செந்தில் பாலாஜி | 121-130,132-133, 135-136 |
| திரு. துரை சந்திரசேகரன் | 136,138-145 |
| திரு. இரா. இராம்பிரபு | 146-150 |
| *திரு. கோ. எதிரொலி மணியன் | 92,118,151-157 |
| திருமதி ஜி. லதா | 90,115,158-163 |
| *திரு. கே. உலகநாதன் | 118-119, 163-166 |
| *திரு. பா. வேல்துரை | 166-170 |
| **6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** | 202 |




## ஆளுநரும் அமைச்சரவையும்

### ஆளுநர் – திரு. சுர்ஜித் சிங் பர்னாலா

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

**1. முதலமைச்சர்** .. **மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:**

பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, இந்தியக் காவல் பணி, ஏனைய அனைத்திந்தியப் பணிகள், இலஞ்ச ஒழிப்பு, மாவட்ட வருவாய் அலுவலர்கள், உள் துறை, காவல், தொழில்கள், தகவல் தொழில் நுட்பவியல், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, கருப்பஞ்சாற்றுக் கசண்டு, சிறுபான்மையினர் நலன், தமிழ் ஆட்சி மொழி, தமிழ்ப் பண்பாடு, கடவுச் சீட்டுகள் மற்றும் சிறப்பு முயற்சிகள்

**2. நிதி அமைச்சர்** .. **மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:**

நிதி, திட்டமிடல், சட்டமன்றப் பேரவை மற்றும் தேர்தல்கள்

**3. மின்சாரத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:**

மின்சாரம், மரபுசாரா எரிசக்தி மேம்பாடு மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தம்

**4. ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:**

நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள், நகர்ப் பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்

**5. புள்ளியியல் மற்றும் முன்னாள் இராணுவத்தினர் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கோ.சி. மணி:**

புள்ளியியல் மற்றும் முன்னாள் இராணுவத்தினர் நலன்

**6. வேளாண்மைத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:**

வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக் கலை, கரும்புத் தீர்வை, கரும்பு மேம்பாடு மற்றும் தரிசு நில மேம்பாடு

**7. பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. துரைமுருகன்:**

பொதுப் பணிகள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனம், செயற்திட்டப் பணிகள், சட்டம் மற்றும் நீதிமன்றங்கள்

**8. உயர் கல்வித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:**

தொழில்நுட்பக் கல்வி உள்ளிட்ட உயர் கல்வி, மின்னணுவியல், அறிவியல் தொழில்நுட்பவியல், சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள்

227569
சென்னை-600 008
நூலகம்



**9. போக்குவரத்துத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.என். நேரு:**

போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து மற்றும் இயக்கூர்திகள் சட்டம்

**10. பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:**

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் நலன், வெளிநாடுவாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டவர்கள், பத்திரப் பதிவு மற்றும் முத்திரைத் தாள் சட்டம்

**11. ஊரகத் தொழில் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:**

குடிசைத் தொழில்கள் உட்பட ஊரகத் தொழில்கள் மற்றும் சிறு தொழில்கள்

**12. வருவாய் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:**

வருவாய், மாவட்ட வருவாய்த் துறைப் பணியாளரமைப்பு, துணை ஆட்சியர்கள், சிறைச்சாலைகள், எடைகள்–அளவைகள், கடன் கொடுத்தல் குறித்த சட்டம் உள்ளிட்ட கடன் நிவாரணம், சீட்டு நிதிகள் மற்றும் நிறுவனங்களைப் பதிவு செய்தல்

**13. சுற்றுலாத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:**

சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்

D
V21,3/P07
P07. 29.1

14. செய்தித் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:

செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பவியல் மற்றும் திரைப்படச் சட்டம், எழுதுபொருள் மற்றும் அச்சு, அரசு அச்சகம், நகரமைப்புத் திட்டமிடல், நகர்ப் பகுதி வளர்ச்சி மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்

15. உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. எ.வ. வேலு:

உணவு, நுகர்பொருட்கள் வழங்கல், நுகர்வோர் பாதுகாப்பு, விலைக் கட்டுப்பாடு மற்றும் கூட்டுறவு

16. வீட்டு வசதி மற்றும் குடிசை மாற்றுத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன்:

வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி மற்றும் வீட்டு வசதி மேம்பாடு, குடிசை மாற்று வாரியம் மற்றும் இட வசதிக் கட்டுப்பாடு

17. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:

மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலன்

18. தொழிலாளர் நலத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்:

தொழிலாளர் நலன், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, எஃகுக் கட்டுப்பாடு, செய்தித்தாள் கட்டுப்பாடு, மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் நகர மற்றும் ஊரக வேலைவாய்ப்பு



19. இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:

இந்து சமய மற்றும் அறநிலையங்கள்

20. கைத்தறித் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா:

கைத்தறி மற்றும் துணித் தொழில்

21. பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:

பள்ளிக் கல்வி மற்றும் தொல் பொருளியல்

22. வணிக வரித் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா:

வணிக வரிகள்

23. சுற்றுச்சூழல் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்:

விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், சுற்றுச்சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு மற்றும் இஸ்லாமிய அறக்கட்டளைகள் (வக்ஃபு)

24. வனத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:

வனங்கள் மற்றும் சின்கோனா

25. நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:

நெடுஞ்சாலைகள் மற்றும் துறைமுகங்கள்

**26. சமூக நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை:**

மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உள்ளிட்ட சமூக நலன், மதிய சத்துணவு, ஊனமுற்றோர் நலன், அனாதை இல்லங்கள் மற்றும் குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் மற்றும் இரவலர் காப்பு இல்லங்கள்

**27. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:**

கால்நடை பராமரிப்பு

**28. ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி:**

ஆதி திராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்கள் நலன்

**29. மீன்வளத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி:**

மீன்வளம் மற்றும் மீன் வளர்ச்சிக் கழகம்

**30. பால் வளத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. உ. மதிவாணன்:**

பால் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி

**31. கதர்த் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன்:**

கதர் கிராமத் தொழில் வர்ரியம், பூமிதானம் மற்றும் கிராமதானம்



## GOVERNOR AND COUNCIL OF MINISTERS

## GOVERNOR -- THIRU SURJIT SINGH BARNALA

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

**1. Chief Minister** .. **The Hon. Kalaignar M. Karunanidhi:**

Public, General Administration, Indian Administrative Service, Indian Police Service, Other All India Services, Prevention of Corruption, District Revenue Officers, Home, Police, Industries, Information Technology, Prohibition and Excise, Molasses, Minorities Welfare, Tamil Official Language & Tamil Culture, Passports and Special Initiatives

**2. Minister for Finance** .. **The Hon. Prof. K. Anbazhagan:**

Finance, Planning, Legislative Assembly and Elections

**3. Minister for Electricity** .. **The Hon. Thiru Arcot N. Veerasamy:**

Electricity, Non-Conventional Energy Development and Personnel and Administrative Reforms

**4. Minister for Rural Development and Local Administration** .. **The Hon. Thiru M.K. Stalin:**

Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural Indebtedness, Urban and Rural Water Supply

**5. Minister for Statistics and Ex-Servicemen** .. **The Hon. Thiru Ko.Si. Mani:**

Statistics and welfare of Ex-Servicemen

6. **Minister for Agriculture** .. **The Hon. Thiru Veerapandi S. Arumugam:**

Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess, Sugarcane Development and Wasteland Development

7. **Minister for Public Works and Law** .. **The Hon. Thiru Duraimurugan:**

Public Works, Irrigation including Minor Irrigation, Programme Works, Law and Courts

8. **Minister for Higher Education** .. **The Hon. Dr. K. Ponmudi:**

Higher Education including Technical Education, Electronics, Science and Technology, Mines and Minerals

9. **Minister for Transport** .. **The Hon. Thiru K.N. Nehru:**

Transport, Nationalised Transport and Motor Vehicles Act

10. **Minister for Backward Classes** .. **The Hon. Thiru M.R.K. Panneerselvam:**

Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Indians Overseas, Refugees and Evacuees, Registration and Stamp Act

11. **Minister for Rural Industries** .. **The Hon. Thiru Pongalur N. Palanisamy:**

Rural Industries including Cottage Industries and Small Industries



12. **Minister for Revenue and Prisons** .. **The Hon. Thiru I. Periasamy:**

Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Prisons, Weights and Measures, Debt Relief including Legislation on Money Lending, Chits and Registration of Companies

13. **Minister for Tourism** .. **The Hon. Thiru N. Suresh Rajan:**

Tourism and Tourism Development Corporation

14. **Minister for Information** .. **The Hon. Thiru Parithi Ellamvazhuthi:**

Information and Publicity, Film Technology and Cinematograph Act, Stationery and Printing, Government Press, Town Planning, Urban Development and Chennai Metropolitan Development Authority

15. **Minister for Food and Co-operation** .. **The Hon. Thiru E.V. Velu:**

Food, Civil Supplies, Consumer Protection, Price Control and Co-operation

16. **Minister for Housing and Slum Clearance** .. **The Hon. Thiru Suba. Thangavelan:**

Housing, Rural Housing, Housing Development, Slum Clearance Board and Accommodation Control

17. **Minister for Health** .. **The Hon. Thiru K.K.S.S.R. Ramachandran:**

Health, Medical Education and Family Welfare

| | | |
|---|---|---|
| 18. **Minister for Labour** | .. | **The Hon. Thiru T.M. Anbarasan:**<br>Labour, Population, Employment and Training, Steel Control, Newsprint Control, Census and Urban and Rural Employment |
| 19. **Minister for Hindu Religious and Charitable Endowments** | .. | **The Hon. Thiru K.R. Periakaruppan:**<br>Hindu Religious and Charitable Endowments |
| 20. **Minister for Handlooms** | .. | **The Hon. Thiru NKK. P. Raaja:**<br>Handlooms and Textiles |
| 21. **Minister for School Education** | .. | **The Hon. Thiru Thangam Thenarasu:**<br>School Education and Archaeology |
| 22. **Minister for Commercial Taxes** | .. | **The Hon. Thiru S.N.M. Upayathulla:**<br>Commercial Taxes |
| 23. **Minister for Environment** | .. | **The Hon. Thiru T.P.M. Mohideen Khan:**<br>Sports and Youth Welfare, Environment and Pollution Control and Wakfs |
| 24. **Minister for Forests** | .. | **The Hon. Thiru N. Selvaraj:**<br>Forests and Cinchona |
| 25. **Minister for Highways** | .. | **The Hon. Thiru M.P. Saminathan:**<br>Highways and Ports |
| 26. **Minister for Social Welfare** | .. | **The Hon. Dr. (Tmt.) Poongothai:**<br>Social Welfare including Women's and Children's Welfare, Nutritious Noon Meal, Welfare of the Disabled, Orphanages and Correctional Administration, Integrated Child Development and Beggar Homes |
| 27. **Minister for Animal Husbandry** | .. | **The Hon. Tmt. P. Geetha Jeevan:**<br>Animal Husbandry |
| 28. **Minister for Adi Dravidar Welfare** | .. | **The Hon. Tmt. A. Tamilarasi:**<br>Adi Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour |
| 29. **Minister for Fisheries** | .. | **The Hon. Thiru K.P.P. Samy:**<br>Fisheries and Fisheries Development Corporation |
| 30. **Minister for Dairy Development** | .. | **The Hon. Thiru U. Mathivanan:**<br>Milk and Dairy Development |
| 31. **Minister for Khadi** | .. | **The Hon. Thiru K. Ramachandhiran:**<br>Khadi and Village Industries Board, Bhoodhan and Gramadhan |

# பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்

## பேரவைத் தலைவர்

மாண்புமிகு திரு. இரா. ஆவுடையப்பன்

## பேரவைத் துணைத் தலைவர்

மாண்புமிகு திரு. வீ.பெ. துரைசாமி

## மாற்றுத் தலைவர்கள் #

திரு. ப. ரங்கநாதன்

திரு. துரை சந்திரசேகரன்

டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்

திரு. தி. வேல்முருகன்

செல்வி கே. பாலபாரதி

திரு. வை. சிவபுண்ணியம்

## செயலாளர்

திரு. மா. செல்வராஜ்

---

# 26-3-2007 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு.

| | |
|---|---|
| திரு. இல. மாரியப்பன், பி.ஏ., பி.ஜி.எல். | - இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. வெ.சி. சுப்ரமணியன், எம்.ஏ., பி.எல். | - இணைச் செயலாளர் |
| திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். | - இணைச் செயலாளர் |
| திரு. நா. நடராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | - இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. கோ. இரவீந்திரன், எம்.ஏ., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. தி. உமாபதி, பி.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. தி. கோவிந்தராசு, எம்.ஏ., பி.எட்., பி.எல்., | - துணைச் செயலாளர் |
| திரு. எ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்சி., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் |
| திருமதி சீ. நிர்மலா, பி.காம். | - துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திருமதி ந. மீனாட்சி, எம்.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் |
| திருமதி ப. சரசுவதி, எம்.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. மு. பைரவன், எம்.காம்., | - குழு அலுவலர் |
| திரு. ப. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. கோ. தேவராசன், பி.ஏ. | - குழு அலுவலர் |
| திருமதி இரா. கஸ்தூரி, பி.ஏ., பி.ஜி.எல். | - குழு அலுவலர் |



| | |
|---|---|
| திருமதி சை.உ. சலீம் உன்னிசா, பி.ஏ. | - சார்புச் செயலாளர் |
| செல்வி நா. இந்திரா பாய், பி.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. நா. வீரராகவன், எம்.ஏ., பி.ஜி.டி.சி.ஏ. | - தலைமை நிருபர் |
| திரு. த.ர. நாகராஜன், எம்.ஏ., பி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. கோ. சுப்புராம், பி.ஏ. | - சார்புச் செயலாளர் |
| திரு. மு. கதிரேசன், எம்.ஏ. | - தலைமை நிருபர் |
| திரு. து. சீனிவாசன், பி.ஏ. | - சார்புச் செயலாளர் |
| திரு. க. லட்சுமணன், பி.எஸ்சி., பி.எல். | - பேரவைத் தலைவரின் தனிச் செயலர் |
| திருமதி து. இராஜேஸ்வரி, எம்.ஏ., பி.எட்., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. ம. பன்னீர் செல்வம் | - தலைமை நிருபர் |
| திருமதி இரா. சந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. கி. மாதவன், எம்.ஏ., பி.ஜி.எல். | - தலைமை நிருபர் |
| திரு. இரா. வெங்கடகிருஷ்ணன், பி.எஸ்சி., பி.எல். | - தலைமை நிருபர் |
| திருமதி அ. லெற்றிஸால், பி.ஏ. | - சார்புச் செயலாளர் |
| திருமதி ஓ.வி. கல்யாணி, பி.எஸ்சி., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. கே. இராமகிருஷ்ணா, பி.எஸ்சி., பி.எல். | - சார்புச் செயலாளர் |
| திருமதி கோ. காயத்ரி, பி.எஸ்சி. | - சார்புச் செயலாளர் |
| திருமதி இரா. பிரேமா, பி.காம்., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |

திரு. கே. பாலசுப்ரமணியன், எம்.ஏ., பி.ஜி.எல். - சார்புச் செயலாளர்

திருமதி கு. இந்துமதி, பி.எஸ்சி., எம்.எட்., பி.ஜி.எல். - சார்புச் செயலாளர்



**பேரவை உறுப்பினர்கள்**

**(அகர வரிசைப்படி)**

**பெயர்களும் தொகுதிகளும்**

| | | |
|---|---|---|
| 1. | அங்கையற்கண்ணி, செல்வி ஆ. | - சங்கராபுரம் |
| 2. | அப்துல் பாசித், திரு. எச். | - வாணியம்பாடி |
| 3. | அப்பாவு, திரு. மு. | - ராதாபுரம் |
| 4. | அமரமூர்த்தி, திரு. து. | - அரியலூர் |
| 5. | அரி, திரு. கோ. | - திருத்தணி |
| 6. | அருண்மொழிதேவன், திரு. ஆ. | - சிதம்பரம் |
| 7. | அருள் அன்பரசு, திரு. | - சோளிங்கர் |
| 8. | அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், திரு. | - திருச்செந்தூர் |
| 9. | அன்பரசன், திரு. தா.மோ. | - ஆலந்தூர் |
| 10. | அன்பழகன், திரு. எம். | - பழனி (செ.வ.) |
| 11. | அன்பழகன், திரு. கே.பி. | - பாலக்கோடு |
| 12. | அன்பழகன், பேராசிரியர் க. | - துறைமுகம் |
| 13. | அன்பில் பெரியசாமி, திரு. | - திருச்சிராப்பள்ளி—1 |
| 14. | ஆவுடையப்பன், திரு. இரா. | - அம்பாசமுத்திரம் |
| 15. | ஆறுமுகம், திரு. கி. | - செங்கல்பட்டு |
| 16. | ஆற்காடு நா. வீராசாமி, திரு. | - அண்ணா நகர் |
| 17. | இராசசேகரன், திரு. எஸ். | - ஆலங்குடி |
| 18. | இராணி, திருமதி இரா. | - உப்பிலியாபுரம் (ஆவா.) |
| 19. | இராமகிருஷ்ணன், திரு. நா. | - கம்பம் |
| 20. | இராமசாமி, திரு. கரி. | - திருவாடானை |

21. இராமசாமி, திரு. தி. - ஸ்ரீவில்லிபுத்தூர்
22. இராமசுவாமி, திரு. கே.பி. - ராசிபுரம்
23. இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். - சாத்தூர்
24. இராமச்சந்திரன், திரு. டி. - தளி
25. இராமன், டாக்டர் இ.எஸ்.எஸ். - பள்ளிப்பட்டு
26. இராம்பிரபு, திரு. இரா. - பரமக்குடி (செ.வ.)
27. இராஜா, திரு. எஸ்.ஆர். - தாம்பரம்
28. இராஜேந்திரன், திரு. ஆ - வீரபாண்டி
29. இராஜேந்திரன், திரு. இரா. - பனமரத்துப்பட்டி
30. இராஜேந்திரன், திரு. க. - ஜெயங்கொண்டம்
31. இராஜேந்திரன், திரு. சபா. - நெல்லிக்குப்பம்
32. இராஜ்குமார், திரு. ம. - பெரம்பலூர் (செ.வ.)
33. இளமதி சுப்பிரமணியன், திருமதி - வலங்கைமான் (செ.வ.)
34. இளவரசன், திரு. வீர. - திருமங்கலம்
35. இளவழகன், திரு. கே.எல். - ஆற்காடு
36. உதயசூரியன், திரு. தா. - சின்னசேலம்
37. உதயம் சண்முகம், திரு. - அறந்தாங்கி
38. உபயதுல்லா. திரு. சி.நா.மீ. - தஞ்சாவூர்
39. உலகநாதன், திரு. கே. - திருத்துறைப்பூண்டி (செ.வ.)
40. எதிரொலி மணியன், திரு. கோ. - பெரணமல்லூர்
41. ஐயப்பன், திரு. கோ. - கடலூர்
42. கணபதி, திரு. ந. - வானூர் (செ.வ.)



43. கணேசன், திரு. ஆர்.டி. - தேனி
44. கண்ணப்பன், திரு. மு. - தொண்டாமுத்தூர்
45. கண்ணன், திரு. பெ. - தாரமங்கலம்
46. கண்ணன், திரு. வே. - செஞ்சி
47. கமலாம்பாள், திருமதி பெ. - காஞ்சிபுரம்
48. கருணாநிதி, கலைஞர் மு. - சேப்பாக்கம்
49. கருப்பசாமி, திரு. சொ. - சங்கரநயினார்கோவில் (செ.வ.)
50. கருப்பசாமி பாண்டியன், திரு. வீ. - தென்காசி
51. கலியவரதன், திரு. வீ.ஏ.டி. - முகையூர்
52. கலீலுர் ரஹ்மான், திரு. ம.அ. - அரவக்குறிச்சி
53. கலைராஜன், திரு. வி.பி. - தியாகராய நகர்
54. காந்தி, திரு. ஆர். - இராணிப்பேட்டை
55. காமராஜ், திரு. பெ. - கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
56. காயத்ரி தேவி, டாக்டர் (திருமதி) கே. - மதுராந்தகம்
57. காவேரி, திரு. வை. - எடப்பாடி
58. கிருஷ்ணமூர்த்தி, திரு. அக்ரி எஸ்.எஸ். - கலசப்பாக்கம்
59. கீதா ஜீவன், திருமதி பி. - தூத்துக்குடி
60. குணசேகரன், திரு. சு. - சிவகங்கை
61. குணசேகரன், திரு. ம. - மானாமதுரை (செ.வ.)
62. குத்தாலம் க. அன்பழகன், திரு. - குத்தாலம்
63. குமரகுரு, திரு. இரா. - திருநாவலூர்

64. குருசாமி, திரு. செ. - அந்தியூர் (செ.வ.)

65. கோபாலன், திரு. போ. - உதகமண்டலம்

66. கோபிநாத், திரு. கே. - ஒசூர்

67. கோவிந்தசாமி, திரு. சி. - திருப்பூர்

68. கோவை தங்கம், திரு. - வால்பாறை (செ.வ.)

69. சக்கரபாணி, திரு. அர. - ஒட்டன்சத்திரம்

70. சங்கரவல்லி என்கிற சங்கரிநாராயணன், திருமதி - அச்சரப்பாக்கம் (செ.வ.)

71. சண்முகம், திரு. சி.வி. - திண்டிவனம்

72. சண்முகவேலு, திரு. சி. - உடுமலைப்பேட்டை

73. சதன் திருமலைக்குமார், டாக்டர் தி. - வாசுதேவநல்லூர் (செ.வ.)

74. சந்திரகாசி, திரு. மா. - வரகூர் (செ.வ.)

75. சந்திரா, திருமதி மு. - ராஜபாளையம் (செ.வ.)

76. சாமி, திரு. ஆர். - மேலூர்

77. சாமி, திரு. கே.பி.பி. - திருவொற்றியூர்

78. சாமிநாதன், திரு. மு.பெ. - வெள்ளக்கோவில்

79. சிவசங்கர், திரு. எஸ்.எஸ். - ஆண்டிமடம்

80. சிவபுண்ணியம், திரு. வை. - மன்னார்குடி

81. சிவராஜ், திரு. சு. - ரிஷிவந்தியம்

82. சிவானந்தம், திரு. ஆர். - ஆரணி

83. சிவாஜி, திரு. இ.ஏ.பி. - திருவள்ளூர்

84. சின்னசாமி, திரு. அ. - பேரணாம்பட்டு (செ.வ.)

85. சின்னசாமி, திரு. ஆர். - சிங்காநல்லூர்



86. சின்னச்சாமி, திரு. செ. - மருங்காபுரி

87. சின்னதுரை, திரு. கு. - தலைவாசல் (செ.வ.)

88. சின்னப்பன், திரு. போ. - விளாத்திகுளம்

89. சின்னராஜ், திரு. ஓ.கே. - மேட்டுப்பாளையம்

90. சீனிவாசன், திரு. கு. - பூங்கா நகர்

91. சுதர்சனம், திரு. டி. - பூந்தமல்லி

92. சுந்தரம், திரு. எம்.ஆர். - ஆத்தூர்

93. சுந்தரம், திரு. ந. - காரைக்குடி

94. சுந்தர், திரு. க. - உத்திரமேரூர்

95. சுப்பிரமணியம், திரு. ஓ. - பவானிசாகர்

96. சுப்புராம், திரு. ராம. - திருமயம்

97. சுப்ரமணியன், திரு. ந. - குளத்தூர் (செ.வ.)

98. சுரேஷ் ராஜன், திரு. என். - கன்னியாகுமரி

99. சூரியகுமார், திரு. என்.கே.ஆர். - நாட்றாம்பள்ளி

100. செங்குட்டுவன், திரு. டி. - கிருஷ்ணகிரி

101. செங்கோட்டையன், திரு. கே.ஏ. - கோபிசெட்டிப்பாளையம்

102. செந்தமிழன், திரு. ஞா. - சைதாப்பேட்டை

103. செந்தமிழ்ச்செல்வன், திரு. பா. - மேல்மலையனூர்

104. செந்தில் பாலாஜி, திரு. வே. - கரூர்

105. செல்வம், திரு. கு. - மங்களூர் (செ.வ.)

106. செல்வராஜ், திரு. என். - முசிறி

107. செல்வராஜ், திரு. து. - ஸ்ரீவைகுண்டம்

108. செல்வி ராமஜெயம், திருமதி - புவனகிரி

109. சேகரன், திரு. கூ.ந. - திருவெறும்பூர்

110. சேகர், திரு. எஸ்.வி. - மயிலாப்பூர்

111. சேகர்பாபு, திரு. பி.கே. - டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்

112. சையது கௌஸ் பாஷா, திரு. சை. - மதுரை மத்தி

113. சௌந்தரபாண்டியன், திரு. அ. - லால்குடி

114. சௌந்திரபாண்டியன், திரு. அ. - குன்னூர் (செ.வ.)

115. ஞானசேகரன், திரு. சி. - வேலூர்

116. ஞானதாஸ், திரு. ஆர். - சிவகாசி

117. டில்லி பாபு, திரு. ப. - அரூர் (செ.வ.)

118. தங்கமணி, திரு. பி. - திருச்செங்கோடு

119. தங்கம் தென்னரசு, திரு. - அருப்புக்கோட்டை

120. தங்கவேலன், திரு. சுப. - கடலாடி

121. தண்டபாணி, திரு. மா. - வேடசந்தூர்

122. தமிழரசி, திருமதி ஆ. - சமயநல்லூர் (செ.வ.)

123. தமிழரசு, திரு. அ. - ஓமலூர்

124. தமிழ்செல்வன், திரு. சி. - ஏற்காடு (ஆ.வா.)

125. தம்பிதுரை, முனைவர் மு. - பர்கூர்

126. தர்மலிங்கம், திரு. எல்.பி. - சத்தியமங்கலம்

127. தாமோதரன், திரு. செ. - கிணத்துக்கடவு

128. தியோடர் ரெஜினால்டு, திரு. த. - பத்மநாபபுரம்

129. திருநாவுக்கரசு, திரு. கே. - உளுந்தூர்பேட்டை (செ.வ.)

130. துரைக்கண்ணு, திரு. இரா. - பாபநாசம்



131. துரை சந்திரசேகரன், திரு. - திருவையாறு

132. துரைசாமி, திரு. வீ.பெ. - சங்கரி (செ.வ.)

133. துரைமுருகன், திரு. - காட்பாடி

134. துரைராஜ், திரு. சி. - சேடப்பட்டி

135. தேன்மொழி, திருமதி எஸ். - நிலக்கோட்டை (செ.வ.)

136. நன்மாறன், திரு. என். - மதுரை கிழக்கு

137. நெடுஞ்செழியன், டாக்டர் க. - கபிலர்மலை

138. நெடுஞ்செழியன், திரு. ரெ. - புதுக்கோட்டை

139. நேரு, திரு. கே.என். - திருச்சிராப்பள்ளி-2

140. பதர் சயீத், திருமதி - திருவல்லிக்கேணி

141. பத்மாவதி, திருமதி பி. - நன்னிலம் (செ.வ.)

142. பரஞ்ஜோதி, திரு. மு. - ஸ்ரீரங்கம்

143. பரிதி இளம்வழுதி, திரு. - எழும்பூர் (செ.வ.)

144. பலராமன், திரு. பி. - பொன்னேரி (செ.வ.)

145. பழனிசாமி, திரு. ஆர்.எம். - மொடக்குறிச்சி

146. பன்னீர்செல்வம், திரு. எம். - சீர்காழி (செ.வ.)

147. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. - குறிஞ்சிப்பாடி

148. பன்னீர்செல்வம், திரு. ஓ. - பெரியகுளம்

149. பாண்டுரங்கன், திரு. கு. - அணைக்கட்டு

150. பாபு, திரு. வி.எஸ். - புரசைவாக்கம்

151. பாரதி மோகன், திரு. ஆர்.கே. - திருவிடைமருதூர்

152. பாலபாரதி, செல்வி கே. - திண்டுக்கல்

153. பிச்சாண்டி, திரு. கு. - திருவண்ணாமலை

| | | |
|---|---|---|
| 154. | பிரபாவதி, திருமதி பெ. | - தாராபுரம் (செ.வ.) |
| 155. | பிரேமா, திருமதி ஆர். | - அவினாசி (செ.வ.) |
| 156. | பீட்டர் அல்போன்ஸ், திரு. எஸ். | - கடையநல்லூர் |
| 157. | புஷ்பராஜ், திரு. செ. | - கண்டமங்கலம் (செ.வ.) |
| 158. | பூங்கோதை, டாக்டர் (திருமதி) | - ஆலங்குளம் |
| 159. | பெரியகருப்பன், திரு. கே.ஆர். | - திருப்பத்தூர் |
| 160. | பெரியசாமி, திரு. இ. | - ஆத்தூர் |
| 161. | பெரியசாமி, திரு. மு.க. | - பூம்புகார் |
| 162. | பெரியண்ணன், திரு. பி.என். | - பெண்ணாகரம் |
| 163. | பொங்கலூர் நா. பழனிசாமி, திரு. | - கோயம்புத்தூர் கிழக்கு |
| 164. | பொள்ளாச்சி வி. ஜெயராமன், திரு. | - பொள்ளாச்சி |
| 165. | பொன்முடி, டாக்டர் க. | - விழுப்புரம் |
| 166. | பொன்னுசாமி, திரு. கே. | - சேந்தமங்கலம் (ஆ.வா.) |
| 167. | பொன்னுதுரை, திரு. செ. | - பெருந்துறை |
| 168. | போளூர் ம. வரதன், திரு. | - செங்கம் (செ.வ.) |
| 169. | போஸ், திரு. ஏ.கே. | - திருப்பரங்குன்றம் |
| 170. | மகேந்திரன், திரு. இ. | - உசிலம்பட்டி |
| 171. | மகேந்திரன், திரு. கே. | - பெரம்பூர் (செ.வ.) |
| 172. | மகேஷ் கிருஷ்ணசாமி, திரு. த. | - திருவோணம் |
| 173. | மணி, திரு. எஸ். | - பொங்கலூர் |
| 174. | மணி, திரு. கோ.சி. | - கும்பகோணம் |
| 175. | மணி, திரு. ஜி.கே. | - மேட்டூர் |
| 176. | மதிவாணன், திரு. உ. | - திருவாரூர் (செ.வ.) |



| | | |
|---|---|---|
| 177. | மலரவன், திரு. தா. | - கோயம்புத்தூர் மேற்கு |
| 178. | மாணிக்கம், திரு. இரா. | - குளித்தலை |
| 179. | மாரிமுத்து, திரு. வே. | - நாகப்பட்டினம் |
| 180. | மாலைராஜா, திரு. என். | - திருநெல்வேலி |
| 181. | முருகவேல், திரு. கே. | - முதுகுளத்தூர் |
| 182. | முல்லைவேந்தன், திரு. வ. | - மொரப்பூர் |
| 183. | மூர்த்தி, திரு. டி. | - திருப்போரூர் (செ.வ.) |
| 184. | மூர்த்தி, திரு. பி. | - சோழவந்தான் |
| 185. | மேகநாதன், திரு. த.அ. | - காவேரிப்பட்டினம் |
| 186. | மோகன், திரு. பெ. | - ஒட்டப்பிடாரம் (செ.வ.) |
| 187. | மைதீன்கான், திரு. டி.பி.எம். | - பாளையங்கோட்டை |
| 188. | யசோதா, திருமதி டி. | - ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.) |
| 189. | ரங்கநாதன், திரு. ப. | - வில்லிவாக்கம் |
| 190. | ரங்கராஜன், திரு. என்.ஆர். | - பட்டுக்கோட்டை |
| 191. | ரவிக்குமார், திரு. து. | - காட்டுமன்னார்கோவில் (செ.வ.) |
| 192. | ரவிச்சந்திரன், திரு. எல். | - சேலம்–I |
| 193. | ராணி வெங்கடேசன், திருமதி | - சாத்தான்குளம் |
| 194. | ராதாகிருஷ்ணன், திரு. ல. | - கோவில்பட்டி |
| 195. | ராமச்சந்திரன், திரு. கா. | - கூடலூர் |
| 196. | ராமநாதன், திரு. கே.வீ. | - பவானி |
| 197. | ராஜ கண்ணப்பன், திரு. ஆர்.எஸ். | - இளையான்குடி |
| 198. | ராஜகுமார், திரு. எஸ். | - மயிலாடுதுறை |
| 199. | ராஜசேகரன், திரு. மா. | - தொட்டியம் |

200. ராஜன், திரு. அ. - நாகர்கோவில்
201. ராஜா, திரு. என்கேகே.பி. - ஈரோடு
202. ராஜா, திரு. தி.க. - திருப்பத்தூர்
203. லட்சுமணன், திரு. ச. - போடிநாயக்கனூர்
204. லதா, திருமதி ஜி. - குடியாத்தம்
205. லீமா றோஸ், திருமதி ரா. - திருவட்டாறு
206. வசந்தகுமார், திரு. எச். - நாங்குநேரி
207. வரதராஜன், திரு. ரா. - விருதுநகர்
208. விசுவநாதன், திரு. இரா. - நத்தம்
209. விடியல் எஸ். சேகர், திரு. - காங்கேயம்
210. விஜயகாந்த், திரு. - விருத்தாசலம்
211. விஜயகுமார், திரு. கே.எஸ். - கும்மிடிப்பூண்டி
212. விஜயகுமார், திரு. பெ.சு. - போளூர்
213. விஷ்ணுபிரசாத், டாக்டர் எம்.கே. - செய்யாறு
214. வீரக்பிலன், திரு. எம்.வி.ஆர். - பேராவூரணி
215. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், திரு. - சேலம்–2
216. வேதரத்தினம், திரு. எஸ்.கே. - வேதாரண்யம்
217. வேலு, திரு. எ.வ. - த்ண்டராம்பட்டு
218. வேலுசாமி, திரு. இல. - தருமபுரி
219. வேலுசாமி, திரு. செ.ம. - பல்லடம்
220. வேலுமணி, திரு. சு.ப. - பேரூர்
221. வேல்துரை, திரு. பா. - சேரன்மகாதேவி
222. வேல்முருகன், திரு. தி. - பண்ருட்டி



223. வைத்திலிங்கம், திரு. ஆர். - ஒரத்தநாடு
224. ஜாண் ஜேக்கப், திரு. எஸ். - கிள்ளியூர்
225. ஜாண் ஜோசப், திரு. ஞா. - விளவங்கோடு
226. ஜெகன்மூர்த்தி, திரு. மு. - அரக்கோணம் (செ.வ.)
227. ஜெயக்குமார், திரு. டி. - இராயபுரம்
228. ஜெயக்குமார், முனைவர் கு. - நாமக்கல் (செ.வ.)
229. ஜெயபால், திரு. எஸ். - குளச்சல்
230. ஜெயராமன், திரு. எஸ்.பி. - வந்தவாசி (செ.வ.)
231. ஜெயலலிதா, செல்வி ஜெ - ஆண்டிப்பட்டி
232. ஸ்டாலின், திரு. மு.க. - ஆயிரம் விளக்கு
233. ஹசன் அலி, திரு. கு. - இராமநாதபுரம்
234. ஆஸ்கார் சி. நிக்லி, டாக்டர் - நியமனம்
235. (வெற்றிடம்) - மதுரை மேற்கு

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

திரு. இரா. விடுதலை - மாநில அரசுத் தலைமை வழக்குரைஞர்

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## சித்திரை 4, சர்வஜித் - திருவள்ளுவர் ஆண்டு 2038
## 2007 ஏப்ரல் 17, செவ்வாய்க்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"பகுத்துண்டு பல்லுயி ரோம்புதல் நூலோர்*
*தொகுத்தவற்று ளெல்லாந் தலை"*

இருப்போர் இல்லாதோர் என்றில்லாமல், கிடைத்ததைப் பகிர்ந்துகொண்டு, எல்லா உயிர்களும் வாழ வேண்டும் என்ற சமநிலைக் கொள்கைக்கு ஈடானது வேறு எதுவுமே இல்லை.

## 1. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள் விடைகள். வினா எண் 71, மாண்புமிகு உறுப்பினர் திரு. என். நன்மாறன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**71—**

### மென்பொருள் பூங்கா

***188—திரு. என். நன்மாறன்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரையில் மென்பொருள் பூங்கா அமைக்கும் பணி எந்த நிலையில் உள்ளது?

[2007 ஏப்ரல் 17

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மதுரை வடக்கு வட்டம், இலந்தைக்குளம் கிராமத்தில் நில உரிமை மாற்றம் செய்யப்பட்டுள்ள 28.91 ஏக்கர் நிலத்தின் ஒரு பகுதியில் ஒரு மில்லியன் (10 இலட்சம்) சதுர அடி பரப்பளவில் ஒரு தகவல் தொழில்நுட்பவியல் கட்டடம் கட்டுவதற்கான நிர்வாக ஒப்பளிப்பு வழங்கி அரசு ஆணையிட்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களின் அறிவிப்புக்கு என்னுடைய நன்றியறிதலை முதலாவதாகத் தெரிவித்துக்கொள்கிறேன். இது செயல் வடிவம்பெற்று, அடிக்கல் நாட்டப்படுகிற அளவுக்கு வந்து, எப்பொழுது முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டு விழாவுக்கு வருகை தருவார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** இது தொடர்பான அடிப்படை வேலைகள் இன்னும் சில எஞ்சியிருக்கின்றன. அவை எல்லாம் முழுமைபெற்ற பிறகு அடிக்கல் தயாராகும், அதை நாட்டுவதற்கு நானும் தயாராக இருப்பேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடிக்கல் நாட்டுவதற்குப் பொருத்தமானவர் தாங்கள்தான் என்கிற காரணத்தினால், நானும் இதனை அவையில் வலியுறுத்துகிறேன். அதனை விரைவில் நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, மேலும் அண்ணா பல்கலைக்கழகமும் மதுரைக்கு வருவதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் பரிந்துரை செய்ய வேண்டுமென்றும் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலிலேயே குறிப்பிட்டதைப்போல, சென்னையிலுள்ள டைடல் பூங்காவிற்கு அடுத்தபடியாக, கோவை, 



2007 ஏப்ரல் 17]

மதுரை, திருச்சி, சேலம், நெல்லை ஆகிய இரண்டாம் நிலை நகரங்களில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைக்க அரசு முனைப்போடு செயல்பட்டு வருகிறது. அந்த வகையிலே மதுரையும் இரண்டாவதாக இடம்பெற்று, அங்கே விரைவில் அடிக்கல் நாட்டு விழா நடைபெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏனைய தகவல்கள் அப்பொழுது தெரிவிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னைக்கு அடுத்ததாக, கோவை, மதுரை, சேலம் போன்ற பகுதிகளிலே தொழில்நுட்பப் பூங்காக்கள் அமைக்கப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அதற்கான பணிகளும் தொடங்கி இருக்கின்றன. என்னுடைய கோரிக்கை என்பது, எல்லா மாவட்டங்களிலுமே அப்படிப்பட்ட தொழில்நுட்பப் பூங்காக்கள் தொடங்கப்பட வேண்டும். அதிலும் குறிப்பாக, சென்ற முறை இந்த அவையிலே வேறு ஒரு கேள்விமூலமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்கிறபொழுது, எங்களது திருவாரூர்போன்ற மாவட்டங்களிலே அதை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்று சொல்லியிருக்கிறீர்கள். டெல்டா மாவட்டம் என்ற காரணத்தினாலே, நிலம் பெறுவதிலே சிக்கல்கள் இருக்கின்றன என்ற கருத்துகள் வருகின்றன. தொழில்கள் தொடங்குவதிலே அப்படிப்பட்ட பிரச்சினைகள் இருக்கலாம். இப்படிப்பட்ட தொழில்நுட்பப் பூங்காக்களைத் தொடங்குவதற்கான முயற்சிகளை எடுத்தால், அந்தப் பகுதிகளிலே வேலைவாய்ப்பை அதிகரிப்பதற்கான வாய்ப்புகளும், தொழில்கள் தொடங்கப்படுகின்றன என்ற உணர்வும் அந்தப் பகுதிகளிலுள்ள மக்களுக்கு உருவாகும். அதற்கான முயற்சியை மேற்கொண்டு, எங்களது திருவாரூர் மாவட்டத்திலே தொடங்குவதற்கான முயற்சியை மாண்புமிகு முதல்வர் அவர்கள் மேற்கொள்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு உறுப்பினர் ஒன்றைத் திருத்திக்கொள்ள வேண்டும். "எங்களுடைய திருவாரூர் மாவட்டம்" என்றார். அதை "நம்முடைய திருவாரூர் மாவட்டம்" என்று திருத்திக்கொள்ள வேண்டும். அங்கே தொழில்நுட்பப் பூங்கா

வருவதற்கான சாத்தியக்கூறுகள் அவ்வளவு விரைவிலே அமைய முடியாது. ஏனென்றால், இப்படிப்பட்ட பூங்காக்கள் அமைந்து, அங்கே அந்த நிறுவனங்களின்மூலமாக நடைபெறுகின்ற தொழில், அவற்றின்மூலம் செய்யப்படுகின்ற உற்பத்திப் பொருட்கள், ஏற்றுமதி செய்யப்படுவதற்கான துறைமுக வசதி, போக்குவரத்து வசதி, infrastructure என்று சொல்லப்படுகின்ற அடிப்படை வசதிகள் எல்லாம் உள்ள பகுதிகளிலேதான் இந்தப் பூங்காக்கள் அமைய முடியும். அந்த வகையிலேதான் இந்த இடங்கள் தேர்வு செய்யப்படுகின்றன.

*முற்பகல் 9-35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.பெ. துரைசாமி.

**மாண்புமிகு திரு. வீ.பெ. துரைசாமி (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்குநேரி உயர் தொழில்நுட்பப் பூங்கா மீண்டும் தொடங்கப்பட வாய்ப்பு உள்ளதா? அதோடு, சேலத்தில் தொழில்நுட்பப் பூங்கா அமைந்திட நில எடுப்புப் பணி முடிந்து ஒப்படைக்கப்பட்டுவிட்டதாகத் தெரிகிறது. சேலத்தில் தொழில்நுட்பப் பூங்கா எப்போது தொடங்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்குநேரிக்கு முன்பு சேலத்தில் தொடங்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தை இந்தியாவின் Silicon Valley ஆக மாற்ற நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மிகப் பெரிய முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறார்கள். இந்த மென்பொருள் பூங்காக்களை அமைப்பதற்கான தொழில் முனைவோர்களுக்கு அரசு என்ன வசதிகளைச் செய்து தந்து வருகிறது? நிலங்களைக் கையகப்படுத்தி, சலுகை விலையில் அந்த நிலங்களை அவர்களுக்கு ஒப்படைக்கின்ற பணியை அரசு செய்கிறதா? சென்னையைச் சுற்றி மென்பொருள் தொழில் இப்பொழுது மிக வேகமாக வளர்ந்து





வருகிறது. அவர்களுக்கு எந்தவிதமான ஆதரவோ, அரசினுடைய சலுகைகளோ தேவையில்லை. ஆனால், தென் மாவட்டங்களைப் பொறுத்தவரை, அங்கே படித்துவிட்டு வேலையில்லாமல் இருக்கின்ற மென்பொருள் பொறியியல் நிபுணர்கள், எண்ணிக்கையில் அதிகமாக இருந்தாலும்கூட, அவர்களுக்குத் தென் மாவட்டங்களிலே வேலைவாய்ப்பு இல்லை. மேலும், அங்கே நிலங்களுடைய விலையும் மிகக் குறைவாக இருக்கிறது. எனவே, மதுரைக்குத் தெற்கே உள்ள பகுதிகளிலே அரசே நிலங்களைக் கையகப்படுத்தி, இந்த மென்பொருள் முனைவோர்களுக்கு அரசே சலுகை விலையிலே அந்த நிலங்களையும், அடிப்படை வசதிகளையும் வழங்க முன்வருமா என்று தெரிந்துகொள்ள ஆசைப்படுகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் சொல்லுகின்ற யோசனை ஒரு அரிய யோசனை. இந்த யோசனையின் அடிப்படையிலேதான் ஆங்காங்கு இந்தத் தொழில்நுட்பப் பூங்காக்களை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இருந்தால், அவற்றைப் பயன்படுத்திக்கொண்டு அங்கே இந்தப் பூங்காக்களை அமைக்க முன்வருகின்ற நிறுவனங்கள் எதுவாக இருந்தாலும், அவர்களுக்குப் பொருளாதாரத் துறையிலும் மற்றும் வசதி வாய்ப்புகள் துறையிலும் அரசாங்கத்தினுடைய உதவிகள் என்ற முறையிலும், சென்னையைவிட, அதற்கு அடுத்தபடியாக கூடுமான வரையிலே அதிக அளவிற்குச் சலுகைகளை அளிக்க இந்த அரசு உறுதி அளித்திருக்கின்றது. அந்தச் சலுகைகளை நம்பித்தான் இன்றைக்குப் பல பூங்காக்கள் ஆங்காங்கு உருவாகின்ற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. லட்சுமணன்.

**திரு. ச. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையில் இரண்டாவது டைடல் பூங்கா அமைக்கும் பணி தொடங்கப்பட்டுவிட்டதா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையில் இரண்டாவது டைடல் பூங்கா அமைப்பதற்கான ஏற்பாடுகள் ஏறத்தாழ நிறைவுற்றுவிட்டன.

[2007 ஏப்ரல் 17

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி ஐந்தாவது முறையாக நடந்த ஆண்டு அமைந்த பிறகு எத்தனை நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டுள்ளன? அவற்றின் மொத்தத் திட்ட முதலீடு எவ்வளவு? கடந்த அ.இ.அ.தி.மு.க. ஆட்சியின் ஐந்தாண்டு காலத்தில் எத்தனை புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டன என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் என்றால் MoU என்பதைத்தான் சொல்கிறார்கள். அந்த வகையிலே MoU-க்கள்—கடந்த பத்து மாத காலத்தில் 8 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டுள்ளன. அந்த ஒப்பந்தங்கள்மூலமாக மொத்த முதலீடு சுமார் 8,485 கோடி ரூபாய். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் தொழிற்சாலைகள்மூலம் 57,210 பேருக்கு நேரடி வேலைவாய்ப்பும், 64,330 பேருக்கு மறைமுக வேலைவாய்ப்பும், ஆக மொத்தம் 1,21,540 பேருக்குப் புதிதாக வேலைவாய்ப்பும் கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) அ.இ.அ.தி.மு.க. ஆட்சியோடு ஒப்புவமை கேட்டார்கள். முன்பு இருந்த அரசுக்கும், இப்போதுள்ள அரசுக்கும் இதிலே என்ன வித்தியாசம் என்று கேட்டார்கள். இது "கேள்வி நேரம்". எனவே, நான் அதை விளக்க விரும்பவில்லை.

முற்பகல் 9-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ENRON தொழில் பூங்கா, சென்னைப் பெருநகர் அல்லாது 5 மாநகரங்களிலே அமையவிருப்பதாக முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருப்பது மகிழ்ச்சிக்குரியது. அதைப்போல, சென்னையைச் சுற்றி எல்லாத் தொழில்நுட்பப் பூங்காக்களும் அமைக்கப்பட்டு வருகின்றன. இன்னும் வளர்ந்து வரக்கூடிய மாவட்டங்கள்.



2007 ஏப்ரல் 17]

பின்தங்கிய மாவட்டங்கள், அந்த மாவட்டப் பகுதிகளிலே பொறியியல் கல்வி படித்தவர்கள், அதிலும் குறிப்பாக, பொறியியலில் மென்பொருள் தொழில்நுட்பம் படித்தவர்கள் அதிகம் இருக்கின்றனர். அவர்கள் வேலைவாய்ப்பு இல்லாமல் அவதிப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆண்டிற்கு 1 இலட்சத்து 6 ஆயிரம் பொறியியல் மாணவர்கள் படித்து வெளியே வருகிறார்கள். அவர்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைப்பது என்பது 4 விழுக்காடு மட்டுமே என்று சொல்கிறார்கள். மற்றவர்களெல்லாம் படித்துவிட்டு வேலைவாய்ப்பு இல்லாமல் அவதிப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். இந்தத் தொழில்நுட்பப் பூங்காக்களில், TIDEL பூங்காக்களில் நம்முடைய மாநிலத்தைச் சேர்ந்தவர்களுக்கு; அந்தந்த மாவட்டப் பகுதிகளிலே இருப்பவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதற்கு அரசு ஏதாவது திட்டங்கள் வைத்திருக்கிறதா? அதை நிறைவேற்றுவதற்கு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திட வருகின்ற தொழில் அதிபர்களிடத்தில், நிறுவனங்களிடத்தில் நாங்கள் கேட்கின்ற முதல் கேள்வி, வைக்கின்ற முதல் முறையீடு, உள்ளூர்வாசிகளுக்கு, அந்தப் பகுதிகளிலே உள்ளவர்களுக்கு வேலைவாய்ப்பினை முதற்கட்டமாகத் தர வேண்டும் என்பதுதான். அதற்கு அவர்களும் ஏறத்தாழ சம்மதித்துத்தான் கையெழுத்திடுகிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநகராட்சிப் பகுதிகளிலே மென்பொருள் பூங்காக்கள் அமைக்கப்படுகின்ற ஒரு திட்டத்தை இப்போது மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்து, அதற்குச் செயலாக்கம் தந்துகொண்டிருக்கிறார்கள். எங்களுடைய வேலூர் மாவட்டத்தை எடுத்துக்கொண்டால், 11 பொறியியல் கல்லூரிகள் இருக்கின்றன. V.I.T. என்ற கல்லூரிக்கு மட்டும் 92,000 பேர் application போட்டிருக்கிறார்கள். 15,000 பேர் படிக்கிறார்கள். நிறையப் பொறியாளர்களை வைத்துக்கொண்டிருக்கிற ஒரு இடம். அடுத்து, பெங்களூருக்கும், சென்னைக்கும் மையமாக அமைந்திருக்கக்கூடிய ஒரு

இடம். இரயில்வே, நான்கு வழிச் சாலைபோன்ற எல்லா infrastructure-களையும், எல்லா வசதிகளையும் கொண்டிருக்கக்கூடிய எங்களுடைய வேலூர் பகுதியில் அல்லது காட்பாடி பகுதியில்— B.H.E.L. நிறுவனம் நிறைய இடத்தை எடுத்து, காலியாக வைத்திருக்கிறார்கள்; இராணிப்பேட்டைபோன்ற பகுதியிலாவது ஒரு மென்பொருள் பூங்காவை அமைக்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது ஞானசேகரன் அவர்கள் வேலூரை மாநகராட்சி மன்றமாக ஆக்க வேண்டுமென்று நீண்ட காலமாக வற்புறுத்தி வருகிறார்கள். மாநகராட்சி மன்றமாக வேலூர் ஆன பிறகு, மென்பொருள் பூங்காவை அங்கே தொடங்குவது பற்றி யோசிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 72, மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரங்கராஜன், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**72—**

## குடிநீர் வசதி

***3534—திரு. என்.ஆர். ரங்கராஜன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டை தொகுதி, துவரங்குறிச்சி ஊராட்சி, மணியாரங்கொல்லை பகுதி மற்றும் மேலக்காடு ஊராட்சி ஆகிய பகுதிகளில் குடிநீர் வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பட்டுக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், துவரங்குறிச்சி ஊராட்சி, மணியாரங்கொல்லை பகுதியில் நீர்த்தேக்கத் தொட்டி மற்றும் ஒரு கைப் பம்புமூலம் நாளொன்றுக்கு, நபர் ஒருவருக்கு 42 லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. பட்டுக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், தம்பிக்கோட்டை, மேலக்காடு ஊராட்சிப் பகுதிகளில் 2006-2007 ஆம் ஆண்டு, நபார்டு வங்கி நிதியுதவித் திட்டத்தின்கீழ் 30,000 லிட்டர் கொள்ளளவுகொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டும் திட்டம் அனுமதிக்கப்பட்டு, செயல்படுத்தப்பட உள்ளது.





**திரு. என்.ஆர். ரங்கராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டை தொகுதி, துவரங்குறிச்சி ஊராட்சியில் இருக்கக்கூடிய மணியாரங்கொல்லை பகுதி என்பது மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள், தொழிலாளர்கள் வசிக்கக்கூடிய பகுதி. அந்தப் பகுதியிலே குடிநீர்த் தட்டுப்பாடு இருக்கிறது என்று சொன்ன காரணத்தினால் இந்தக் கேள்வியை நான் கேட்டிருந்தேன். தற்போது அதிகாரிகள் அங்கு pipe line-ஐ மட்டும் extend பண்ணித் தண்ணீர் கொடுத்தால் போதும் என்று தீர்மானித்திருப்பதாகத் தெரிகிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதை விரைவிலே செய்து கொடுக்க வேண்டுமென்று அவர்களை நான் அன்போடு கேட்டுக்கொண்டு, தம்பிக்கோட்டை, மேலக்காடு ஊராட்சிப் பகுதிகளிலே புதிய Tank ஒன்று நபார்டுமூலமாகக் கட்டப்பட்டு, விரைவிலே திறக்கப்பட்டு, பொது மக்களுக்குத் தண்ணீரை வழங்க இருக்கிறார்கள் என்ற செய்தியையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மிக்க மகிழ்ச்சி. எனவே, நல்ல முறையிலே இந்தத் திட்டங்களைக் கொடுத்த மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்குப் பட்டுக்கோட்டை தொகுதி மக்களுடைய சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

*முற்பகல் 9-45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 73, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. கண்ணன். மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**73—**

## குளிர்பதனக் கிடங்கு

***1093—திரு. பெ. கண்ணன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, மேச்சேரியில் தக்காளியைப் பாதுகாக்க குளிர்பதனக் கிடங்கு அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, மேச்சேரியில் தக்காளியைப் பாதுகாக்க, தனியார் நிறுவனங்கள் முன்வந்தால், குளிர்பதனக் கிடங்கு அமைக்கப்படும். அரசின் சார்பில் அமைக்க உத்தேசம் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. கண்ணன், இருக்கையில் இல்லை. அவருக்குப் பதிலாக, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. தமிழரசு.

**திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி சுற்றுப் பகுதிகளில் சுமார் 2,000 ஏக்கரில் மானாவாரி தக்காளி பயிர் செய்யப்படுகிறது. சுமார் 20 ஊராட்சிகளில், 150 கிராமங்களில் சுமார் 2,000 விவசாயிகள் தக்காளியைப் பயிர் செய்து வருகிறார்கள். தக்காளி நல்ல விலைக்குப் போகும்பொழுது கிலோ ரூபாய் 10 எனவும், விலை இல்லாதபொழுது ரூபாய் 2-50 எனவும், சில நேரங்களில் தக்காளியை விவசாயிகள் ரோட்டிலே வெறுமனே கொட்டிவிட்டுச் செல்லுகின்ற காட்சிகளெல்லாம் பத்திரிகைகளிலும், தொலைக்காட்சிகளிலும் வந்தவண்ணமாக இருக்கின்றன.

உற்பத்தி செய்யும் தக்காளியை சென்னை, பெங்களூர், கேரளா என, உடனடியாக விற்பனைக்கென்று விவசாயிகள் கொண்டு செல்கிறார்கள். இதனால் பண விரயம் ஏற்படுகிறது. எனவே, இதைத் தவிர்க்க, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், தாரமங்கலம் தொகுதி, மேச்சேரியில் தக்காளி கெட்டுப் போகாமல் பாதுகாத்து, தரமான பொருளாக, போக்குவரத்துச் செலவைத் தவிர்த்து விற்பனை செய்ய உதவிட, அரசு செலவிலே மேச்சேரியிலே குளிர்பதனக் கிடங்கு அமைத்துக் கொடுப்பார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேச்சேரி மற்றும் தலைவாசல்போன்ற பகுதிகளில் அதிக அளவிலே தக்காளி உற்பத்தியாகி மார்க்கெட்டுக்கு வருவதை இந்த அரசு அறியும். ஆனாலும், இதுபோன்ற இடங்களில் குளிர்பதனக் கிடங்கு அமைக்கத் தனியார் முன் வந்தால, மத்திய





அரசினுடைய நிறுவனமான தேசிய தோட்டக் கலை வாரியம் மற்றும் தேசிய தோட்டக் கலைக் குழுமத்தின்மூலம் பரிந்துரை செய்து, 25 சதவிகிதம் மானியம் வழங்க அரசு ஏற்பாடு செய்ய 2000 ஆம் ஆண்டே கொள்கை முடிவு எடுத்து, அதற்காக ஒரு ஆணையும் வெளியிடப்பட்டது. ஆனால், யாரும் முன்வரவில்லை. இப்பொழுதும் தனியார் யாராவது முன்வருவார்களேயானால், மத்திய அரசிடம் அந்த 25 சதவிகிதம் மானியத்தைப் பெற்றுத் தர இந்த அரசு தயாராக இருக்கிறது.

**திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2000 ஆம் ஆண்டிலே அரசு அனுமதித்தும் தனியார் யாரும் வரவில்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். எனவேதான், தனியார் யாரும் அந்த தயாராக இல்லையென்ற நிலையிலேதான், அரசே நிதி ஒதுக்கி இதைச் செய்து கொடுக்க வேண்டுமென்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற நிலைமைகளை எல்லாம் இந்த அரசு அறிந்துதான், சமீபத்திலே திருநெல்வேலி, திருவண்ணாமலை, பூந்தமல்லி, தேனி, தருமபுரி மற்றும் விழுப்புரம் ஆகிய ஆறு இடங்களைச் சேர்த்து, ஒவ்வொரு இடத்திற்கும் குளிர்விப்பான்கள் மற்றும் குளிர்பதன வாகனங்கள் Marketing Committee மூலமாக வாங்கி, அப்படி விற்காமல் போகின்ற பொருட்களை அரசு நிறுவியிருக்கின்ற குளிர்பதனக் கிடங்குகளுக்குக் கொண்டு செல்வதற்கு வாய்ப்பாகப் பயன்படுத்தலாமா என்று துறை ஆலோசித்து வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. சின்னச்சாமி.

**திரு. செ. சின்னச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருங்காபுரி தொகுதி, மருங்காபுரி ஒன்றியம், துவரங்குறிச்சியிலே தினந்தோறும் 10 முதல் 15 லாரி தக்காளி விவசாயிகளால் உற்பத்தி செய்யப்பட்டு, சென்னை மற்றும் அண்டை மாநிலங்களுக்கு அனுப்பப்படுகிறது. சில நேரங்களில் வாகனக் கோளாறுபோன்ற பிரச்சினைகள் வருகிறபொழுது, விவசாயிகள் தக்காளியை விற்க முடியாத ஒரு சூழ்நிலை ஏற்படுகிறது. எனவே, துவரங்குறிச்சியிலே

[2007 ஏப்ரல் 17

தக்காளியைப் பதப்படுத்துகிற குளிரூட்டும் நிலையத்தை இந்த அரசு அமைத்துக் கொடுத்தால், ஏறக்குறைய ஆயிரம் விவசாயிகள் பயன்பெறுகிற ஒரு நிலை ஏற்படும். எனவே, அரசின் சார்பிலே துவரங்குறிச்சியிலே தக்காளியைப் பதப்படுத்துகின்ற ஒரு குளிரூட்டும் நிலையத்தை அமைத்துத் தர அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-50)

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு பகுதியிலும் விவசாயிகள் பயிரிடுகின்ற பல்வேறு பொருட்களை—தக்காளி பயிரிடுகிறார்கள்; கத்தரிக்காய் பயிரிடுகிறார்கள்; அதைப்போல, பல்வேறு காய்கறிகளைப் பயிரிடுகிறார்கள். அவற்றிற்குச் சில நேரங்களிலே நல்ல விலை கிடைக்கிறது; சில நேரங்களிலே விலை கிடைக்காமல் போகிறது. சில நேரங்களிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, பெங்களூர்போன்ற நகரத்திற்கு எடுத்துச் செல்வதற்கு வாகன வசதிகள் கிடைக்காமலும் இருக்கின்றன. மாநிலம் தழுவிய அளவிலே விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற பொருட்களுக்குக் கட்டுப்படியான விலை கிடைப்பதிலே சில சிரமங்கள் இருப்பதை இந்த அரசு அறியும். இருந்தாலும், அந்தந்த இடத்திற்குத் தேவையின் அடிப்படையிலே இதுபோன்ற குளிர்பதனக் கிடங்கு அமைக்க வேண்டுமென்ற கோரிக்கை வைத்தால், அதற்காகத் தனியாகவே ஆயிரம் கோடி ரூபாய்க்கு பட்ஜெட் போட வேண்டியிருக்கும். இப்போது அந்த யோசனை இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளிர்பதன வசதியைச் செய்து தருவதற்கு மத்திய அரசு 25 சதவிகிதம் மானியம் வழங்குவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். 25 சதவிகிதம் என்றால், உயர்ந்தபட்சம் எவ்வளவு மானியம் என்பதைத் தங்கள்மூலம் அறிந்துகொள்ள விரும்புவதோடு, மாநில அரசும் அதற்கு இணையான மானியத்தை வழங்க முன்வருமா என்பதையும் தங்கள்மூலமாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.



2007 ஏப்ரல் 17]

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய தேசிய தோட்டக் கலை வாரியம் மற்றும் குழுமத்தின் மூலமாக 25 விழுக்காடு மானியம்—மானியத்திற்கு இவ்வளவுதான் என்ற ஒரு நிர்ணயம் இல்லை. ஒரு கோடி ரூபாயிலே குளிர்பதனக் கிடங்கு போட்டால் 25 விழுக்காடு உண்டு. அதனை இரண்டு கோடி ரூபாயில் போட்டாலும் அந்த 25 விழுக்காடு மானியம் மத்திய அரசிடமிருந்து பெற்று வழங்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி பெ. கமலாம்பாள்.

**திருமதி பெ. கமலாம்பாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரம், முசரவாக்கம் பகுதியில் காய்-கனி-கிழங்குகளைப் பாதுகாக்க குளிர்பதனக் கிடங்கினை அரசு எப்போது அமைக்கவுள்ளது என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போடவும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 74. திரு. ஞா. ஜாண் ஜோசப், மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**74—**

## தடுப்பணை

***582—திரு. ஞா. ஜாண் ஜோசப்:**

மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம், குழித்துறை தாமிரபரணி ஆற்றின் குறுக்கே தடுப்பணை கட்ட அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம், குழித்துறை என்னும் இடத்தில் தாமிரபரணி ஆற்றின் குறுக்கே தடுப்பணை (sub-path) கட்டுவதற்காக ரூ.346.00 இலட்சத்திற்கு மதிப்பீடு ஒன்று

[2007 ஏப்ரல் 17

தயாரிக்கப்பட்டு, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத் தொழில்நுட்ப இயக்குநர் மட்டத்தில் ஆய்வில் உள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞா. ஜாண் ஜோசப்.

**திரு. ஞா. ஜாண் ஜோசப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுமார் நான்கு ஆண்டுகளுக்கு முன்னால், இந்த ஆய்வு நடத்தப்பட்டிருக்கிறது. பல குழுக்கள் அந்தப் பகுதிக்கு வந்து பார்வையிட்டிருக்கின்றன. 2004 ஆம் ஆண்டு நமது சட்டசபையின் மதிப்பீட்டுக் குழு அந்தப் பகுதியைப் பார்வையிட்டிருக்கிறது. அதில் தற்போதைய மதிப்பிற்குரிய சட்டசபைச் செயலாளர் அவர்களும் பொறுப்பாளராக இருந்திருக்கிறார்கள். அவரும் அந்த இடத்தைப் பார்வையிட்டிருக்கிறார். சமீபத்தில் நம்முடைய மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு வந்தபோது அந்தப் பகுதிக்கு வந்து பார்வையிட்டிருக்கிறார்கள். அவர் பார்வையிட்டதன்மூலமாக அந்தப் பகுதியில் ஒரு புதிய நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது. பார்க்க வேண்டிய ஆள் இப்போதுதான் பார்த்திருக்கிறார். ஆகவே, நிச்சயமாக நடக்கும் என்று மக்கள் முழு மனதோடு நம்பிக்கொண்டிருக்கின்றார்கள். நீண்ட காலத் தேவையாக இருக்கக்கூடிய அந்தக் கோரிக்கையைத் துரிதமாக நிறைவேற்றித் தரவும், நிதி ஒதுக்கியும் அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-55

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குழித்துறையில் தாமிரபரணி ஆற்றின் குறுக்கே நீண்ட காலத்திற்கு முன்னாலே ஒரு சிறிய அணை (sub-path) கட்டப்பட்டிருக்கிறது. அது உடைந்திருக்கிறது. அதிலே தண்ணீர் தேங்கும், அவ்வளவுதான். பொதுவாக அணை கட்டினால், அது பாசனத்திற்குப் பயன்பட்டால், அதைக் கட்டுகிற பொறுப்பையும், செலவையும் பொதுப் பணித் துறை ஏற்கும். ஆனால், குடிநீருக்காகப் பயன்படுமானால், அதைக் குடிநீர் வடிகால் வாரியம்தான் செய்யும். அதனால்தான் இதற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, குடிநீர் வடிகால் வாரியத்தினுடைய தொழில்நுட்ப இயக்குநர் மட்டத்தில் இந்த proposal இருக்கிறது என்று சொன்னேன். எனவே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களிடத்தில் ஒரு தனிக் கேள்வி போட்டால், அவருடைய இலாகாவிலே அது என்ன நிலையிலே இருக்கிறது என்பது தெரியும்.



2007 ஏப்ரல் 17]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞா. ஜாண் ஜோசப்.

**திரு. ஞா. ஜாண் ஜோசப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் குறிப்பிட்டதுபோல, அது வெறும் குடிநீர்த் தேவைக்காகக் கட்டப்பட்ட தடுப்பணை அல்ல. தடுப்பணையாகவும், நடைபாதையாகவும் அது இருந்து வருகிறது. குறிப்பாகச் சொன்னால், தேங்காய்ப்பட்டணத்திலிருந்து வெட்டுவெந்நி வரையில் இருக்கக்கூடிய 15 கிலோ மீட்டர் தூரத்தில் குடியிருக்கும் மக்கள் பஸ்ஸில் வந்தால், வெட்டுவெந்நி என்ற சந்திப்பில் இறங்கிவிட்டு, அவர்கள் இந்த sub-path மூலமாக, இந்த நடைபாலம்மூலமாகத்தான் குழித்துறை தாலுக்கா அலுவலகத்திற்கும், வட்ட வழங்கல் அலுவலகத்திற்கும், நீதிமன்றத்திற்கும், சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்திற்கும் வந்துகொண்டிருக்கிறார்கள். தினமும் ஆயிரக்கணக்கான மக்கள் இதைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அது மட்டுமல்லாமல், ஆண்டுதோறும் வாவுபலி பொருட்காட்சி குழித்துறை நகராட்சியால் நடத்தப்பட்டு வருகிறது. இந்த வாவுபலி பொருட்காட்சி 15 தினங்கள் நடக்கிறது. தினமும் பல்லாயிரக்கணக்கான மக்கள் அதைப் பயன்படுத்துகிறார்கள்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வியை மட்டும் கேளுங்கள்.

**திரு. ஞா. ஜாண் ஜோசப்:** இந்தப் பாலத்தினுடைய அவசியத்தைப் பற்றிக் கூறுகிறேன். இது வெறும் குடிநீர்த் தேவைக்காக மட்டுமல்ல.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வியை மாத்திரம் கேளுங்கள்.

**திரு. ஞா. ஜாண் ஜோசப்:** இது வெறும் குடிநீருக்காகப் பயன்படுத்தக்கூடிய விஷயம் மட்டுமல்ல. குடிநீருக்கும் பயன்படுகிறது அது. 20 குடிநீர்த் திட்டக் கிணறுகள் அதில் இருக்கின்றன. ஆகவே, இரண்டு தேவைகளும் இதன்மூலமாக நிறைவேற்றப்படுகின்றன. ஆகவே, இந்த ஆண்டு இதை நிறைவேற்றித் தருமாறு வேண்டுகிறேன். அதற்குரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமீபத்திலே நான் அந்த இடத்தைப் பார்வையிட்டேன். அந்தத் தடுப்பணை முழுவதும் பழுதடைந்துவிடவில்லை.

மாட்டு வண்டிகள், ஜீப்புகள் எல்லாம் போகலாம். மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்போல், சரளமாகப் போக்குவரத்து இருப்பதற்கு சிற்சில சங்கடங்கள் இருக்கின்றன. அந்த அணையை வேண்டுமானால் ரிப்பேர் செய்து கொடுப்பதற்கு ஒரு மதிப்பீடு தயாரிக்கும்படி இலாகாவைக் கேட்டுக்கொண்டிருக்கிறேன். தற்காலிகமாக, போக்குவரத்திற்கு இடைஞ்சல் இல்லாமல் அந்த அணையைச் செப்பனிட்டுத் தருவதற்குப் பொதுப் பணித் துறை முயற்சிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.என். பெரியண்ணன்.

**திரு. பி.என். பெரியண்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டூர் அணையைக் கட்டியபொழுது, அந்த அணையினுடைய நீர்த்தேக்கப் பகுதிகளில் இருந்த மக்கள் பெண்ணாகரம் பகுதிக்குக் குடிபெயர்ந்து, சுமார் 20 கிலோ மீட்டர் தூரம் வரை பரவி இருக்கின்றார்கள். அந்த மக்கள் தொடர்பு வைத்திருப்பது மேட்டூர் பகுதியில் இருக்கின்ற காரணத்தாலும் மற்றும் ஒகேனக்கல் பகுதிக்கு மைசூரிலிருந்து சுற்றுலா வருபவர்கள் குறுக்காக வருவதற்கு வசதியாக இருக்கிற காரணத்தினாலும், கொளத்தூர் ஒன்றியத்தையும், பெண்ணாகரம் ஒன்றியத்தையும் இணைக்கின்ற ஒரு பாலத்தைக் கட்டித் தர அரசு முன்வருமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்து மாண்புமிகு உறுப்பினர் தனிக் கேள்வி போட்டால், விவரத்தைச் சேகரித்துச் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாகத் தண்ணீர்ப் பற்றாக்குறை மாநிலமாக நம்முடைய மாநிலம் இருந்து வருகிற நிலையில், மழைக் காலங்களிலே கிடைக்கிற நீர், பெரும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு, நதிகள்மூலமாக, ஓடைகள்மூலமாகக் கடலில் கலக்கிற நிலைமை தொடர்ந்து வருகிறது. ஆகவே, அந்தத் தண்ணீரை நாம் பயன்படுத்தக்கூடிய வகையில், தமிழ்நாட்டில் பரவலாக ஆறுகளில் அல்லது ஓடைகளில் இதுபோன்ற





தடுப்பணைகள் கட்டப்பட்டால், நிலத்தடி நீர்மட்டம் உயர்வதன்மூலம் பாசனத்திற்கும் பயன்படும்; குடிநீருக்கும் அது பயன்படுகிற வாய்ப்புக் கிடைக்கும் என்ற காரணத்தினால், அப்படிப்பட்ட ஒரு ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, மாநிலத்தில் வாய்ப்புள்ள, தேவையான இடங்களில் அதுபோன்ற தடுப்பணைகளைக் கட்ட அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுப் பணித் துறை மானியக் கோரிக்கை அறிவிப்பிலேயே அதை நான் அறிவித்திருக்கிறேன். பொதுவாக, மழைக் காலங்களில் மிகையாக ஓடிக் கடலில் கலக்கிற நீரை, ஆங்காங்கே எப்படித் தேக்கி வைக்க முடியும் என்பதற்கு நிபுணர் குழு வைத்து, கூடுமான வரையிலே அதைக் கட்டுப்படுத்தி, ground water ஆக மாற்றுவதற்கும், விவசாயத்திற்குப் பயன்படுத்துவதற்கும் முடியுமா என்று ஆய்வு செய்வதற்காக விரைவில் ஒரு Committee அமைக்கப்படும். அவருடைய யோசனையையும் கேட்டு, அந்தப் பணிகள் நடைபெறும்; சில இடங்களிலே அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை இப்போது எடுத்துக்கொண்டிருக்கிறோம்.

முற்பகல் 10-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. பத்மாவதி.

**திருமதி பி. பத்மாவதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நன்னிலம் தொகுதியிலுள்ள நன்னிலம் ஒன்றியம், வேலங்குடி ஊராட்சி, அதைச் சுற்றிலும் உள்ள கிராமங்களில் வாழ்கின்ற கிட்டத்தட்ட 2,000-க்கும் மேற்பட்ட விவசாயிகளைப் பாதுகாக்கக்கூடிய வகையில் வேலங்குடியில் ஓடுகின்ற நாட்டாற்றில் புதிய regulator அமைத்துத் தர அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் இப்படிப்பட்ட கட்டுமானங்கள் பழுதடைந்திருப்பதையெல்லாம் புதுப்பிப்பதற்கு அரசு நிதி ஒதுக்கியிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட அந்தப்

பகுதியை, இடத்தை எனக்குச் சுட்டிக்காட்டி எழுதுவாரேயானால், அதை அரசு எடுத்துக்கொள்ளும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 75. மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. தாமோதரன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**75—**

## பேருந்து வசதி

***1957 திரு. செ. தாமோதரன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிணத்துக்கடவு தொகுதி, கோடங்கிபட்டி, நெடும்பாறை, செல்லப்பம்பாளையம், கொங்கநாட்டான்புதூர் ஆகிய கிராமங்களுக்கு அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்து வசதி செய்து தரப்படுமா?

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விடை கொஞ்சம் நீண்ட விடையாக இருக்கிறது.

கிணத்துக்கடவு தொகுதியில் கோடங்கிப்பட்டி கிராமத்தில் மக்கள்தொகை அடர்வு மிகக் குறைவாக உள்ளது. புதிய வழித்தடம் இயக்கப்படும்போது இக்கிராமத்திற்கும் சில நடைகள் இயக்கிட நடவடிக்கை எடுக்கப்படும். கோடங்கிப்பட்டி கிராமம், பொள்ளாச்சி-கோபாலபுரம் பிரதான சாலையிலிருந்து 1.7 கிலோ மீட்டர் தூரத்தில் அமைந்துள்ளது. தற்போது அந்தச் சாலை வழியாக 6 நகரப் பேருந்துகள், 72 நடைகளும், 2 தனியார் பேருந்துகள் 31 நடைகளும் இயக்கப்பட்டு வருகின்றன. நெடும்பாறை கிராமத்திற்கு 2 நகரப் பேருந்துகள் 12 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. செல்லப்பம்பாளையம் கிராமம் பொள்ளாச்சி-வடக்கிபாளையம் பிரதான சாலையிலிருந்து சுமார் 0.75 கிலோ மீட்டர் தூரத்திலேயே அமைந்திருப்பதால், கிராம மக்கள் வசதிக்காக பிரதான சாலை வழியாக 6 நகரப் பேருந்துகள்மூலம் 80 நடைகளும், 2 தனியார் பேருந்துகள்மூலம் 32 நடைகளும் இயக்கப்பட்டு வருகின்றன. அதேபோல், கொங்கநாட்டான்புதூர் கிராமமும் இப்பிரதான சாலையிலிருந்து 0.9 கிலோ மீட்டர் தூரத்திலே அமைந்திருப்பதால், கிராம மக்கள் வசதிக்காக பிரதான சாலை வழியாக 6 நகரப்





பேருந்துகள்மூலம் 80 நடைகளும், 2 தனியார் பேருந்துகள்மூலம் 32 நடைகளும் இயக்கப்பட்டு வருகின்றன. பிரதான சாலையிலிருந்து ஒரு கிலோ மீட்டர் தூரத்திற்குக் குறைவாகக் கிராமங்கள் இருப்பின், அவற்றைப் பேருந்து வசதிபெற்ற கிராமங்களாகவே கருதலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. தாமோதரன்.

**திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பேருந்து கேட்டிருக்கிற கிராமங்கள் எல்லாம், அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல், பேருந்து தற்போது செல்கின்ற முக்கியச் சாலைகளிலிருந்து ஒரு கிலோ மீட்டர் மற்றும் இரண்டு கிலோ மீட்டர் தூரத்தில்தான் இருக்கின்றன. இந்தக் கிராமங்களிலிருந்து மக்கள், வேலைக்காகப் பொள்ளாச்சி நகருக்கு வர வேண்டி இருக்கிறது; மற்றும் ஒவ்வொரு கிராமத்திலிருந்தும் கிட்டத்தட்ட 50-க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் மேல்நிலைக் கல்விக்காகப் பொள்ளாச்சி நகருக்கு வர வேண்டியிருக்கிறது. அதனால், அந்த நேரங்களிலே ஒரு கிலோ மீட்டர், இரண்டு கிலோ மீட்டர் நடந்து வந்து பஸ் ஏற வேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. மழைக் காலங்களில் மிகவும் சிரமப்படுகிறார்கள். அதனால், அதைக் கருத்தில்கொண்டு, ஒரு கிலோ மீட்டர் என்ற குறைந்த அளவு இடைவெளி இருந்தாலும், அந்த மாணவர்களின் எண்ணத்தை நிறைவேற்றுகின்ற வகையில் அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து, அந்தக் கிராமங்களுக்கு விரைவில் பஸ் வசதி செய்து கொடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு கிராமத்திலிருந்து நகரப் பேருந்து நகரத்தை நோக்கிச் செல்கின்றபோது இடையிலே ஒரு கிராமத்திற்குள் போய் வருவதை அந்தக் கிராமத்து மக்கள் விரும்புவதில்லை. புறப்பட்டவுடன் நேரடியாகப் போய்ச் சேர வேண்டிய இடத்திற்குப் போய்ச் சேர வேண்டுமென்ற எண்ணத்தோடுதான் குறுக்குச் சாலைகளிலே போகின்றபோது, அந்தக் கிராமத்திலே இருக்கின்ற மக்கள் சங்கடப்படுகிறார்கள். இருந்தாலும், சட்டமன்ற உறுப்பினர் இங்கு தெரிவித்திருக்கிறார். கோவையிலுள்ள போக்குவரத்துக் கழகம்

கிட்டத்தட்ட 2,450 பேருந்துகளை வைத்து இயக்கிக்கொண்டிருக்கிறது. கடந்த 7, 8 ஆண்டு காலமாகப் புதிய பேருந்துகள வராத காரணத்தால், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அரசு நிதியை அளித்து. கடந்த ஆண்டு முதல் 350 புதிய பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. இந்த ஆண்டும் அனுமதி அளித்திருக்கிறார்கள். வெகு விரைவிலே புதிய பேருந்துகள் வருகின்றபோது, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள பிரச்சினையைக் கருத்திற்கொண்டு, ஆய்வு செய்யப்பட்டு, நடைமுறைப்படுத்தலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. தாமோதரன்.

**திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெடும்பாறை, கோடங்கிபட்டி ஆகிய பகுதிகளின் வழியாகச் சென்று வேறு கிராமத்தை அடையலாம். அப்படி வழி இருக்கிறது. ஆனால், செல்லப்பம்பாளையம், கொங்கநாட்டான்புதூர் ஆகிய கிராமங்களுக்குத்தான் பஸ் சென்று, திரும்பி வர வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அதைக் கருத்திற்கொண்டு, மாண்புமிகு அமைச்சரவர்கள் மேற்படி இரண்டு கிராமங்களுக்காவது உடனடியாகப் பேருந்து விட ஏற்பாடு செய்வாரா எனக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை ஆய்வு செய்யலாம். இன்று அதிகாரிகளுக்கு இது பற்றிச் சொல்லப்பட்டு, ஆய்வு செய்து, மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பண்ருட்டி சட்டமன்றத் தொகுதியில் 5 புதிய வழித்தடங்களுக்கான ஆய்வுகளையெல்லாம் மேற்கொண்டு, குள்ளஞ்சாவடியிலிருந்து நெய்வேலிக்கும், பண்ருட்டியிலிருந்து குள்ளஞ்சாவடிக்கும், அதே மாதிரி, கீழமாம்பட்டு போன்ற பல்வேறு வழித்தடங்களை உருவாக்கிப் பேருந்துகளை விடுகின்ற நேரத்தில், மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய அலுவலகத்திலிருந்து, உள்ளூர்ப் பேருந்துகளைத்





தற்போது விட வேண்டாமென்ற ஓர் உத்தரவை வழங்கியிருக்கிறார்கள்; அதனால், நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதாக மேலாண்மை இயக்குநர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். இதனை மறுபரிசீலனை செய்ய வேண்டும். ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, அந்த 5 புதிய வழித்தடங்களில் புதிதாகப் பேருந்துகளை இயக்குவதற்கு அவை தயாராக இருக்கின்றன. எனவே, அந்த 5 வழித்தடங்களில் பேருந்துகளை இயக்குவதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே கடலூர் மாவட்டத்தில், வடலூர் பகுதியிலிருந்து ஒரே நாளில் 30-க்கும் மேற்பட்ட வழித்தடங்களில் பேருந்துகள் இயக்கப்பட்டன. இப்போது விழுப்புரம் மண்டலப் போக்குவரத்துக் கழகத்திலிருந்து ஏற்கெனவே வாங்கப்பட்ட புதிய பேருந்துகள் அனைத்தும் புதிய வழித்தடங்களுக்கு அனுப்பப்பட்டு விட்டன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இந்த ஆண்டு கிட்டத்தட்ட 3,000 பேருந்துகளை அரசுப் பணத்திலிருந்து வாங்கச் சொல்லி உத்தரவு தந்திருக்கின்றார்கள். அவையும் ஓரிரு மாதங்களில் வந்துவிடும். வந்த பிறகு உறுப்பினருடைய கருத்தை ஏற்று, அந்த வழித்தடங்களில் நிச்சயமாகப் பேருந்துகள் விடப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிப்பட்டு தொகுதியிலே, பள்ளிப்பட்டு நகரிலே புதிய பணிமனை அமைக்க வேண்டுமென்ற கோரிக்கை நீண்ட நாட்களாக இருந்து வருகின்றது. திருத்தணியிலிருந்து பள்ளிப்பட்டுக்கு வருகின்ற தூரம் 44 கி.மீ. ஆனால் உண்மைக்கு மாறாக, 40 கி.மீ.-க்குக் குறைவாக இருக்கிறது என்ற ஓர் எதிர்மறையான பதிலைப போக்குவரத்துக் கழக அதிகாரிகள் தெரிவித்திருக்கிறாகள். ஆகவே, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரவாகள் இதிலே கவனம் செலுத்தி, பள்ளிப்பட்டுக்குத் தகுந்த உதவியைச் செய்வார்களா என்று தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

[2007 ஏப்ரல் 17

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே இதே அவையிலே மாண்புமிகு உறுப்பினரவர்கள் கேட்ட கேள்விக்குப் பதிலைச் சொல்லியிருக்கின்றேன். 40 கிமீக்கு அதிகமாக இருக்கின்ற இடத்திலே பணிமனை அமைக்க வேண்டுமென்று முடிவெடுத்தால், அந்தப் பகுதியில் போக்குவரத்துக் கழகத்திற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம் நிலத்தைப் பெற்றுத் தந்து, அதற்குத் தேவையான அடிப்படை வசதிகளைச் செய்வதற்கு, ஒரு பணிமனை அமைப்பதற்குக் கிட்டத்தட்ட 40 இலட்சம் ரூபாயிலிருந்து 50 இலட்சம் ரூபாய் வரை செலவாகிறது. போக்குவரத்துக் கழகங்கள் நிதி நெருக்கடியில் இருக்கின்ற காரணத்தினால்தான் இதுபோன்ற செயல்களை உடனடியாகச் செய்ய முடியவில்லை. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், அவருடைய சட்டமன்றத் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கொஞ்சம் பணம் ஒதுக்கித் தருவார்களேயானால், நிச்சயமாக இந்தப் பணி இந்த ஆண்டே எடுத்துக்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன்.

**திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கை மாவட்டம், சிவகங்கையில் அரசு துரைசிங்கம் கலைக் கல்லூரியும், அரசு மகளிர் கலைக் கல்லூரியும், மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகமும், மற்றும் அனைத்துத் துறை மாவட்ட அலுவலகங்களும் இருக்கின்றன. சிவகங்கையிலிருந்து மானாமதுரைக்கு 18 கி.மீ. தூரம்தான் இருக்கிறது. மானாமதுரையிலிருந்து காலையில் அரசு அலுவலகங்களில் வேலை செய்கின்ற அரசு ஊழியர்களும், மாணவ, மாணவியர்களும் அதிகமாக சிவகங்கைக்குச் செல்கிறார்கள். இதனைக் கருத்திற்கொண்டு, மானாமதுரையிலிருந்து சிவகங்கைக்கு என்று தனியாக மகளிர் மட்டும் பயணம் செய்யக்கூடிய ஒரு நகரப் பேருந்தை, காலையில் 8-30 மணியிலிருந்து 9-00 மணிக்குள் ஒரு நடையும், மாலையில் 5 மணிக்கு ஒரு நடையும் இயக்க அரசு முன்வருமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு மத்திய நிதி அமைச்சர் அவர்களும் வந்து,



2007 ஏப்ரல் 17]

சிவகங்கை மாவட்டம், காரைக்குடியில் கிட்டத்தட்ட 42 வழித்தடங்களில் புதிய பேருந்துகள் இயக்கப்பட்டன. அப்போதுகூட இந்தக் கோரிக்கை அங்கே வரவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஆய்வு செய்யலாம். மகளிருக்கென்று தனியாகப் பல வழித்தடங்களில் இயங்கி வந்த நகரப் பேருந்துகள் கடந்த ஆட்சிக் காலத்திலே நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. மீண்டும் ஒவ்வோர் இடத்திலேயும் அது இயக்கப்பட்டு வருகின்றது. மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையைக் கருத்திலேகொண்டு விரைவிலே புதிய பேருந்துகள் வருகின்றபோது, அந்த வழித்தடங்களிலும் பேருந்துகளை இயக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-10)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 76, மாண்புமிகு உறுப்பினர் திரு. து. அமரமூர்த்தி, மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**76—**

## நவீன அரிசி ஆலை

**•13738—திரு. து. அமரமூர்த்தி:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரியலூர் தொகுதியில் புதிய நவீன அரிசி ஆலை அமைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அரியலூர் தொகுதியில் நவீன அரிசி ஆலை அமைக்கும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. து. அமரமூர்த்தி.

**திரு. து. அமரமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் நான்காம் முறையாக

[2007 ஏப்ரல் 17

முதல்வராகப் பொறுப்பேற்றிருந்தபோது அன்றைக்கு உணவுத் துறை அமைச்சராக இருந்த மாண்புமிகு அமைச்சர் திரு. கே.என். நேரு அவர்கள் உணவு மானிய விவாதத்தின்போது, திருமானூர் பகுதியிலே நவீன அரிசி ஆலை அமைக்கப்படும் என்று அறிவித்தார்கள். அதற்குப் பின்னாலே ஆட்சி மாற்றம் ஏற்பட்டு, கடந்த கால அரசு அதைக் கிடப்பில் போட்டுவிட்டது. எனவே, உடனடியாக அந்த ஆலை திருமானூரில் அமைவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான்காவது முறையாகக் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது அதற்காக ஒப்புதல் எல்லாம் தந்தார்கள். நிலம் அறநிலையத் துறைக்குச் சொந்தமான நிலம். திருமானூர் பகுதியிலே அந்த இடத்தை அறநிலையத் துறையிலிருந்து பெறுவதிலே தாமதம் ஆகிவிட்டது. அதனால்தான் அந்தக் காலத்திலே கட்ட இயலாமல் போனது. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் இடம் மட்டும் தேர்வு செய்து தந்திருப்பாரேயானால், அந்தக் காலத்திலேயே முடிவு செய்யப்பட்டு, அது வந்திருக்கும். நவீன அரிசி ஆலை நிச்சயமாக அங்கு வந்திருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. து. அமரமூர்த்தி.

**திரு. து. அமரமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்றைக்கு அதிகாரிகள் எங்களிடம் நாடியிருந்தால் நிச்சயமாக அந்த இடத்தையும் பெற்றுத் தருவதற்குத் தீவிர முயற்சியை எடுத்திருப்போம். இன்றைக்கு அமைச்சர் அவர்கள் உறுதி தந்தால், நிச்சயமாக இடத்தைத் தேர்வு செய்வதிலே எங்களுடைய உழைப்பைக் காட்டி, நிச்சயமாக இடத்தைத் தேர்வு செய்து தருகிறோம். உடனடியாக அரிசி ஆலை அமைப்பதற்கு நடவடிக்கை எடுபபாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விருமபுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.



2007 ஏப்ரல் 17]

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரியலூர் தொகுதியில் சுமார் 9,226 எக்டேர் நிலப்பரப்பில் 21,770 மெட்ரிக் டன் நெல் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. நவீன அரிசி ஆலையும் அரியலூர் தொகுதியில் இல்லை. அரியலூர் தொகுதியில் ஒன்றுக்கு மேற்பட்ட நவீன அரிசி ஆலைகள் துவங்கத் தேவையான சாத்தியக்கூறுகள் இருக்கின்றன. இத்தொகுதியில் தொழில் முனைவோர், நவீன அரிசி ஆலை தொழில் தொடங்க முன்வரும்பட்சத்தில், மாநில அரசு மானியத்துடன் கடன் பெற்றுத் தொழிற்சாலை தொடங்க அனைத்து உதவிகளும் மாவட்டத் தொழில் மையம்மூலம் செய்து தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 77, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**77—**

**பணியாளர்கள்**

***752—திரு. சு. குணசேகரன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சிவகங்கை அரசு தலைமை மருத்துவமனையில் மருத்துவர்கள் மற்றும் பணியாளர்கள் எண்ணிக்கையை அதிகப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*(அ)* மற்றும் *(ஆ)* சிவகங்கை அரசு தலைமை மருத்துவமனையில் ஒரு மருத்துவமனைக் கண்காணிப்பாளர், ஒரு உள்ளிருப்பு மருத்துவ அலுவலர், ஒரு பல் மருத்துவர், ஏழு முதுநிலை குடிமை சிறப்பு மருத்துவர்கள் மற்றும் 12 உதவி மருத்துவர்கள் பணிபுரிந்து வருகின்றனர். மேலும், இம்மருத்துவமனைக்குப் படுக்கைகள்

[2007 ஏப்ரல் 17

அளவுகோல்வீதம் கணக்கிடும்போது (Norms as per bed strength). தேவையான எண்ணிக்கையில் மருத்துவர்கள் மற்றும் பிற பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். எனவே, இம்மருத்துவமனைக்கு மருத்துவர்கள் மற்றும் பணியாளர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டிய அவசியம் தற்போது எழவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கை அரசு தலைமை மருத்துவமனை 1-4-1985 ஆம் ஆண்டு தலைமை மருத்துவமனையாக உயர்வு பெற்றது. அப்போது 86 படுக்கைகள் இருந்தன. டாக்டர்கள் 13 பேர் பணி நியமனம் செய்யப்பட்டிருந்தார்கள். ஆனால், தற்போது 226 படுக்கைகள் அந்த மருத்துவமனைக்கு அனுமதிக்கப்பட்டுள்ள நிலையிலும், நாள்தோறும் சுமார் 1,800 வெளிநோயாளிகள் வந்து போகிற நிலையிலும், 23 துணை மருத்துவர்கள் மட்டுமே அனுமதிக்கப்பட்டிருப்பது என்பது சரியாக இருக்காது என்று கருதுகிறேன். 86 படுக்கைகள் இருக்கும்போது 13 மருத்துவர்கள். இப்போது மூன்று மடங்காகப் படுக்கைகள் கூடியிருக்கின்றன. வெளிநோயாளிகள் எண்ணிக்கையும் கூடியிருக்கிற நிலையில், மருத்துவர்கள் மட்டும் 23. Senior Doctors 6 பேர் பணியமர்த்தப்பட்டிருக்கிறார்கள். எனவே, இதைக் கருத்தில்கொண்டு, கூடுதலாக 10 Assistant Doctors-ஐப் பணி நியமனம் செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு, இருதய நோய், தோல் நோய், சிறுநீரக நோய்போன்றவற்றிற்கான சிறப்பு மருத்துவர்களையும் அங்கே உருவாக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வியை மட்டும் கேளுங்கள்.

**திரு. சு. குணசேகரன்:** 1993 ஆம் வருடம், கண் மருத்துவர் கூடுதலாகப் பணியமர்த்தப்படுவார் என்று கூறியும், இதுவரை அந்த இடம் காலியாக இருக்கிறது. அதைப்போல, Sanitary Workers, 1985-ல் 9 பேராக இருந்தனர். இப்போதும் 9 ஆகத்தான் நீடித்துக்கொண்டிருக்கிறது. எனவே, கூடுதலாக 10 Sanitary Workers-ம் அதைப்போல, தற்போது 26 மருத்துவப் பணியாளர்கள் பணிபுரிகிறார்கள்; கூடுதலாக 10 மருத்துவப் பணியாளர்களும் நியமித்தால்தான் அந்த மருத்துவமனைமூலம் சிறப்பாக மக்களுக்குச்



2007 ஏப்ரல் 17]

சேவை செய்ய முடியும். எனவே, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கூடுதலாக மருத்துவர்கள், அதைப்போலப் பணியாளர்களை நியமனம் செய்ய அனுமதிப்பாரா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 10-15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, படுக்கையினுடைய சதவிகிதத்தின் அடிப்படையில் மருத்துவர்களை நியமிக்க வேண்டுமென்ற கோரிக்கையை சட்டமன்ற உறுப்பினர்களும் எனக்குக் கோரிக்கையாக வைத்துக்கொண்டிருக்கிறார்கள். நாங்கள் ஆய்வுக்குப் போகிற நேரத்திலே பொது மக்களும் இந்தக் கோரிக்கையை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அது உள்ளபடியே ஏற்றுக்கொள்ளப்பட வேண்டிய ஒரு கோரிக்கை. காரணம், 15 ஆண்டு காலமாக bed-னுடைய அளவிற்கு ஏற்றாற்போல் மருத்துவர்களும் நியமிக்கப்படவில்லை. இப்போது அரசு அந்த முயற்சியை எடுத்திருக்கிறது. எத்தனை beds இருந்தால் எவ்வளவு மருத்துவர்கள் இருக்க வேண்டும் என்று ஒரு கணக்கை நாங்கள் எடுத்துக்கொண்டிருக்கிறோம். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டும் என்று சொன்னால், தாலுகா மருத்துவமனையாக P.H.C.-ஐ upgrade செய்திருக்கிறார்கள். அப்படியும், ஏற்கெனவே இருக்கின்ற அந்த ஒரு டாக்டர், இரண்டு டாக்டர்களோடுதான் இருக்கிறார்களேயொழிய, அதிகப்படியான மருத்துவர்கள் நியமிக்கப்படவில்லை. ஆகவே, இந்தக் கருத்துரு—மாண்புமிகு உறுப்பினருடைய கருத்துரு--அரசினுடைய பரிசீலனையிலே இருக்கிறது. சிவகங்கைக்கு நானும் வந்திருக்கிறேன். நிறைய மருத்துவர்கள் வேண்டும் என்பதை நானும் அறிந்திருக்கிறேன். ஆகவே, தகுந்த நடவடிக்கையை இந்த அரசாங்கம் எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. மகேந்திரன்.

**திரு. கே. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னைப் பொது மருத்துவமனையில் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்ற ஒரு கட்டடம் இன்னும் திறக்கப்படாமல் இருக்கிறது. அது எப்போது திறக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன். பொது

[2007 ஏப்ரல் 17

மருத்துவமனைக்குத் தேவையான உபகரணங்கள் அங்கே போதுமான அளவுக்கு இல்லாத காரணத்தினால், கூடுதல் உபகரணங்கள் வாங்கிக் கொடுப்பதற்கான நடவடிக்கையை அமைச்சர் அவர்கள் மேற்கொள்வார்களா என்பதையும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுப் பொது மருத்துவமனையிலே எல்லாக் கட்டடங்களையும் திறந்திருக்கிறார்கள். Pay ward-ஐ மட்டும்தான் திறக்காமல் இருக்கிறோம். அந்த Pay ward-க்குக் கொஞ்சம் அதிகப்படியான rate fix பண்ணி வந்துவிட்டது. நம்முடைய துறையிலே அதைக் கொஞ்சம் குறைக்க வேண்டும் என்று, தனியார் எவ்வளவு வாங்குகிறார்களோ, அதிலே பாதிக்கும் குறைவாக இருக்க வேண்டும் என்று நாங்கள் அந்த முயற்சியை எடுத்து, இப்பொழுது அந்தக் கோப்பு நகர்ந்துகொண்டிருக்கிறது. அநேகமாக என்னுடைய துறை மானியக் கோரிக்கைக்கு முன்பாக அந்தக் கோப்பின்மீது உத்தரவை வழங்குவதற்கு வேண்டிய முயற்சியை எடுத்துக்கொண்டிருக்கிறோம். அப்படி வருகிற நேரத்திலே தனியார் மருத்துவமனைகளுக்கு ஈடாக 200 படுக்கைகள் வசதிகொண்ட அந்தத் தலைமை மருத்துவமனை என்பது மிகச் சிறப்பாகச் செயல்படக் கூடிய வேலைகளையும் இந்த அரசாங்கம் செய்துகொண்டிருக்கிறது. மருத்துவமனைகளுக்கு வேண்டிய கருவிகளை எல்லாம் வாங்கிக் கொடுக்க வேண்டிய பணிகளையும் இந்த அரசாங்கம் 10 மாத காலத்திலே மிக வேகமாக முடுக்கி விட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சு. குணசேகரன், சொல்லுங்கள்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Question மாத்திரம் கேட்க வேண்டும். Supplementary one word-ல இருக்க வேண்டும்.

**திரு. சு. குணசேகரன்:** அமைச்சருடைய பதிலுக்கு நன்றி. ஆனால், தற்போது 23 மருத்துவர்கள் பணியாற்றுகின்ற இந்த நேரத்தில் மாற்றுப் பணி விடுமுறை, கோர்ட்போன்ற பிரச்சினைகள், இரவு மருத்துவர் பணியாற்றுகிற நேரத்தில் எடுக்கிற லீவு, இவற்றையெல்லாம்



2007 ஏப்ரல் 17]

கணக்கிடும்போது அங்கே மருத்துவர்கள் போதாத ஒரு சூழ்நிலை ஏற்படுகிறது. எனவே, தற்காலிகமாகவாவது 10 மருத்துவர்களைப் பணி நியமனம் செய்து தருவாரா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படித் தற்காலிகமாக ஒவ்வொரு மருத்துவமனைக்கும் தனியாகப் பணி நியமனம் செய்ய முடியாது. அரசினுடைய பரிசீலனையிலே, மருத்துவர்களுடைய எண்ணிக்கையைக் கூட்டுவதற்கு வேண்டிய ஆய்வு நடந்து கொண்டிருக்கிறது. அப்படி வருகிற நேரத்திலே, நம்முடைய சிவகங்கைக்குக் கொஞ்சம் முன்னுரிமை வழங்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 78, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. மாணிக்கம், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

**78—**

## தார்ச் சாலை

***8738—திரு. இரா. மாணிக்கம்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குளித்தலை தொகுதி, அய்யர்மலை அருள்மிகு ரெத்தினகிரீஸ்வரர் கோயில் கிரிவலப் பாதைக்குத் தார்ச் சாலை அமைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கரூர் மாவட்டம், குளித்தலை வட்டம், சிவாயம் அய்யர்மலை அருள்மிகு ரெத்தினகிரீஸ்வரர் திருக்கோயிலுக்கு கிரிவலப் பாதை ஏறத்தாழ 3.75 கிலோ மீட்டர் தூரம் உள்ளது. அதில் ஏற்கெனவே 1.50 கிலோ மீட்டர் தூரத்திற்குத் தார்ச் சாலையும், சிமெண்ட் சாலையும் போடப்பட்டு 32.4 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பணி

[2007 ஏப்ரல் 17

நிறைவேற்றப்பட்டிருக்கிறது. எஞ்சியிருக்கக்கூடிய 2.10 கிலோ மீட்டர் தூரம் சாலையைச் செப்பனிட்டுத் தார்ச் சாலையாக மாற்றுவதற்கு 55 இலட்சம் ரூபாய்க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டிருக்கிறது. தேவையான நிதி கிடைத்தவுடன் அந்தப் பணிகள் துவங்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா மாணிக்கம்.

**திரு. இரா. மாணிக்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளித்தலை தொகுதிக்குட்பட்ட அய்யர்மலை அருள்மிகு ரெத்தினகிரீஸ்வரர் திருக்கோயில் மிகவும் பிரசித்திபெற்ற ஆலயம் ஆகும். இந்த மலை ஏறத்தாழ 1,330 அடி உயரம் கொண்டது. இதன் உச்சி வரை 114 படிகள் உள்ளன. 3½ கிலோ மீட்டர் சுற்றளவுள்ள அந்த கிரிவலப் பாதையிலே தினந்தோறும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கிரிவலம் சுற்றி வருகிறார்கள். மாதந்தோறும் பௌர்ணமி அன்று 25 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் கிரிவலம் வருகிறார்கள். ஆண்டுதோறும் சித்தரை மாதத்திலே சுவாமியைத் தேரிலே வைத்து, கிரிவலப் பாதையிலே சுற்றி வருவார்கள். அந்த நேரத்திலே ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் அந்தத் திருவிழாவிலே கலந்துகொள்கிறார்கள். மேலும், ஆண்டுதோறும் கார்த்திகை மாதம், வாரந்தோறும் திங்கட்கிழமையன்று சோம வாரத் திருவிழாவிலேயும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்துகொள்கிறார்கள். ஆகவே, இத்தகைய பிரசித்திபெற்ற அந்தத் திருக்கோயிலுக்கு கிரிவலப் பாதை அமைப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கின்றார்கள். அதற்காக, அந்தத் தொகுதி மக்கள் சார்பாக எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எல்.பி. தர்மலிங்கம்.

**திரு. எல்.பி. தர்மலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது சத்தியமங்கலம் தொகுதிக்குட்பட்ட அருள்மிகு ஸ்ரீ பண்ணாரியம்மன் திருக்கோயில் தமிழகத்தில் முதல் நிலைத் திருக்கோயில்களில் ஒன்றாகும். இக்கோயிலுக்குத் தினசரி ஆயிரக்கணக்கான பக்தர்கள் தமிழகம் மற்றும் அண்டை மாநிலங்களான கர்நாடகம், கேரளாவிலிருந்து வருகை தருகிறார்கள்.



2007 ஏப்ரல் 17]

இந்தக் கோயிலைச் சுற்றியுள்ள சாலைகள் மிகவும் பழுதடைந்துள்ளன. அது மாத்திரமின்றி, முடி திருத்தும் மண்டபம், விருந்து மண்டபங்கள் அமைந்துள்ள தெப்பக்குளம் செல்லும் பகுதிகளிலும் சாலைகள் மிகவும் பழுதடைந்துள்ளன. பழுதடைந்துள்ள சாலைகளைத் தார்ச் சாலைகளாகவோ அல்லது concrete சாலைகளாகவோ மாற்றிக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள்மூலம் தெரிந்துகொள்ள விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்துத் திருக்கோயில்களிலும் தேவையான அடிப்படை வசதிகளைச் செய்து, தேவையான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டிருக்கின்றார்கள். அந்த அடிப்படையில், ஆங்காங்கே இருக்கக்கூடிய சிறு தேவைகள், குறைகளை நிவர்த்தி செய்வதற்கு ஆவன செய்யப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 79, மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. செந்தில் பாலாஜி. மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள்.

**79—**

### சாயப் பயிற்சி மையம்

***11540 திரு. வே. செந்தில் பாலாஜி:**

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கரூர் தொகுதி, கரூரில் நவீனத் தொழில்நுட்பத்துடன் துணி நூல் சாயப் பயிற்சி மையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா, கைத்தறித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

கரூர் தொகுதி, கரூரில் ரூ.10 கோடி மதிப்பீட்டில் கூட்டு ஜவுளிப் பூங்கா அமைக்க உரிய பிரேரணை மத்திய அரசுக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி பூங்காவில் சாயப் பயிற்சி மையம் அமைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

[2007 ஏப்ரல் 17

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. செந்தில் பாலாஜி.

**திரு. வே. செந்தில் பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரூரில் ஜவுளிப் பூங்கா அமைப்பது என்பது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில் எடுக்கப்பட்ட முடிவாகும். அந்த வகையில் மத்திய அரசுக்குச் சென்று அந்தப் பணிகளில் எந்தவித முதற்கட்ட நடவடிக்கையும் இதுவரை எடுக்கப்படவில்லை. அந்தப் பணிகள் எப்போது தொடங்கப்படும்? கரூரில் 500-க்கும் மேற்பட்ட சாயத் தொழிற்சாலைகள் உள்ளன. அவற்றில் முதலில் ஆரம்பக் கட்டத்தில் பணிக்குச் சேர்பவர்கள் குறைந்த சம்பளத்திலும், சம்பளம் இல்லாமலும் கற்றுக்கொள்கின்ற ஒரு சூழ்நிலை நிலவுகிறது. ஆகவே, இது குறித்து அரசு விரைந்து நடவடிக்கை எடுத்து இத்தகைய பயிற்சி மையத்தைத் தொடங்க முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி துறைக்கு வருகிறபோது இருந்த நிலை வேறு. இப்போது மத்திய அரசிலேயிருந்து அதற்குரிய ஒப்புதல் பெறப்பட்டுவிட்டது. கண்டிப்பாக 2008 ஜூன் மாதம் இந்த ஜவுளிப் பூங்கா அங்கே அமைந்து சிறப்புடன் செயல்படத் தொடங்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. செந்தில் பாலாஜி.

**திரு. வே. செந்தில் பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அத்தகைய ஜவுளிப் பூங்கா, அனைத்து வசதிகளுடன்கூடிய ஜவுளிப் பூங்காவாக அமைய வேண்டும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜவுளி உள்ளிட்ட அனைத்துத்



2007 ஏப்ரல் 17]

தொழில்நுட்பங்களும், அதுவும், துணி நூல் பதனிடும் உயர் தொழில்நுட்பம் உள்ளிட்ட அனைத்து வசதிகளும் அந்த ஜவுளிப் பூங்காவிலே செய்து கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 80. மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஜெயபால், மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

**80—**

## நிவாரணத் தொகை

*1181— **திரு. எஸ். ஜெயபால்:**

மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டக் கடலோர கிராம மீனவப் பெண்களுக்கு மீனவர் கூட்டுறவுச் சங்கங்களின்மூலமாக மீண்டும் நிவாரணத் தொகை வழங்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) குளச்சல் சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் மாண்புமிகு அண்ணன் ஜெயபால் அவர்கள் கேட்டுள்ள கன்னியாகுமரி மாவட்டத்திற்கு மட்டுமல்ல, தமிழகக் கடற்கரை மாவட்டங்களான கன்னியாகுமரி, தூத்துக்குடி, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் தேசிய கடல் மீனவ மகளிர் சேமிப்பு நிவாரணத் திட்டத்தினை—2004-2005 மற்றும் 2005-2006 ஆம் ஆண்டிற்கான தேசிய கடல் மீனவ மகளிர் சேமிப்புத் திட்டத்தினை முந்தைய அ.தி.மு.க. அரசு செயல்படுத்தாமல் நிறுத்திவிட்டது.

(முற்பகல் 10-25

ஆழிப் பேரலையால், சுனாமியால் உயிர்களையும், உடைமைகளையும், உறவுகளையும் பறிகொடுத்து, மன நிலை பாதிக்கப்பட்டு, மிகுந்த சிரமத்திற்குள்ளான மீனவ சமுதாயத்தின்மீது

அக்கறைகொண்ட நம்முடைய தமிழகத்தின் வரலாற்று முதல்வர் டாக்டர் கலைஞர் ஐயா அவர்களுடைய அரசு, குறிப்பாக, மீனவ மக்களின்மீது அக்கறைகொண்டு, மீனவ மகளிரின் நலனைக் கருத்திற்கொண்டு இத்திட்டத்தினை முற்றிலும் தலைவர் கலைஞர் அரசே ஏற்றுக்கொண்டு செயல்படுத்தும் என்று அறிவித்து, 2006-2007 ஆம் ஆண்டிற்கான அரசாணை வழங்கி, அதற்கான தொகையான ரூ.12,35,91,600/-ஐ ஒதுக்கீடு செய்து, அதன்மூலம் 1,02,993 மீனவ மகளிர் பயன் அடைகின்றனர். மீனவ மகளிர் நலனில் அக்கறைகொண்டுள்ள தலைவர் கலைஞருடைய அரசு, இனி வரும் ஆண்டுகளிலும் இத்திட்டத்தை மாநில அரசின் திட்டமாகவே தொடர்ந்து செயல்படுத்தும் என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஜெயபால். (குறுக்கீடு)

**திரு. டி. ஜெயக்குமார்:** Speaker Sir...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஜெயபால் (குறுக்கீடு) You have no right to interfere.

**திரு. எஸ். ஜெயபால்:** தேசிய மீனவர் மகளிர் திட்டத்தின்கீழ் கன்னியாகுமரி மாவட்டத்தில் ஏறத்தாழ 12,000-க்கும் அதிகமான... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெயக்குமார், அவர் supplementary question கேட்கும்போது, இடையில் நீங்கள் எழுந்து நின்றால் என்ன அர்த்தம்?

**திரு. எஸ். ஜெயபால்:** மீனவப் பெண்கள் 2004-2005 ஆம் ஆண்டில் மாதம் ஒன்றுக்கு ரூ.75 வீதம் 8 மாதங்களுக்கு ரூ.600 கட்டியது. கடந்த அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே சேமிக்கப்பட்ட அந்த சேமிப்பு நிதி மீனவப் பெண்களுக்கு வழங்கப்படவில்லை. கடந்த சட்டமன்றத் தேர்தலிலேகூட அண்ணா தி.மு.க. அரசு எங்களிடத்திலே இருந்து பெற்ற பணத்தைத் திரும்பத் தர மறுக்கிறது என்று புகார்களை எல்லாம் எங்களிடத்திலே சொன்னார்கள். டாக்டர் கலைஞர் அவர்களுடைய தலைமையிலே இருக்கக்கூடிய இந்த அரசு மீண்டும் அந்த மீனவப் பெண்களுக்கு நிவாரண நிதியை





வழங்குவதற்கு உத்தரவிட்டு இருப்பதாக நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கின்றார்கள். அதற்கு நன்றி. அதே வேளையிலே, ஒரு மீனவப் பெண்ணுக்கு 1,200 ரூபாய் என வழங்கப்படக்கூடிய இந்த நிதியைக் கூடுதலாக்கி, பக்கத்து மாநிலமாகிய புதுச்சேரியிலே 1,000 ரூபாயும், 90 கிலோ அரிசியும் வழங்கப்படுவதைப்போன்று தமிழகத்திலும் அந்த மீனவப் பெண்களுக்கு ஏறத்தாழ 3,000 ரூபாய் சேமிப்பு நிவாரண நிதியாக வழங்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீனவ மக்கள்மீது அக்கறைகொண்டுள்ள முதல்வர் அவர்கள் தமிழக மீனவர்களுக்கு நல்ல பல திட்டங்களை அறிவித்து வருவதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிவார்கள். அந்த வகையிலே, உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலே எடுத்துச் சொல்லி, அதற்கான ஆய்வு செய்யப்படும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர்மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. சிறப்புக் கவன ஈர்ப்பு

### கோவிந்தவாடி அகரம் அருகில் வேன்மீது இரயில் மோதிப் பலர் இறந்தது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** காஞ்சிபுரம் அருகே கோவிந்தவாடி அகரத்தில் ஆள் இல்லாத இருப்புப் பாதை சந்திப்பில் வேன் கடந்தபோது இரயில் மோதிப் பலர் இறந்தது குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள், அ.இ.அ.தி.மு.க. சார்பாக திரு. பி.கே. சேகர்பாபு, தி.மு.க. சார்பாக திரு. ஆர். காந்தி, இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாகத் திருவாளர்கள் டி. சுதர்சனம், சி. ஞானசேகரன், டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், மா. ராஜசேகரன், ஆர்.எம். பழனிசாமி மற்றும்

ராம. சுப்புராம், பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாகத் திருவாளர்கள் ஜி.கே. மணி, அ. தமிழரசு, தி.சு. ராஜா, கே.எல். இளவழகன், த.அ. மேகநாதன், கி. ஆறுமுகம், தி. வேல்முருகன் மற்றும் திருமதி பெ. கமலாம்பாள், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாகத் திருவாளர்கள் சி. கோவிந்தசாமி, என். நன்மாறன் மற்றும் செல்வி கே. பாலபாரதி, இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாகத் திருவாளர்கள் வை. சிவபுண்ணியம், சு. குணசேகரன் மற்றும் திரு. இராமசாமி ஆகியோர் அரசின் கவனத்தை ஈர்த்துள்ளார்கள். இந்த அறிவிப்பில், ஒரு கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் இதனைச் சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்கிறேன். இது குறித்துச் சுருக்கமாகப் பேச வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு.

*முற்பகல் 10-30*

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கவனத்தை மட்டும்தான் ஈர்க்க வேண்டும். சொல்லுங்கள்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** கவனத்தை மட்டும்தான் ஈர்க்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரம் அருகிலே இருக்கின்ற கோவிந்தவாடி அகரத்தில் உள்ள இரயில்வே கிராசிங்கிலே நேற்றையதினம் ஏற்பட்ட கோர விபத்தில் வேலூரிலிருந்து புறப்பட்ட கிராம நிர்வாக அலுவலர்கள் 11 பேர் இறந்த செய்தியைப் பத்திரிகைகளிலே பார்க்கின்றபொழுது, கரையாத கல் நெஞ்சமும் கரையும் என்பார்களே, அதைப்போல இருந்தது அந்தச் செய்தி. இரயில்வே இருப்புப் பாதையானது, பார்ப்பதற்குக் கறுப்பாகத் தெரியும். நேற்றையதினம் ஏற்பட்ட அந்த விபத்தில் மனித உடல்களிலிருந்து பீறிட்டுக் கிளம்பிய இரத்தமானது அந்த இருப்புப் பாதையின் நிறத்தையே சிவப்பாக மாற்றிய ஒரு கோரச் சம்பவம் நடந்தது அனைவரும் அறிந்ததே. இந்த விபத்திற்கு முன்பு, கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் 31 ஆம் தேதி புதுப்பாக்கம் என்ற கிராமத்திலே இதேபோன்று இரயில்வே கிராசிங்கிலே 17 மனித உயிர்களைப் பலி கொண்ட நிகழ்வு நடைபெற்றது. இந்தப் புதுப்பாக்கம் கிராம இரயில்வே கிராசிங்கிற்கும், அகரம் இரயில்வே கிராசிங்கிற்கும் இடையேயுள்ள தூரம் 4 கிலோ மீட்டர்தான். புதுப்பாக்கம் கிராமம் என்பது 36-வது இரயில்வே கிராசிங் ஆகும். நேற்றையதினம் விபத்து நடைபெற்ற கோவிந்தவாடி அகரம் என்பது



34-வது இரயில்வே கிராசிங் ஆகும். செங்கல்பட்டிலேயிருந்து திருச்சுனாம்பூர் வரை இருக்கின்ற மொத்த இரயில்வே கிராசிங்குகள் 21 ஆகும். ஒட்டுமொத்தமாகத் தமிழ்நாட்டிலே இருக்கின்ற இரயில்வே கிராசிங்குகள் 1,100. அவற்றிலே 40 இரயில்வே கிராசிங்குகளுக்குத்தான் ஆட்கள் நியமிக்கப்பட்டுள்ளதாக ஒரு புள்ளிவிவரத்தை இரயில்வே அதிகாரிகள் தந்திருக்கின்றார்கள்.

இதில் நான் வைக்கின்ற கோரிக்கை என்னவென்றால், விஞ்ஞானத் தகவல் தொழில்நுட்பம் அதிக அளவிலே வளர்ந்துள்ள இந்தியாவில், இப்படி ஆள் இல்லாத இரயில்வே கிராசிங்குகளுக்கு மாற்று ஏற்பாடாக எங்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வலியுறுத்தியுள்ள கோரிக்கையின் அடிப்படையில், அதே கோரிக்கையை, அந்த இரயில்வே கிராசிங்குகளுக்குப் புதிய முறையில் ஏதாவது ஒரு மாற்று ஏற்பாட்டினைச் செய்ய வேண்டும். நேற்றையதினம் நடந்த விபத்திலேகூட 9 கிராம அதிகாரிகள் பலியாகி இருக்கிறார்கள். பல்வேறு சுமைகளை, கனவுகளைச் சுமந்திருந்த அந்தக் குடும்பத்தினர் 17+11, இந்த 28 குடும்பங்கள் பலியாவதற்கு இரயில்வே துறை—அதிக இலாபத்திலே இயங்குகின்ற ஒரு துறை என்பது சமீபத்திய அறிவிப்புகளில் வெளியிடப்பட்டிருக்கின்றன—இலாபத்திலே இயங்குகின்ற ஒரு துறையிலே 1,100 இரயில்வே கிராசிங்குகளுக்குப் பணியாளர்களை நியமிக்காதது அந்தத் துறையினை நிர்வகிக்கின்ற அந்தத் துறையின் ** என்பதைக் கூறிக்கொள்கின்ற அதே நேரத்தில், இது மத்திய அரசுக்கு உட்பட்டது என்று தட்டிக் கழிக்காமல், பலியானவர்கள் தமிழகத்திலே இருக்கின்ற மனித உயிர்கள் என்பதை நினைவிலேகொண்டு, இதில் மாநில அரசும் போதிய கவனம் செலுத்துகின்ற வகையில் அதற்கு முன்னெச்சரிக்கை ஏற்பாடாக, இரயில் வருவதற்கு முன்பு அபாய மணி ஒலிக்கச் செய்ய வேண்டும். அப்படி இல்லையென்றால், அந்த இரயில்வே கிராசிங்குகளிலே shift முறையிலே, இரயில் வருகின்ற நேரத்திலே, காவல் துறையினரை நியமித்தாவது இப்படிப்பட்ட மனித உயிர்கள் பலியாவதைத் தடுக்க வேண்டுமென்று இந்த அரசினுடைய கவனத்தை நான் ஈர்க்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். காந்தி.

**திரு. ஆர். காந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. வேலூர் மாவட்டத்தைச் சேர்ந்த கிராம நிர்வாக அதிகாரிகள் சென்னையில் நடைபெற்ற பேரணியில் பங்கேற்க வரும்போது,

---

**மாண்புமிகு பேரவைக் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

காஞ்சிபுரம் கோவிந்தவாடி என்ற கிராமத்திலுள்ள அருள்மிகு தட்சிணாமூர்த்தி திருக்கோயிலுக்குத் தரிசனம் செய்வதற்காகப் போயிருக்கிறார்கள். ஏறத்தாழ காலை 9-40 மணிக்கு அந்தக் கோர விபத்து நடந்திருக்கிறது. அந்தக் கோர விபத்தில் 10 பேர் அதே இடத்திலும், ஒருவர் காஞ்சிபுரம் மருத்துவமனையிலும் இறந்திருக்கிறார்கள். இந்தச் செய்தி தெரிந்தவுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் திரு. அன்பரசன் அவர்களை அந்த இடத்திற்கு போகச் சொல்லியிருக்கிறார்கள். உடனே நானும் அவரோடு சென்று பார்வையிட்டோம். இறந்தவர்களையும் மற்றும் விபத்துக்குள்ளானவர்களையும் அங்கேயிருக்கிற சி.எம்.சி. ஆஸ்பிட்டலுக்கும், ஜெனரல் ஆஸ்பிட்டலுக்கும் அனுப்பினோம். இருந்தாலும். நமது திரு. சேகர்பாபு அவர்கள் இந்த விபத்தைப் பற்றிச் சொல்லும்போது சொன்னார்கள், அவர் சொன்னது எல்லாம் correct தான். இருந்தாலும் கலைஞர் அவர்களுக்குத் தகவல் சொன்னவுடனேயே அவர்கள், அமைச்சர்களை அனுப்பி அந்த இடத்தைப் பார்வையிடச் செய்தார்கள். இந்த நிகழ்ச்சி எல்லோருக்கும் தெரியும். ** நாங்கள் ஒரு நாள் முழுக்க அங்கேதான் இருந்தோம். ** *(குறுக்கீடுகள்)*

*முற்பகல் 10-35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. காந்தி, சொல்ல வேண்டிய கருத்தை மட்டும் சொல்லுங்கள்.

**திரு. ஆர். காந்தி:** இருந்தாலும் பரவாயில்லை. நாங்கள் போய்ப் பார்த்தோம். அவர் சொன்ன மாதிரி 31 ஆம் தேதி, அக்டோபர் மாதத்தில் ஒரு விபத்து நடந்திருக்கிறது. அங்கே ஆள் இல்லாத level crossing தான் இருக்கின்றது. *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. காந்தி, குற்றச்சாட்டு சொல்லாமல் கருத்தை மட்டும் சொல்லுங்கள்.

**திரு. ஆர். காந்தி:** இது குறித்து உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். நாங்களும் கேட்கிறோம். அதே நேரத்தில், மத்திய இரயில்வே இணை அமைச்சர் திரு. வேலு அவர்கள், எங்கேயோ இருந்தவர் உடனடியாக ஒரு special train *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





எடுத்துக்கொண்டு evening அங்கே வந்து பார்வையிட்டு, சி.எம்.சி.யிலே அட்மிட் ஆகியிருந்த அடிபட்டவர்களைப் பார்த்து, உடனடியாக நடவடிக்கை எடுக்கிறேன் என்று சொன்னார்கள். அதேபோல், எங்களுடைய மாவட்ட அமைச்சர் அவர்கள் Assembly முடிந்தவுடன் அங்கே உடனடியாக வந்தார்கள். அவருடன் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரும், நாங்களும் சி.எம்.சி. சென்று பார்த்தோம். இருந்தாலும் என்ன சொல்கிறேன் என்றால், ** உண்மையாக, மக்களுக்காக உண்மையாகப் பாடுபடுகின்ற அரசு கலைஞர் அவர்கள் அரசுதான்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. காந்தி, நீங்கள் சொல்ல வேண்டிய கருத்தை மட்டும் சொல்லுங்கள். யார் மீதும் குற்றச்சாட்டுச் சொல்ல வேண்டாம். *(குறுக்கீடு)* உட்காருங்கள். அடுத்து, இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக திரு. ஞானசேகரன் அவர்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று வேலூரில் இருந்து...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. காந்தி அவர்கள் உரையாற்றியதில் உள்ள குற்றச்சாட்டுகளை அவைக் குறிப்பிலிருந்து எடுத்துவிடுங்கள். அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று வருவாய்த் துறை மானியக் கோரிக்கை இந்த அவையிலே நடைபெற்ற பிறகு மாண்புமிகு முதல்வர் அவர்களைச் சந்தித்து, அவர்களுடைய கோரிக்கையை ஏற்கெனவே இந்த அரசு ஏற்றதற்காக நன்றி அறிவிப்புப் பேரணியை நடத்தி, முதல்வரையும் சந்திக்க வேண்டுமென்று வேலூரில் இருந்து 20 கிராம நிர்வாக அலுவலர்கள் ஒரு வேனிலே புறப்பட்டு வந்தார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ** என்று திரு. சேகர்பாபு அவர்கள் சொன்ன அந்த வாசகங்கள், அதேபோல், இங்கே திரு. காந்தி அவர்கள் சொன்ன அந்தக் குற்றச்சாட்டுப் பகுதிகள் ஆகிய இரண்டும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களைச் சந்தித்து நன்றி அறிவிப்பைத் தெரிவிக்க வேண்டுமென்றும், அதற்காக ஒரு பேரணி நடத்த

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

வேண்டுமென்றும் வேலூரிலிருந்து புறப்பட்ட 20 கிராம நிர்வாக அலுவலர்கள்—மன்றோ சிலையிலிருந்து 4 மணிக்கு அந்தப் பேரணி புறப்படுவதாக இருந்தது. அந்தப் பேரணியைத் தொடங்கி வைக்கக்கூடிய பொறுப்பை என்னிடம்தான் கொடுத்திருந்தார்கள். ஆனால், அதற்குள் காலையிலேயே 9-40 மணிக்கு இரயில் வருகிறபோது, கோவிந்தவாடி அகரம் un-manned level crossing-ஐ அந்த வேன் கடக்கிறபோது, வேன் இரயில்மீது மோதி, வேலூரைச் சார்ந்த சண்முகபரணி, துரைசாமி, செல்வபாண்டியன், குமாரசாமி, மோகன், தாண்டவராயன், வெங்கடேசன், தாமோதரன், நந்தகுமார் ஆகிய 9 கிராம நிர்வாக அலுவலர்களும், வேனை ஓட்டிய வேலூரைச் சார்ந்த குமார் என்பவரும், வல்லம் வி.ஏ.ஓ. ராமமூர்த்தி என்பவருடைய மகன் ரவி என்பவரும் அந்த இடத்திலேயே மாண்டுவிட்டார்கள். அதேபோல, இன்னும் 11 கிராம நிர்வாக அலுவலர்கள், பிரபாகரன், ராமமூர்த்தி, பன்னீர்செல்வம், மேகநாதன், குணசேகரன், நாராயணசாமி, மதிவாணன், நடராசன், பாலகிருஷ்ணன், புருசோத்தமன், மனோகரன் என்று 11 வி.ஏ.ஓ.க்கள் இப்போது அடிபட்டு, சி.எம்.சி. மருத்துவமனையில் 7 பேரும்--அதில் ஒருவர் டிஸ்சார்ஜ் ஆகிவிட்டார்--மற்றவர்கள் சென்னை, அரசு மருத்துவமனையிலும் சிகிச்சை பெற்றுக்கொண்டிருக்கிறார்கள்.

இந்தப் பரிதாபகரமான நிகழ்ச்சி நேற்று நடந்து, வேலூர் பகுதியில் இருக்கக்கூடிய பலர், கிட்டத்தட்ட 9 பிளஸ் 11, மொத்தம் 20 குடும்பங்கள் இன்று மிகவும் பாதிப்புக்குள்ளாகி, பாவம், அழுகுரல் கேட்டவண்ணமாக சோக நிகழ்ச்சி இருந்துகொண்டிருக்கிறது. செய்தியறிந்தவுடன் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அமைச்சர் திரு. அன்பரசன் அவர்களைக் காஞ்சிபுரத்துக்கு அனுப்பினார்கள். அதேபோல, வேலூருக்கு மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சரும், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரும், திரு. காந்தி அவர்களும், நானும் உடனே சி.எம்.சி. மருத்துவமனைக்குச் சென்று, இறந்தவர்களுக்கெல்லாம் அஞ்சலி செலுத்தினோம். மாண்புமிகு முதல்வர் அவர்களும் இப்போது நிவாரணம் அளித்திருக்கிறீர்கள். ஏற்கெனவே அவர்களுக்கு Family Benefit Fund-லேயிருந்து வழங்கக்கூடிய பணம் ரூபாய் ஒரு இலட்சத்தையும், அதேபோல முதலமைச்சருடைய நிவாரண நிதியிலிருந்து ரூபாய் ஒரு இலட்சத்தையும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் இப்போது வழங்கி, அதற்காக உத்தரவிட்டிருக்கிறீர்கள். அரசு வேலையிலும் முன்னுரிமை அளிப்பதாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கிறீர்கள். அதற்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



முற்பகல் 10-40

மாண்புமிகு முதல்வர் அவர்கள் தாராள மனம் படைத்தவர்கள்; இதுபோன்ற நிகழ்வுகள் என்று வருகிறபோது பலியானவர்களுடைய குடும்பத்திற்கு உடனே ஏதாவது பரிகாரம் செய்ய வேண்டுமென்பதற்காக 5 இலட்சம் ரூபாய் என்று நீங்கள் அறிவித்துக்கொண்டிருக்கிறீர்கள். எங்களுடைய வேலூரைச் சார்ந்த வி.ஏ.ஓ.க்கள் அத்தனை பேரும் இப்போது மாண்டு போயிருக்கிறவர்கள். ஏற்கெனவே 50,000 ரூபாய் இரயில்வே துறை அறிவித்திருக்கிறது. அந்த கிராம நிர்வாக அலுவலர்களுடைய குடும்பத்தார் சார்பாக நான் பணிவன்போடு மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம், தயவுசெய்து நீங்கள் குறைந்தபட்சம் 5 இலட்சம் ரூபாயை முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து இறந்தவர்கள் ஒவ்வொருவருடைய குடும்பத்திற்கும் வழங்க வேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, அரசு வேலையை உடனடியாக அவர்களுடைய வாரிசுதாரர்களுக்கு வழங்குவதற்கும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறீர்கள்; முன்னுரிமை அளிக்கப்படும் என்று சொல்லியிருக்கிறீர்கள். எல்லோருக்கும் வாரிசுகள், படித்தவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் உடனே நீங்கள் பணியமர்த்தலுக்கான உத்தரவை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்போது சி.எம்.சி. மருத்துவமனையில் இருக்கக்கூடியவர்களுக்கு மருத்துவ சிகிச்சைக்கு நிறையப் பணம் செலவாகிக்கொண்டிருக்கிறது. அந்தச் செலவு முழுவதையும் அரசே ஏற்று, அந்தத் தொகையை அரசே செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, un-manned gates அதிக அளவில் இருப்பதால், அக்டோபர் 31 ஆம் தேதி புதுப்பாக்கம் பகுதியிலே ஆட்டோவிலே சென்ற 17 பேர் இரயிலில் அடிபட்டு மாண்டு போனார்கள். இரயில்வே துறை un-manned gates என்று level crossing-களை வைத்துக்கொண்டிருக்கிற காரணத்தினால்தான் இப்படிப்பட்ட நிகழ்வுகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. மாண்புமிகு முதல்வர் அவர்களை நான் பணிவன்போடு இந்த அவையின் சார்பாகக் கேட்டுக்கொள்வதெல்லாம், மத்திய அரசை வலியுறுத்தி, தமிழகத்தில் எங்கெங்கெல்லாம் un-manned gates இருக்கின்றனவோ,

[திரு. சி. ஞானசேகரன்] [2007 ஏப்ரல் 17

அவற்றையெல்லாம் ஒன்று, manned gate ஆக மாற்ற வேண்டும். இல்லையென்று சொன்னால், உடனே அங்கெல்லாம் sub-way அமைக்க வேண்டும். நேற்றுக்கூட இரயில்வே இணை அமைச்சர் திரு. வேலு அவர்கள், அங்கே வந்து பார்வையிட்டு, இதுபோன்ற 9 இடங்களிலே sub-way அமைக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். விபத்து நடக்கிறபோது சொல்கிறார்கள், பிறகு விட்டுவிடுகிறார்கள். ஆனால், இந்த முறை மாண்புமிகு முதல்வர் அவர்கள் மத்திய அரசை வலியுறுத்தி, உடனே எல்லா இடங்களிலேயும் அவற்றை sub-way ஆகவோ அல்லது manned gates ஆகவோ மாற்றுவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு, அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய காஞ்சிபுரம் மாவட்டத்திலே, நேற்றையதினம் செங்கல்பட்டு-அரக்கோணம் பாசஞ்சர் தொடர் வண்டியும், வேலூர் மாவட்டத்திலேயிருந்து வந்த ஊர்தியும் நேருக்கு நேர் மோதி, 11 பேர் இறந்திருக்கிற துயரமான சம்பவம் தமிழகத்திலேயிருக்கிற அத்தனை மக்கள் மனதிலேயும் இன்றைக்கு மிகவும் ஒரு பாதிப்பை ஏற்படுத்தியிருந்தாலும், காஞ்சிபுரம் மற்றும் வேலூர் மாவட்டங்களிலே இருக்கிற மக்கள் பீதியிலே இருந்துகொண்டிருக்கிறார்கள் என்பதை இங்கே சொல்லியாக வேண்டும்.

கடந்த சில மாதங்களுக்கு முன்பாக காஞ்சிபுரம்-அரக்கோணம் இடையே இருக்கிற புதுப்பாக்கம் கிராமத்திலே விபத்தில் 17 பேர் இறந்ததாலும், அதைத் தொடர்ந்து நேற்றையதினம் கோவிந்தவாடி அகரம் என்ற இடத்திலே 11 பேர் இறந்ததாலும் மிகப் பெரிய ஒரு சோகத்திலே அந்தப் பகுதியைச் சேர்ந்த மக்கள் இருந்துகொண்டிருக்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், யாரும் கேட்காமலேயே நேற்றையதினம் இறந்தவர்கள் குடும்பத்திற்கு 2 இலட்சம் ரூபாய் நிதியையும், அவர்களுடைய வாரிசுகளுக்கு வேலை வழங்கப்படும் என்கிற உத்தரவாதத்தையும் அளித்திருக்கிறார்கள். இப்போது நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களிடத்திலே பாட்டாளி மக்கள் கட்சி சார்பிலே, இறந்தவர்கள் குடும்பத்திற்கு 5 இலட்சம் ரூபாய் வழங்க வேண்டுமென்ற கோரிக்கையை வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.



2007 ஏப்ரல் 17] [திரு. கி. ஆறுமுகம்]

அது மட்டுமல்லாமல், நம்முடைய மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும், எங்கள் கட்சியைச் சேர்ந்த அமைச்சர் மாண்புமிகு திரு. இரா. வேலு அவர்களும், எங்களுடைய தலைவர் அவர்களும், சட்டமன்ற உறுப்பினர்களும், இந்த விபத்தால் பாதிக்கப்பட்டவர்களையெல்லாம் சந்தித்து ஆறுதல் கூறியிருக்கிறார்கள்.

முற்பகல் 10-45

அது மட்டுமல்லாமல், எங்களுடைய அமைச்சர் மாண்புமிகு திரு. இரா. வேலு அவர்கள் உடனடியாகக் காஞ்சிபுரத்திற்கும், அரக்கோணத்திற்கும் இடையே இருக்கிற அந்த 9 கடவுகளுக்கும் கீழ்ப்பாலம் அமைப்பதற்கு 4½ கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கிறார்கள். அது உண்மையிலேயே வரவேற்கத்தக்கது. மேலும், இரயில்வே தொடர் வண்டித் துறையினுடைய அமைச்சர் அவர்கள், ஒவ்வொரு இறந்தவர் குடும்பத்திற்கும் 50,000 ரூபாய் நிதி ஒதுக்கியிருப்பதாகவும், காயம் அடைந்தவர்களுக்கு 5,000 ரூபாய் வழங்குவதாகவும் அறிவித்திருக்கிறார்கள். பாதிக்கப்பட்டவர்கள் அனைவரையும் சென்று சந்தித்து, ஆறுதலும் கூறியிருக்கிறார்கள்.

அது மட்டுமல்லாமல், அங்கே அந்த விபத்து நடந்ததற்கான காரணம், காஞ்சிபுரத்திற்கும், அரக்கோணத்திற்கும் இடையே உள்ள இரயில்வே டிராக்கும், ரோடும் பக்கத்துப் பக்கத்திலே இருப்பதுதான். ஆள் இல்லாத அந்த கேட்டிலே, ஓட்டுநர்கள் அருகில் வரும்போதுதான் இரயிலைக் கவனிக்கிறார்கள். அந்தத் தண்டவாளத்திலே எப்படித் திரும்புவது என்று கவனிக்கிறார்கள். அப்படிக் கவனித்து வாகனத்தில் போகிறபோது, engine பழுதுபட்டுவிடுவதாகத் தகவல் சொல்லப்படுகிறது. திருப்புகின்ற உடனே, ஓட்டுநர்கள் accelerator-ஐ விட்டுவிடுகின்றனர். அதனால் அங்கே வாகனம் நின்று போகின்றது. அங்கே இரயில் வேகமாக வருவதாலும் இந்த விபத்துக்கள் நடக்கின்றன என்ற ஒரு குறை இருந்துகொண்டிருக்கிறது. அதைத்தான் எங்களுடைய தமிழாய்ந்த மருத்துவர் அய்யா அவர்களே அறிக்கையிலே சொல்லியிருக்கின்றார்கள்.

இதுபோன்ற விபத்துக்கள் இனி தமிழகத்தில் நடைபெறாமல் இருக்க இரயில்வே துறையும், தமிழக அரசும் உடனடியாக இணைந்து, எப்படியெல்லாம் இதைத் தடுப்பதற்கு முயற்சி எடுக்க வேண்டும் என்று எங்களது அய்யா அவர்கள் அறிக்கை விட்டிருக்கிறார்கள். அது மட்டுமல்லாமல், நம்முடைய அமைச்சர் அவர்கள் சொல்வதுபோல, தமிழகத்திலே இன்னும் 1,116 ஆள் இல்லாத இரயில்வே கிராசிங்குகள் இருப்பதாகக் கணக்கிட்டுச் சொல்லியிருக்கிறார்கள். அங்கேயெல்லாம்

படிப்படியாக உடனடியாகக் கடவுகள் அமைப்பதற்கான முயற்சி எடுக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். (குறுக்கீடுகள்) இப்போது இங்கே பேசிய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் சேகர்பாபு அவர்கள் ** பற்றி இங்கே சொன்னார்கள். (குறுக்கீடுகள்)

*முற்பகல் 10-45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதை அவைக் குறிப்பிலிருந்து எடுத்தாகிவிட்டது, திரும்ப அதைப் பேசக் கூடாது.

**திரு. கி. ஆறுமுகம்:** இல்லை, இல்லை. நான் அதற்குள்ளே போகவில்லை, இது வேறு. ஏற்கெனவே கும்பகோணத்திலே விபத்து, ஸ்ரீரங்கம் திருமண மண்டபத்திலே விபத்து, சாலையிலே ஆயிரக்கணக்கானவர்கள் இறப்பு, இவையெல்லாம் கடந்த அ.தி.மு.க. ஆட்சியிலே ** நடந்திருக்கின்றன என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்றால், விபத்துக்கள் என்பவை எதேச்சையாக ஓட்டுநர்களாலும், பல்வேறு காரணங்களாலும் ஏற்படுகின்றன. விபத்திற்கும், அரசினுடைய ** என்று சொல்வது, இது ** என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கி. ஆறுமுகம், நீங்கள் சொன்ன குற்றச்சாட்டுகள் அனைத்தும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. இந்த சப்ஜெக்ட்டுக்குள் மட்டும் பேசுங்கள்.

**திரு. கி. ஆறுமுகம்:** இதுபோன்ற விபத்துக்கள் இனியும் நடைபெறாமல் இருக்க நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் உடனடியாகப் பெருமுயற்சி எடுத்து, தொடர் வண்டித் துறையோடு இணைந்து செயலாற்ற நம்முடைய அரசைப் பணிக்க வேண்டும் என்று கேட்டு, அமைகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவிந்தசாமி அவர்கள்.

***திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றுக் காலையிலே நடைபெற்ற அந்தக் கோரமான விபத்தானது அனைவரும் மிகுந்த வேதனைப்படக்கூடிய ஒரு நிகழ்ச்சியாகும். ஆகவே, அந்த நிகழ்ச்சியிலே நாம் வேறு சர்ச்சைகளைச் செய்யாமல், இறந்தவர்களுக்கு அனுதாபம் தெரிவிப்பதும், பாதிக்கப்பட்ட அந்தக்

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





குடும்பங்களுக்கு உதவிகளைப் பெற்றுத் தருவதும்தான் பொருத்தமாக இருக்கும் என்பதை நான் முதலில் இங்கே தெரிவித்து, சென்னையிலே நடைபெறவிருந்த கிராம நிர்வாக அலுவலர்களுடைய பேரணியிலே கலந்துகொள்ள வேலூர், காட்பாடி பகுதிகளைச் சேர்ந்த கிராம நிர்வாக அலுவலர்கள் சுமார் 20, 22 பேர் வந்த வேன், அவர்கள் காஞ்சிபுரம் அருகில் இருந்த கோயிலுக்குச் சென்று வணங்கிவிட்டுப் பேரணிக்கு வருவதற்காகச் செல்கிற நேரத்தில், காஞ்சிபுரத்திற்கு அருகிலே உள்ள கோவிந்தவாடி அகரம் Railway gate-ஐக் கடக்க முயன்றபோது, இரயில் மோதி கோரமான அந்த விபத்து நடந்திருக்கிறது. ஒன்பது கிராம நிர்வாக அலுவலர்களும், ஒரு கிராம நிர்வாக அலுவலரின் மகனும், வாகனத்தை ஓட்டியவரும் என்று 11 பேர் கோரமான முறையில் உடல் சிதைந்து உயிரிழந்திருக்கிறார்கள். மேலும், அதில் 11 பேர் காயமடைந்து, சென்னை மற்றும் வேலூர் மருத்துவமனைகளிலே சிகிச்சைபெற்று வருகிறார்கள். அதிலும் ஒரு சிலர் ஆபத்தான நிலையில் இருப்பதாகச் செய்திகள் வருகின்றன.

இந்தச் செய்தி அறிந்ததும் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதன்மீது உடனடியாகத் தலையீடு செலுத்தி நடவடிக்கை எடுத்திருப்பதை வரவேற்கத்தக்க நிகழ்வாகவே நான் குறிப்பிட விரும்புகிறேன். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலும் குடியாத்தம் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் தலைமையில் கட்சித் தோழர்கள் இறந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தவும், பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆறுதல் சொல்கிற வகையிலேயும் நேரில் சென்று வந்திருக்கிறார்கள். மாண்புமிகு முதல்மைச்சர் அவர்கள் தன்னுடைய நிவாரண நிதியிலிருந்து ஒரு இலட்சம் ரூபாயும், அரசு ஊழியர்களுடைய குடும்பப் பாதுகாப்பு நிதியிலிருந்து ஒரு இலட்சம் ரூபாயும் என்று இரண்டு இலட்சம் ரூபாய் அறிவித்து இருக்கிறார்கள்.

இரயில்வே நிர்வாகத்தின் சார்பில் 50,000 ரூபாய் உதவித் தொகை வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதோடு, முதலமைச்சர் அவர்கள், இறந்தவர்களின் வாரிசுதாரர்களுக்கு அரசு வேலைவாய்ப்பு வழங்கப்படும் என்று அறிவித்திருப்பதும் வரவேற்கத்தக்க நிகழ்வு. ஆகவே, இங்கே நம்முடைய திரு. ஞானசேகரன் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, இந்தத் தொகையைச் சற்று உயர்த்தித் தர வேண்டுமென்று வலியுறுத்துகின்ற அதே நேரத்தில், இந்த விபத்து நடைபெறுவதற்கு மூல காரணமாக இருந்தது, ஆள் இல்லாத Railway gate என்பதை நாம் இங்கே கவனத்தில்கொள்ள வேண்டியிருக்கிறது.

முற்பகல் 10-50

ஓட்டுநருடைய கவனக் குறைவு ஒரு புறத்திலே என்றால், ஆள் இல்லாத Railway gate இதற்குப் பிரதான காரணமாக இருக்கிற காரணத்தினால், ஒட்டுமொத்தமாக 5 இலட்சம் ரூபாய் நிவாரண உதவியில், மத்தியிலே இருக்கிற இரயில்வே நிர்வாகம் பாதியும், மாநில அரசு பாதியும் என்ற வகையிலே 5 இலட்சம் ரூபாய் நிவாரணம் கிடைப்பதற்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

கடந்த 6 மாதங்களிலே இரண்டு கோரமான விபத்துக்கள் நடைபெற்றிருக்கின்றன. குறிப்பிட்ட அந்த வழித்தடத்திலேயே இந்த இரண்டு விபத்துக்களும் நடந்திருக்கின்றன. ஆகவே, ஆள் இல்லாத crossings முழுவதிலும் ஆட்களை உடனடியாக நியமிக்க வேண்டும். ஏனென்றால், கடந்த காலங்களில் தொடர் வண்டிப் போக்குவரத்தின் எண்ணிக்கை குறைவாக இருந்தபோது பெரும் பாதிப்பு இல்லை. இன்றைக்கு ஏராளமான புதிய, புதிய இரயில்கள் அதிகரித்துக்கொண்டிருக்கிற காரணத்தினால், ஆள் இல்லாத Railway gate என்பது இதுபோன்ற விபத்துக்கள் தொடர்ந்து ஏற்படுவதற்குக் காரணமாக அமையும். ஆகவே, மாநில அரசின் சார்பில், மத்திய இரயில்வே நிர்வாகத்தைத் தொடர்புகொண்டு, ஆள் இல்லாத Railway gate அனைத்திற்கும் ஆட்களை நியமிப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, அந்தக் குறிப்பிட்ட பகுதியிலே இரயில் பாதையும், நம்முடைய வாகனங்கள் செல்லக்கூடிய தார்ச் சாலையும் நெருக்கமாக, 20 அடி இடைவெளியிலே, சம மட்டத்திலே இருப்பதாகச் செய்திகள் வந்துள்ளன. ஆகவே அதனுடைய விளைவாக, தார்ச் சாலையிலே செல்கின்ற வாகனங்கள் இரயில் பாதையைக் கடக்கிறபோது, வேகமாகச் சென்று, பார்க்காமல் திரும்புகிற ஒரு நிலைமைதான் தொடர்ந்து விபத்துக்குக் காரணமாக இருக்கிறது. ஒரு வேளை விபத்துக்கு அது காரணமாக இருக்குமானால், நாம் ஆய்வு செய்து, பாதைகளை மாற்றுவதற்குக்கூட வாய்ப்பு இருந்தால், அதையும் செய்ய வேண்டும். ஆகவே, அதைப் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்; அல்லது கட்டாயம் இரயில்வே கேட்டிற்கு ஆட்களை நியமிப்பதை உத்தரவாதப்படுத்த ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





நம்முடைய மாவட்ட அளவிலான மருத்துவமனையிலே, குறிப்பாக, காஞ்சிபுரம் மாவட்ட மருத்துவமனையிலே போதுமான வைத்திய வசதிக்கான வாய்ப்புகள் இல்லாத நிலை இருப்பதாகச் செய்திகள் வருகின்றன. ஆகவே, குறைந்தபட்சம் மாவட்ட மருத்துவமனையிலாவது 24 மணி நேரம் செயல்படக்கூடிய விபத்துப் பிரிவு எல்லா வசதிகளோடும் இயங்கக்கூடிய ஒரு வாய்ப்பையும் உருவாக்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இறந்தவர்களுக்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே ஆழ்ந்த அஞ்சலியைத் தெரிவித்து, முடிக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராம நிர்வாக அலுவலர்கள் நமது முதல்வர் கலைஞர் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கும்முகமாக வருகை புரிகிற நேரத்தில், வேலூர் மாவட்ட கிராம நிர்வாக அலுவலர்கள் வந்த வாகனம், காஞ்சிபுரம் மாவட்டம், கோவிந்தவாடி அகரத்தில் ஆள் இல்லாத Railway gate-லே, ரெயில் மோதி 11 பேர் இறந்து, 11 பேர் பலத்த காயமடைந்துள்ளார்கள்.

இதேபோன்ற சம்பவம் அகரம் கிராமத்திலிருந்து 5 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள புதுப்பாக்கத்தில் கடந்த அக்டோபர் மாதம் ஷேர் ஆட்டோ மீது இரயில் மோதி, 14 உயிர்கள் பலி கொடுக்கப்பட்டிருக்கின்றன. இப்படிப்பட்ட நிலமைகள் தொடர்ந்துகொண்டிருக்கிற சூழ்நிலையில், இந்த கோவிந்தவாடி அகரம் இரயில்வே லைனில் வாகனங்கள் கூடுதலாக வருவதால், விபத்துக்கள் நடப்பதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. எனவே, அங்கே Railway gate அமைத்துத் தர வேண்டுமென்று அந்தப் பகுதியிலே இருக்கின்ற மக்கள் கோரிக்கை மனுவை அளித்திருக்கின்ற நேரத்தில், இரயில்வே துறையினர் ஒரு கணக்கை வைத்து, 40,000 வாகனங்கள் வந்து சென்றால்தான் Railway gate அமைக்க முடியும் என்ற விதிகளைக் காரணம் காட்டி, அங்கே ஆள் இல்லாத அந்த Railway gate-ஐ தொடர்ந்து வைத்திருக்கிறார்கள். எனவே, இரயில்வே துறையைப் பொறுத்தவரை, மேம்பாலம் அமைப்பதாக இருந்தாலும் அல்லது ஆள் இல்லாத Railway gate-லே ஆட்களை நியமிப்பதாக இருந்தாலும், பழமையான இப்படிப்பட்ட விதிகளை இன்றைக்கும் பின்பற்றிக்கொண்டிருக்கிறார்கள்.

[திரு. சு. குணசேகரன்] [2007 ஏப்ரல் 17

முற்பகல் 10-55

அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், நாட்டில் இருக்கிற ஒவ்வொரு தனி மனிதனுடைய உயிருக்கும், உடைமைக்கும் பாதுகாப்பு அளிக்க வேண்டியது அவசியம் என்ற அடிப்படையில் இரயில்வே துறையினர் இந்த விதிகளைத் தளர்த்தி, எங்கெல்லாம் ஆள் இல்லாத Railway Gates இருக்கின்றனவோ, அங்கெல்லாம் அதற்கான மாற்றுப் பாதுகாப்பு நடவடிக்கைகளை உறுதியாக மேற்கொள்ள வேண்டும். எங்களைப் பொறுத்தவரையில், இன்றைக்கு ஆள் இல்லாத Gate-களில் ஆட்களை இரயில்வே நியமிக்கிறபொழுது, முன்னாள் இராணுவத்தினர், அதைப்போல காவல் துறையிடம் உள்ள Home Guards; ஊர்க் காவல் படைபோன்ற அமைப்புகளில் உள்ளவர்களை எல்லாம் பயன்படுத்தி, ஆள் இல்லாத Railway Gate-களிலே ஆட்களை நியமிக்கலாம். அதைப்போல, இன்றைக்கு விபத்தில் பலியானவர்களுக்கு இழப்பீட்டுத் தொகையாக நமது முதல்வர் அவர்கள் இரண்டு இலட்சம் ரூபாயை அறிவித்திருக்கிறார்கள். அதைப்போல இரயில்வே துறை 50 ஆயிரம் ரூபாய் என்று அறிவித்திருக்கிறார்கள். நல்ல இலாபத்தில் இயங்கக்கூடிய இரயில்வே துறையினர் கூடுதலாக நிதி கொடுத்து....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. குணசேகரன், short ஆக உரையை முடியுங்கள்.

**திரு. சு. குணசேகரன்:** 5 இலட்சம் ரூபாய் வரை நிதியை வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம். அதைப்போல, இறந்த அந்தக் குடும்பங்களுக்கு இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள். (குறுக்கீடுகள்) பதில் சொல்ல வேண்டும் அல்லவா? (குறுக்கீடுகள்) முதல்வர் பேசட்டும். (குறுக்கீடுகள்) முதல்வரைப் பேசச் சொல்லியாகிவிட்டது. (குறுக்கீடுகள்) என்ன? சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) ஒரே வார்த்தையில் சொல்லுங்கள்.

**திரு. கோ. அரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விபத்து நடந்ததைக் கேள்விப்பட்டு, புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆணைக்கிணங்க, கழகத்தினுடைய முன்னோடிகள் எல்லாம் சென்று, விபத்து நடந்த இடத்திலே உதவினார்கள். நானும் மாவட்டக் கழகச் செயலாளர் என்ற முறையிலே விபத்து நடந்த



2007 ஏப்ரல் 17] [திரு. கோ. அரி]

இடத்தைப் பார்வையிட்டு, அங்கே இருப்பவர்களுக்குப் போதுமான வசதிகளும் செய்து கொடுத்து வந்துவிட்டோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, உட்காருங்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று 16-4-2007 காலை 9-40 மணியளவில் காஞ்சிபுரம் மாவட்டம், கோவிந்தவாடி அகரம் கிராமம் அருகில் ஆள் இல்லாத Railway level crossing-ல் செங்கல்பட்டிலிருந்து அரக்கோணம் சென்றுகொண்டிருந்த பயணிகள் இரயில் எண் 157, TN 23F 4757 என்ற மினி பேருந்தின்மீது மோதி விபத்துக்கு ஆளானதில் மினி பேருந்திலே பயணம் செய்த 22 பேர்களில் 11 பேர் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார்கள். மேலும் 11 பேர் காயம் அடைந்து, சென்னை, அரசு பொது மருத்துவமனை மற்றும் வேலூர், சி.எம்.சி. மருத்துவமனை ஆகியவற்றில் சிகிச்சைபெற்று வருகின்றார்கள். இறந்த 11 பேரில் 9 பேர் கிராம நிர்வாக அலுவலர்கள் ஆவர். ஒருவர் கிராம நிர்வாக அலுவலரின் மகன். மற்றொருவர் ஓட்டுநர் ஆவார். இந்தப் பயங்கரமான விபத்து பற்றிய செய்தி அறிந்ததும், காஞ்சிபுரம் மாவட்ட அமைச்சரான மாண்புமிகு அன்பரசன் அவர்களை மாவட்ட ஆட்சித் தலைவரோடு சம்பவ இடத்திற்கு இங்கிருந்தவாறு அனுப்பி வைத்தேன். மேலும், சென்னை மருத்துவமனையிலே சிகிச்சை பெறுபவர்களை, வேலூர் மருத்துவமனையிலே சிகிச்சை பெறுபவர்களை நம்முடைய அமைச்சர் பெருமக்கள் சென்று, கண்டு, அவர்களுடைய தேவைகளை அறிந்து, அதற்கு ஆவன செய்யுமாறு அதிகாரிகளிடத்திலே கூறியது மாத்திரம் அல்லாமல், அது பற்றிய விவரங்களை என்னிடத்திலே எடுத்துச் சொல்லி இருக்கின்றார்கள். விபத்திலே மறைந்த அனைவரது குடும்பங்களுக்கும் இந்த மாமன்றத்திலே உள்ள உறுப்பினர்கள் அத்தனை பேருடைய சார்பாக என்னுடைய ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

விபத்துக்கள் அடிக்கடி நடைபெறுகின்றன. ஆனால், விபத்துக்களுக்கு யாரையும் காரணமாக நாம் சுட்டிக்காட்ட முடியாது. விபத்துக்குக் காரணம் எதிர்பாராமல் நடைபெறுகின்றவை. எதிர்பாராமல் நடக்கக் கூடும் என்று எச்சரித்து இருந்தாலும்கூட அதனைக் கருத்திலேகொள்ளாத காரணத்தினால் இந்த விபத்துக்களைச் சந்திக்க நேரிடுகின்றது.

[கலைஞர் மு. கருணாநிதி] [2007 ஏப்ரல் 17

*முற்பகல் 11-00*

உதாரணமாக நான் ஒன்றைச் சொல்வேன். திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக நடைபெறுகின்ற கூட்டங்களாயினும், மாநாடுகளாயினும், அதைப்போலவே வேறு கட்சிகளின் சார்பாக, அது அ.தி.மு.க. சார்பிலேயிருந்தாலும், காங்கிரஸ் கட்சி சார்பிலேயிருந்தாலும், கம்யூனிஸ்ட் கட்சி சார்பிலேயிருந்தாலும், பாட்டாளி மக்கள் கட்சி சார்பிலேயிருந்தாலும், வேறு எந்தக் கட்சி சார்பிலேயிருந்தாலும், அங்கு வந்து திரள்கின்ற மக்கள், அந்தக் கட்சிகளுடைய செயல் வீரர்கள், வரும்போது வருகின்ற அதே வாகனங்கள், அதை ஓட்டி வருகின்றவர்கள் அயர்ந்து, சோர்ந்து போகிற காரணத்தால், திரும்பிச் செல்கிற நேரத்திலே விபத்துக்களுக்கு ஆளாக நேரிடும் என்று நான் கண்டிப்பாக மாநாட்டு மேடையிலே அவர்களை எச்சரிப்பது வழக்கம். 'காலையிலே ஊருக்குத் திரும்பிச் செல்லுங்கள்; இரவுப் பயணம் வேண்டாம்; அதைத் தவிர்த்திடுங்கள்' என்று நான் அவர்களையெல்லாம் கெஞ்சிக் கேட்டுக்கொண்ட வரலாறுகள் எல்லாம்கூட உண்டு.

அப்படியிருந்தும்கூட, சில நேரங்களில் கட்சித் தொண்டர்கள், எந்தக் கட்சித் தொண்டர்களாக இருந்தாலும், அதையும் மீறி, ஒரு வீணான, தேவையற்ற தைரியத்தோடு திரும்புகிற நேரத்தில், அவர்கள் ஏறி வந்த லாரிகள், வேன்கள், வேறு சில வாகனங்கள் விபத்துக்குள்ளாகி, மரணமடைந்த செய்திகளெல்லாம் உண்டு. அந்தந்தக் கட்சி சார்பிலே உள்ளவர்கள் அதற்கான நிதியுதவியை அந்தக் குடும்பங்களுக்கு அளித்து தங்களுடைய இரங்கலைத் தெரிவிப்பதும் உண்டு; இப்பொழுதும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றதுதான்.

இருந்தாலும், இவைகள் தவிர்க்கப்பட வேண்டுமென்பதில் ஒரு கட்சியிலே உள்ளவர்களுக்கு மாத்திரம்தான் அக்கறை என்றில்லாமல், எல்லாக் கட்சிகளிலுமுள்ள தலைவர்களுக்கும், தொண்டர்களுக்கும், முன்னோடிகளுக்கும் இந்த அக்கறை இருந்தாக வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன். பொதுவாக, நான் ஒவ்வொரு நாளும் உணவருந்தச் செல்கிற நேரத்தில் இல்லத்திலே அமர்ந்து எதிரே ஓடிக்கொண்டிருக்கின்ற டி.வி. பெட்டியைப் பார்க்கும்போது, உணவருந்திக் கொண்டிருக்கும்பொழுதே, அந்த டி.வி. பெட்டியிலே வருகிற செய்திகள், 'கார் விபத்து; 9 பேர் பலி' என்று இப்படிப்பட்ட செய்திகள் வரும்போது, அந்த விபத்திலே மாண்டவர்களுடைய சவங்களை எடுத்து, அடுக்கி வைப்பதுமான காட்சிகளைக்



2007 ஏப்ரல் 17] [கலைஞர் மு. கருணாநிதி]

காணும்போது, பல நேரங்களில் நான் உணவைத் தவிர்த்துவிட்டு எழுந்தும் இருக்கின்றேன். அவ்வளவு பயங்கரமான, மோசமான, சோகமயமான நிகழ்ச்சிகள் நாட்டில் இந்த விபத்தின் காரணமாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

இவற்றுக்கெல்லாம் எப்படியாவது ஒரு வழி கண்டு, இவற்றைக் குறைக்க வேண்டும். விபத்துக்களே நடக்காமல் இருக்க முடியாது. மிகப் பத்திரமாகச் செல்கின்ற விமானங்கள்கூட விபத்திற்கு ஆளாகின்றன. எனவே, விபத்துக்களையே தவிர்க்க முடியும் என்று நான் சொல்ல மாட்டேன். ஆனாலும், நாம் சற்று புத்திசாலித்தனமாக, சற்று எதையும் எதிர்பார்த்து, எச்சரிக்கையாக இருந்தால், நூறு விபத்துக்களில் எண்பது விபத்துக்களையாவது தவிர்க்க முடியும் என்பதுதான் என்னுடைய எண்ணம். அதை எல்லோரும் கட்சி சார்பற்ற முறையிலே சிந்தித்து, அவரவர்களுடைய கட்சியிலே உள்ள பொது மக்களுக்கு, தொண்டர்களுக்குச் சொல்ல வேண்டுமென்று நான் மிகப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், எல்லா உயிர்களும் மதிப்புடைய உயிர்கள்தான். அந்த ஒரு உயிரினுடைய இழப்பால், நாட்டிற்கு, சமுதாயத்திற்கு எவ்வளவு இழப்பு என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. அந்த வகையிலேதான் இந்தக் கருத்தைச் சொல்கிறேனே அல்லாமல், எல்லோருக்கும் மேலாக ஒரு கருத்தைச் சொன்னேன் என்று எண்ணிக்கொள்ள வேண்டும் என்பதற்காக அல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

பொதுவாக இந்த விபத்துக்கள், நம்முடைய நண்பர்கள் எடுத்துக்காட்டியதைப்போல், கடந்த *5*, *6* மாதங்களுக்குள்ளாக இரயில்வே பாதையில் *2* முறை நடந்திருக்கின்றன. அதிலே பலர் இறந்திருக்கிறார்கள். இறந்தவர்கள் மிக முக்கியமான குடும்பங்களைச் சேர்ந்தவர்கள்; நிருவாகப் பொறுப்பிலே உள்ளவர்கள்; நாட்டின் நிருவாகத்தை நடத்தக்கூடிய இடங்களிலே உள்ளவர்கள் எல்லாம்கூட இறந்திருக்கின்றார்கள். அதற்காகத்தான் நாம் நம்முடைய அனுதாபத்தை இங்கே தெரிவித்துக்கொள்ளும்போது, இனி இப்படி ஒன்று நடக்கக் கூடாது என்ற எச்சரிக்கையையும் எடுத்துச் சொல்ல வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

இரயில்வே நிருவாகத்தை இன்றைக்கு மத்தியிலேயிருந்து நடத்திக்கொண்டிருக்கின்ற லல்லு பிரசாத் அவர்களானாலும், இன்று இணை அமைச்சராக இருந்து நடத்திக்கொண்டிருக்கின்ற தமிழகத்தினுடைய அருமை நண்பர் வேலு அவர்களானாலும்,

எவ்வளவு அற்புதமாக, இந்த நிருவாகத்தைச் சிறப்பாக, கவனத்தோடு, எச்சரிக்கையோடு நடத்திக்கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் நேரடியாகவே அறிவேன்; அவர்களோடு நெருங்கிப் பழகியும் அறிவேன். தமிழ்நாட்டில் இன்றைக்கு இவ்வளவு இரயில்வே லைன்கள், அதைப்போலவே இரயில்வே ஸ்டேஷன்கள் வந்திருப்பதற்குக் காரணம், தமிழ்நாட்டிலே ஒரு அமைச்சர், பாட்டாளி மக்கள் கட்சியினுடைய அமைச்சராக இருக்கின்ற (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய வேலு அவர்கள்தான். ஆகவே, யாரைக் குறை சொன்னாலும், அந்தக் குறைபாடு யாரைப் போய்த் தாக்கும் என்பதை மனதிலே வைத்துக்கொண்டுதான் சொல்ல வேண்டும் என்பதற்காகத்தான் நான் சொல்கிறேன்.

முற்பகல் 11-05

இங்கே ஒரு வார்த்தை, நம்முடைய அவை உறுப்பினர்கள்கூட, 'வேண்டாம், எடுத்துவிடுங்கள்' என்று சபாநாயகர் அவர்கள்கூட சொல்லியிருக்கின்றார்கள். நானும் ஒரு முறை சொல்லுகிறேன். சொல்லியதை அவைக் குறிப்பிலிருந்து எடுத்துவிடுங்கள். ** என்று சொல்லப்பட்டது. உள்ளபடியே நம்முடைய வேலு அவர்களுக்கு ஒரு கார் விபத்திலே கை ஒடிந்து ** இருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) அதைத்தான் அப்படி எடுத்துக்கொள்ள வேண்டுமே தவிர, **

அதைப்போலவே இங்கே சொல்லப்பட்டது. நம்முடைய கம்யூனிஸ்டு கட்சி நண்பர் என்று கருதுகிறேன். அந்தக் கோடியிலேயிலிருந்து பேசியவர் (குறுக்கீடு) குணசேகரன், அவர் சொன்னார். இரயில்வேக்கு நிறைய இலாபம் வருகிறது. ஏன் ஒவ்வொரு இரயில்வே கேட்டும் ஆள் இல்லாத கேட்டாக இருக்க வேண்டும்? அங்கெல்லாம் சம்பளத்திற்கு ஆட்களை நியமிக்கலாம் என்று சொன்னார். அதே கருத்தைக் கொண்டவன்தான் நானும். ஏனென்றால், இன்று நேற்றல்ல, பல ஆண்டு காலமாகவே நம்முடைய தமிழகத்திலும், இந்திய அளவிலும் ஓடிக்கொண்டிருக்கிற இரயில்கள் இப்படிப்பட்ட ஆள் இல்லாத gate-களைக்கொண்ட பாதைகளிலேதான் ஓடிக்கொண்டிருக்கின்றன. 12 ஆயிரம் கோடி ரூபாய் இப்போது இரயில்வேக்கு மிச்சப்படுத்தியிருக்கிறார் நம்முடைய லல்லு அவர்கள். அந்த 12 ஆயிரம் கோடி ரூபாயில், இரயில்வே gate-களில் ஆட்களை நியமிப்பதற்காக ஒரு ஐயாயிரம் கோடி ரூபாயைச் செலவழிப்பதற்கு மத்திய அரசு முன்வர வேண்டுமென்று

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





இந்த அவையின்மூலமாக நான் கேட்டுக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) அது தமிழ்நாட்டிலே உள்ள மக்களுடைய உயிரைக் காப்பாற்றுவதற்காக மாத்திரமல்ல, இந்தியத் துணைக் கண்டத்திலே உள்ள பலருடைய உயிரைக் காப்பாற்ற, பல விபத்துக்களைத் தவிர்ப்பதற்காக அது பயன்படும் என்ற காரணத்தால், இந்த விபத்தை மையமாக வைத்து இந்தக் கருத்தை நான் சொல்ல விரும்புகின்றேன்.

இங்கே ஞானசேகரன் சொன்னார். ரூ.2 இலட்சம் போதாது, ரூ.5 இலட்சம் கொடுக்க வேண்டுமென்று சொன்னார். இப்போது சமீப காலமாக ஒரு போட்டியே வந்திருக்கிறது. இலட்சம் என்று சொன்னால், ஏலம் விடுவதைப்போல, ஒன்றரை இலட்சம், இரண்டு இலட்சம், மூன்று இலட்சம் என்று குடும்பங்களுக்கு உதவித் தொகை கொடுக்க வேண்டுமென்று சொல்கின்ற ஒரு சம்பிரதாயம் இப்போது ஏற்பட்டிருக்கிறது. ஆனால், ஒவ்வொன்றுக்கும் யாராவது பொறுப்பேற்க வேண்டும். இந்தப் பொறுப்பு எப்படி இருக்க வேண்டும் என்றால், இங்கு எதற்காக வந்தார்கள்? ஞானசேகரன் அவர்களையெல்லாம் வழியனுப்பி வைக்கப் போகிறார் (மேசையைத் தட்டும் ஒலி) என்று வந்தார்கள். வருகிற வழியிலே இப்படி ஆகிவிட்டது. வந்தவர்கள், வந்த வேலையைப் பார்க்காமல், இடையிலே கோயிலுக்குப் போவதற்காகக் காரைத் திருப்பிய காரணத்தால் இறந்தார்கள். அதற்காகக் கோயிலிலே உள்ள கடவுள் இவர்களுக்கு நஷ்ட ஈடு தர வேண்டுமென்று நான் சொல்ல மாட்டேன். ஞானசேகரன் நஷ்ட ஈடு தர வேண்டுமென்று நான் சொல்ல மாட்டேன். கொடுத்தால் பெற்றுக்கொள்ளலாம். (சிரிப்பு)

பொதுவாக, நிதி கொடுக்கிற காரணத்தால் மாத்திரம்--ஒரு ஐந்து இலட்சம் ரூபாய் கொடுத்தால், அந்தக் குடும்பத்தை நாம் காப்பாற்றிவிட்டதாக அர்த்தம் அல்ல. அந்த வீட்டிலே உள்ள பிள்ளைகள், அவர்களின் வாரிசுகள், அவர்களுக்கெல்லாம் அரசாங்க வேலை கொடுத்து வாழ்நாள் முழுதும் அவர்கள் தங்களுடைய குடும்பத்தை நடத்துவதற்காக (மேசையைத் தட்டும் ஒலி) அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான், அந்தப் பொறுப்பை நாம் ஏற்றுக்கொண்டிருக்கிறோம்.

தமிழ்நாட்டிலே 1,116 இரயில்வே gate-கள் ஆள் இல்லாமல் இருக்கின்றன. அந்த ஆள் இல்லாத gate-களுக்கு எல்லாம் ஆட்களை, படிப்படியாகக்கூட அல்ல, ஒரேயடியாக ஒரு ஆயிரம் பேருக்கு

விண்ணப்பம் தரச் சொல்லி—10 ஆயிரம் கொடுப்பார்கள்—ஓர் ஆயிரம் பேருக்கு அந்த வேலையைக் கொடுத்து, அந்த gate-கள் எல்லாம் காவல் உள்ள gate-களாக, அபாயத்தை அகற்றுகின்ற gate-களாக ஆவதற்கு மத்திய இரயில்வே இலாகா முன்வர வேண்டும் என்ற வேண்டுகோளை நான் இங்கிருந்து அங்கேயிருக்கின்ற பிரதமருக்குக்கூட அல்ல, லல்லு அவர்கள் எளிய மனிதர்; அவருக்கு இங்கிருந்து சொன்னாலே உடனடியாக அவர்களுடைய காதிலே விழும். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களுடைய காதிலே விழுந்தாலும், விழாவிட்டாலும், காது கேட்கும் கருவியாக நம்முடைய நண்பர் வேலு அவர்கள் இருந்து, அதைக் கேட்கச் செய்வார்; உடனடியாக இந்தக் கோரிக்கை நிறைவேற்றப்படும் என்ற வகையிலே இன்றைய இந்தக் கவன ஈர்ப்பும், அதற்கு நான் அளித்த இந்தப் பதிலுரையும் அமைந்து, எதிர்காலத்திலே இந்த நிகழ்ச்சிகள் நடைபெறாமல் இருந்தால், அதுவே 10 இலட்சம் பெறுமான, 50 இலட்சம் பெறுமான ஒரு காரியம் என்ற அளவிலே எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கூறுகிறேன்.

மறைந்தவர்களுக்கு எல்லாம் என்னுடைய மனமார்ந்த இரங்கலை உங்கள் அத்தனை பேர்களுடைய உணர்வுகளோடு இணைந்து தெரிவித்து, அமைகின்றேன். நன்றி, வணக்கம்.

*முற்பகல் 11-10*

## 3. தகவல் கோரல்

### (அ) தரகர்கள்மூலம் சிறுநீரகங்கள் வாங்கி விற்பனை செய்தது தொடர்பான விசாரணைக்கு உத்தரவிட்டது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.

***திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 20, 25 நாட்களுக்கு முன்பு நம்முடைய தமிழகத்திலே ஒரு அதிர்ச்சி தரக்கூடிய சம்பவத்தைப் பற்றிய செய்திகள் தொடர்ந்து பத்திரிகைகளிலே வந்துகொண்டிருந்தன. சென்னை மற்றும் அதன் சுற்றுப்புறங்களிலே வாழ்கின்ற...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பீட்டர், நீங்கள் இதற்குக் கவன ஈர்ப்பு அறிவிப்புக் கொடுத்திருக்கிறீர்களே, அதுதானே? (குறுக்கீடு) நான் எடுக்கிறேன், உட்காருங்கள்.





"ஏழையெளிய மக்களிடமிருந்து தரகர்கள்மூலம் சிறுநீரகங்கள் வாங்கப்பட்டு, விற்பனை செய்தது தொடர்பான விசாரணைக்கு உத்தரவிட்டது குறித்து" மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ், மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி ஆகியோர் பேரவை விதி 55-ன்கீழ் அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். இதனைத் தகவல் கோரல் என்ற முறையில் எடுத்துக்கொள்கிறேன். இது குறித்துச் சுருக்கமாகப் பேசுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 20, 25 நாட்களுக்கு முன்பு பல்வேறு அதிர்ச்சி தரக்கூடிய தகவல்களை நமது தமிழகத்தினுடைய பிரபல ஆங்கில மற்றும் தமிழ் தினசரிகள் பிரசுரித்திருந்தன. சென்னையைச் சுற்றியுள்ள பகுதிகளிலே, அதிலும் குறிப்பாக மிகவும் ஏழையெளிய மக்கள் வாழ்கின்ற பகுதிகளில், சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்கள் வாழ்கின்ற பகுதிகளிலே சிறுநீரகத்தை விற்று வாழ்க்கை நடத்தக்கூடிய நிர்பந்தத்திற்கு அவர்கள் தள்ளப்பட்டிருக்கிறார்கள் என்கிற ஒரு அதிர்ச்சி தரக்கூடிய செய்தி வெளிச்சத்திற்கு வந்தது. சிறுநீரகத் திருட்டு நடந்தது மட்டுமல்ல; தங்களுடைய அவயவங்களிலே மிக முக்கியமான ஒன்றை இழந்த அவர்கள், அதற்குச் சரியான நஷ்ட ஈட்டுத் தொகையைக்கூடப் பெற முடியாமல், நடுவிலே இடைத்தரகர்கள் உள்ளே நுழைந்து, அதிலே பல்வேறு முறைகேடுகளைச் செய்து, அந்த ஏழையெளிய அப்பாவி மக்களைப் பழி வாங்கியிருக்கின்ற செய்திகளை எல்லாம் நாம் பத்திரிகைகளிலே பார்த்தோம்.

அதைத் தொடர்ந்து வந்த செய்திகள் மேலும் அதிர்ச்சியூட்டுவதாக அமைந்தன. சென்னையிலே இருக்கின்றவர்களைத் திருச்சி, கோவை போன்ற மாநகரங்களுக்கு அழைத்துக்கொண்டு போய், அங்கே ஆவணங்களையெல்லாம் மாற்றி, அவர்களுக்குப் புதிய ரேஷன் கார்டுகள், புதிய வீட்டுப் பத்திரங்கள்போன்றவற்றைத் தயார் செய்து, அப்படித் தயாரிக்கப்பட்ட போலிப் பத்திரங்களின்மூலமாக, அவர்களிடமிருந்தெல்லாம் அந்தச் சிறுநீரகத்தை அகற்றி, மாற்று அறுவை சிகிச்சை செய்ததாகக் கேள்விப்பட்டோம்.

இதை இந்த அவையிலே தங்கள் அனுமதியோடு கிளப்பியபோது, நம்முடைய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் இதற்காக ஒரு விசாரணைக்கு ஏற்பாடு செய்வதாக

உறுதியளித்தார்கள். இப்போது அந்த விசாரணையினுடைய அறிக்கை, பதில் வந்திருப்பதாக நாங்கள் அறிகிறோம். அந்த அடிப்படையிலே, சென்னையிலே இருக்கின்ற இரண்டு மருத்துவமனைகள்—M.R. Hospital, Chennai, Aswini Soundarya Nursing Home, Chennai—இந்த இரண்டு மருத்துவமனைகளுடைய உரிமங்கள், அதாவது, சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை செய்வதற்காக அந்தச் சட்டத்திலே சொல்லப்பட்ட அந்த மருத்துவமனைகளுக்கு வழங்கப்பட்ட உரிமங்கள் இரத்துச் செய்யப்பட்டிருப்பதாக அறிகிறோம்.

அது போக, ஏறக்குறைய 13 மருத்துவமனைகளில் அவர்கள் வைத்திருந்த ஆவணங்கள்—இந்த சிறுநீரக அறுவை சிகிச்சை சம்பந்தமாக அந்த மருத்துவமனைகளிலே இருந்த ஆவணங்கள்—சில இடங்களிலே முழுமையாக ஆவணங்களே இல்லை; மற்ற சில மருத்துவமனைகளிலே இருக்கின்ற ஆவணங்கள் போலி ஆவணங்களாக இருப்பதாக இந்த விசாரணை அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது.

அது சம்பந்தமாக ஏறக்குறைய 11 மருத்துவமனைகளுக்கு, வேதநாயகம் மருத்துவமனை, கோயம்புத்தூர், Kaveri Medical Centre, Trichy, Ramakrishna Nursing Home, Erode, Chennai Transplant Centre, Madras Medical Mission, Chennai, P.S.G. Hospital, Coimbatore, Kovai Medical Centre, Coimbatore, G. Kuppusamy Naidu Hospital, Coimbatore, Galaxy Hospital, Tirunelveli, Devaki Hospital, Chennai, A.B.C. Hospital, Trichy, Meenakshi Medical Mission, Madurai, Chennai-Kaliappa, Chennai and Apollo Speciality Hospital, Madurai என்கிற இந்தப் பிரபலமான மருத்துவமனைகள் எல்லாம் இந்த அறுவை சிகிச்சை செய்வதற்கு முறையான ஆவணங்கள் இல்லாமல் அறுவை சிகிச்சைகளைச் செய்ததாகச் சொல்லி, அவற்றினுடைய உரிமங்களையும் ஏன் இரத்துச் செய்யக் கூடாது என்கிற அந்த முன்னறிவிப்பு அறிக்கையும் கொடுக்கப்பட்டிருப்பதாக அறிகிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே முக்கியமான செய்திகள் இரண்டு. அந்தச் செய்திக் குறிப்பு வருகின்றபோது என்ன சொல்கின்றார்கள் என்று சொன்னால், அந்த மருத்துவமனைகளுடைய உரிமங்களை இரத்துச் செய்வதோடு அந்த நடவடிக்கை முடிந்துவிடுமா? அல்லது, நம்முடைய சட்டம் சொல்வதைப்போல, அந்த Human Organs Transplantation Act என்ற நம்முடைய சட்டம் சொல்கின்ற அந்தச் சட்ட விதியிலே, அதைப்போன்ற அறுவை





சிகிச்சைகளுக்கு உடந்தையாக இருந்தவர்கள் யாராக இருந்தாலும், அவர்களுக்கு மூன்று வருடம் சிறைத் தண்டனை விதிக்கப்பட வேண்டும் என்கிற சட்டக் கூறு இங்கே இருக்கிறது.

முற்பகல் 11-15

ஒரு வாரத்திற்கு முன்னால், மதுரையில் பிச்சையெடுத்தவர்களையெல்லாம் சிறைச்சாலைகளில் அடைக்கின்ற நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதைப்போல வன்மையான திருட்டைச் செய்தவர்கள்மீது என்ன நடவடிக்கை இருக்கிறது என்பதை நான் அறிய ஆசைப்படுகிறேன். இன்னும் ஒரு படி அதிகமாகச் சொன்னால், இதைப்போன்ற உரிமங்கள் எத்தனை மருத்துவமனைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன என்று எனக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்ல வேண்டும். தமிழகத்திலே சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை செய்வதற்கு எத்தனை மருத்துவமனைகளுக்கு உரிமங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன? ஒரு வேளை அப்படி வழங்கப்பட்ட உரிமங்கள் பெற்ற அத்தனை மருத்துவமனைகளுடைய உரிமங்களையும் இரத்துச் செய்தால், சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை தேவைப்படுகின்றவர்கள் எங்கே போவார்கள் என்கின்ற இன்னொரு கேள்வியும் எழுகிறது. இதற்கிடையிலே இதற்கு என்ன மாற்று?

இன்று இந்தியாவில் என்ன சொல்கிறார்கள் என்று சொன்னால், இந்தச் சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை செய்வது தமிழகத்திலேதான் மிகவும் இலகு. ஏனென்று சொன்னால், இங்கேதான் அதற்கான விசாரணைகளுடைய அந்த நடைமுறைகள் மிகவும் எளிதாக இருக்கின்றன என்று சொல்கிறார்கள். ஆகவே, அதையும் நாம் உற்று நோக்க வேண்டும். இப்போது சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சைகள் செய்வதற்காக, அந்த மனுக்களைப் பரிசீலனை செய்வதற்காக ஒரு குழுவை நியமித்திருக்கிறோம். ஒரு Authority—Transplantation Authority; அவர்கள் மட்டுமே அந்த விசாரணையை மேற்கொள்கிறார்கள். ஆனால், மற்ற மாநிலங்களிலே காவல் துறைக்கு அந்த மனுக்களை அனுப்பி, அவர்கள் அந்த மனுவை விசாரணை செய்து, அவர்கள் கொடுக்கிற அறிக்கையின்மீதுதான் அந்தக் குழு அந்த முடிவை எடுக்கிறது. அப்படிப்பட்ட ஒரு நடைமுறையைப் பின்பற்றுவதற்கு இந்த அரசு முன்வருமா என்று நான் அறிய ஆசைப்படுகிற அதே நேரத்திலே, இன்னொரு அடிப்படையான கேள்வி. இப்பொழுது புதிய நவீன மருத்துவத் தொழில்நுட்பங்கள், சில புதிய உத்திகளைக்கொண்டு

[திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்] [2007 ஏப்ரல் 17

வந்திருக்கின்றன. கண் தானம் என்று சொல்கிறோம், கல்லீரல் தானம் என்று சொல்லுகிறோம், சிறுநீரக தானம் என்று சொல்கிறோம். இந்த விதிகளிலே இருக்கின்ற ஒரு முக்கியமான விதி என்ன சொல்கிறது என்று சொன்னால், மிகுந்த இரத்த சம்பந்தமான உறவு உடையவர்கள் மட்டும்தான் அந்தச் சிறுநீரக தானத்தைச் செய்யலாம் என்று சொல்வதாக நான் அறிகிறேன். அப்படி இருக்கின்ற காரணத்தினால்தான், இவ்வளவு மறைமுகமாக, அந்தரங்கமாக இந்த அறுவை சிகிச்சைகளைச் செய்ய வேண்டியிருக்கிறது. இந்தக் கோணத்தை ஆராய்ந்து பார்த்து, முழுமையான உடல் நலன்பெற்ற ஒருவர், தான் மனமுவந்து, மனம் விரும்பி, தன்னுடைய கண்ணைத் தானம் செய்கிறேன் என்று சொல்வதைப்போல, இரத்தத்தைத் தானம் செய்கிறேன் என்று சொல்வதைப்போல, என்னுடைய சிறுநீரகத்தையும் மற்றொருவர் உயிர் வாழ்வதற்காக தானம் செய்கிறேன் என்று உண்மையிலேயே ஒருவர் முன்வருவாரென்று சொன்னால், அவருக்கு இந்தச் சட்டத்திலே என்ன பாதுகாப்பு இருக்கிறது என்பதைப்போன்ற கோணங்களையெல்லாம் உங்கள்மூலமாக நான் நம்முடைய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து, தவறு செய்தவர்கள் எவ்வளவு பெரியவர்களாக இருந்தாலும், அவர்கள்மீது என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறோம் என்பதையும் இந்த அவைக்கு அவர்கள் ஓர் அறிக்கையாகத் தர வேண்டுமென்று கேட்டு, அமைகின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி. அவர் சொன்ன அதே கருத்துதானே?

**திரு. ஜி.கே. மணி:** அதுதான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நேரத்தின் அருமை கருதித்தான் நான் கேட்கிறேன்.

**திரு. ஜி.கே. மணி:** சொல்லி விடுகிறேன். நேரத்தை அதிகமாக எடுக்கவில்லை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சிறுநீரக அறுவை சிகிச்சையிலே எவ்வளவு பெரிய மோசடி நடந்திருக்கிறது, திருட்டு நடந்திருக்கிறது, அதிலே இடைத்தரகர்கள் எவ்வளவு அட்டூழியம் செய்திருக்கிறார்கள் என்பதை நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் இங்கே குறிப்பிட்டுச் சொன்னார்கள். இன்னும் ஒரு படி மேலே சென்று பார்ப்போமென்று சொன்னால், மருத்துவமனை என்பது



2007 ஏப்ரல் 17] [திரு. ஜி.கே. மணி]

உயிர் காக்கக்கூடிய இடம். மருத்துவர்கள் உயிர் காப்பவர்கள். இங்கே தன்னுடைய தலைவரை மிகப் பெரிய உயர்ந்த இடத்தில் பார்க்கக்கூடிய சாதாரணத் தொண்டன்கூட அல்லது கடவுளை வழிபடக்கூடிய பக்தனாக இருந்தாலும்கூட, தன்னுடைய குடும்பத்தில் யாராவது ஒருவர் நோய்வாய்ப்பட்ட நேரத்தில் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார் என்று சொன்னால், எல்லாவற்றையும் மறந்துவிட்டு, 'எனக்கு தெய்வமே நீங்கள்தான், என்னுடைய மனைவி உயிரைக் காப்பாற்ற வேண்டும், என்னுடைய பிள்ளை உயிரைக் காப்பாற்ற வேண்டும்' என்று கடைசிப் புகலிடமாக நாடுவது மருத்துவர்களை, மருத்துவமனைகளை. ஆனால். அப்படி உயிர் காக்கக்கூடிய இடமாக இருக்கின்ற மருத்துவமனைகளில் இப்படி போலித்தனம் நடைபெறுவது என்பது எந்தச் சூழ்நிலையிலும் ஏற்றுக்கொள்ளப்பட முடியாத ஒன்றாகவே கருதப்பட வேண்டும். ஆகவே, மருத்துவமனைகளைப் பற்றிச் சொல்லுகின்றபொழுது, இங்கே நம்முடைய திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் குறிப்பிட்ட இரண்டு மருத்துவமனைகளின் உரிமங்கள் தற்காலிகமாக இடைநீக்கம் செய்யப்பட்டிருக்கின்றன. இதிலே மேற்கொண்டு 13 மருத்துவமனைகள் ஆய்விலே இருப்பதாகப் பெயர்களையெல்லாம் சுட்டிக்காட்டி இருக்கிறார்கள். ஆனால் நான் இங்கே கேட்க விரும்புவது, இந்தப் பட்டியலிலே இருக்கிற மருத்துவமனைகளின்மீது என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறீர்கள்? இதிலே ஈடுபட்டிருக்கிற மருத்துவர்கள்மீது என்ன நடவடிக்கை எடுக்கவிருக்கிறீர்கள்? இதற்கு இடைத்தரகர்களாக இருந்தவர்கள் யார்? அவர்களைக் கண்டறிந்துவிட்டீர்களா? அவர்கள்மீது என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறீர்கள் என்பதை அரசு தெளிவாக இந்த நாட்டு மக்களுக்கும், இந்த மன்றத்திற்கும் அறிவிக்க வேண்டும்.

*முற்பகல் 11-20*

இதைக்கூட நான் இப்படிக் கேட்டுக்கொள்வதற்குக் காரணம், எங்கு பார்த்தாலும் பேசிக்கொள்ளுகிறார்கள், மருத்துவமனைக்குச் செல்லுவதற்குப் பயமாக இருக்கிறது; இன்னும் மேற்கொண்டு சொல்ல வேண்டுமென்று சொன்னால், சிலர் வயிற்றிலே ஏதாவது அறுவை சிகிச்சை நடைபெறுகின்றபோது, அவருக்குத் தெரியாமலேயே—சாதாரண ஏழை, கிராமத்தில் இருப்பவன் மருத்துவத்தைப் பற்றி அதிகம் அறியாதவன்—அவன் உடலிலே இருக்கிற உறுப்புகளை, குறிப்பாகச் சிறுநீரகத்தை எடுத்துவிடுகிறார்களோ என்ற அச்சமெல்லாம் ஏற்படுகிறது. ஆகவே, மருத்துவமனைகளைக் கண்காணிக்க வேண்டுமென்ற வேண்டுகோளை நான் முன்வைக்கிறேன்.

[திரு. ஜி.கே. மணி] [2007 ஏப்ரல் 17

இப்பொழுதுகூட கர்நாடக மாநிலத்திலே இதற்காக ஒரு சட்டம் கொண்டு வந்ததாகச் சொல்லப்படுகிறது. கிராமத்திலே இருக்கிற சிறு மருத்துவமனையாக இருந்தாலும், மிகப் பெரிய மருத்துவமனை வரையிலே அதை நெறிப்படுத்துவதற்கு, முறைப்படுத்துவதற்கு ஒரு சட்டம் கொண்டு வந்திருக்கிறார்கள். இன்னின்ன மருத்துவத்திற்கு இவ்வளவு கட்டணம், கட்டணம் என்பது மட்டுமல்ல, அதனுடைய சிகிச்சை முறை, எத்தனை நாட்கள் தங்க வேண்டும், எப்படிப்பட்ட அறையிலே நோயாளிகளைத் தங்க வைக்க வேண்டும் என்றெல்லாம் அங்கே நெறிப்படுத்தக்கூடிய நிலையிலே ஒரு சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அந்த அளவிற்குக்கூட நான் இங்கு சொல்லவில்லை. அதுபோன்ற சாதாரண மக்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதற்கு, மருத்துவமனைகளை நெறிப்படுத்தக்கூடிய ஒரு விதியைக் கொண்டு வரலாம் என்பதை என்னுடைய ஆலோசனையாக நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஒட்டுமொத்தமாக, இங்கே சிறுநீரகமாக இருந்தாலும் அல்லது கண் தானம், இரத்த தானம், இன்னும் எலும்பு மூட்டுகளை, உடலையே தானம் செய்யக்கூடிய நிலைக்கு வருகிறார்கள். ஆகவே, அப்படி தானம் செய்யக்கூடிய அந்த உடலுறுப்புக்களைப் பணக்காரன் ஒருவன் பெற்றுக்கொள்கிறான், தன்னுடைய உயிரைக் காப்பாற்றிக்கொள்வதற்காக. அப்படிக் காப்பாற்றுகின்ற நேரத்தில் அந்தப் பணக்காரன் ஒருவன் தன்னுடைய சொத்தையேகூட எழுதி வைக்கக்கூடிய நிலைக்கு வருகிறான். அதற்குச் சொத்தை எழுதி வைப்பார் என்று சொன்னால், இந்த உடலுறுப்பு கொடுத்தவனுக்கு என்ன பாதுகாப்பு? அதற்காகவெல்லாம்கூட இந்தச் சட்டத்திலே இடம் பெறுவதற்கு ஒரு அம்சமாக அதைச் சேர்த்துக் கொள்ளலாம். ஆகவே, ஒட்டுமொத்தமாக அதை நெறிப்படுத்த வேண்டும். அதற்கு உரிய நடவடிக்கையை அரசு மேற்கொள்ள வேண்டுமென்று அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்து, அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற செய்திகள் வந்தவுடனேயே நம்முடைய முதல்வர் அவர்கள் இதன்மீது தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொல்லி என்னுடைய சுகாதாரத் துறைக்கும் சரி, அதேபோல புகார்கள் வந்த நேரத்திலே போலீசுக்கும் சொல்லி, தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று :சொல்லி,



2007 ஏப்ரல் 17] [திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்]

அதன்மீது நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறோம். எனக்கு வந்த தகவல்படி, சென்னையிலும், திருச்சியிலும் இதுபோன்ற புரோக்கர்கள் தவறு செய்ததற்காக போலீசிலே வழக்குகள் பதிவு செய்யப்பட்டு. கைது செய்யப்பட்டு, அவர்கள் சிறையிலே இருக்கிறார்கள், இரண்டு இடங்களில், சென்னையிலும், திருச்சியிலும்.

என்னுடைய சுகாதாரத் துறையிலிருந்து இதன்மீது நாங்கள் நடவடிக்கை எடுக்க ஆரம்பித்தோம். மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் திரு. பீட்டர் அல்போன்ஸ் கேட்ட கேள்விக்குப் பதிலுரையாகச் சொல்கிறேன். தமிழ்நாட்டிலே மொத்தம் 54 மருத்துவமனைகளுக்கு இந்த மாற்று அறுவை சிகிச்சை செய்வதற்கு நாங்கள் அனுமதி வழங்கியிருக்கிறோம். அவற்றிலே அரசு மருத்துவமனைகள் 5, மீதி தனியார் மருத்துவமனைகள் 49, சென்னையிலே மட்டும் 23, பிற மாவட்டங்களிலே 26, மொத்தம் 49, தனியாருக்குக் கொடுத்திருக்கிறோம். இதிலே நாம் இப்பொழுது மூன்றுவிதமாக நடவடிக்கை எடுத்திருக்கிறோம்.

நம்முடைய துறையில் இருந்த அதிகாரிகள் சென்று ஆய்வு செய்த நேரத்தில், சென்னையிலே இருக்கிற எம்.ஆர். மருத்துவமனையில், அஸ்வினி மருத்துவமனையில் போலி ஆவணங்கள்---அங்கிருந்த document வருகிறபொழுதே, அந்த document-ம் பொய்யாக இருக்கிறது, இங்கிருந்து போகிற document-ம் பொய்யான document ஆக இருக்கிறது. எப்படி என்று சொன்னால், அங்கிருந்து application மாதிரி நம்முடைய Committee-க்கு அனுப்புகிறார்கள். Committee approval பண்ணியதுபோன்ற போலி ஆவணங்கள் அந்த இரண்டு மருத்துவமனைகளிலே இருந்தன. ஆகவே, இரண்டு மருத்துவமனைகளினுடைய அங்கீகாரத்தை நாங்கள் இரத்துச் செய்து, show cause notice கொடுத்திருக்கிறோம். அதேபோல நான்கு மருத்துவமனைகளுக்கு H.L.A. என்று சொல்லக்கூடிய ஆய்வு. அதாவது, உறவினர்களா என்று பார்க்கக்கூடிய அந்த H.L.A. ஆய்வு செய்துதான் நாம் அங்கே மருத்துவமனையிலே அந்த operation-ஐச் செய்ய வேண்டும். அப்படிச் செய்யாமல் இருந்த மருத்துவமனைகள், அப்போலோ மருத்துவமனை, Meenakshi Mission, A.B.C. மருத்துவமனை, வேதநாயகம் மருத்துவமனை. இந்த நான்கு மருத்துவமனைகளிலுமே அந்த H.L.A. ஆய்வு மேற்கொள்ளப்படவில்லை. அதற்காக show cause notice, ஏன் உங்கள்மீது நடவடிக்கை எடுக்கக் கூடாது என்று கொடுத்திருக்கிறோம்.

[திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்] [2007 ஏப்ரல் 17

அதேபோல, அந்த விதிகளிலே, மூன்றாம் form, நான்காம் form ஆகிய படிவங்கள்—அதற்குத் தனியாக, யார் வந்தார்கள், எப்படிச் செய்தார்கள் என்பதற்குப் படிவம் எண் 3, 4 என்று படிவங்கள் இருக்கின்றன. அதை maintain செய்யாத ஒன்பது மருத்துவமனைகள்மீதும் show cause notice கொடுத்திருக்கிறோம். இவர்கள் விளக்கம் கொடுத்த பிறகு, சட்டப்படி இவர்கள்மீது நடவடிக்கை எடுக்க நாம் காத்திருக்கிறோம். அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசாங்கம் துரிதமாக எடுத்துக்கொண்டிருக்கிறது. இதன்மீது நம்முடைய முதலமைச்சர் அவர்களும் அடிக்கடி எங்கள் மத்தியிலே இந்தக் கேள்விகளைக் கேட்டு, நடவடிக்கை எடுக்கச் சொல்லியிருக்கிறார்கள்.

இந்த Act, Central Act. நாம் போடுகிற Act அல்ல. அவர்கள் சொல்லிய அந்தச் சட்டத்தின்படி நாம் இங்கே செய்யக் காத்திருக்கிறோம். பொதுவாக, இதை நாம் மாற்ற வேண்டுமென்று சொன்னால், இதிலே ஒரு word எப்படி இருக்க வேண்டுமென்று சொன்னால், love and affection என்று சொல்லி, உங்கள்மீது இருக்கிற ஒரு அன்பின் காரணமாக நான் கிட்னியை—சிறுநீரகத்தைத் தருகிறேன் என்று சொல்லி ஒருவர் கொடுக்க முடிகிறது. முதலிலே வரும்போது நாம் reject செய்கிறோம். இரண்டாவது முறை வரும்போது, அவருக்கு மூளைச் சலவை செய்து, சரியாகச் சொல்லி, இரண்டு, மூன்று தடவை அந்த கமிட்டிக்கு வந்து போய்க்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அந்த கமிட்டியை strengthen செய்ய வேண்டுமென்று சொல்லி, இப்பொழுது மருத்துவ அதிகாரிகள் மட்டுமல்லாமல், புதிதாக Police, Revenue, சட்டம் சார்ந்த ஒருவர், இப்படி அந்த கமிட்டியை strengthen பண்ணுவதற்கு வேண்டிய பணிகளையும் இன்றைக்கு நாங்கள் செய்கிறோம். சென்ற 2, 3, 7 ஆகிய தேதிகளில் இதற்காக ஓர் ஆய்வையே நடத்தி, அந்த மருத்துவர்களை அழைத்துப் பேசி, எதிர்காலத்திலே இதை எப்படித் தடுக்க முடியும் என்பதையும் நாங்கள் கேட்டு, அந்தப் பணிகளை இன்றைக்கு நாங்கள் செய்துகொண்டிருக்கிறோம்.

*முற்பகல் 11-25*

பொதுவாக நாம் இதைக் குறைக்க வேண்டுமென்று சொன்னால், Cadaver Transplantation தான் சரியாக இருக்க முடியும். மூளை இறந்து போகிற ஒரு நபரிடமிருந்து இந்த உறுப்புகளை எடுப்பதுதான் எதிர்காலத்திலே சரியாக இருக்கும். அந்தப் பணியைச் செய்வதற்கு



2007 ஏப்ரல் 17] [திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்]

வேண்டியவற்றையும் நாம் இன்றைக்குச் செய்துகொண்டிருக்கிறோம். பொதுவாக, நான் இரண்டு மாத காலமாக இதை விசாரித்ததிலே, உறவினர்கள் சிறுநீரக தானம் கொடுப்பதற்கு ரொம்ப அச்சப்படுகிறார்கள், பயம் இருக்கிறது. நான்கூட ஒருவரை அழைத்துத் திட்டினேன், ஏன் இப்படிச் செய்கிறீர்கள் என்று. அவர் சொல்கிறார், "என்னுடைய உறவினர்கள் மத்தியிலே சிறுநீரகம் கேட்டேன், என் சொத்தில் பாதியை எழுதிக் கேட்கிறார். இது ரொம்ப costly ஆக இருக்கிறது அண்ணாச்சி" என்று சொன்னார். "என்னய்யா, ஏன் இப்படியெல்லாம் பண்ணிக்கொண்டிருக்கிறீர்கள், மாற்றி, மாற்றி" என்று சொன்னபோது, "அவர் பாதிச் சொத்தைக் கேட்கிறார், அண்ணாச்சி. இது ரொம்ப costly ஆக இருக்கிறது" என்கிறார்கள். ஆகவே, நடைமுறையிலே இதிலே சிக்கல் இருந்துகொண்டே இருக்கிறது. இதைச் சட்டரீதியாகத் தடுக்கிற முயற்சியிலே ஈடுபடுகிற அதே நேரத்திலே, நோயாளியைக் காப்பாற்ற வேண்டிய கடமையும் இந்த அரசாங்கத்திற்கு இருக்கிறது. ஒருவருக்குச் சிறுநீரகம் பாதிக்கப்படும் என்று சொன்னால், முதலிலே ஒரு மாதத்திற்கு ஒரு முறை தொடர்ந்து dialysis செய்கிறார்கள். பிறகு 15 நாட்கள், ஒரு வாரம் என்று சொல்லி, dialysis தொடர்ந்து செய்ய வேண்டிய ஒரு மோசமான சூழ்நிலை இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே, இவற்றையெல்லாம் அரசாங்கம் கவனத்திலே வைத்துக்கொண்டு, தவறு செய்த மருத்துவமனை, தவறு செய்த மருத்துவர்கள்மீது நடவடிக்கை எடுக்கும் அந்தப் பணியையும் ஒரு புறம் செய்துகொண்டிருக்கிறோம்.

கடந்த இரண்டு, மூன்று மாதங்களாக அந்தப் பணி நின்று போயிருக்கிறது. அந்தப் பணியை regularize செய்து, சட்டப்படி, சரியான நபர்களுக்குச் சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை செய்யும் பணிகளையும் நாங்கள் செய்துகொண்டிருக்கிறோம். ஆகவே, அரசாங்கத்தைப் பொறுத்தளவில், தவறை யார் செய்தாலும், நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் நடவடிக்கை எடுக்கச் சொல்லி உத்தரவிட்டிருக்கிறார்கள். எதிர்காலத்திலே மருத்துவமனைமீது, மருத்துவர்கள்மீது, இந்த ஆய்வின் அடிப்படையிலோ அல்லது அவர்கள் கொடுக்கின்ற பதிலின் அடிப்படையிலோ சரியான நடவடிக்கை, தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2007 ஏப்ரல் 17

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 55-ன்கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. (குறுக்கீடு) திரு. மணி, இன்றைக்கு இரண்டு மானியக் கோரிக்கைகள் எடுத்துக்கொள்ளப்பட இருக்கின்றன. 10 பேர் பேச வேண்டியிருக்கிறது. (குறுக்கீடு) சரி, சொல்லுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் நன்றாக விளக்கத்தை அளித்தார்கள். ஆனால், அந்த அறிக்கையை இந்த அவைக்கு நீங்கள் அளிப்பீர்களா என்று கேட்டுக்கொள்கிறேன். அதே நேரத்திலே, குறிப்பிட்ட இந்த மருத்துவமனைகளுக்குத் தொடர்ந்து உரிமம் வழங்கப்படுமா அல்லது இரத்துச் செய்யப்படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன். அதோடு, இப்படிப்பட்ட மருத்துவமனைகளின் அங்கீகாரத்தை இரத்துச் செய்துவிட்டால், சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சைக்குப் பாதிப்பும் ஏற்படும். அரசு அதையும் கவனத்திலேகொள்ள வேண்டும். இன்னும் புதிதாக விண்ணப்பித்துக் கேட்பவர்களுக்கு உரிமத்தை அரசு வழங்குமா? மேற்கொண்டு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறீர்கள் என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் மாண்புமிகு அண்ணன் கோ.க. மணி அவர்களுக்கு நான் சொன்னேன். நோயாளிகளையும் இந்த அரசாங்கம் பார்க்க வேண்டியிருக்கிறது. ஆகவே, இரண்டு பக்கங்களிலும்—தவறு செய்தவர்களைத் தண்டிப்பது ஒரு பக்கம், இருக்கிற நோயாளிகளைக் காப்பாற்றுவது ஒரு பக்கம்—ஆய்வு செய்து, சரியான முறையிலே நாங்கள் சில பணிகளைச் செய்துகொண்டிருக்கிறோம். இரண்டாவது, புதிதாக யார் அனுமதி கேட்டாலும், தகுதியிருக்குமென்று சொன்னால், நிச்சயமாக அனுமதி வழங்கப்படும்.

## 4. கவன ஈர்ப்பு

### தாராபுரம் தொகுதி, அரியநாச்சிபாளையம் கிராமத்தில் கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணிகள் தொடங்கப்படாதது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 55-ன்கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு.



2007 ஏப்ரல் 17] [பேரவைத் தலைவர்]

மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். மாண்புமிகு திரு. சி. சண்முகவேலு அவர்கள்.

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோயம்புத்தூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், தாராபுரம் தொகுதி, அரியநாச்சிபாளையம் ஊராட்சியில் கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணிகள் தன்னிறைவுத் திட்டத்தின்மூலம் தொடங்கப்படாததால், பொது மக்கள் சாலை மறியலில் ஈடுபட்டது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டிருக்கிறது:

### அறிக்கை

கோயம்புத்தூர் மாவட்டம், உடுமலை வட்டம், தாராபுரம் தொகுதி, ஜோத்தம்பட்டி ஊராட்சி, அரியநாச்சிபாளையம் கிராமத்திற்குக் குடிநீர் வழங்குவதற்காக, கிராமத் தன்னிறைவுத் திட்டத்தில் பொது மக்கள் பங்களிப்புத் தொகையாக ரூ. 9 இலட்சம் 12-12-2005 அன்று செலுத்தப்பட்டது. ஆனால், 2005-2006 ஆம் ஆண்டு கிராமத் தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் இம்மாவட்டத்திற்கெனப் பெறப்பட்ட தொகை முழுவதும் செலவழிக்கப்பட்டுவிட்டதாலும், அடுத்த நிதி ஆண்டான 2006-2007 ஆம் ஆண்டில் கிராமத் தன்னிறைவுத் திட்டத்திற்கு நிதி ஒதுக்கீடு ஏதும் தனியாகச் செய்யப்படாததாலும் தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் இக்குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்படவில்லை.

இந்நிலையில், கணியூர் பேரூராட்சி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் அரியநாச்சிபாளையம் கிராமத்திற்கு ஏற்கெனவே வழங்கப்பட்டு வந்த குடிநீர் விநியோகம், அமராவதி ஆற்றில் நீர்வரத்து இல்லாத காரணத்தால் 10 நாட்களாக நிறுத்தப்பட்டுவிட்டதால், எந்தவித முன்னறிவிப்பும் கொடுக்காமல் ஜோத்தம்பட்டி

ஊராட்சியைச் சேர்ந்த பொது மக்கள் 28-3-2007-ல் குடிநீர்ப் பிரச்சினை காரணமாகச் சாலை மறியலில் ஈடுபட்டனர்.

28-3-2007 அன்றே சம்பந்தப்பட்ட கிராமப் பொது மக்களிடம் பேசி, அவர்களின் கோரிக்கையின்படி உடனடித் தீர்வாகத் தினமும் 6 லாரிகள்மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. நிரந்தரத் தீர்வுக்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களால் வைக்கப்பட்டுள்ள விவர அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். உடுமலை வட்டத்திற்கு உட்பட்ட ஜோத்தம்பட்டி ஊராட்சியானது, இரண்டு கிராமங்களை உள்ளடக்கிய ஊராட்சி. அங்கு மடத்துக்குளம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலமாக—நாளொன்றுக்கு 1 கோடியே 60 இலட்சம் லிட்டர் தண்ணீர் கொடுக்கக்கூடிய, 22 கிராமங்களை உள்ளடக்கிய அந்தத் திட்டத்திலே அரியநாச்சிபாளையம் கிராமமும் சேர்க்கப்பட்டுள்ளது.

அதேபோல, கணியூர் பேரூராட்சிமூலமாக, மூன்றில் ஒரு பங்குத் தண்ணீர் நாள் ஒன்றுக்குக் கொடுக்கக்கூடிய வகையிலே அந்த ஊராட்சிக்கு வருகிறது. இரண்டு குடிநீர்த் திட்டங்களின்மூலமாகவும் கொடுக்கக்கூடிய தண்ணீர் போதிய அளவிற்கு அங்கு வருவதில்லை. பல நாட்களாகத் தண்ணீர் வரவில்லை. ஏற்கெனவே கணியூர் திட்டத்திலே, 15,000 ஜனத்தொகை இருக்கக்கூடிய பகுதியாக அந்தப் பகுதி இருக்கிறது. அரியநாச்சிபாளையம் 15,000 ஜனத்தொகை உள்ள பகுதியாக இருக்கிறது. அந்த மூன்றில் ஒரு பங்குத் தண்ணீர் கொடுக்கக்கூடியது போதுமானதாக இல்லை. அமராவதி ஆற்றிலே தண்ணீர் இல்லை. கடந்த ஒரு மாதமாகக் கடுமையான வறட்சியால் ஒரு வறண்ட பாலைவனமாக இருக்கிறது. அந்த அரியநாச்சிபாளையத்திலே 40 நெசவாளர்கள் ஆந்திராவில் இருந்து குடிபெயர்ந்து வந்துள்ளார்கள். அரியநாச்சிபாளையம் ஒரு விஸ்தரிப்பான பகுதியாக இருக்கிறது. அங்கே 15-1-2007-லிருந்து அந்தக் கணியூர் திட்டத்தின்மூலமாக வரக்கூடிய தண்ணீர் வரவில்லை என்று அந்தப் பகுதி மக்கள் சொல்கிறார்கள்.

*முற்பகல் 11-30*

அதேபோல, அந்த மடத்துக்குளம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலமாக வரக்கூடிய தண்ணீரும் 25 நாட்களாக வரவில்லை என்று அந்த மக்கள் கூறுகிறார்கள். அங்கே மூன்று





bore-கள் போடப்பட்டுள்ளன. அவற்றில் இரண்டு bore-களில் தண்ணீர் இல்லை. ஒரு bore-லே தண்ணீர் இருக்கிறது. அந்தத் தண்ணீரும் பொது மக்கள் உபயோகிக்கக்கூடிய வகையிலே இல்லை. ஆகவே, அரசு இதைக் கவனத்தில் எடுத்து, தன்னிறைவுத் திட்டத்தின்மூலமாக ஏற்கெனவே ரூபாய் 9 இலட்சம் மதிப்பீட்டில் கட்டியிருக்கிறார்கள். 50 இலட்சம் ரூபாய் திட்டம் பரிசீலனையில் இருக்கிறது. கடந்த ஆண்டு அந்தத் திட்டம் இல்லை. வருகிற ஆண்டிலே பார்க்கலாம் என்று அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். அப்படி அந்தத் திட்டத்தின்மூலமாகவாவது தனியாக ஒரு திட்டம் அந்த மக்கள் வேண்டுமென்று கேட்கிறார்கள். அதை அரசு செய்து கொடுப்பதற்கு முன்வருமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர், சீக்கிரம் சொல்லி முடியுங்கள்.

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள், தினந்தோறும் லாரியிலே ஆறு நடைத் தண்ணீர் கொடுப்பதாகக் கூறினார்கள். ஐந்து நாட்கள் மட்டும் அந்தத் தண்ணீர் கொடுத்திருக்கிறார்கள். அதன் பிறகு அந்தத் தண்ணீர் கொடுக்கப்படவில்லை. மாவட்ட ஏடி. (பஞ்சாயத்து) அவர்கள் வருகை தந்து, அந்த நிதியை மாவட்டப் பஞ்சாயத்திலே கொடுப்பதாகக் கூறினார்கள். ஆனால், கொடுக்கவில்லை. பஞ்சாயத்திலேயும் ஆறு நாட்களுக்குத் தண்ணீர் கொடுத்து, நிறுத்திவிட்டார்கள். ஆகவே, அதை உடனடியாகச் செய்வதற்கு, அந்த மக்களுடைய தண்ணீர் தாகத்தைத் தீர்ப்பதற்கு, குடிநீர் கிடைப்பதற்கு அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா என்று தங்கள்மூலம் அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கணியூர் பேரூராட்சி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலமாக அரியநாச்சிபாளையம் கிராமத்திற்கு ஏற்கெனவே வழங்கப்பட்டு வந்த அந்தக் குடிநீர், அமராவதி ஆற்றிலே நீர்வரத்து இல்லாத காரணத்தினால் 10 நாட்களாக நிறுத்தப்பட்டது என்பது உண்மை. அதனால்தான் அந்தக் குடிநீர்ப் பிரச்சினை காரணமாக அங்கே சாலை மறியல்கூட ஏற்பட்டது என்பதும் உண்மை. அதை உடனடியாக அரசு கவனத்தில்கொண்டு, உடனடியாக அங்கு குடிநீர் வழங்க வேண்டுமென்று உத்தரவிட்டு, தற்காலிக நிவாரணமாகத்

[திரு. மு.க. ஸ்டாலின்] [2007 ஏப்ரல் 17

தினமும் ஆறு லாரிகள்மூலமாக அந்தப் பகுதியிலே இப்போது குடிநீர் வழங்கப்பட்டுக்கொண்டிருக்கிறது.

அது மட்டுமல்ல, நிரந்தரத் தீர்வாக, புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஒன்றை ஜோத்தம்பட்டி ஊராட்சியை உள்ளடக்கி, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், கிராமக் குடிநீர்த் திட்டத்தின் அடிப்படையிலே ரூபாய் 1 கோடியே 48 இலட்சம் மதிப்பீட்டிலே தயாரித்திருக்கிறது. மேற்படி புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டம், ஆய்வு முடிந்ததற்குப் பிறகு, இரண்டு மாத காலத்திற்குள் நிர்வாக அனுமதியைப் பெற்று செயல்படுத்தப்படவிருக்கிறது. இது ஒரு பக்கம் இருந்தாலும், இந்தத் திட்டத்திற்கான அனுமதியை எதிர்நோக்கி இருக்கக்கூடிய இந்தச் சூழ்நிலையிலே, உள்கட்டமைப்புப் பணிகளுக்காக ரூபாய் 10 இலட்சத்து 15 ஆயிரம் மதிப்பீட்டிலே குடிநீர்க் குழாய் விஸ்தரிப்புச் செய்யவும், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கவும், கோவை மாவட்டத்தினுடைய ஆட்சித் தலைவர் அவர்களிடத்திலே நிர்வாக அனுமதியை எதிர்பார்த்துக் காத்திருந்து, 28-2-2007 அன்று நிர்வாக அனுமதியும் வழங்கப்பட்டிருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

## (ஆ) கம்பம் தொகுதி, ஆனைமலையான்பட்டி, காட்டுப் பன்றிகள் வாழை மரங்களை நாசம் செய்தது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, பேரவை விதி 55-ன்கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. இராமகிருஷ்ணன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. இராமகிருஷ்ணன் அவர்கள். (குறுக்கீடு) உட்காருங்கள், தெளிவாக விளக்கம் கொடுத்துவிட்டார்கள். உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள்.

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கம்பம் தொகுதி, "உத்தமபாளையம் ஒன்றியத்தில், ராயப்பன்பட்டி, ஆனைமலையான்பட்டி ஆகிய இடங்களில் உள்ள விவசாய நிலங்களில் காட்டுப் பன்றிகள் நுழைந்து பயிர்களை சேதப்படுத்தியுள்ளதால், விவசாயிகள் படும் துயரம் குறித்து" மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்தை ஈர்க்க விழைகிறேன்.



2007 ஏப்ரல் 17]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர், நிகழ்ச்சி நிரலில் உள்ளதை மட்டும் படியுங்கள்.

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கம்பம் தொகுதி, ஆனைமலையான்பட்டியில் காட்டுப் பன்றிகள் வாழை மரங்களை நாசம் செய்வதால் ஏற்பட்டுள்ள நிலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டு வர விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டிருக்கிறது:

### அறிக்கை

உத்தமபாளையம் தாலுகா, ஆனைமலையான்பட்டி கிராமத்தை ஒட்டியுள்ள எரசக்கநாயக்கனூர் காப்புக் காடுகளிலிருந்து காட்டுப் பன்றிகள் காப்புக் காட்டிற்கு அருகிலுள்ள வாழைத் தோட்டங்களில் நுழைந்து, வாழை மரங்களைச் சேதப்படுத்தியதாகவும், அதற்கு நிவாரணம் வழங்கக் கோரி ஐந்து (5) மனுக்கள் வரப்பெற்றுள்ளன. இப்பகுதிகள், தேனி வனக் கோட்டம், கம்பம் வனச் சரகத்திற்குட்பட்டவையாகும். 2006-2007 ஆம் நிதியாண்டில் நிவாரணம் கோரி 5 மனுக்கள் வரப்பெற்றுள்ளன:

| வ. எண் | மனுதாரரின் பெயர் | கிராமத்தின் பெயர் மற்றும் தாலுகா | சேதார விவரம் |
|---|---|---|---|
| 1. | திரு. சென்னைய கவுண்டர் | ஆனைமலையான்பட்டி/ உத்தமபாளையம் | 585 வாழை மரங்கள் |
| 2. | திரு. பி. ராஜா | ஆனைமலையான்பட்டி/ உத்தமபாளையம் | 75 வாழை மரங்கள் |
| 3. | திரு. பி. செல்லதுரை | ஆனைமலையான்பட்டி/ உத்தமபாளையம் | 50 வாழை மரங்கள் 5 தென்னை மரங்கள் |
| 4. | திரு. கே. முத்துஜெயகுமார் | ஆனைமலையான்பட்டி/ உத்தமபாளையம் | 93 வாழை மரங்கள் |
| 5. | திரு. மாயாண்டி தேவர் @ பொன்னப்ப தேவர் | ஆனைமலையான்பட்டி/ உத்தமபாளையம் | 120 வாழை மரங்கள் மற்றும் நிலக்கடலை 0.25 ஏக்கர் |

[திரு. என். செல்வராஜ்] [2007 ஏப்ரல் 17

*9-11-2006* அன்று வெளியிடப்பட்ட சுற்றுச்சூழல் மற்றும் வனத் *(வ5)* துறையின் அரசாணை எண் *124*-ன்படி வன விலங்குகளால் ஏற்படும் உயிர்ச் சேதம், பயிர்ச் சேதம் மற்றும் இதர வகைகளுக்கு உதவித் தொகை வழங்கும்வண்ணம் கணிசமான அளவுக்கு முதன்முறையாக ரூ.*50* இலட்சம் ஒப்புதல் வழங்கப்பட்டது. இந்த ஆணையின் அடிப்படையில், கடந்த இரண்டு, மூன்று ஆண்டுகளாக நஷ்ட ஈட்டுத் தொகை பெறுவதற்கு மனு செய்யப்பட்டு, போதிய நிதி ஒதுக்கீடு இல்லாமையால் ஏற்பட்டிருந்த தேக்க நிலை நிவர்த்தி செய்யப்பட்டது. அது மட்டுமல்லாமல், காட்டுப் பன்றிகளால் ஏற்படும் சேதங்களுக்கும் மேற்கூறப்பட்ட அரசாணை பொருந்தும். அதனடிப்படையில், மேற்கூறப்பட்ட விவசாயிகள் அனைவருக்கும் ஏற்பட்டுள்ள பயிர்ச் சேதத்திற்கு நஷ்ட ஈடு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. இராமகிருஷ்ணன்.

*முற்பகல் 11-35*

***திரு. நா. இராமகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உத்தமபாளையம் ஒன்றியத்தில் ராயப்பன்பட்டி, ஆனைமலையான்பட்டி ஆகிய பகுதிகளில் மலையடிவாரங்களுக்குக்கீழே விவசாய நிலங்களில் விவசாயிகள் வாழை, கரும்பு, மக்காச்சோளம் போன்ற பயிர்களைப் பயிர் செய்து வருகின்றார்கள். கடந்த ஓர் ஆண்டு காலமாக, காட்டுப் பன்றிகள் விவசாய நிலங்களுக்குள் நுழைந்து பயிர்களைச் சேதப்படுத்தி வருகின்றன. இதற்குக் காரணம், மேற்குத் தொடர்ச்சி மலையிலே காட்டுப் பன்றிகளுக்குத் தேவையான தீவனம் இல்லை. தண்ணீர்ப் பற்றாக்குறை. அதன் காரணமாகக் காட்டுப் பன்றிகள் தரையில் இறங்கி, சண்முகா நதி அணைக்கட்டிற்குப் பின்புறம் உள்ள நீர்ப்பிடிப்புப் பகுதியிலே அவை வாசம் செய்து வருகின்றன. கடந்த ஓராண்டு காலத்தில் மட்டும் அந்தப் பகுதியில் பிரபாகரன் என்பவரால் *1,000* டன் அளவிற்கு உற்பத்தி செய்யப்பட்ட கரும்பு நாசப்படுத்தப்பட்டுள்ளது.

அதைப்போல, ராமராஜ், காளிமுத்து ஆகியோர்களுடைய இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட வாழைகள் காட்டுப் பன்றிகளால் சேதம் அடைந்துள்ளன. விவர அறிக்கையிலே திரு. சென்னைய கவுண்டர், திரு. பி. ராஜா, திரு. பி. செல்லதுரை, திரு. கே. முத்துஜெயகுமார், திரு. மாயாண்டி தேவர் என்கிற பொன்னப்ப



2007 ஏப்ரல் 17] [திரு. நா. இராமகிருஷ்ணன்]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இவருக்கு நாம் நன்றி சொல்ல வேண்டும். சூரிய நமஸ்காரம் என்று சொல்லியிருக்கிறார்.

**திரு. வே. செந்தில் பாலாஜி:** கண்ணே போய்விட்டது. அதற்குப் பிறகு, சூரிய நமஸ்காரம் பண்ணினால் என்ன, பண்ணாவிட்டால் என்ன?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** எப்படியோ, சூரிய நமஸ்காரத்திற்கு வந்துவிட்டீர்கள்.

**திரு. வே. செந்தில் பாலாஜி:** கண்ணே போய்விட்டது பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சூரிய நமஸ்காரம் எப்படிப் பண்ண முடியும்?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, அதற்கும் operation பண்ணிவிடலாம்.

**திரு. வே. செந்தில் பாலாஜி:** இவற்றை அரசு கொள்முதல் செய்து விற்பனை செய்யும் என்று கூறினீர்கள். அரசு, மானிய விலையில் மக்களுக்குக் கிடைக்க வழிவகை செய்யுமா அல்லது கொள்முதல் விலைக்கும், வெளிச் சந்தை விலைக்கும் விற்பனை செய்யப்படுமா? தட்டுப்பாடின்றிப் பொருட்கள் கிடைக்குமா என்பது பொது மக்களுக்கு இன்று வரை புரியாத புதிராக உள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில் விலைக் கட்டுப்பாடு என்பது நிர்ணயிக்கப்பட்ட ஒன்று. மிகக் குறைவான விலையில், பொது மக்கள் பயன்படுத்துகின்ற வகையில் அந்த விலைப் பட்டியல்கள் இருந்தன. புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில், உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால், துவரம் பருப்பு ஒரு கிலோ 28 ரூபாய்க்கு, புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில் விற்பனை செய்யப்பட்டது. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் திரு. செ.ம. வேலுசாமி அவர்கள் 5-4-2007 அன்று குறிப்பிட்டபோது, காமதேனுவின் விலைப் பட்டியல் ரூபாய் 40 என்று இந்த அவையிலே பதிவு செய்தார்கள். அப்போது...



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஒரு நிமிடம்தான் இருக்கிறது.

**திரு. வே. செந்தில் பாலாஜி:** இப்போதுதான் ஆரம்பித்தேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, இல்லை, Food and Co-operation Minister ஒரு மணி நேரம் பதில் சொல்ல வேண்டும். அதற்குத்தான் இந்த comparative study பண்ணாமல், என்ன உங்களுக்கு வேண்டுமோ அதைப் பேசியிருந்தால், எல்லாம் பேசியிருக்கலாம். உங்கள் முன்தரப்புக்கு 15 நிமிடங்கள். குறை சொல்வதற்கு 5 நிமிடங்கள் என்றால், முடியாது.

**திரு. வே. செந்தில் பாலாஜி:** இப்போது ஒரு நிமிடம் waste ஆகப் போய்விட்டது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இந்த அவை, காலத்திற்குக் கட்டுப்பட்டது.

**திரு. வே. செந்தில் பாலாஜி:** இப்போது ஒரு நிமிடம் waste ஆகப் போய்விட்டது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, இல்லை, நான் ஒரு நிமிடம் தருகிறேன்.

**திரு. வே. செந்தில் பாலாஜி:** மாண்புமிகு அமைச்சர் கொடுத்த விலைப் பட்டியல், துவரம் பருப்பின் ஒரு கிலோ வெளி மார்க்கெட் விலை ரூபாய் 34 என்று கூறினார்கள். 14-4-2007 அன்று நியாய விலைக் கடைகளிலே, சென்னையிலே தொடங்கப்பட்டதாகக் கூறப்பட்ட தமிழக அரசின் அறிவிப்பின் விலைப் பட்டியல் ரூபாய் 34. அதேபோன்று, ரவை, புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில் 14 ரூபாய். 27 ரூபாய் 65 பைசா காமதேனு அங்காடியில் விற்பதாகக் கூறப்பட்டது. ஆனால், மாண்புமிகு அமைச்சர் அவர்களால் அன்றையதினமே வெளி மார்க்கெட்டில் விற்கப்படுகின்ற விலையாகக் கூறப்பட்டது ரூபாய் 16. ஆனால், நியாய விலைக் கடைகளில் 14-4-2007 அன்று சென்னையில் தொடங்கப்பட்ட திட்டத்தின்மூலம், அந்தக் கடைகளின்மூலம் விற்பனை செய்யப்படுகின்ற ரவையின் விலை ரூபாய் 17.

[திரு. வே. செந்தில் பாலாஜி] [2007 ஏப்ரல் 17

மைதாவின் விலை, புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில் ஒரு கிலோ 12 ரூபாய். 5-4-2007 அன்று காமதேனு மாாக்கெட்டின் விலை 25 ரூபாய் 75 பைசா. மாண்புமிகு அமைச்சர் அன்று கூறிய விலை 15 ரூபாய் 50 பைசா—இந்த அவையில் பதிவு செய்தது. 14-4-2007 அன்று நியாய விலைக் கடையில் விற்பனை செய்யப்படுவதாகக் கூறப்பட்ட விலை 16 ரூபாய்.

உளுத்தம் பருப்பு, புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில் 25 ரூபாய். 5-4-2007 அன்று காமதேனுவின் விலைப் பட்டியல் 50 ரூபாய். 14-4-2007 அன்று நியாய விலைக் கடைகளிலே விற்பனை செய்யப்படுவதாகக் கூறப்பட்ட விலை 40 ரூபாய்.

பாமாயில் விலை, அதேபோன்று பல்வேறு விலைகளைக் கூறலாம். ஆனால், நியாய விலைக் கடை விலை, மாண்புமிகு அமைச்சர் அவாகள் இங்கு வெளி மார்க்கெட்டில் விற்பனை செய்யப்படுவதாகக் கூறப்பட்ட பொருட்களின் விலை ஆகிய இரண்டையும் ஒப்பிட்டுப் பார்த்தால், துவரம் பருப்பு 34 ரூபாய்க்கு வெளி மார்க்கெட்டில் விற்பனை செய்யப்படுவதாக அன்று கூறினார்கள். அதே விலையில் நியாய விலைக் கடைகளிலும் விற்பனை செய்வதாகத் தமிழக அரசு அறிவித்துள்ளது.

ரவை, வெளி மார்க்கெட்டில் 16 ரூபாய்க்கு அன்று விற்பனை செய்வதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அது நியாய விலைக் கடைகளில் தமிழக அரசின்மூலம் 17 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுவதாக அரசு அறிவித்துள்ளது.

மைதாவின் விலை 15 ரூபாய் 50 பைசா என்று வெளி மார்க்கெட்டில் விற்பனை செய்யப்படுவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அன்று கூறினார்கள். ஆனால், நியாய விலைக் கடையில் 16 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுவதாகத் தமிழக அரசின்மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. ஆக, தமிழக அரசின் இந்த ஒரு திட்டத்தில், வெளி மார்க்கெட்டில் விற்பனை செய்வதைவிடக் கூடுதல் விலைக்கு நியாய விலைக் கடைகளில் விற்பனை செய்யப்படுகிறதா என்பதைப் பொது மக்கள் சற்று சிந்தித்துப் பார்க்கக்கூடிய ஒரு சூழ்நிலையில், இந்த அரசு இப்படி ஒரு திட்டத்தை அறிவித்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இதுபோன்று பல்வேறு பொருட்களை அடுக்கிக்கொண்டே செல்லலாம். இன்றைய ஆட்சி. . .



2007 ஏப்ரல் 17]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சரி, உரையை முடித்துவிடுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) இல்லை, அவர் அதிக நேரம் பருப்பைப் பற்றியே பேசிக்கொண்டிருக்கிறார்.

பிற்பகல் 12-10

***மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** அவர் முடித்துவிட்டாரல்லவா? மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விவசாயிகளுடைய பிரச்சினை பற்றி இங்கே விளக்கமாக எடுத்துச் சொன்னார்கள். அதிலே அரசு எடுத்த நடவடிக்கைகள் கண் கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம் என்று உதாரணத்திற்குச் சொன்னார்கள். 1989 ஆம் ஆண்டு மூன்றாவது முறையாக மாண்புமிகு தலைவர் கலைஞர் அவர்கள் முதல்வராக இருக்கும்போது, விவசாயிகளுடைய பம்ப்செட் அனைத்துக்கும் இலவச மின்சாரம் என்று சொல்லி, அந்த மின்சாரக் கட்டணத்தை இரத்துச் செய்தார்கள். அதற்குப் பிறகு, கடந்த ஆட்சி வந்த பிறகு நாங்கள் எவ்வளவோ இந்த மன்றத்தில் மன்றாடிக் கேட்டோம். துரைமுருகன் அவர்கள்கூடக் கெஞ்சிக் கேட்டார்கள். இலவச மின்சாரத்தை இரத்துச் செய்துவிட்டுப் போனார்கள் அவர்கள். அதற்குப் பிறகு, நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பிறகு அந்த இலவச மின்சாரத்தை மீண்டும் வழங்கினார்களே, அது என்ன நமஸ்காரம் என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். (குறுக்கீடு)

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** Point of Order.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. ஏ. செங்கோட்டையன்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிறபோது, இலவச மின்சாரத்தை முந்தைய ஆட்சிக் காலத்தில் இரத்துச் செய்தார்கள் என்று தவறான ஒரு புள்ளிவிவரத்தை இங்கே சொன்னார்கள். அப்படி இரத்துச் செய்யப்படவில்லை என்பதை இந்த நேரத்திலே வலியுறுத்த விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சி கொறடா

அவர்களுக்குத் தெரியுமோ, தெரியாதோ, கடந்த கால ஆட்சியிலே ஒரு முறை இரத்துச் செய்தார்கள். அனைத்துக் கட்சிக்காரர்களும் போராட்டம் நடத்தி, நாங்கள் எல்லாம் ஒரு மாதம் சிறைச்சாலையிலே இருந்ததற்குப் பிறகுதான் மறுபடியும் அந்த இலவச மின்சாரத்தை முன்னாள் அரசு கொண்டு வந்தது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்ற முறை மாண்புமிகு உறுப்பினர் திரு. செங்கோட்டையன் இங்கு இல்லை. மாண்புமிகு திரு. ஓபி. அவர்கள் இருந்திருக்கிறார்கள். இந்த மின்சாரத்தை இரத்துச் செய்ய வேண்டும் என்று அறிவித்தபோது, மாண்புமிகு உறுப்பினர் உட்கார்ந்து இருக்கிற அதே இடத்திலே நின்று, இரு கைகளையும் கூப்பி, சுற்றிச் சுற்றி, "இந்த மன்றத்தில் விவசாயிகள் பெயரால் கேட்கிறேன்" என்று சொன்னேன். ஆந்திரப் பிரதேசத்தைச் சார்ந்த யசோதரா ரெட்டி என்கிற அம்மையார், இந்தியைத் திணித்தபோது, ராஜ்ய சபாவிலே இரு கைகளையும் மேலே தூக்கி 4 பக்கமும் திரும்பித் திரும்பிப் பார்த்து, "இந்தியைத் திணிக்காதீர்கள், இந்தியாவை உடைக்காதீர்கள் என்று கேட்டார்" என்று அண்ணா சொன்னார். அதேபோல், "நான் இப்போது கேட்கிறேன், விவசாயிகள் வயிற்றிலே அடிக்காதீர்கள்" என்று கையைத் தூக்கித் தூக்கி, 4 பக்கமும் திரும்பி, கேட்டவன் அடியேன் துரைமுருகன். ஆனால், அதையும் மறுத்துவிட்டு, அன்றைக்கு உங்களுடைய அம்மா அவர்கள் இரத்துச் செய்தார்கள். இவையெல்லாம் பழைய கதை. நீங்கள் கேட்க வேண்டும் சும்மா இருக்கும்போது, அவர்களிடம் என்ன நடந்தது என்று?

**திரு. வே. செந்தில் பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, உரையை முடித்து விடுங்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** அன்றைக்கு இருந்த எல்லாக் கட்சிகளும் ஆதரித்து, அதற்குப் பிறகு நாடாளுமன்றத் தேர்தலிலே நீங்கள் தோற்றதற்குப் பிறகுதான் புத்தி வந்தது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** Power cut பண்ணியதால் power. cut ஆகிவிட்டது.



**திரு. வே. செந்தில் பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இலவச மின்சாரம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில் இரத்துச் செய்யப்படவில்லை என்று கூறி, இங்கே விலைவாசிப் பட்டியலை, சாதாரண அடித்தட்டு மக்களின் வாழ்வாதாரப் பிரச்சினையை எடுத்துக் கூறுகின்ற சூழ்நிலையில், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் இந்த கொள்கையைத் திசை திருப்புகின்ற வகையில் ஏதோ ஒரு கருத்தைக் கூறுகின்ற ஒரு சூழ்நிலைக்கு வந்து, அவர் திசை திருப்பிவிட்டார். இன்று இந்தக் கருத்து இந்த ஆட்சியாளர்களுக்கு வேடிக்கையாகத் தெரியலாம், விளையாட்டாகத் தெரியலாம். ஒவ்வொரு பொருளின் விலையேற்றம். . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு திரு. துரை சந்திரசேகரன். (குறுக்கீடு) இல்லை, 15 நிமிடங்கள் ஆகிவிட்டன.

**திரு. துரை சந்திரசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இங்கே பாருங்கள். 15 நிமிடங்கள் என்று சொல்லி, 21 நிமிடங்கள் ஆகிவிட்டன. (குறுக்கீடு) முடியாது. அவருக்கு finishing trouble. அவருக்கு முடிக்கத் தெரியாது. எனக்குத் தெரியும், அவருக்கு finishing trouble இருக்கிறது. (குறுக்கீடு) முடியாது. அடுத்து திரு. துரை சந்திரசேகரன். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீங்கள் பல முறை நேரம் கொடுத்தும், மாண்புமிகு உறுப்பினர் தொடர்ந்து பேசுவதற்குக் காரணம், நீங்கள் நேரமாகிவிட்டது என்ற bell அடிக்க வேண்டும், அதைக் கேட்டு, நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம் என்று அவர்கள் வீட்டிற்குப் போக வேண்டும். அதற்காக அவர்கள் முஸ்தீபு அவ்வளவுதான். (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. துரை சந்திரசேகரன்.

**திரு. துரை சந்திரசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** முடியவே முடியாது. (குறுக்கீடு) இல்லை. முடியாது. திரு. துரை சந்திரசேகரன். (குறுக்கீடு) மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 12-15

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவர் விவசாயிகள் கடனைப் பற்றிச் சொல்கிறபோது, இறுதியாக அவர்கள் ஆட்சியைவிட்டுப் போகிறபோது பயிர்க் கடனாக 1,132.12 கோடி ரூபாய் கொடுத்தார்கள். ஆனால், சென்ற ஆண்டு தலைவர் கலைஞருடைய ஆட்சியிலே, நாங்கள் 1,235 கோடி ரூபாய் வழங்குகிறோம் என்று சொன்னோம். ஆனால் இன்றைக்கு 6 இலட்சத்து 31 ஆயிரத்து 283 விவசாயிகளுக்கு 1,250.62 கோடி ரூபாய், கடைசியாகத் தேர்தல் நேரத்தில் நீங்கள் அவசர, அவசரமாகக் கொடுத்துவிட்டுப் போன தொகையைவிட, சென்ற ஆண்டு சொன்னதைவிட அதிகமாக இந்த ஆட்சி விவசாயிகளுக்காகக் கடன் கொடுத்திருக்கிறது என்பதை நம்முடைய பாலாஜி அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

ஏதோ பருப்பு விலை என்பதைத் தவறாகச் சொன்னதாகவும், இப்பொழுது பொது விநியோகத் திட்டத்திலே இந்த விலையைக் கட்டுப்படுத்துவதற்காக இந்த அரசு எதுவும் செய்யவில்லை என்றும் சொன்னார்கள். On-line business என்பது இந்திய level-ல் இருக்கிறது. ஆனால், மாநிலத்தினுடைய முதலமைச்சராக இருக்கிற மாண்புமிகு தலைவர் கலைஞர் அவர்கள்தான் இந்தியாவிலே இருக்கிற எல்லா முதலமைச்சர்களுக்கும் முன்னாலே, On-line business-ஐத் தடை செய்யவேண்டுமென்று முதன்முதலாக மத்திய அரசுக்குக் கடிதம் எழுதியவர். தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் அண்ணன் கலைஞர் அவர்கள் தொடர்ந்து 3-வது முறை எழுதினார். அதற்குப் பின்னர்தான் மத்திய அரசாங்கமே அதற்கென்று ஒரு குழுவை அமைத்து, அதை நிறுத்தலாமா என்று ஒரு ஆய்வு நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இருந்தாலும், அதை எதிர்பார்க்காமல், தமிழ்நாட்டிலே இருக்கிற மக்களுக்கெல்லாம் உணவுப் பண்டங்களை வழங்க வேண்டுமென்ற ஒரு சீரிய நோக்கத்திலே இந்தத் திட்டத்தைத் தொடங்கினோம்.

General discussion-ல், நிதிநிலை அறிக்கையிலே பேசுகிறபொழுதுகூட அனைவரும் பேசினார்கள். பருப்பு விலையைப் பற்றி மட்டும் ஒன்றே ஒன்றை நான் சொல்ல விரும்புகிறேன். அவர் அந்தப் பகுதியிலேயிருந்து வந்திருக்கிறார், அதனால் சொல்கிறேன். கதிரேசன் ஸ்டோரிலே 40 ரூபாய்க்கு விற்கிறார்கள், அன்றைய தேதியிலேயே அம்சா ஸ்டோரிலே 38 ரூபாய்க்கு விற்கிறார்கள், சென்னையிலேயே. கோயம்புத்தூரிலே பார்த்தீர்களென்றால், 43 ரூபாய் 50 பைசாவிற்கு



விற்கிறார்கள். மதுரையிலே பாண்டியன் ஸ்டோரிலே 38 ரூபாய்க்கு விற்கிறார்கள். ரங்கசாமி செட்டியார் ஸ்டோரிலே 42 ரூபாய்க்கு விற்கிறார்கள். ஒரே நாளிலே இந்தப் பருப்பு விலை என்பது, பல இடங்களிலே நம் மாநிலத்திலே பல விலைகளில் விற்கப்படுகிறது. அதனால்தான் தலைவர் கலைஞர் அவர்கள், இந்த விலைவாசியைக் கட்டுப்படுத்த வேண்டும் என்பதற்காக அவர்கள், துவரம் பருப்பை 34 ரூபாய்க்கு விற்க வேண்டுமென்று முடிவு செய்திருக்கிறார்கள். இன்றைக்குக்கூட 34 ரூபாய்க்கு நாங்கள் கொடுக்கிறோம் என்று சொன்னால், அதற்கு அடிப்படை என்னவென்று சொன்னால் மாநிலத்திலே பல வகைகளிலே பலவிதமான விலைகளுக்கு விற்கப்படுகிறது. சென்னையிலே பார்த்தீர்கள் என்றால், அண்ணா நகரிலே ஒரு விலை விற்கிறது, மயிலாப்பூரிலே ஒரு விலை விற்கிறது, பிராட்வேயிலே ஒரு விலை விற்கிறது. அதைக் கட்டுப்படுத்துவதற்காக, ஏழையெளிய மக்களுக்காக, நடுத்தர மக்களுக்காக, வறுமைக் கோட்டிலே வாடிக்கொண்டிருக்கிற மக்களுக்காக, அவர்கள் பயன்படுத்த வேண்டும் என்ற நல்ல நோக்கத்திலே இந்தத் திட்டத்தை இங்கே துவக்கி வைத்திருக்கிறோம். அரசியல் காரணத்திற்காக இதை நீங்கள் குறைத்து மதிப்பிட வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. செந்தில் பாலாஜி, ஒரு நிமிடம்தான் தருவேன். 18-வது நிமிடத்திலே அடுத்த உறுப்பினரைக் கூப்பிட்டு விடுவேன்.

**திரு. வே. செந்தில் பாலாஜி:** இரண்டே நிமிடங்கள்தான். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2 ரூபாய் அரிசித் திட்டத்தில் ஒரே ஒரு உதாரணத்தை மட்டும் கூறுகிறேன். கரூரில் 1 இலட்சத்து 32 ஆயிரம் குடும்ப அட்டைகள். நியாய விலைக் கடைகளின் எண்ணிக்கை 172. ஒரு மாத காலத்திற்குத் தேவைப்படும் அரிசியின் அளவு 20,338 மூட்டைகள். மார்ச் மாதம் வழங்கப்பட்ட அரிசியின் அளவு 7,841 மூட்டைகள். பற்றாக்குறை 12,778 மூட்டைகள். மொத்தத் தேவைகளின் அளவில் 35 சதவிகிதம் அரிசி மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. வழங்கப்பட்ட அரிசியின் அளவிலும் 3.5 சதவிகிதம் அரிசியே இருப்பில் உள்ளன. 2 ரூபாய்க்கு வழங்கப்பட்ட அரிசியின் தரம் என்ன என்பதையும், பொது மக்கள் கடைகளில் இருப்பு உள்ள வரையில், அவர்கள் வாங்காத வரையில் இந்தத் திட்டத்தில் வழங்கப்படுகின்ற அரிசியின் நிலை குறித்தும் பொது மக்கள் மிகத் தெளிவாக இருக்கிறார்கள் என்பதை இந்த அவையில் பதிவு செய்கிறேன்.

அதேபோன்று, இலவச எரிவாயு இணைப்பு என்ற திட்டத்தை வழங்கினீர்கள். 2006-2007-ல் 3 இலட்சம் இணைப்புகள் வழங்குவதாகக் கூறினீர்கள். ஒரு பெரிய கூட்டுக் குடும்பமாக இருந்தாலும், அவர்கள் 3 குடும்பங்களாக இருப்பார்கள். ஒரு பெரியவர், 2 மகன்கள் என்ற அளவில் ஒரே குடும்பமாக இருப்பார்கள். அவர்கள் ஒரே குடும்ப அட்டை வைத்திருப்பார்கள். 2, 3 cylinder connection பெற்றிருப்பார்கள். ஆனால், இன்றைய ஆட்சியில் ஒரு குடும்ப அட்டைக்கு ஒரு cylinder connection வீதம் என்று, மற்ற இணைப்புகள் அனைத்தும் பறிமுதல் செய்யப்படுகின்றன. பறிமுதல் செய்யப்பட்ட அந்த இணைப்புகள்தான் இன்று இலவச எரிவாயு இணைப்புகளாக வழங்கப்படுகின்றன என்று இந்த அவையில் பதிவு செய்யக் கடமைப்பட்டுள்ளேன். அதேபோன்று, தொகுதியிலுள்ள ஒரே ஒரு பிரச்சினையை மட்டும் கூறி, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. துரை சந்திரசேகரன்.

**திரு. துரை சந்திரசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2007-2008 ஆம் ஆண்டு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை மானியக் கோரிக்கையின்மீது பேசுகின்ற வாய்ப்பினை வழங்கிய தங்களுக்கு நன்றியை...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. துரை சந்திரசேகரன், திரு. O.P. அவர்கள் ஒரு clarification கேட்கிறார்.

***திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பட்ஜெட்மீதான விவாதத்தில் நான் பேசுகின்ற நேரத்தில், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கு அரசால் அறிவிக்கப்பட்ட ரூ.7,000 கோடி கடனையும் ஒரே தவணையில் செலுத்தாத காரணத்தினால், 5 தவணைகளாகச் செலுத்திய காரணத்தினால், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மிகவும் நலிவடைந்த சூழ்நிலையில் இருக்கின்றன என்றும், 7 மாத காலமாக அவர்களுக்குச் சம்பளம்கூட வழங்கப்படாத சூழ்நிலை இருக்கின்றது என்றும் நான் கேட்டபோது, நம்முடைய மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களும், "அல்ல, அல்ல, மத்தியக் கூட்டுறவு வங்கியில் 10,000 கோடி ரூபாய் வைப்பு நிதியாக இருக்கின்றது, 7 மாதங்களாகச் சம்பளங்கள் வழங்கப்படாத சூழ்நிலை அங்கேயில்லை, மாதா மாதம் சம்பளம் வழங்கிக்கொண்டிருக்கின்றோம்" என்று இங்கே உறுதிமொழியைச் சொன்னார்கள். ஆனால், எங்களுக்கு வந்துகொண்டிருக்கின்ற





தகவலைப் பார்க்கின்றபோது—நான் ஆதாரத்தை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரிடம் காண்பிப்பதற்குத் தயாராக இருக்கின்றேன்—திருநெல்வேலி மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியிலிருந்து சுற்றறிக்கை அனுப்பப்பட்டிருக்கின்றது.

*பிற்பகல் 12-20*

அதாவது, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கு நடைமுறைச் செலவினங்களுக்காக என்ற தலைப்பின்கீழ், 32 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கு 14,32,100 ரூபாய் அனுமதிக்கப்பட்டிருக்கின்றது. இப்படி 14,32,100 ரூபாய் என்று அனுமதிக்கப்பட்டிருக்கின்ற பணம் 3 மாதச் சம்பளத்திற்கு. அதாவது, திருநெல்வேலி மத்தியக் கூட்டுற்வு வங்கிக் கட்டுப்பாட்டில் இருக்கின்ற தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் 178, அவற்றில் 59 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கு 9 மாதங்களாகச் சம்பளம் வழங்காமல், அவர்கள் அங்கே மிகவும் சிரமப்பட்டுக்கொண்டிருக்கின்ற ஒரு சூழ்நிலை இருக்கின்றது. அவற்றில் 32 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கு 3 மாதச் சம்பளத்திற்கு 14 இலட்சம் ரூபாயை மத்தியக் கூட்டுறவு வங்கிக் கடனாக, அவர்களிடம், அந்தத் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் வேலை பார்க்கின்றவர்களிடம் 2 சதவிகிதக் கடனாக இவர்கள் அனுமதித்துக்கொண்டிருக்கின்றார்கள். ஆக, இன்றைக்கு இருக்கின்ற சூழ்நிலை, நான் அன்றைக்குச் சொன்னதைப்போலவே, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மிகவும் அபாயகரமான கட்டத்தை எட்டிக்கொண்டிருக்கின்றன. அவர்கள் விவசாயிகளுக்கு வழங்க வேண்டிய கடனை வழங்க முடியாத ஒரு சூழ்நிலை. அங்கு வேலை பார்க்கின்ற ஊழியர்களுக்குக்கூட சம்பளம் வழங்க முடியாத ஒரு சூழ்நிலைதான் இன்றைக்கு கூட்டுறவுத் துறையிலே இருக்கின்றது என்று சொல்லி, இதற்கு அரசின் சார்பாக என்ன பதிலைத் தரப் போகிறார்கள் என்பதைக் கேட்க விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அந்த copy-யைக் கொடுங்கள்.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரிடம் சுற்றறிக்கை நகல் கொடுக்கப்பட்டது.)*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் அன்று பேசுகின்ற நேரத்திலே எதிர்க்கட்சியிலே

இருந்து பல உறுப்பினர்கள், விவசாயிகள் டெபாசிட் செய்திருக்கின்ற பணத்தைத் திருப்பிக் கொடுப்பதற்குக்கூட கூட்டுறவு வங்கிகளிலே இப்போது பணம் இல்லை என்ற வாதத்தை வைத்தார்கள். அதற்குப் பதில் சொல்லும்போதுதான், Tamil Nadu State Co-operative Bank என்ற அந்த நிறுவனத்தில் 10 ஆயிரம் கோடி ரூபாய் டெபாசிட் இருக்கிறது, எப்போது வேண்டுமானாலும் டெபாசிட் செய்தவர்களுக்கு அந்தப் பணத்தைத் திருப்பித் தருவதற்கு இந்த அரசாங்கம் தயாராக இருக்கிறது என்றுதான் சொன்னேன். இப்போது மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் சொல்கின்ற அந்தக் கூட்டுறவு வங்கிகளுடைய சம்பளம் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அவருடைய பதிலுரையில் தெரிவிப்பார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை சந்திரசேகரன்.

**திரு. துரை சந்திரசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2007-2008 ஆம் ஆண்டின்... (குறுக்கீடு)

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் 10 ஆயிரம் கோடி ரூபாய் வைப்பு நிதியாக இருக்கிறது என்று சொன்னார்கள். ஆனால், இங்கே கொள்கை விளக்கக் குறிப்பில், பக்கம் 5-ல், ரூ.7,286.62 கோடிதான் வைப்புத் தொகையாக இருக்கின்றது என்ற தகவல் சொல்லப்பட்டிருக்கிறது. 10 ஆயிரம் கோடி ரூபாய் என்று மாண்புமிகு அமைச்சர் சொல்கின்றார். இதில் உண்மையான கணக்கு என்ன என்பதையும் நான் அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் சொன்ன தேதிக்கும், இன்றைய தேதிக்கும் இடையில் எத்தனையோ வரவு-செலவுகள். (சிரிப்பு) சிரிப்பதற்காகச் சொல்லவில்லை. சில மாவட்டக் கூட்டுறவு வங்கிகள் இருக்கின்றன. அந்த வங்கிகள் கடன் கேட்டால் Tamil Nadu State Co-operative Bank-ல் இருந்துதான் கொடுக்க வேண்டும். அவர்கள் அந்தப் பணத்தைப் பயன்படுத்தி இருப்பார்கள். ஆகவே, ஒவ்வொரு நாளுக்கும் எவ்வளவு டெபாசிட் இருக்கிறது என்று நாம் பார்த்துக்கொண்டிருக்க முடியாது. நான் பேசிய தினத்திலே அன்றையதினம் 10 ஆயிரம் கோடி ரூபாய் டெபாசிட் இருந்தது. இன்று அது குறைந்திருக்கலாம்.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 10 ஆயிரம் கோடி ரூபாய் அல்ல, 15,320.77 கோடி ரூபாய் இப்போதுகூட டெபாசிட்டில் இருக்கிறது; கூடுதலாகவே இருக்கிறது. ஆனால், தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி, மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள், நகரக் கூட்டுறவு வங்கிகள், தமிழ்நாடு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள், அத்தனையுமே பதிவாளரின்கீழே இருப்பவைதான். மொத்த வங்கிகளையும் குறிப்பிடுகிறபோது, 15,320.77 கோடி ரூபாய்—அவர் சொன்னதைவிட இன்னும் அதிகமாகவே இருக்கிறது என்பதை நம்முடைய துணைத் தலைவருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. துரை சந்திரசேகரன். (குறுக்கீடு) இல்லை, 5 ஆயிரம் கோடி ரூபாய் அதிகமாக இருக்கிறதே!

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாட்டில் இருக்கின்ற எல்லாக் கூட்டுறவு வங்கிகளையும் சேர்த்து அவர் மொத்தமாகச் சொல்கிறார். அன்றைக்கு நடந்த விவாதம், மத்தியக் கூட்டுறவு வங்கிகள். அதாவது தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுடைய டெபாசிட்டுகளை வைத்திருக்கிற மத்தியக் கூட்டுறவு வங்கிகளைத்தான் மாண்புமிகு அமைச்சர் சொன்னார். இதில்தான் இப்போது விவாதம் நடந்துகொண்டிருக்கிறது. மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள், தனக்குப் பாதுகாப்பாக எல்லா வங்கிகளையும் சேர்த்துச் சொல்லிக்கொண்டிருக்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, பதில் சொல்லும்போது தெளிவாகச் சொல்லிவிடுவார். திரு. துரை சந்திரசேகரன்.

பிற்பகல் 12-25

**திரு. துரை சந்திரசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2007-2008 ஆம் ஆண்டின் உணவு மற்றும் கூட்டுறவுத் துறை மானியக் கோரிக்கைகளின்மீது பேசுகின்ற வாய்ப்பை வழங்கிய தங்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்திய அரசியல் வரலாற்றில் தொடர்ந்து வெற்றிகளைப் பெற்று, வரலாற்றுச் சிறப்பு மிக்க இம்மாமன்றத்தில் 50 ஆண்டுகள் பணியாற்றி, 5-வது முறையாகத் தமிழக முதல்வராகப் பொறுப்பேற்று, பொன் விழாக் காணும் உலகத் தமிழினத்தின் ஒப்பற்ற தலைவர், முத்தமிழறிஞர், மாண்புமிகு முதல்வர் (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களுக்கு என் வணக்கத்தைத் தெரிவித்து, அவர்கள் தலைமையில் இம்மாமன்றத்தில் உறுப்பினராகிப் பேசுகின்ற வாய்ப்பைப் பெரும் பேறாகக் கருதுகிறேன்.

உள்ளாட்சியில் நல்லாட்சி செலுத்தும் இளைஞர்களின் எழுஞாயிறு, நாளைய தமிழகத்தின் நம்பிக்கை நட்சத்திரம், திராவிட இயக்கத்தின் வாரிசு, மாண்புமிகு தளபதி அவர்களுக்கு என் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு முதல்வர் அவர்களின் வழிகாட்டுதலில், கூட்டுறவில் விவசாயிகளின் உயர்வைக் கண்டவர், நினைவில் வாழும் முன்னாள் அமைச்சர் தஞ்சைப் பெரியார் மன்னை அவர்கள். அவர்களைப்போலவே, கும்பகோணம் மத்தியக் கூட்டுறவு வங்கித் தலைவராகப் பொறுப்பேற்று, அகில இந்திய அளவில் சிறந்த வங்கிக்கான விருதைப் பெற்று, சிறந்த கூட்டுறவாளராக எங்களை வழிநடத்தும் எங்கள் மாவட்டச் செயலாளர் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு) சரி.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** Co-operative-ல் சிறந்த மணி.

**திரு. துரை சந்திரசேகரன்:** மக்களின் அடிப்படை ஆதாரத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் துறையாக உணவு மற்றும் கூட்டுறவுத் துறை விளங்கி வருகிறது.

நம்முடைய முதல்வர் அவர்களின் தலைமையில் இந்த அரசு பொறுப்பேற்ற அன்றே பொது மக்கள் மத்தியில் அரசுக் கோப்பில் கையெழுத்திட்டு, ஆணையிட்ட முதலாவது திட்டமான ஒரு கிலோ அரிசி ரூபாய் 2/-க்கு வழங்குகின்ற திட்டம் இன்றைக்குப் பொது மக்களால் பெரிதும் வரவேற்கப்படுகிறது.

28,995 நியாய விலைக் கடைகள்மூலமாக 1,89,93,206 குடும்ப அட்டைதாரர்களுக்குத் தரமான அரிசியை 3-6-2006 முதல் வழங்கி, தமிழகத்தில் ஏழை எளிய மக்களின் பசிப் பிணியைப் போக்கியவர், பட்டினிச் சாவைத் தடுத்தவர், ஏழை எளிய மக்களின் வாழ்க்கைக்கு உத்தரவாதம் தந்தவர், உண்டி கொடுத்த கோமகன், உயிர் கொடுத்த தலைமகன், நம்முடைய மாண்புமிகு முதல்வர் என்பதை ஏழை எளிய, பாமர மக்கள் பாராட்டி, வாழ்த்துத் தெரிவிக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)



உணவு மற்றும் கூட்டுறவுத் துறையின் அமைச்சர் தொடங்கி அனைத்து அதிகாரிகளும் மிகச் சிறப்பாக இத்திட்டத்தைத் தமிழகத்திலே நடைமுறைப்படுத்துகிறார்கள். இதை நடுநிலையோடு, கல்கி, ஜூனியர் விகடன், குமுதம் ரிப்போர்ட்டர்போன்ற பத்திரிகைகள் பாராட்டியுள்ளன. ஒரு கிலோ அரிசி இரண்டு ரூபாய்க்கு வழங்குவதன்மூலம் கடந்த 10 மாத காலமாக வெளிச் சந்தையில் விற்கப்படும் அரிசியின் விலை உயராமல் கட்டுப்பாட்டில் உள்ளது.

On-line trading என்ற போர்வையில் சில வர்த்தகச் சூதாடிகள், விவசாயிகள் உற்பத்தி செய்யும் அத்தியாவசியப் பொருட்களை வாங்கிப் பதுக்கி செயற்கைப் பற்றாக்குறையை உருவாக்கி விலைவாசி வெகுவாக உயர வழிவகுத்துள்ளனர். இதனை உணர்ந்த நம்முடைய முதலமைச்சர் அவர்கள் நிதிநிலை அறிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறு, பொது மக்கள் அன்றாடம் பயன்படுத்தும் பருப்பு வகைகள், சமையல் எண்ணெய் (மேசையைத் தட்டும் ஒலி) ஆகியவற்றின் விலைகளைக் கட்டுப்படுத்த, அரசே கொள்முதல் செய்து, 14-4-2007 முதல் நியாய விலைக் கடைகள்மூலமாக துவரம் பருப்பு ஒரு கிலோ 34 ரூபாய்க்கும், உளுத்தம் பருப்பு ஒரு கிலோ 40 ரூபாய்க்கும், பாமாயில் ஒரு லிட்டர் 40 ரூபாய்க்கும், ரவை ஒரு கிலோ 17 ரூபாய்க்கும், மைதா ஒரு கிலோ 16 ரூபாய்க்கும் வழங்கி, இன்றைக்குத் தமிழக மக்களின் பாராட்டைப் பெற்றுள்ளார்.

ஒவ்வொரு நியாய விலைக் கடையும் மினி சூப்பர் மார்க்கெட்டாகச் செயல்பட எதிர்காலத்தில் துறையின்மூலம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

போலிக் குடும்ப அட்டைகளைப் பொறுத்தவரையில், கடந்த ஆட்சிக் காலத்தில் தவறான அணுகுமுறையால் போலிக் குடும்ப அட்டைகள் வழங்கிய காரணத்தால், இன்றைக்குப் போலி அட்டைகள் கிட்டத்தட்ட நகர்ப்புறத்தில் 20,420-ஐயும், கிராமப்புறத்தில் 13,023-ஐயும் கண்டுபிடித்து, அவற்றை நீக்கியிருக்கிறார்கள். இதற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், துறையின்

அதிகாரிகளுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். குடும்ப அட்டை இல்லாதவர்களுக்குக் குடும்ப அட்டைகள் வழங்கிடவும், மேலும் போலிக் குடும்ப அட்டைகளை நீக்கிடவும் முயற்சிகள் மேற்கொள்ளக் கேட்டுக்கொள்கிறேன்.

நியாய விலைக் கடைகளைப் பொறுத்தவரையில், 800 குடும்ப அட்டைகளுக்கு ஒரு கடை என்ற நிலைமை இரண்டு கிலோ மீட்டர் தூரம் இருந்து 200 அட்டைகள் இருந்தால், கடந்த தி.மு.க. ஆட்சிக் காலத்தில் நமது தமிழக முதல்வர் அவர்கள் பகுதிநேர அங்காடி வழங்க ஆணையிட்டார்கள். ஆனால், கடந்த ஆட்சிக் காலத்திலே அதையெல்லாம் நிறுத்தினார்கள். ஆனால், இந்த 10 மாத காலத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள்மூலமாக 1½ கிலோ மீட்டர் தூரம் இருந்தாலும், 150 அட்டைகள் இருந்தாலும் புதிய பகுதிநேர அங்காடிகள் திறக்கலாம் என்று சொல்லி, இன்றைக்குத் தமிழகத்திலே 318 கடைகள், பகுதிநேர அங்காடிகள் திறக்கப்பட்டுள்ளன. இதனால் பொது மக்கள் பெரிதும் பயன்பாடு அடைகின்றனர்.

எனது தொகுதியில் பொன்விளைந்தான்பட்டி, நாச்சியார்பட்டி, ராயராம்பட்டி, திருச்சடவளந்தை, பிரமன்கோட்டை, அந்தலிபோன்ற கிராமங்களில் பகுதிநேரக் கடைகளைத் திறக்க வேண்டுகிறேன்.

கடந்த ஆட்சியில் கூட்டுறவுச் சங்கங்களில் பழிவாங்கப்பட்ட ஏறத்தாழ 35,000 பணியாளர்களுக்குப் பணி வரன்முறைப்படுத்திட மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அரசால் ஆணை வழங்கப்பட்டது. அதற்காக நன்றியையும், பாராட்டையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

கூட்டுறவு நிறுவனங்களில் 11-3-2001 வரையில் அரசு ஆணை வெளியிட்ட நாளில் 480 நாட்கள் பணிபுரிந்துள்ள பணியாளர்களுக்கு மட்டுமே பணி நிரந்தரம் என்று இல்லாமல், அரசாணை வெளியிட்ட நாளுக்கு முன் பணியில் சேர்ந்து, இன்று வரை பணியாற்றி 480 நாட்கள் முடித்துள்ள அனைத்துப் பணியாளர்களையும் பணி நிரந்தரம் செய்ய மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டுறவு நியாய விலைக் கடைகளில் பணியாற்றும் விற்பனையாளர்கள் மற்றும் கட்டுநர்கள் சம்பளம் மிக, மிகக் குறைவாக உள்ளது. ஆதலால், அவர்கள் தவறு செய்கின்ற நிலை ஏற்படுகிறது. எனவே, அதைப் போக்குகின்ற வகையில் அவர்களது சம்பளத்தை உயர்த்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



பிற்பகல் 12-30

நெல் கொள்முதலைப் பொறுத்தளவிலே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 1972 ஆம் ஆண்டு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தைத் தோற்றுவித்து, அது மிகச் சிறப்பாக இயங்கி, இன்றையதினம் 1-10-2006 முதல் 31-7-2007 வரை, அதாவது 2006 காரிப் பருவத்தில் காவிரி டெல்டா மாவட்டத்தில் நம்முடைய விவசாயிகள் விளைவித்த நெல்லை 22 சதவிகிதம் ஈரப்பதம் வரை விவசாயிகளிடமிருந்து வாங்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் அனுமதித்ததால் விவசாயிகள் அக்டோபர், நவம்பர், டிசம்பர் மழைக் காலங்களில் நெல்லைத் தங்குதடையின்றி விற்பனை செய்தார்கள்.

கிரேடு 1 நெல், 1 குவின்டால் ரூ.610-ம், ஊக்கத் தொகையாக ரூ.40-ம் சேர்த்து ரூ.650-க்கு வழங்கப்பட்டது. பொது ரக நெல் 1 குவின்டால் 580-ம், ஊக்கத் தொகையாக ரூ.40-ம் சேர்த்து ரூ.620 ஆக விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது. இதற்காக மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குத் தஞ்சை விவசாயிகள் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த ஆட்சிக் காலத்தில் ஊக்கத் தொகையே வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. 1996-2001 கழக ஆட்சியில் 23,78,453 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டு, சாதனை படைத்தது. ஆனால், 2001-2006 அ.இ.அ.தி.மு.க. ஆட்சியில் 12,14,154 மெட்ரிக் டன் நெல் மட்டுமே கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

தஞ்சை மாவட்டத்தில் 346 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டன. விவசாயிகளிடம் நெல்லை வாங்க, பணம், சாக்குப் பை தட்டுப்பாடின்றி, மின்னணு இயந்திரம்மூலம், எடை மற்றும் நெல் தூற்றும் இயந்திரம்மூலம் சிறப்பான முறையில் நெல் வாணிபக் கழகத்தின்மூலம் கொள்முதல் செய்யப்பட்டது. 346 நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் 82 நேரடி நெல் கொள்முதல் நிலையங்களுக்குத்தான் சொந்தக் கட்டடம் உள்ளது. திருவையாறு தொகுதியில் எட்டு இடங்களில் மட்டுமே உள்ளது. கொள்முதல் நிலையங்களில் மிகச் சிறப்பாகக் கொள்முதல் செய்ய எதிர்காலத்தில் புதிய கொள்முதல் நிலையங்களை அமைக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சீக்கிரம், ஈரப்பதம் குறைந்துவிடும்.

**திரு. துரை சந்திரசேகரன்:** அரிசி ஆலைகளில் பணிபுரியும் சுமை தூக்குவோர்களுக்குச் சம்பளத்தை உயர்த்தித் தரக் கேட்டுக்கொள்கிறேன்.

எரிவாயு இணைப்பு மற்றும் அடுப்பைக் கிராமப்புற ஏழை எளிய தாய்மார்கள் பயன்படுத்தும் வகையில், நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்கள் 2006-2007-ல் 3 இலட்சம் இணைப்புகளை அனுமதித்து, அதில் 2,15,285 இணைப்புகள் வழங்கியுள்ளார்கள். 2007-2008-ல் 5 இலட்சம் இணைப்புகள் வழங்க ரூ.100 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளதை ஏழைத் தாய்மார்கள் வரவேற்கிறார்கள்.

இயற்கை இடர்ப்பாடுகளான வெள்ளம், வறட்சி, புயலைச் சந்தித்த விவசாயிகள் தொடர்ந்து நஷ்டத்தையே கடந்த ஆட்சிக் காலத்தில் தஞ்சை, திருவாரூர், நாகை மாவட்டத்தில் அடைந்து, அவல நிலைக்கு தள்ளப்பட்டனர்.

தஞ்சை மாவட்டத்து விவசாயிகள் கடனில் பிறந்து, கடனில் வாழ்ந்து கடனில் மறைந்த அவல நிலையை எல்லோரும் அறிவார்கள். தாயுள்ளம்கொண்ட தலைவர் கலைஞர் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் விவசாயிகள் பட்ட கடனை சுமை தாங்கியாகத் தம்மீது சுமத்தி, ஆட்சிப் பொறுப்பேற்ற அன்றே, ஒரே கையெழுத்தில் சுமார் ரூ.7,000 கோடி கடன் தள்ளுபடி செய்து விவசாயிகளின் தலையெழுத்தை மாற்றினார். தலைமுறை, தலைமுறைக்குத் தலைவர் கலைஞர் அவர்களுக்கு அவர்கள் நன்றிக் கடன்பட்டுள்ளார்கள்.

கூட்டுறவு அமைப்புகள் சீர்கெட்டுவிடாமல் இயங்க ரூ.7,000 கோடியை 5 தவணைகளில் 8 சதவிகித வட்டியுடன் கூட்டுறவு அமைப்புகளுக்கு அரசு வழங்குகிறது. 2006-2007 ஆம் நிதியாண்டில் ரூ.1,435 கோடியும், 2007-2008-ல் ரூ.1,628 கோடியும் ஒதுக்கப்பட்டுள்ளது. 2006-2007-ல் ரூ.1,153 கோடி பயிர்க் கடன் வழங்கப்பட்டுள்ளது. 2007 2008-ல் ரூ.1,360 கோடி பயிர்க் கடன் வழங்கப்படவுள்ளது. விவசாயிகளுக்குக் கூட்டுறவு வங்கிகளால் வழங்கப்படும் பயிர்க் கடன் வட்டியை 9 சதவிகிதத்திலிருந்து 7 ஆகக் குறைத்து, இந்த ஆண்டு 5 ஆகக் குறைத்து ஆணை வழங்கப்பட்டுள்ளது.

2004-2005 ஆம் ஆண்டில் அ.இ.அ.தி.மு.க. அரசில் விவசாயிகளுக்குப் போதிய கடன் வசதி வழங்கவில்லை. ஆட்சி இல்லாவிட்டாலும், நம்முடைய முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் பரிந்துரையில்



மத்திய அரசில் தமிழகத்தைச் சேர்ந்த நிதியமைச்சர் மாண்புமிகு திரு. ப. சிதம்பரம் அவர்களும, கழகத்தைச் சேர்ந்த மத்திய நிதித் துறை இணை அமைச்சர் மாண்புமிகு திரு. பழனி மாணிக்கம் அவர்களும எடுத்த சீரிய முயற்சியால், தேசியமயமாக்கப்பட்ட வணிக வங்கிகள்மூலமாக விவசாயிகளுக்குத் தட்டுப்பாடின்றிக் கடன் வழங்கப்பட்டது. 2005-2006 ஆம் ஆண்டு அ.இ.அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் 35,000 விவசாயிகளுக்கு ரூ.65.75 கோடி மட்டுமே கூட்டுறவு வங்கிகளால் கடன் வழங்கப்பட்டது. ஆனால் 2006-2007 கழக ஆட்சியில் 1,05,000 விவசாயிகளுக்கு 167 கோடி ரூபாய் பயிர்க் கடன் வழங்கி, சாதனை படைத்துள்ளார்கள்.

நம்முடைய மாண்புமிகு அமைச்சர், தஞ்சை மாவட்டச் செயலாளர் அவர்கள் விவசாயிகளுக்குக் கடன் வழங்கியபோது "7,000 கோடி ரூபாய் கடனைத் தள்ளுபடி செய்திருக்கிறார் தலைவர்.

அத்தகைய தலைவருக்கு நாம் செய்யும் நன்றிக் கடன என்னவென்றால், நாம் இந்த ஆண்டு வாங்கும் கடனை, உரிய காலத்தில் திருப்பிச் செலுத்த வேண்டும்" என்று குறிப்பிட்டார்கள். அதற்கேற்ப, தஞ்சை மாவட்ட விவசாயிகள் ஏறத்தாழ 60 கோடி ரூபாய் கடனைத் திருப்பிச் செலுத்தியிருக்கிறார்கள்.

பிற்பகல் 12-35

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** எனக்கு நன்றி காட்டுங்கள். உரையை முடித்து விடுங்கள்.

**திரு. துரை சந்திரசேகரன்:** கூட்டுறவுத் தேர்தலைப் பொறுத்தவரை, மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் ஜனநாயகத்தின்மீது மிகவும் நம்பிக்கை வைப்பவர்கள். அதனால்தான் அவர்கள் ஆட்சிக்கு வரும் காலத்தில்தான் உள்ளாட்சிக்கும், கூட்டுறவிற்கும் தேர்தல்கள் நடத்திடுவார்கள். அந்த வகையில், 2007 ஜூனில் கூட்டுறவுத் தேர்தலை நடத்தி, கூட்டுறவை உயிரோட்டமாக வைக்க முன்வந்திருப்பதை வரவேற்கிறேன்.

இந்த ஆண்டு முதல் விவசாயிகளுக்கு சிறப்புத் திட்டமாக, வறட்சி, வெள்ளம்போன்றவற்றால் ஏற்படும் பயிர் இழப்பிலிருந்து விவசாயிகளைப் பாதுகாக்க, 10 இலட்சம் விவசாயிகளுக்குப் பயிர்க் காப்பீடு செய்ய நிதி உதவியாக ரூபாய் 15 கோடி ஒதுக்கியமைக்கு மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு விவசாயிகளின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. இராம்பிரபு. பத்தே நிமிடங்கள்தான். (குறுக்கீடு) அதற்குள்ளே உரையை முடித்துவிடுங்கள். (குறுக்கீடு) 7 நிமிடங்களிலே முடித்துவிட்டால்கூட நல்லதுதான்.

**திரு. இரா. இராம்பிரபு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 10 கோரிக்கைகள்தான். வேறு ஒன்றுமே இல்லை. வேறு argument-ஏ இல்லை. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை மானியக் கோரிக்கைகளில் பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கும், எங்கள் அன்னை சோனியா காந்தி அவர்களுக்கும், மக்கள் தளபதி மாண்புமிகு மத்திய அமைச்சர் அய்யா திரு. ஜி.கே. வாசன் அவர்களுக்கும், சட்டமன்ற காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் அய்யா திரு. சுதர்சனம் அவர்களுக்கும், எங்களது கொறடா அருமை அண்ணன் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்து, "வளமான தமிழகம், வலிமையான பாரதம்" என்ற தாரக மந்திரத்திற்குச் சொந்தக்காரர் மக்கள் தலைவர் அய்யா மூப்பனார் அவர்களை வணங்கி, கூடிக் கரையும் காகங்களைப்போல் இல்லாமல், கூடிப் பொழியும் மேகங்களாக இருக்க வேண்டும் என்பதுதான் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கூட்டுறவுத் தத்துவம். அப்படிப்பட்ட இந்தத் துறையின் விவாதத்தில் கலந்துகொண்டு பேசுவதில் என்னுடைய சில கருத்துகளை நான் இந்த மன்றத்திலே வைக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த 2-8-2006 அன்று சட்டப் பேரவையில் கூட்டுறவுத் துறை மானியக் கோரிக்கையில் அன்றைய கூட்டுறவுத் துறையின் அமைச்சர் அவர்கள் ஓர் அறிவிப்பை வெளியிட்டார்கள். அதாவது, உயர் நீதிமன்றத்தினுடைய தடையாணை இல்லாத தருமபுரி, நீலகிரி, இராமநாதபுரம், சேலம் மற்றும் திருநெல்வேலி மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளில், தற்போது அரசால் அறிவிக்கப்பட்ட புதிய தனித் துணை விதிகளின்படி, கூட்டுறவு வங்கிகளில் காலிப் பணியிடங்களை 75-க்கு 25 சதம் என்ற வீதத்தில் பதவி உயர்வு மற்றும் நேரடி நியமனம்மூலம் நிரப்பலாம் என்றும், மேலும் நேரடி நியமனம்மூலம் நிரப்பப்படவுள்ள உதவி மேலாளர் பணியிடங்களில் தேக்க நிலை—backlog vacancies—என்று சொல்லக்கூடிய அந்தத் தேக்க நிலைப் பணியிடங்களும் அடங்கும் என்றும், மேலே குறிப்பிடப்பட்டுள்ள 8 மாவட்டக் கூட்டுறவு வங்கிகளில் காலியாக



உள்ள உதவி மேலாளர் பணியிடங்களுக்கும், அக்கூட்டுறவு வங்கிகளின் தேவை மற்றும் நிதியாதாரத்தைப் பொறுத்து, நேரடி நியமனம் மேற்கொள்ளலாம் என்றும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அன்றையதினத்திலே அறிவித்தார்கள்

குறிப்பாக, எங்களுடைய இராமநாதபுரம் மாவட்டத்தில் கடந்த 1983 ஆம் ஆண்டிலிருந்து கூட்டுறவுப் பட்டயப் பயிற்சிப் படிப்பு முடித்த S.C., S.T. இளைஞர்கள், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திலே பதிவு செய்து, இன்று வரை வேலையில்லாமல் காத்துக்கொண்டிருக்கிறார்கள். அதேபோல, 1996 ஆம் ஆண்டு, நம்முடைய முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் கூட்டுறவுத் துறையில் உயர்நிலை கூட்டுறவு வேளாண்மைப் பட்டயப் பயிற்சி 210 S.C., S.T. இளைஞர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது. அவர்களும் வேலைவாய்ப்பு அலுவலகத்திலே பதிவு செய்து, இன்று வரை வேலையில்லாமல் இருந்து வருகிறார்கள். இந்த D.Co-op. மற்றும் H.D.C.M. பட்டயப் பயிற்சிப் படிப்பு முடித்த இந்த S.C., S.T. இளைஞர்களுக்கு, மேலாளர் மற்றும் உதவியாளர் பின்னடைவுப் பணியிடங்களை சிறப்புப் பணி நியமனம்மூலம் நிரப்பிட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வர வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, Tamil Nadu Civil Supplies Corporation, I.N.T.U.C. சங்கம் பதிவு எண் 1830, சென்னை, தொழிலாளர்களுடைய சம்பளத்தில் சந்தாப் பிடித்தம் செய்யும் முறையின் அடிப்படையில், மொத்தமுள்ள 8,500 பணியாளர்களில் 1,900 ஊழியர்கள் சங்கத்தில் உறுப்பினர்களாக உள்ளனர். 1,000 ஊழியர்களைக்கொண்ட அ.தி.மு.க. சங்கம் அங்கீகாரம் செய்யப்பட்ட நிலையில், I.N.T.U.C. சங்கம் அங்கீகரிக்கப்படாமல் உள்ளது. ஆகையால், 21 சதவிகிதத்திற்குமேல் உள்ள உறுப்பினர்களைக்கொண்ட I.N.T.U.C. சங்கத்தை அங்கீகரிக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு, மின் வாரியம், போக்குவரத்துக் கழகப் பணியாளர்களுக்கு வழங்குவதைப்போன்று அரசு ஊழியர்களுக்கு இணையான பென்ஷனை Tamil Nadu Civil Supplies Corporation பணியாளர்களுக்கும் வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-40

பண்ணைசாராக் கடன் பெற்றவர்கள் விவசாயிகள் என்ற மேலான எண்ணத்தில், அவர்கள் பெற்ற கடனுக்குரிய வட்டி முழுவதையும் 31-3-2006 வரை அரசு தள்ளுபடி செய்தது. கடன் பெற்ற கடன்தாரர்களுக்கு இந்தத் தள்ளுபடி போதுமானதாக உள்ளதா என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். அவர்கள் பெற்ற கடனுக்குரிய வட்டி, அபராத வட்டி மற்றும் உள்ள இதர வட்டிகள் அனைத்தையும் 31-3-2007 வரை இரத்துச் செய்து ஆணை பிறப்பிக்க வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

சிவகங்கை மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி, புதுவயல் கிளையில் கடந்த 25-7-1994 அன்று திரு. வி. சேதுராமன் என்பவர் 7 இலட்சத்து 48 ஆயிரத்து 750 ரூபாயும், 8-8-1994 அன்று திரு. ஏ. பீர்முகமது என்பவர் 6 இலட்சத்து 62 ஆயிரத்து 940 ரூபாயும் அரிசி ஆலை வைப்பதற்காகக் கடன் வாங்கியிருந்தார்கள். கடந்த சில வருடங்களுக்குப் பிறகு, வாங்கிய கடனை அடைப்பதற்கு one time settlement அமல்படுத்தப்பட்டபோது, புதுவயல் கிளை மேலாளர் கொடுத்த தகவலின்படி 2002 ஆம் ஆண்டில் பல்வேறு தேதிகளில் கிளை மேலாளரும், இவர்களும் ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொண்டு, பல்வேறு தேதிகளில் கடனைச் செலுத்தியும், அவர்களுக்கு no due certificate வழங்கப்படவில்லை. பல முறை இவர்கள் தொடர்ந்து வலியுறுத்தியும், மேலாளர் சான்றிதழ்களை வழங்க மறுத்துள்ளார். இதனால் அவர்கள் மன உளைச்சலுக்கு உள்ளாகி சிவகங்கை மாவட்ட நுகர்வோர் குறை தீர்க்கும் மன்றத்தில் கடந்த 23-6-2003-ல் வழக்குத் தாக்கல் செய்தனர். 22-9-2005-ல் இவர்களுக்கு no due certificate வழங்க வேண்டும் எனத் தீர்ப்புரை வழங்கப்பட்டது. இதன் அடிப்படையில் இவர்கள் வங்கி மேலாளரை அணுகி, அடமானம் வைக்கப்பட்ட பத்திரங்களைக் கேட்டதற்கு, 1998 ஆம் வருடம் O.T.S. Scheme பொருந்தாது எனவும், 2000 ஆம் வருட Scheme-ன்படி இன்னும் பணம் செலுத்தினால்தான் பத்திரங்களைத் திருப்பித் தர முடியும் என்றும் கூறியுள்ளார்கள்.

மேலாளர் இவர்களிடத்திலே தெரிவித்ததன் அடிப்படையிலேதான், 1998 ஆம் வருட O.T.S. Scheme-ன்படி ஒப்பந்தம் ஏற்பட்டது. ஆனால், வங்கி மேலாளர் இவர்களை வேண்டுமென்றே பழி வாங்கும்



நோக்கத்தோடு செயல்படுவதாகத் தெரிகிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இவர்களுடைய பரிதாப நிலையைக் கண்டு, இவர்களுக்கு ஒரு நல்ல முடிவை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய கூட்டுறவுச் சங்கங்களில் சமத்துவ ஞாயிறு ஒளிர வேண்டுமானால், கூட்டுறவுச் சங்கத் தலைவர் பதவிகளில் S.C., S.T.-யினருக்கு 19 சதவிகித இட ஒதுக்கீடு வழங்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். கூட்டுறவுச் சங்கங்களில், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி முதல் தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி வரை ஆதி திராவிடர்களுக்கான பின்னடைவுப் பணியிடங்கள் சுமார் 46 ஆயிரம் ஆகும். இந்தப் பின்னடைவுப் பணியிடங்களை நேரடி நியமனம்மூலம் மற்றும் சிறப்பு நியமனம்மூலம் நிரப்பிட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கிகளில் 4 பொது மேலாளர்கள், 4 துணைப் பொது மேலாளர்கள், 63 தலைமை மேலாளர்கள் ஆகிய 71 நபர்களில், ஒருவர்கூட S.C., S.T. இல்லை என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன். கடந்த 19-3-2007 அன்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூட்டுறவு வங்கி ஊழியர் சம்மேளனத்தினரைச் சந்தித்துப் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்திப் பேசினார்கள். அனைத்து நகரக் கூட்டுறவு வங்கிகளுக்கும் 12 சதவிகித ஊதிய உயர்வு வழங்க வேண்டும். கடந்த 28-11-2006-ல் அரசு வெளியிட்ட நகர வங்கி ஊழியர்களின் ஊதிய உயர்வு அரசு ஆணையின் பாதகமான அம்சங்களை நீக்கி, புதிய அரசு ஆணை பிறப்பிக்க வேண்டும்.

மகளிர் பேறுகால விடுப்புச் சட்டத்தில் நடைமுறையில் உள்ள 3 மாதம் என்பதை, 2 மாதமாகக் குறைத்ததை மறுபரிசீலனை செய்ய வேண்டும். நட்டம் என்று காரணம் காட்டி ஊதிய உயர்வு மற்றும் பல சலுகைகள் மறுக்கப்படக் கூடாதுபோன்ற பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி இருக்கிறார்கள். இதை மாண்புமிகு அமைச்சர் அவர்களும் நன்கு அறிவார்கள். இவற்றை எல்லாம் நம்முடைய அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். பொது மக்கள் அன்றாடம் பயன்படுத்தும் அத்தியாவசிய உணவுப் பொருட்களான பருப்பு

வகைகள், சமையல் எண்ணெய் ஆகியவற்றை அரசே கொள்முதல் செய்து, விலையைக் கட்டுப்படுத்தி, நியாய விலைக் கடைகள்மூலம் மக்களுக்கு வழங்கப்படுவதை. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உரையை முடித்து விடுங்கள். கடைசிப் பக்கம். (குறுக்கீடு) எனக்கு time இல்லை.

**திரு. இரா. இராம்பிரபு:** அதைப்போல, நுகர்பொருள் வாணிபக் கழகம், மொத்த விற்பனைப் பண்டகசாலை, தொடக்கக் கூட்டுறவு வங்கிகள், விற்பனைச் சங்கம் நடத்துகின்ற நியாய விலைக் கடை விற்பனையாளர்களுக்கு ஒரே மாதிரியான சம்பளம் வழங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வர வேண்டும். 30 ஆண்டுகளுக்கும் மேலாக எந்தவிதமான பதவி உயர்வும் இல்லாமல் பணியாற்றி வருகிற தொழிலாளர்களுக்குப் பணிமூப்பு அடிப்படையில் பதவி உயர்வு அளிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, பல்வேறு வகையான கூட்டுறவுச் சங்கங்களில் S.C., S.T.யினருக்கான பின்னடைவுப் பணியிடங்களை நிரப்புவதற்கு தாட்கோமூலம், நம்முடைய டாக்டர் கலைஞர் அவர்களுடைய கடந்த ஆட்சிக் காலத்தில் 1996 ஆம் வருடம் 5,000 S.C., S.T. இளைஞர்கள் கூட்டுறவுப் பட்டயப் பயிற்சி படிக்க வைக்கப்பட்டனர். 10 வருடங்கள் நிறைவடைந்த நிலையில் இன்னும் அவர்களுக்கு எந்த ஒரு கூட்டுறவுச் சங்கத்திலும் வேலைவாய்ப்பு வழங்கப்படவில்லை. இதையும் நம்முடைய டாக்டர் கலைஞர் அய்யா அவர்களுடைய அரசு கருணையுடன் பரிசீலித்து, இந்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கிக் கொடுக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-45*

இறுதியாக, மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் நகரக் கூட்டுறவு வங்கிகள்மூலம், பூக்கள், காய்கறிகள், பழங்கள் விற்பனை செய்யும் பெண்களுக்கு சிறு வணிகம் செய்ய ரூபாய் 100 முதல் 5,000 வரை வழங்கக்கூடிய கடனை வட்டியில்லாக் கடனாக வழங்க வேண்டும். அதேபோல, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி, நகரக் கூட்டுறவு வங்கி மற்றும் மாவட்டக் கூட்டுறவு வங்கிகளில் மகளிருக்கு மகப்பேறுக் கடனான ரூபாய் 2,000/-ஐயும் வட்டியில்லாக் கடனாக வழங்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே அன்போடு கேட்டுக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி, அமர்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எதிரொலி மணியன்.

***திரு. கோ. எதிரொலி மணியன்:** மாண்புமிகு பேரவையின் துணைத் தலைவர் அவர்களே,

"தனியொ ருவனுக் குணவிலை யெனில்
ஜகத்தினை யழித்திடுவோம்."

இது பசியால் வாடிய ஏழையைப் பார்த்த பாரதியின் கோபம். இப்போதோ, தனி ஒருவனுக்கு உணவில்லை என்ற சொல்லினையே அழித்திடுவோம் என்பது, பசியால் வாடக்கூடிய ஏழையைப் பார்க்கின்ற கலைஞரின் கோபம். (மேசையைத் தட்டும் ஒலி) அன்று அந்தக் கோபம் ** சொன்னது, இன்று இந்தக் கோபம் நன்முறையைக் காட்டியது. ஆம். ஏழைக்கு ஒரு கிலோ அரிசியை இரண்டு ரூபாய்க்குக் கொடுத்து, தனி ஒருவனுக்கும் இனி உணவுக்குப் பஞ்சமில்லை என்கிற அற்புதமான திட்டத்தை, ஐந்தாம் முறையாக ஆட்சிப் பொறுப்பேற்ற ஐந்தே நிமிடங்களில் ஆணையிட்ட அஞ்சுகச் செல்வர், வெற்றித் திருமகன், (மேசையைத் தட்டும் ஒலி) வெற்றித் திருமகள் தொடர்ந்து விரும்புகின்ற வீரக் கதாநாயகன், சட்டமன்றப் பொன் விழா நாயகன், முத்தமிழறிஞர், முதல்வர் கலைஞருடைய அற்புதமான திட்டத்தைச் செயல்படுத்துகின்ற உணவு மற்றும் கூட்டுறவுத் துறையின்மீது பேசுவதற்கு வாய்ப்புத் தந்த தங்களுக்கும், பகுத்தறிவுப் பகலவன், தந்தை பெரியாரினுடைய சுய மரியாதைச் சிந்தனைகளை, சமூக நீதிக் கருத்துகளை என்றைக்கும் தூக்கிப் பிடிப்பதில் இணையில்லாத் தலைவராய், இன்றைக்கும் கட்சியிலோ, ஆட்சியிலோ பதவி வேண்டாத பண்பாளராய், ஏழைகளுக்கு ஏணியாய், இயலாதவர்க்குத் தோணியாய், காட்சிக்கெளியனாய், கடுஞ்சொல் கூறாதவனாய், வாழும் பெரியாராய்த் தமிழகத்திலே வாழ்ந்துகொண்டிருக்கிற எங்கள் இனமானக் காவலர், மருத்துவர் அய்யா அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் இளவல் மருத்துவர் சின்ன அய்யா அவர்களுக்கும், அன்பிற்கினிய அண்ணன் கோ.க. மணி அவர்களுக்கும் இந்த நல்ல நேரத்திலே நன்றி சொல்ல விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வேல்முருகன் இல்லையா?

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**திரு. கோ. எதிரொலி மணியன்:** தமிழகத்திலே வாழுகின்ற கோடிக்கணக்கான மக்களுடைய அத்தியாவசியத் தேவைகளை, அதிலும் குறிப்பாக, ஏழையெளிய, நடுத்தரக் குடும்பங்களுடைய அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்கின்ற அற்புதமான பணிகளையாற்றி வருகின்ற மிகப் பெரிய துறை, உணவு மற்றும் கூட்டுறவுத் துறை என்று சொன்னால், அது மிகையாகாது. குறிப்பாக, இன்றைக்கு நியாய விலைக் கடைகளின்மூலமாக, பருப்பு மற்றும் சமையல் எண்ணெய்கள் வெளிச் சந்தையைவிட விலை குறைவாக, பாக்கெட்டில் அடைக்கப்பட்டு, தரமாக, அளவு குறையாமல், அற்புதமாகத் தமிழ்ப் புத்தாண்டு முதல் வ்ழங்கப்படும் என்றும், இது படிப்படியாக மற்ற மாவட்டங்களுக்கும் தொடரும் என்றும் தமிழக அரசு அறிவித்தது. சொன்னபடி அதை சென்னையில் தமிழ்ப் புத்தாண்டு அன்று செயல்படுத்திய இந்த 2, 3 நாட்களுக்குள்ளாக சென்னை மாநகரத்து மக்கள் இத்திட்டத்தினைப் பார்த்து, ஏகோபித்துப் பாராட்டுவதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இத்திட்டம் தொடங்கப்பட்ட இரண்டொரு நாட்களுக்குள் 'யானை வரும் பின்னே, மணியோசை வரும் முன்னே' என்று சொல்வார்கள்; அதைப்போல, எங்கோ இருக்கிற கிருஷ்ணகிரி மாவட்டத்திலே இன்றைய காலை நிலவரப்படி, எனக்குக் கிடைத்த தகவல்படி, வெளிச் சந்தையில் விற்கப்படுகின்ற உளுத்தம் பருப்பு ஒரு கிலோவிற்கு 6 ரூபாயும், துவரம் பருப்பு ஒரு கிலோவிற்கு 4 ரூபாயும், மைதா மாவு ஒரு கிலோவிற்கு 3 ரூபாயும் விலை குறைவாக இன்றைக்கு விற்கப்படுகின்றன என்று சொன்னால், இதுதான் இந்தத் திட்டத்தின் வெற்றி (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

இன்றைக்கு மாத்திரமல்ல. நுகர்வோருக்கு எதிர்காலத்தில் எல்லாப் பொருட்களும் எளிதாகக் கிடைப்பதற்கு, இந்தியாவிலேயே எந்தவொரு மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு, இரண்டு நியாய விலைக் கடைகளுக்கு இடைப்பட்ட தூரத்தைக் குறைத்து, அட்டைகளின் எண்ணிக்கையைக் குறைத்து, இவற்றையெல்லாம் வாரி வழங்கியிருக்கிற, ஆணையிட்டிருக்கிற தலைவர் கலைஞர் அவர்கள், இந்த நிபந்தனைகள் பொருந்தி வருகின்ற அத்தனை குக்கிராமங்களுக்கும் இந்தத் துறையே தானாக முன்வந்து பகுதிநேரக் கடைகளைத் திறக்க வேண்டும் என்று அவரை நான் கேட்டுக்கொள்கிறேன்.



அதேபோல, நியாய விலைக் கடைகள் அனைத்திலும், பல இடங்களிலே இரண்டு கடைகளுக்கு ஒரு விற்பனையாளர் இருந்துகொண்டிருக்கிறார். அதை மாற்றி, ஒவ்வொரு கடைக்கும் தனித்தனியாக, கடைக்கு ஒரு விற்பனையாளர் மற்றும் அவருக்கு உதவியாக ஒரு எடையாளர் அல்லது உதவியாளரை அரசு உடனடியாக நியமிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

பிற்பகல் 12-50

அதேபோல, கிராமப்புறங்களிலே 4 சதவிகிதமும், நகர்ப்புறங்களிலே 5 சதவிகிதமும் போலிக் குடும்ப அட்டைகள் உள்ளதாக இந்தத் துறை வெளியிட்டிருக்கிற கொள்கைக் குறிப்பேட்டில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதை நாம் முற்றிலும் ஒழித்தாக வேண்டும். இதற்கு, சம்பந்தப்பட்ட நியாய விலைக் கடைகள் அமைந்துள்ள பகுதியின் கிராம நிர்வாக அலுவலர், தலைமை ஆசிரியர், விற்பனையாளர் ஆகிய மூவர்கொண்ட குழு ஒன்றை அமைத்து, அந்த மூவர் குழு அந்தக் கடையின் 'அ' பதிவேட்டைக் கையிலே எடுத்துக்கொண்டு வீடு வீடாகச் சென்று, ஆய்வு செய்து அவற்றை நீக்க வேண்டும். ஒரு வேளை மீண்டும் அவர்கள் தவறுதலாகப் பட்டியல் தருவார்களேயானால், அந்த மூவர்மீதும் விசாரணை வைத்து, அவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன். இதன் மூலமாகத்தான் போலிக் குடும்ப அட்டைகளை நம்மால் ஒழிக்க முடியும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதே வேளையில், நியாய விலைக் கடைகளுக்கு வழங்கப்படுகிற அரிசி, மண்ணெண்ணெய் ஆகியவற்றினுடைய அளவு குடும்ப அட்டைகளின் தேவைக்கேற்ப சப்ளை செய்யப்படுவதில்லை என்றும். இதனால் பொது மக்கள் மத்தியில் தாங்கள் ஏச்சுக்கும், பேச்சுக்கும் ஆளாவதாக விற்பனையாளர்கள் புலம்புகிறார்கள். மத்திய அரசினுடைய S.G.R.Y. என்கிற உணவுக்கு வேலைத் திட்டத்திற்கு வழங்கப்படும் மொத்த அரிசியையும், உரியவர்கள் மக்களுக்கு வழங்காமல் ஏஜென்டுகள்மூலமாக வெளி மாநிலங்களுக்குக் கடத்தல்காரர்களிடம் விற்றுவிடுவதாகவும், இதையே ரேஷன் அரிசிக் கடத்தல் என்று தங்களை அவமானப்படுத்துவதாகவும் அவர்கள் கூறுகிறார்கள். எது எப்படியோ, இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகுதான் அரிசிக் கடத்தல் என்பது முழுவதும் இன்றைக்கு முடக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

[திரு. கோ. எதிரொலி மணியன்] [2007 ஏப்ரல் 17

மேலும், குடும்பக் கார்டுகள் வழங்குகிறபோது, குடும்பக் கார்டுகளை வழங்குகின்ற வட்ட வழங்கல் அலுவலர் அதனை அச்சடிப்பதற்கு முன்பு, அதை யார் கணக்கெடுத்தார்களோ, அவர்களிடமே கொடுத்து, அந்தப் பிழைகளைத் திருத்தி அச்சிட்டால்தான், அது நன்றாக இருக்க முடியும். நடப்பது என்னவென்று சொன்னால், குடும்பக் கார்டை எப்படி அச்சிட வேண்டுமென்று தெரியாமல், கொடுக்கிற பட்டியலை அப்படியே அச்சிடுவதால், பல ஊர்களிலே ஊர்ப் பெயர், பெயர், வயது அத்தனையும் மாறிவிடுகின்றன. குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால், கடந்த ஆட்சியில் நான் பெற்ற என்னுடைய குடும்ப அட்டையில்— என்னுடைய பெயர் எதிரொலி மணியன். ஆனால், கொடுத்த அட்டையிலிருந்த பெயர் எத்திராஜி மணியன். (குறுக்கீடு) நான் எதிரொலி மணியன் என்று சொல்லி வட்டாட்சியரைப் பார்த்து, 'என்னய்யா, என் பெயர் எதிரொலி மணியன், இதை ஏன் எத்திராஜி மணியன் என்று மாற்றினீர்கள்' என்று கேட்டேன். அவர்கள் கையால் திருத்திக் கொடுத்தார்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் பேசுகிறார்.

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது மட்டுமல்ல. சுல்தான் இப்ராஹீம் என்ற பெயருக்கு சைத்தான் இப்ராஹீம் என்று போட்டுவிட்டார்கள். (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. செந்தில் பாலாஜி, பருப்பு பற்றித்தானே? (குறுக்கீடு) திரு. கே. ஏ. செங்கோட்டையன்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அங்கிருக்கிற அதிகாரிகளால் ஏற்பட்டிருக்கிற குறைபாடுகளே தவிர, அங்கே சைத்தான்கள் இருந்தால் நாங்கள் என்ன செய்வது? (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவர் பேசிவிட்டார். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. எதிரொலி மணியன்.

**திரு. கோ. எதிரொலி மணியன்:** எதற்கெடுத்தாலும் குடும்ப அட்டையை ஆதாரம் கேட்கிற இந்த அரசாங்கம் இதைச் சரி செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, கூட்டுறவு



2007 ஏப்ரல் 17] [திரு. கோ. எதிரொலி மணியன்]

நியாய விலைக் கடைகளில் அரிசி, மண்ணெண்ணெய் வாங்க வரும் நுகர்வோரிடம், சோப்பு, தீப்பெட்டி, பொட்டுக் கடலை, சீயக்காய் போன்ற பொருட்களைக் கட்டாயம் வாங்க வேண்டுமென்று விற்பனையாளர்கள் நிர்பந்தப்படுத்துவதை இந்த அரசு தடுக்க வேண்டும்.

அதேபோல, பல ஆண்டு காலமாக எரிவாயு இணைப்பு உள்ளவர்களின் குடும்ப அட்டைகளுக்கு மண்ணெண்ணெய் வழங்கப்படுவதில்லை. ஆனால், தற்போது நமது அரசு வழங்குகின்ற இலவச எரிவாயு இணைப்புடன்கூடிய எரிவாயு அடுப்பு வழங்கப்படும் குடும்பங்களுக்கு, அவர்களுடைய குடும்ப அட்டைகளுக்கு மண்ணெண்ணெய் வழங்குவது நிறுத்தப்படமாட்டாது என்று அறிவித்துள்ளீர்கள். அதை வரவேற்கிற அதே வேளையில், ஏற்கெனவே இணைப்பு உள்ளவர்களுக்கு மண்ணெண்ணெய் வழங்கிட இந்த அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். அதேபோல, அவற்றை வழங்கிடவும், நுகர்வோர் சிரமமின்றிப் பெற்றிடவும் வசதியாக தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின்மூலம் பேரூராட்சி, நகராட்சி ஆகிய இடங்களில் மண்ணெண்ணெய் Bunk-களைத் திறந்திட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டுறவு நியாய விலைக் கடைகளில் பணியாற்றுகின்ற பணியாளர்கள், கூட்டுறவுப் பண்டகசாலைகளிலே பணியாற்றும் விற்பனையாளர்கள் மற்றும் எடையாளர்களுக்கு ஊதிய உயர்வு வழங்கப்பட வேண்டும். இவர்கள் பல ஆண்டுகளாகக் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். இதே வேலையைச் செய்யக்கூடிய நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் ஊழியர்களைப்போல இவர்களுக்கும் சம வேலை, சம ஊதியம் வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் பணிபுரிபவர்களுக்குச் சம்பளம் அதிகம் வழங்கப்பட்டாலும், ஓய்வுபெற்ற பிறகு அவர்களுக்கு ஓய்வூதியம் கிடைக்கப்பெறாமல் பாதிக்கப்படுகிறார்கள். எனவே, அவர்களுக்கு ஓய்வூதியம் கிடைக்க இந்த அரசு ஆவன செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், கூட்டுறவு நியாய விலைக் கடைகளை ஒரு தனி நிர்வாகத்தின்கீழ்க் கொண்டு வர வேண்டும். காரணம், இந்தக் கடைகளை வைத்துக்கொண்டுதான் பல தொடக்கக் கூட்டுறவு

வங்கிகள் இயங்கி வருகின்றன. இயங்கி வருகின்றன என்பதைவிட, ஜீவ மரணப் போராட்டத்தில் உள்ளன என்றேதான் கூற வேண்டும். தமிழகத்தில் உள்ள 4,474 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் பல வங்கிகளுடைய செயல்பாடுகள் சரியில்லாமல் தற்போது உள்ளன. காரணம் அந்த வங்கிகளின் செயலாளர்கள்தான் என்றால், அது மிகையாகாது. அந்தச் செயலாளர்கள் எல்லாம் அந்த வங்கியிலே இருக்கின்றபோது குட்டி ராஜாக்களைப்போலச் செயல்படுகிறார்கள். அப்படிச் செயல்படுவது மாத்திரமல்ல; போலிப் பெயர்களிலே, கடன்களைத் தருவதாக இவர்களே கொள்ளையடிப்பதும், அந்தத் தொடக்கக் கூட்டுறவு வங்கிகளுடைய நிர்வாகச் சீர்கேட்டிற்குக் காரணமாகவும் இருந்து கொண்டிருக்கிறார்கள். இவற்றைத் தடுக்க வேண்டுமானால், இந்தக் கூட்டுறவுச் சங்கச் செயலாளர்களுக்குப் பணியிட மாறுதல்களை வழங்கி இந்தத் துறையை நீங்கள் சீர் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-55*

கூட்டுறவுச் சங்கத் தேர்தலை நடத்தி ஜனநாயகத்தை நிலைநாட்டுவதோடு, உள்ளாட்சித் துறைக்கு எப்படித் தனியாக ஒரு தேர்தல் ஆணையம் உள்ளதோ, அதைப்போலக் கூட்டுறவுத் தேர்தலை நடத்தவும் ஒரு தனி ஆணையத்தை இந்த அரசு ஏற்படுத்த வேண்டும்.

மிக முக்கியமான ஒரு கோரிக்கை; கடனைக் கொடுக்கிறபோது, அதைத் திரும்ப ஒழுங்காகச் செலுத்துகிறவர்களைக் கௌரவிக்கின்ற வகையில்—சலுகையை எதிர்பார்க்காதவர்கள்; வாங்கிய கடனை மீண்டும் செலுத்துபவர்கள்—அவர்களைக் கௌரவிக்கின்ற வகையில், அவர்கள் மீண்டும் கடன் கேட்டால், அவர்கள் கேட்கிற கடனை முறையாக வழங்கி, முன்னுரிமை கொடுத்து, வட்டிச் சலுகையையும் அறிவித்து, அவர்களுக்கு உதவ வேண்டுமாறு நான் கேட்டுக்கொள்கிறேன்.

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில், மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளில் தற்காலிகமாகப் பணிபுரியும் ஊழியர்களைப் பணி நிரந்தரம் செய்ய வேண்டும். குறிப்பாக, நில வள வங்கிகளில் 8-7-1980 முதல் 11-3-2001 வரையிலான காலத்தில் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம்மூலமாகப் பணி நியமனம் செய்யப்பட்ட ஊழியர்களை, வயது, கல்வித் தகுதி, காலியிடப் பணியில் பணி நியமனம், 480 நாட்கள் தொடர்ந்து பணி செய்தது என்கிற 4 தகுதிகள்



இருந்தும்கூட, அரசாணை இருந்தும்கூட, அவர்களை அதிகாரிகள் பணி நிரந்தரம் செய்யாமல் இருப்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** Echo Mani, முடித்துவிடுங்கள்.

**திரு. கோ. எதிரொலி மணியன்:** இறுதியாக, விவசாய நிலம் போதிய அளவு இல்லாதவர்கள். . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** Echo Mani, திரு. எதிரொலி மணியன், உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. கோ. எதிரொலி மணியன்:** குறிப்பாக, என்னுடைய திருவண்ணாமலை மாவட்டத்தில் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிக்கு இடம் வாங்கி 8 ஆண்டு காலமாகிறது. இதுவரையில் அதற்கென்று ஒரு கட்டடம் கிடையாது. எனவே, அந்தக் கட்டடத்தைத் தாங்கள் இந்தத் துறையின்மூலமாகக் கட்டித் தருமாறு நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அதே வேளையில். . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. கோ. எதிரொலி மணியன்:** ஒரு நிமிடம். விவசாய நிலம் போதிய அளவு இல்லாதவர்கள், 1 ஏக்கர், 2 ஏக்கர் நிலமுள்ள விவசாயிகள் தங்களுடைய வீடுகளை அடமானம் வைத்து, பண்ணைசாராக் கடன்களைப் பெற்றுள்ளார்கள். அதைத் திரும்பச் செலுத்த முடியாமல், வட்டிக்கு வட்டி என்று வளர்ந்து, வீடும், இருக்கிற மனையும், நிலமும் பறிபோகிற சூழ்நிலையில் இருக்கிறார்கள். பல மாவட்டங்களிலே இது நடந்துகொண்டிருக்கிறது. அவர்களுக்கு வட்டிச் சலுகையை மட்டுமாவது அறிவித்து, அசலைக் கட்ட இந்தத் துறை ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தத் துறையின் மானியக் கோரிக்கையின்மீது பேசுவதற்கு வாய்ப்புத் தந்த உங்களுக்கும், இந்த மாமன்றத்திற்கும் நன்றி கூறி, விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஜி. லதா. (குறுக்கீடு) திரு. விடியல் எஸ். சேகர், சொல்லுங்கள்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திரு. எதிரொலி மணியன் அவர்கள் பேசுகிறபோது, பாரதியாருடைய பாடலைச் சொன்னார்கள்.

'தனியொ ருவனுக் குணவிலை யெனில்,
ஜகத்தினை யழித்திடு வோம்'

என்று சொல்லி, பாரதியாருடைய வாசகம் ** இருக்கிறது என்கின்ற வார்த்தையைச் சொன்னார்கள். பாரதியாருடைய வாசகம் ** என்கிற வார்த்தை அவைக் குறிப்பிலே இடம்பெறலாமா என்று தங்களைக் கேட்டுக்கொண்டு, தயவுசெய்து அந்த வார்த்தையை அவைக் குறிப்பிலிருந்து நீக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

'தனியொ ருவனுக் குணவிலை யெனில்,
ஜகத்தினை யழித்திடு வோம்'

என்று பாரதி சொன்ன வார்த்தை, ** என்று பதிவு செய்திருக்கிறார்கள். அந்த வார்த்தை அவைக் குறிப்பிலே இடம்பெற வேண்டுமா? அவர் அந்த வார்த்தையைச் சொல்லியிருக்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நான் படித்துவிட்டுச் சொல்கிறேன்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** அப்படியிருந்தால், அந்த வார்த்தையை நீக்கிவிடுமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஜி. லதா. Madam, five minutes. (குறுக்கீடு)

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. . .

**திருமதி ஜி. லதா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவருக்கு நன்றியைக் கூறிக்கொண்டு. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வேல்முருகன், இப்படிப் பேசினால் எப்படி? Time இல்லை, வேல்முருகன். (குறுக்கீடு) திரு. வேல்முருகன், என்ன?

**திரு. தி. வேல்முருகன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்கள் கட்சியினுடைய உறுப்பினர் திரு. எதிரொலி மணியன் அவர்கள் சொன்னது, பாரதி சொன்ன அந்த வரிகளுக்கேற்றவாறு, ஒரு தனி மனிதனுக்கு உணவில்லை என்றால், இந்த ஜகத்தினை அழித்திடுவோம் என்ற வரிகளுக்கேற்றவாறு, அனைத்து ஏழையெளிய

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



மக்களுக்கும் உணவு அளிக்கின்ற ஒரு மகத்தான திட்டத்தைத்தான் தமிழகத்தினுடைய முதல்வர், முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் செய்திருக்கிறார் என்றுதான் சொன்னாரே தவிர, ** என்ற வார்த்தையை அவர் குறிப்பிடவில்லை. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, இல்லை. திரு. விடியல் எஸ். சேகர், அவர் அந்த மாதிரிச் சொல்லவில்லை. அப்படியிருந்தால் நாம் நீக்கிவிடலாம். திருமதி ஜி. லதா, பேசுங்கள்.

**திருமதி ஜி. லதா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2007-2008 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையில், நியாய விலைக் கடைகளின்மூலம் பாமாயில், பருப்பு வகைகள், ரவை, மைதா ஆகியவை கட்டாயம் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அந்த அறிவிப்பின்படி மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள், packet செய்து. . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அமைதியாக இருங்கள்.

பிற்பகல் 1-00

**திருமதி ஜி. லதா:** ரேஷன் கடையில் இந்த நான்குவிதமான பொருட்களைக் கொடுத்ததற்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். அதே நேரத்தில் 14 விதமான அத்தியாவசியமான உணவுப் பொருட்களை, மேற்கு வங்காளம், கேரளத்தைப் போன்று, தமிழகத்திலும் நியாய விலைக் கடைகளில் கொடுப்பது என்பது, மெல்ல, மெல்ல இவைகளைச் செய்வது வெளி மார்க்கெட் விலையைவிட ரேஷன் கடைகளில் கட்டுப்படியான விலைகளில் கொடுப்பது, வெளி மார்க்கெட்டின் விலையைக் கட்டுப்படியான அளவுக்குக் கொண்டு வருவதற்கு உதவிகரமாக அமையும் என்பதனைச் சபையில் தெரிவித்துக்கொள்கிறோம்.

பன்னாட்டு நிறுவனங்களான Wal-mart, Reliance போன்ற கம்பெனிகள் on-line வர்த்தகத்தைத் தொடர்ந்து நடைமுறைப்படுத்திக்கொண்டு வந்ததன் விளைவாக, விலையேற்றம் என்பது அதிகரித்தது. இதைக் கட்டுப்படுத்துகின்ற விதத்தில் தமிழக முதல்வர் தமிழகத்தில் ஓர் அடியை எடுத்து வைத்து, ரேஷன் கடையில் அனைத்துவிதமான பொருட்களையும் கொண்டு வர வரும்போது, அதைக் கட்டுப்படியான ஒரு விலைக்குக் கொண்டு வர

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

முடியும் என்பதனை மார்க்சிஸ்ட்டு கம்யூனிஸ்டு கட்சி வலியுறுத்திக் கூறிக்கொள்கிறது. Reliance, Wal-mart, போன்ற கம்பெனிகள் தொடர்ச்சியாக, இந்தியாவின் உணவுப் பொருட்களான அரிசி, கோதுமைபோன்ற முக்கியமான பொருட்களை அவர்களே கொள்முதல் செய்வதால், விலையேற்றம் என்பது அதிகமாக ஏறுகிறது. இவற்றைக் கட்டுப்படுத்துகின்றவிதத்தில் தமிழக அரசு மத்திய சர்க்காரை வலியுறுத்திக் கேட்டுக்கொள்ள வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறோம்.

அது மட்டுமல்ல, தமிழகத்தில் புதிய குடும்ப அட்டைகளுக்கு மண்ணெண்ணெய் வழங்கப்பட வேண்டும் என்பதனையும், குடும்ப அட்டைகளுக்குண்டான முழு ஒதுக்கீட்டினை அரசு நியாய விலைக் கடைகளில் அளிக்க வேண்டும் என்பதனையும் தெரிவித்துக்கொள்கிறேன். நியாய விலைக் கடைகளில், 60 சதவிகிதம், 70 சதவிகிதம், 80 சதவிகிதம் உணவுப் பொருட்களே அளிக்கப்படுகின்றன. அவைகளைத் தவிர்த்து, 100 சதமானப் பொருட்களை நியாய விலைக் கடைகள்தோறும் வழங்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறோம்.

பொது விநியோகத் திட்டத்தைத் தனித் துறையாக மாற்ற வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறோம். குடும்ப அட்டைகள் வழங்குவது தொடர்பாக இந்தப் பேரவையில், 'விண்ணப்பித்தவர்களுக்குக் குடும்ப அட்டைகள் வழங்கப்படும்' என்று அமைச்சர் அவர்களும், முதல்வர் அவர்களும் தெரிவித்தார்கள். மார்ச் 30 ஆம் தேதி பத்திரிகைச் செய்தியில், மாண்புமிகு முதல்வர் அவர்களால், இதுவரையில் ஏறத்தாழ 15 இலட்சத்து 3 ஆயிரம் மனுக்கள் பெறப்பட்டிருக்கின்றன என்றும், அதில் தள்ளுபடியான மனுக்கள் 5 இலட்சத்து 52 ஆயிரம் என்றும் கூறப்பட்டது. இதுநாள் வரையில், இந்தப் பத்து மாத காலத்தில் இரண்டு இலட்சத்து மூன்றாயிரம் குடும்ப அட்டைகள் மட்டுமே மாவட்டம்தோறும் அனுப்பப்பட்டிருக்கின்றன. ஆனால், 7 இலட்சம் குடும்ப அட்டைகளுக்கான ஏற்பாட்டிற்கு இந்தத் தமிழக அரசு என்ன செய்யப் போகிறது? 10 மாத காலத்தில் இரண்டு இலட்சத்து மூன்றாயிரம் குடும்ப அட்டைகள் மட்டும்தான் கொடுக்கப்பட்டதென்றால், மீதமிருக்கின்ற 7 இலட்சம் குடும்ப அட்டைகளை அரசு எந்தக் காலக்கட்டத்திற்குள் மக்களுக்குச் சென்றடையச் செய்யப் போகிறது என்பதனை இந்த அவைக்குத் தெரியப்படுத்த வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறோம்.



சென்ற 2006-2007 ஆம் ஆண்டு உணவுத் துறைக்காக ஒதுக்கப்பட்டது ரூ.1,950 கோடியாகும். இந்த பட்ஜெட்டில் 2007-2008 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீடு என்பது ரூ.1,950 கோடிதான். ஆனால், குடும்ப அட்டைகளின் விநியோகம் என்பது, இரண்டு இலட்சத்து மூன்றாயிரம் அட்டைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. குறைந்தபட்சம் கொடுக்கப்பட்டிருக்கின்ற அட்டைகளுக்காவது இணைத்து இந்த ஒதுக்கீட்டைக் கூடுதல் செய்ய வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறோம். கூட்டுறவுத் தேர்தலைப் பொறுத்தவரையில், மே, ஜூன் மாதங்களில். . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சீக்கிரம் உரையை முடித்துவிடுங்கள்.

**திருமதி ஜி. லதா:** இந்தத் தேர்தலை நடத்துவது என்று அரசு அறிவிப்புக் கொடுத்துள்ளது. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் அதை வரவேற்கிறோம். இந்தத் தேர்தலுக்கு, கூட்டுறவுக்கு என்று தனியான ஆணையத்தை ஏற்படுத்தி, தேர்தலை உள்ளாட்சித் தேர்தல்போன்று, வேட்புமனுத் தாக்கல், பரிசீலனை, வேட்புமனு வாபஸ் என்ற விதிமுறையின்படி, ஒரே நாளில் முடித்துவிடாமல், நாள் உட்பட அதில் குறிப்பிட்டு, இந்தத் தேர்தலை முறையாக நடத்த வேண்டும்; கேலிக்கூத்தாக மாற்றிவிடக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறோம். தேர்தலில் ஓட்டுப் போடுகின்ற வாக்காளர்களுக்கு அடையாள அட்டை என்பது கொடுக்கப்பட வேண்டும் என்பதனைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறோம். தமிழகத்தில், விவசாயிகளுக்குக் கடன் தள்ளுபடி என்பது. . .

பிற்பகல் 1-05

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உரையை முடித்துவிடுங்கள்.

**திருமதி ஜி. லதா:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற நேரம் 10 நிமிடங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** தினமும் பேசுகிறீர்கள். (குறுக்கீடு) தினமும் பேசுகிறீர்கள்.

**திருமதி ஜி. லதா:** தமிழக அரசு, விவசாயிகளின் கடன் 7 கோடி ரூபாய் என்று குறிப்பிட்டது. இந்த ரூ.7 கோடியில் அபராத வட்டி நிலுவைகளைக் கட்டாயம் அந்த சொசைட்டிகளே ஏற்று நடத்த

வேண்டுமென்பது விதியாக அனுப்பப்பட்டிருக்கிறது. இவைகளை வாபஸ் வாங்கினால்தான் அந்த சொசைட்டிகள் முழுமையாக உயிரோட்டமாக நடைபெறும் என்பதனைத் தங்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இந்தக் கூட்டுறவுத் துறையில் பணியாற்றிக்கொண்டிருக்கின்ற ஏறத்தாழ 35,000 பேரில் 13,000 பேருக்குப் பணி வரன்முறை என்பது செய்யப்பட்டது. மீதம் இருக்கின்ற 22,000 பேருக்கு உடனடியாகப் பணி வரன்முறையை அரசு செய்ய வேண்டுமென்று தங்களுடைய கனிவான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். பல ஆண்டு காலம் ஊதிய உயர்வு . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நேரம் இல்லை அம்மா, அடுத்து, திரு. கே. உலகநாதன். (குறுக்கீடு) நன்றி சொல்லுங்கள். (குறுக்கீடு) சரி.

**திருமதி ஜி. லதா:** நன்றி சொல்கிறேன். பல ஆண்டு காலம் ஊதிய உயர்வின்றி உள்ள நியாய விலைக் கடை ஊழியர்களுக்கு உடனடியாக இடைக்கால நிவாரணமாகக் குறைந்தபட்சம் 2,000 ரூபாய் வழங்கிட வேண்டும். நியாய விலைக் கடைகளுக்கு ஞாயிற்றுக்கிழமையை வார விடுமுறையாக . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** துணைத் தலைவர் அவர்களே, தயவுசெய்து நேரத்தினுடைய அருமை கருதி யாரும் நன்றி தெரிவிக்க வேண்டாம். அவர்களுடைய கருத்துகளை மட்டும் சொன்னால் போதும். எல்லாக் கட்சி உறுப்பினர்களும் ஒவ்வொரு நாளும் பேச வேண்டுமென்று நினைக்கிறார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையிலே, இன்றையதினம் ஒரு Adjournment Motion எடுத்து, அதற்கே ஒரு மணி நேரம் செலவாகிவிட்டது. அமைச்சர் ஒரு மணி நேரம் பதில் சொல்ல வேண்டுமென்கிறார். தினந்தோறும் இரண்டரை மணிக்கு அவை முடிவுற்றால், மாண்புமிகு உறுப்பினர்களுக்கு எவ்வளவு கஷ்டம் இருக்கும் என்பதை உணர்ந்து, ஐந்து நிமிடம் மட்டும் அனைவரையும் அனுமதிக்கும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அம்மா, உரையை இத்துடன் நிறைவு செய்யுங்கள். (குறுக்கீடு) உரையை முடியுங்கள்.



**திருமதி ஜி. லதா:** நியாய விலைக் கடைகளில் வார விடுமுறையாக ஞாயிற்றுக்கிழமை என்பதனை அறிவிப்பாகத் தர வேண்டும். சுமைப் பணி ஊழியர்களுக்குக் குறைந்தபட்சம் 20 சதவிகிதக் கூலி உயர்வு என்பது ஒப்பந்தக் கூலியாக வழங்கப்பட வேண்டும். கொள்முதல் நிலையங்களில் பணியாற்றி வரும் சுமைப் பணி ஊழியர்களுக்குக் கூலி உயர்வு என்பது தரப்பட வேண்டும். கூட்டுறவுத் துறையில் பணியாற்றிக்கொண்டிருக்கிற ஊழியர்களுக்கு அரசு ஊழியர்களைப்போல . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, கே. உலகநாதன். தமிழில் என்ன? கானா உலகநாதனா? (குறுக்கீடு) ரைட், பேசுங்கள், திரு. க. உலகநாதன். ஐந்து நிமிடத்திற்குள் பேசி முடியுங்கள்.

***திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை குறித்துப் பேசுகிற அனுமதி அளித்த தங்களுக்கு எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். கூட்டுறவு அமைப்புகளின் செயல்பாடுகளையும், அதன் இயக்க முறைகளையும் ஜனநாயகப்படுத்துவது உடனடி அவசியமாகும். இந்த முறையில் ஜனநாயக முற்போக்குக் கூட்டணியாக ஒருங்கிணைந்து நின்று, தமிழ்நாட்டு மக்களின் பேராதரவுடன் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் தலைமையில் நடைபெறும் அரசு ஜூன் மாதத்தில் கூட்டுறவு அமைப்புகளுக்குத் தேர்தல் நடத்தப்படும் என்று அறிவித்துள்ளதை இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் மகிழ்ச்சியுடன் வரவேற்கிறோம்.

கூட்டுறவு நில வள வங்கி, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி, நெசவாளர் கூட்டுறவு அமைப்புகள், பால் உற்பத்தியாளர் கூட்டுறவு அமைப்புகள், வீட்டு வசதி கூட்டுறவு அமைப்புகள், கூட்டுறவு வங்கிகள், கடன் வழங்கும் அமைப்புகள் எனப் பல்வேறு பிரிவுகளிலும் கூட்டுறவு அமைப்புகள் செயல்படுகின்றன. பல்வேறு துறைகளின் நிர்வாகத்தில் செயல்படுகின்றன. தனித்தனிப் பொறுப்புகள் கடமைகள் வரையறுத்துச் செயல்பட்டாலும், ஒருங்கிணைத்து முன்னேற்றம் பற்றி ஆய்வு செய்வதற்கும், அவசியமான மேல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் வாய்ப்பற்ற நிலை உள்ளது. இது பற்றி அரசு கருதிப் பார்த்து, புதிய வழிமுறை ஒன்றை உருவாக்க வேண்டியது அவசியம் என்று கருதுகின்றேன். மக்களின் ஆற்றலை ஒருங்கிணைத்து, ஒன்றுபட்ட செயல்பாட்டில்

முன்னேறுவதை நோக்கமாகக் கொண்டது கூட்டுறவு நடைமுறையாகும். இதில் அனைத்துத் தரப்பு மக்களும் அணி திரட்டப்பட்டுள்ளார்களா என்பதும் ஆய்வு செய்யப்பட வேண்டியுள்ளது. உதாரணமாக, பெரும் பகுதி மக்களின் தொழில் ஆதாரமாக இருப்பது விவசாயம். இந்த விவசாய சாகுபடி வேலைகளுக்கும், நீர்வள, நிலவள மேம்பாட்டிற்கும், நிலத்தைப் பண்படுத்தும் பணிக்கும் கூட்டுறவு அமைப்புகளில் கடனுதவி செய்யப்படுகிறது. வீடுகளைக் கட்டிக்கொள்ளவும், வீடுகளைப் புதுப்பித்துக்கொள்ளவும் கடன் வழங்கப்படுகிறது. இந்தக் கடன்களை உரிய காலத்தில் திரும்பச் செலுத்துவதை ஒவ்வொருவரும் கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டியது அவசியமாகும். ஆனால், இயற்கை சார்ந்த தொழிலாக உள்ள விவசாயத்தில், கட்ட முடியாத கடன் சுமையில் விவசாயிகள் விழி பிதுங்கி நின்ற நிலையினையும், கூட்டுறவு அமைப்புகளில் தேங்கி, நிலுவையாக நீடித்து வந்த சுமார் 7,000 கோடி ரூபாயைத் தள்ளுபடி செய்து விவசாயிகள் காப்பாற்றப்பட்ட சாதனையினையும் ஒரே நேரத்தில் தமிழ்நாட்டில் சரித்திரம் பதிவு செய்துள்ளது. இந்த நேர்வின்மீது கவனம் செலுத்தியபோது, விவசாயிகளுக்கும் வீட்டு வசதியை ஏற்படுத்திக்கொள்ள வழங்கப்படும் கடன்மீது அபராத வட்டி விதிக்கும் முறையை அடியோடு இரத்துச் செய்ய வேண்டியது அவசியம் என்பதை இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் வலியுறுத்தித் தெரிவித்துக்கொள்கிறோம்.

பிற்பகல் 1-10

மேலும், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் உறுப்பினர்களாகப் பதிவு செய்து கொண்டுள்ள விவசாயிகள் எத்தனை பேர் என்பதைக் கருதிப் பார்ப்பதும் அவசியமாகும். ஆரம்பக் காலத்தில் கூட்டுறவு அமைப்பை உருவாக்குவதற்காகச் சேர்க்கப்படும் உறுப்பினர்கள், பிறகு சேர்க்கப்படும் உறுப்பினர்கள், கடன் பெறுபவர்கள் அல்லது வைப்பு நிதி செலுத்துபவர்கள் என்ற வகையில் மட்டுமே உறுப்பினர்கள் பதிவு செய்யப்படுகிறார்கள். இவை அனைத்தையும் சேர்த்துக் கணக்கிட்டாலும், விவசாயிகளின் ஒட்டுமொத்தக் குடும்பங்களில் 10 சதவிகிதத்தினர்கூட கூட்டுறவு அமைப்புகளில் திரட்டப்படாமல் உள்ளனர் என்பதைக் காண முடிகிறது. இதன்மீது அரசு முழுக் கவனம் செலுத்தி, விவசாயக் குடும்பங்கள் அனைத்தையும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் உறுப்பினர்களாகப் பதிவு செய்ய வேண்டும். இதன்மூலம், கூட்டுறவு அமைப்புகளின் செயல்பாட்டை ஜனநாயகப்படுத்தும் நடவடிக்கையை மேலும் வலிமையாக்க முடியும்.



உள்ளாட்சித் தேர்தலை நடத்துவதுபோல, கூட்டுறவு அமைப்புகளுக்கும் தேர்தலைக் கால வரம்பு கொண்ட முறையில் புதுப்பித்து வர வேண்டும். அதுபோல, காலியாகும் இடங்களுக்கு இடைத் தேர்தல் நடப்பதையும் உறுதி செய்ய வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் நிர்வாகம் செய்யும் நடைமுறைமீது அரசு தலையிடுவதைத் தடுக்கும் முறையில், சட்டப் பாதுகாப்பை ஏற்படுத்த வேண்டும்.

தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் தொழில் துறையினருக்கு வழங்கிய பல கோடி ரூபாய் வராக் கடனாக அறிவிக்கப்பட்டுள்ளது. வட்டியும், முதலுமாகக் கணக்கிட்டால், 1 இலட்சத்து 50 ஆயிரம் கோடி ரூபாயைத் தாண்டிவிட்டது என்று கூறுகிறார்கள். அதே சமயம், விவசாயப் பணிகளை, சாகுபடி வேலைகளைச் செய்வதற்குக் கடன் வாங்க வங்கிகளை அணுகினால், நகைக் கடன் வசதிக்கே முன்னுரிமை தரப்படுகின்றது. அரும்பாடுபட்டுச் சேகரித்த சொற்ப நகைகளையும் அடகு வைத்துவிடும் ஏழை மக்கள், அதை மீட்க முடியாமல் படும் வேதனையையும், அல்லலையும் வார்த்தைகளால் சொல்ல முடியவில்லை. இதனைத் தவிர்க்கும்பொருட்டு, நகைக் கடன்மீதான வட்டியும் குறைக்கப்பட வேண்டுமென்று வலியுறுத்துகிறேன். இதேபோல, தொழில் துறையினர் பெறுகிற கடன் தொகை எப்படி இரகசியமாக வசூலிக்கப்படுகிறதோ. அது மாதிரி நகைக் கடன் ஏல அறிவிப்புகளைத் தினசரிப் பத்திரிகைகளில் வெளியிட்டு, மனச்சங்கடத்தை ஏற்படுத்துவதைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயக் கடன்களுக்கான வட்டிச் சலுகை அறிவிக்கப்பட்டுள்ளது. மிக்க மகிழ்ச்சி, நன்றி. கடனை உரிய தவணைகளில் திருப்பிச் செலுத்துவோருக்கு மட்டும் 5 சதவிகிதம் வட்டி என்பது, நிபந்தனை விதிப்பதாகும். இயற்கை சார்ந்த தொழிலான விவசாயத்தில் விருப்பம் மட்டுமே வருமானத்தைக் கொடுத்துவிடாது என்பதைக் கருத்தில்கொண்டு நிபந்தனைகள் நீக்கப்பட வேண்டும். வேளாண்மை நிபுணர் எம்.எஸ். சுவாமிநாதன் அவர்கள் பரிந்துரைத்துள்ள சிபாரிசுகளை நிறைவேற்ற வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகளின் மேம்பாட்டிற்காகக் கடனுதவி செய்திட 1,350 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது மகிழ்ச்சிதான். விவசாய சாகுபடி வேலைகள், நில மேம்பாடுப் பணிகள் போன்றவற்றிற்குத் தனியார் துறையில் அதித வட்டிக்குக் கடன் வாங்கும் நிலையைத் தடுத்திட மேலும் தேவையான நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டியது அவசியமாகும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேசி முடித்தாகிவிட்டது. (குறுக்கீடு)

**திரு. கே. உலகநாதன்:** முடித்து விடுகிறேன். தமிழ்நாட்டில் வாழ்ந்து வரும் குடும்பங்களைக் கணக்கிட்டு, குடும்பத்திற்கு ஒரு அட்டை வழங்கும் பணியை சர்ச்சைகள் இல்லாமல், சந்தேகத்திற்கு இடம் கொடுக்காமல் செய்து முடிக்க முடியவில்லை. இது அதிகாரக் கட்டமைப்பிற்கு விடப்பட்டுள்ள சவாலாகும். சொந்த நாட்டு மக்களையும், குடும்பங்களையும் கணக்கிட்டுக் குடும்ப அட்டை கொடுக்க முடியவில்லை. போலி அட்டைகள் புழக்கத்தில் உள்ளன, தவறுகள் நடைபெறுகின்றன என்பது, பொது விநியோக முறையைச் சீர்குலைக்கும் சக்திகளின் வீரியத்தையும், அதன் முன்பு தோல்வியடைந்து நிற்கும் நிர்வாகச் செயல்பாட்டையும், இந்த மோசமான நிலவரத்தையும் விரைந்து முடிவுக்குக் கொண்டு வர, உள்ளாட்சிப் பிரதிநிதிகள், பொது விநியோகத் துறை அலுவலர்கள்கொண்ட குழுக்கள் அமைத்திடவும், அனைவருக்கும் குடும்ப அட்டை கொடுத்துவிடும் இலக்கை அடையவும், ஒரு குறிப்பிட்ட கால வரம்புகொண்ட சிறப்புத் திட்டத்தை உருவாக்கிட வேண்டுகிறோம்.

குடும்ப அட்டையில் ஏற்படும் குளறுபடிகளுக்கு முக்கியக் காரணம், பொது விநியோக முறையில் ஏற்படும் குறைபாடாகும். நியாய விலைக் கடைகளில், குறிப்பிட்ட நாளில், குறிப்பிட்ட பொருள் விநியோகிக்கப்படும் முறை உள்ளது. உதாரணத்திற்கு, அரிசி விற்பனை செய்யும் நாளில் மண்ணெண்ணெய் விநியோகம் இருக்காது. மண்ணெண்ணெய் விநியோகம் செய்யும் தினத்தில் அரிசி விற்பனை இருக்காது. இரண்டையும்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உலகநாதன், பின்னர் பேசிக்கொள்ளலாம், இன்னொரு நாளைக்கு. அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. வேல்துரை. (குறுக்கீடு) இல்லை உலகநாதன், நாளைக்குப் பேசிக்கொள்ளலாம். நாம்தான் தினமும் பேசிக்கொள்கிறோமே! திரு. வேல்துரை, பேசுங்கள்.

***திரு. பா. வேல்துரை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உணவு மற்றும் கூட்டுறவுத் துறைமீது பேசுவதற்கு எனக்கு வாய்ப்பளித்த தங்களுக்கு என்னுடைய நன்றியை முதற்கண் தெரிவித்துக்கொள்கின்றேன்.



தமிழகம் முழுவதும் அனைவருக்கும் ரேஷன் கார்டு வழங்குகின்ற நடவடிக்கை வேகமாக நடைபெற்று வந்தாலும்கூட, இன்னமும் ரேஷன் கார்டு வழங்கப்படாத சூழ்நிலை இருக்கிறது என்பதை இந்தச் சபையிலே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். Public Distribution System—பொது விநியோக முறை effective ஆகவும், transparent ஆகவும் சிறப்பான முறையில் நடந்து கொண்டிருக்கிறது என்பதை நான் இந்த மன்றத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்று சொன்னால், நமது முதல்வர் அவர்களும், அதற்குரிய அமைச்சர் அவர்களும் உணவு விநியோகம் சிறந்த முறையிலே, நல்ல முறையிலே நடக்க வேண்டும் என்ற உணர்வோடு இன்றைக்குச் செயல்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். உயர்மட்ட அதிகாரிகளும் நல்ல முறையிலே அந்தப் பணியைச் சிறப்பான முறையிலே செய்துகொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னொன்றையும் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன். 150 கார்டுகள் இருந்தால் உடனடியாகத் துணைக் கடையை ஆரம்பிக்கின்ற பணிக்கு அமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். அதற்குத் தனியாகக் கேள்வி கேட்க வேண்டிய அவசியம் இல்லை. அந்தத் திட்டத்தை, துணைக் கடை கொண்டு வருகிற பணியை, உடனடியாக நிறைவேற்ற வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1-15*

அதேபோன்று, ரேஷன் கடையிலே எடைக் குறைவு, அளவுக் குறைவு என்பது நீக்க முடியாத ஒரு குறையாக இருக்கிறது. அதாவது, அந்தக் காலத்திலேயிருந்து இந்தக் காலம் வரைக்கும், அந்த எடைக் குறைவு என்பதை நாம் எல்லோரும் சாதரணமாக எடுத்துக்கொள்கிறோம். அதை நிவர்த்தி செய்கின்ற வகையிலே packe முறையைக் கொண்டு வர வேண்டுமென்று கடந்த பட்ஜெட்டிலே நாமெல்லாம் வேண்டிக் கேட்டுக்கொண்டோம். ஆனால், இன்று வரை அந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவில்லை. அதனாலே அரிசியாக இருந்தாலும் சரி, மற்ற எல்லாப் பொருட்களுக்குமே packin முறையைக் கொண்டு வந்தால், தரத்துக்கும் உத்தரவாதம் இருக்கும் அளவுக்கும் உத்தரவாதம் இருக்கும்.

அதேபோன்று, பாமாயில்போன்ற எண்ணெய் தருகின்ற திட்டத்தி நீங்கள் பாக்கெட்டிலேதான் கொடுக்கப் போகிறீர்கள், அப்ப வருகிறபொழுது அதிலே எந்தக் குறையும் இருக்க வாய்ப்பில்லை.

அதேபோன்று, ரேஷன் கடையை முழுநேரக் கடை ஆக்க வேண்டும். முழுநேரக் கடை ஆக்கி, நீங்கள் இப்பொழுது அரிசி, மண்ணெண்ணெய், ரவை, துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு, பாமாயில் எல்லாம் கொடுக்கிறீர்கள், இதிலே இன்னொன்றையும் செய்யலாம். அதாவது, ஆவின் பால் கிராமப்புறங்களில் கிடைப்பதில்லை. அந்த ஆவின் பாலைக்கூட இதன்மூலமாக வழங்கலாம். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோன்று, கதர் வியாபாரம் செய்யலாம். கதர்த் துணிகள்கூட கிராமங்களிலே இருக்கிற மக்களுக்குக் கிடைக்கக்கூடிய ஒரு வாய்ப்பை உருவாக்கலாம். முழுநேரக் கடையாக நீங்கள் ஆக்க வேண்டுமென்று உங்களைக் கேட்டுக்கொள்கிறேன். அதே நேரத்திலே, இந்தப் பொருளை வாங்கினால், இதை வாங்க வேண்டுமென்ற கட்டாயம் இருக்கக் கூடாது. இப்பொழுதுகூட பல இடங்களிலே complaint இருக்கிறது, சோப்பு வாங்க வேண்டும், மற்ற ஏதாவது பொருள் வாங்க வேண்டுமென்கிற நிலை இருக்கிறது. அப்படிப்பட்ட கட்டாயமான சூழ்நிலை தவிர்க்கப்பட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, ஒரு மாவட்டத்திற்கு ஒரு packing unit என்று உருவாக்கினால் வேலைவாய்ப்பும் கூடும்.

அதேபோன்று, இரண்டு ரூபாய்க்கு அரிசி கொடுத்துவிட்டோம். முக்கியமான விஷயம் இது, இரண்டு ரூபாய்க்கு அரிசி கொடுத்த பிறகு, நுகர்வோருக்கு விலையேற்றம் தவிர்க்கப்பட்டிருக்கிறது. அதாவது, அரிசி விலை கூடவில்லை. இது இன்றைக்குத் தமிழ்நாட்டிலே மிகப் பெரிய வரவேற்புப் பெற்றிருக்கிறது. ஆனால், விவசாயிகளுக்கு மிகப் பெரிய பாதிப்பு வருகிறது. விவசாயிகளுக்குப் பாருங்கள், இன்றைக்கு நெல்லை மாவட்டத்திலே 650 ரூபாய்க்கு ஒரு கோட்டை நெல் விற்கிறார்கள். இதை யார் தடுப்பது? விவசாயிகள் மிகப் பெரிய அளவிலே பாதிப்படைகிறார்கள். நுகர்வோருக்குக் குறைந்த விலையிலே அரிசி கிடைக்க வேண்டுமென்று இந்த அரசு எவ்வாறு பெரிய தொகையை, இழப்பை ஏற்றுக்கொண்டிருக்கிறதோ, அதேபோன்று விவசாயிகளுக்கு ஏற்படுகிற இழப்பை அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்று சொன்னால், இன்றைக்குத் தமிழ்நாடு முழுவதும் அரசு கொள்முதல் நிலையங்கள்மூலமாகக் கொள்முதல் செய்ய வேண்டும் என்று அரசாங்கம் ஆணையிட்டிருக்கிறது. ஆனால், அரசு முழுமையாகக்



கொள்முதல் செய்திருக்கிறதா என்றால், இல்லை. இதை எதற்காகச் சொல்கிறேன் என்று சொன்னால், அரசாங்கம் கொள்முதல் செய்யவில்லை என்று சொன்னால், நிச்சயமாக ஒருபோதும் விவசாயிகளுடைய வாழ்வு வளம்பெறாது என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். ஏனென்று சொன்னால், இன்றைக்கு ஒரு கோட்டை நெல் ஆயிரம் ரூபாய், ஆனால் விவசாயிகள் விற்ற விலை 650 ரூபாய். கிட்டத்தட்ட...

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்முதல் நிலையங்களைப் பொறுத்தளவிற்கு, இதுவரைக்கும் எந்த ஆண்டும் இல்லாத அளவிற்கு இந்த ஆண்டு 1,200 இடங்களிலே கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டிருக்கின்றன. அதிலும் குறிப்பாக, மாவட்ட ஆட்சித்தலைவர்களிடத்திலே சொல்லி, அந்தந்தப் பகுதியிலே இருக்கின்ற விவசாயிகளுடைய பிரதிநிதிகள், மக்கள் பிரதிநிதிகள், வேண்டுமென்று சொன்னால், அந்த நிலைமைகளை அறிந்து, உடனே அங்கே திறக்கப்பட வேண்டுமென்று சொல்லப்பட்டு, பல மாவட்டங்களில் திறக்கப்பட்டிருக்கிறது. எனவே, எந்த ஆண்டும் இல்லாத அளவிற்கு இந்த ஆண்டு அதிகமாகக் கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

**திரு. பா. வேல்துரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் சொல்வது உண்மை. ஆனால், இன்றைக்கு நெல்லை மாவட்டத்தில் தாமிரபரணியில் மட்டும் கிட்டத்தட்ட ஐந்து இலட்சம் டன் நெல் உற்பத்தி ஆகியிருக்கிறது. ஆனால், அந்த அளவிற்குக் கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறதா என்றால், இல்லை. நான் குறையாகச் சொல்லவில்லை, குறை சொல்ல வேண்டுமென்ற எண்ணம் இல்லை. ஏனென்றால், அரசாங்கம் இதைவிட நல்ல திட்டங்களைத் தர முடியாது. அவ்வளவு சிறப்பான திட்டங்களை, அதுவும் ஏழை எளிய மக்களுக்குரிய திட்டங்களை எல்லாம் நீங்கள் அள்ளித் தந்துகொண்டிருக்கிறீர்கள். ஆனால், இதிலே இருக்கிற குறைகளை நாங்கள் சொன்னால்தானே, நீங்கள் அதைச் சரி செய்ய முடியும்? அரசாங்கமே முழு அளவில் நெல் கொள்முதல் செய்கிற ஒரு நிலையை நீங்கள் எடுக்க வேண்டும். ஒரு விவசாயிகூட private-லே விற்க முடியவில்லை. Private-லே விற்றால், விவசாயி அவனுடைய உற்பத்திச் செலவைக்கூடப் பெற முடியாது. எனவே, நீங்கள் அதற்கு முழுமையான ஏற்பாடு செய்ய வேண்டுமென்று உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதே மாதிரி, தமிழகத்தில் இன்றைக்கு நமது அரசாங்கம் விவசாயிகளுக்கு சுமார் 7,000 கோடி ரூபாய் விவசாயக் கடனைத் தள்ளுபடி செய்திருக்கிறது. அதே சமயத்தில், சிறு வியாபாரிகள், நெசவாளர்கள், கைவினைஞர்கள், பீடித் தொழிலாளர்கள் போன்றவர்களெல்லாம் இன்றைக்கு வீடு கட்ட 10,000 ரூபாய், 15,000 ரூபாய் கடன் வாங்கியிருந்தாலும்கூட, இன்றைக்கு ரூபாய் ஒரு இலட்சம், ரூபாய் 50,000, ரூபாய் 75,000 என்று கடன் சுமை, வட்டிக்கு வட்டி, குட்டி போட்டு, ஏழை வியாபாரிகள், நெசவாளர்கள் போன்றவர்களெல்லாம் அந்தக் கடனைத் திருப்பிச் செலுத்த முடியாமல் இருக்கிறார்கள். தமிழ்நாடு முழுவதும் பார்த்தால்கூட, அந்தக் கடன் தொகை சுமார் 500 கோடி ரூபாய்தான் இருக்கும். அதற்கு வட்டியைத் தள்ளுகிறோம், அசலைக் கட்டுங்கள் என்று நீங்கள் சொன்னால், அரசாங்கத்திற்கு உடனடியாக 150 கோடி ரூபாய் வருமானமும் வரும். அதே சமயத்திலே, ஏழைகளுக்கு 200, 300 கோடி ரூபாய் வட்டித் தள்ளுபடியும் வரும். இந்தத் திட்டத்தை நீங்கள் உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும். இதற்கு உதாரணமாக, 1992-ல் (மணியடிக்கப்பெற்றது) ஒரே ஒரு நிமிடம்.

*பிற்பகல் 1-20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம் பேசி முடியுங்கள். இரண்டு மானியக் கோரிக்கைகளுக்கு அமைச்சர் அவர்கள் பதில் சொல்ல வேண்டும்.

**திரு. பா. வேல்துரை:** இந்த ஒரேயொரு விஷயத்தை மட்டும் சொல்லிவிடுகிறேன். அதாவது, ஏழை விவசாயிகள் எப்படிப் பாதிக்கப்படுகிறார்கள் என்பதற்கு ஒரு உதாரணம்தான். கிள்ளியூர் தொகுதியிலே, கன்னியாகுமரி மாவட்டத்தில் அதாவது 1992-ல் பெரிய வெள்ளம் வந்தது. அப்போது வீடுகள் எல்லாம் இடிந்து போய்விட்டன. வீடு கட்டுவதற்கு ரூ.10 ஆயிரம் கடன் கொடுத்து இருக்கிறார்கள். ஆனால், இன்றைக்கு அந்த ஏழைகள் ரூபாய் ஒரு இலட்சம், ரூ.50 ஆயிரம் என்று கட்டக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. இதிலே, அசலைக் கட்டுங்கள்; வட்டியைத் தள்ளுபடி செய்கிறோம் என்ற ஒரு நிலையை இந்த அரசாங்கம் எடுத்தால், தமிழ்நாடு முழுவதும் இருக்கிற ஏழைகள் வீடுகளை இழக்கிற நிலை தவிர்க்கப்படும் என்பதைச் சொல்லி, இந்த நல்ல வாய்ப்பிற்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை.

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் சார்பாகப் பேசுகிற வாய்ப்பினை எனக்குத் தந்த, தாயாய், தந்தையாய், தத்துவத்தின் இருப்பிடமாய், ஊனாய், உயிராய், உண்மையின் பிறப்பிடமாய், என் நெஞ்சமெல்லாம் நிறைந்து இருக்கிற எங்களது தங்க மனத் தலைவர் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அண்ணன் கலைஞர் அவர்களே, (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) எங்களுடைய இனமானப் பேராசிரியர் பெருமகனார் அவர்களே, ஆயிரம் விளக்கின் அணையா ஜோதி, ஏழைகளுடைய ஏந்தல், எங்கள் வருங்காலச் சமுதாயத்தினுடைய விடிவெள்ளியாக இருக்கிற உள்ளாட்சித் துறையினுடைய அமைச்சர் அன்பிற்குரிய அண்ணன் தளபதியார் அவர்களே, (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) ஆற்றலாளர் அண்ணன் ஆற்காட்டார் அவர்களே, இந்த வாய்ப்பைத் தந்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்கள் அனைவருக்கும் எனது பணிவான வணக்கத்தை நான் முதலில் தெரிவித்துக்கொள்கிறேன்.

பைபிளிலே ஒரு பழமொழி உண்டு. "ஒளியில் வாழுங்கள், ஒளிந்து வாழாதீர்கள்" என்று ஒரு பழமொழி உண்டு. பிற்படுத்தப்பட்ட சமுதாயம், ஆதி திராவிடர் சமுதாயம், மிக, மிகப் பிற்படுத்தப்பட்ட சமுதாயம், வறுமைக் கோட்டிலே வாடிக்கொண்டிருக்கின்ற சமுதாயம், சிறுபான்மைச் சமுதாயம், இதுபோன்ற சமுதாயங்கள் எல்லாம் ஒளிந்து வாழக் கூடாது என்ற உணர்வோடுதான் தலைவர் கலைஞர் அவர்கள், அவர்களுக்கெல்லாம் தனித்தனியாக இட ஒதுக்கீடு தந்து, பொருளாதாரத்திலே மேலும் வளர வேண்டும், வேலைவாய்ப்பிலே வளர வேண்டும், எனவே, ஒளிந்து வாழாதீர்கள், ஒளியோடு— என்னோடு வாழுங்கள் என்று பல்வேறு திட்டங்களைத் தந்திருக்கிற நம்முடைய தலைவர் அவர்கள் ஓர் அற்புதமான தலைவர், எனவே, அந்த அற்புதமான தலைவர் தேர்தல் அறிக்கையைத் தயார் செய்கிறபோது—தலைவர் கலைஞர் அவர்கள் காலத்திலேதான் அந்தத் தேர்தல் அறிக்கை ஒரு அழிக்க முடியாத தேர்தல் அறிக்கையாக இருந்ததை நாம் பார்க்கிறோம். அதற்கு முன்னால் எல்லாம் தேர்தல் அறிக்கை என்று சொன்னால், ஒரு நாள் படிப்பார்கள். மறுநாள் பார்த்தால் டீக்கடையிலே பத்து வகைகளாக அதைப் பிரித்து. அதைக் கிழித்து, அதன்மூலமாக மறுநாளே அது இல்லாத நிலை ஒரு

காலத்தில் இருந்தது. ஆனால், இன்றைக்குப் பார்க்கிறோம், ஒரு பைபிளைப்போல, ஒரு குரானைப்போல, ஒரு திருவாசகத்தைப்போல இந்தத் தேர்தல் அறிக்கையை இன்று அனைவரும் வைத்துக்கொண்டு, தேர்தல் அறிக்கையில் சொன்னதில் இந்த அரசு என்னென்ன செய்திருக்கிறது, 85 சதவிகிதம் செய்திருக்கிறதா, 90 சதவிகிதம் செய்திருக்கிறதா என்று இன்றைக்கு மக்கள் எல்லாம் tick அடித்துக்கொண்டு, ஒவ்வொன்றாக இந்த அரசாங்கம் செய்கிறது என்ற அளவிற்குத் தேர்தல் அறிக்கை இன்றைக்குக் கல்வெட்டாகப் பதிந்திருக்கிறது என்று சொன்னால், அது உண்மை. (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

சட்டப் பேரவையில் பொன் விழாக் காண்கிற தலைவர் கலைஞர் அவர்கள், பள்ளத்திலே இருக்கிறவர்களைக் கைதூக்கி விட்டு, மேட்டிற்கு வரவழைத்து, அவர்கள் எல்லோரும் சரி நிகர் சமானமாக வாழ, சமுதாயத்திலே அற்புதத்தை நடத்திக்கொண்டிருக்கிற ஒரு மாபெரும் தலைவர்தான் நம்முடைய தங்க மனத் தலைவர். எனவே, எண்ணத்தால், எழுத்தால், உள்ளத்தால், உணர்வால், சதாசர்வ காலமும் இந்த ஜனநாயகம் மேன்மை பெற வேண்டும் என்பதற்காக, ஓய்வறியாமல், 24 மணி நேரத்தில் 20 மணி நேரம் தமிழ்நாட்டு மக்களுக்காக உழைத்துக்கொண்டிருக்கின்ற ஒரு உன்னதத் தலைவர்தான் தலைவர் கலைஞர் என்று சொன்னால், அது மிகையாகாது.

அத்தகைய தலைவர், எனக்கு உணவு மற்றும் கூட்டுறவுத் துறையை வழங்கி, இதிலே பேசுகின்ற வாய்ப்பைத் தந்ததற்காக அவருக்கு நான் மீண்டும், மீண்டும், அவர் இருக்கிற திசையை நோக்கி வணக்கம் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

பிற்பகல் 1-25

பக்தி இலக்கியத்தைப் பாடிய மாணிக்கவாசகர் என்ன சொன்னார் என்று சொன்னால்,

> **"வேண்டியது முழுவதும் தருவாய் நீ!**
> **வேண்டப்படுவது அனைத்தும் நீ அறிவாய்!"**

எனவே, அப்படி மாணிக்கவாசகர் சொன்ன அந்த வாக்குக்கு ஒப்ப, தேர்தல் அறிக்கை எழுதுகிறபொழுதே, இந்த நாட்டு மக்களுக்காகப் பல்வேறு திட்டங்களைத் தீட்ட வேண்டுமென்ற உணர்வோடு பல



திட்டங்களைத் தீட்டினார். அத்தகைய திட்டங்களில் முதல் திட்டம்தான், அவர் மாண்புமிகு முதலமைச்சராகப் பொறுப்பேற்ற அந்த நல்ல நாளிலே, திருநாளிலே முதல் கையெழுத்தை இட்டு, ஏழைகளுடைய ஏந்தலாக இருக்கிற தலைவர் கலைஞர் அவர்கள், ஒரு கிலோ அரிசி இரண்டு ரூபாய் என்கிற திட்டத்தைத் தீட்டினார். (மேசையைத் தட்டும் ஒலி)

அதற்கு ஒரு அடிப்படைத் தத்துவம் இருக்கிறது. Max New York Life என்கிற நிறுவனம் India Financial Protection Survey என்கிற ஒரு கணக்கை எடுக்கிறார்கள். அந்தக் கணக்கை எடுக்கிறபொழுது, 100 சதவிகிதம் என்று சொன்னால், நகரத்தில் இருக்கிற மக்களும், கிராமத்தில் இருக்கிற மக்களும் 100 சதவிகிதத்தை எப்படி அவர்களுடைய வருமானத்தில் செலவு செய்கிறார்கள் என்று கணக்குப் பார்க்கிறபொழுது, உணவுக்காக 55 சதவிகிதமும், போக்குவரத்துக்காக 10 சதவிகிதமும், கல்விக்காக 7 சதவிகிதமும், வீடு, திருமணம், மருத்துவம் ஆகியவற்றுக்கு 28 சதவிகிதமும் என்று ஒரு கணக்கை எடுத்திருக்கிறார்கள். ஆக, உணவுக்காக 55 சதவிகித வருமானம் செலவிடப்படுகிறது. உணவுக்காக 55 சதவிகிதம் செலவிடப்படுகிற காரணத்தினால், ஒவ்வொரு குடும்பத்திலும் இருக்கிற பொருளாதாரம் உணவிற்கே பெரும் பகுதி போய்விடுகிறது. அதை உணர்ந்த கலைஞர் அவர்கள்தான் அந்தத் தத்துவத்தைப் புரிந்துகொண்டு, கிராமத்தில் இருக்கிற ஒவ்வொரு குடும்பத்தினுடைய பொருளாதாரத்தை உயர்த்த வேண்டும் என்ற அந்த அடிப்படையில், ஒரு கிலோ அரிசி 2 ரூபாய் என்கிற திட்டத்தை நிறைவேற்றியதன் காரணமாக இன்றைக்குத் தமிழ்நாட்டில் இருப்பவர்களெல்லாம்—ஏழைத் தாய்மார்கள், நடுத்தர மக்கள் மற்றும் உணவு நுகர்வோராக இருக்கிற அத்தனை பேரும், இன்றைக்கு தலைவர் கலைஞரைப் பாராட்டாதவர்களே இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாடே இன்றைக்குப் பாராட்டிக்கொண்டிருக்கிறது. எனவே, அந்த வகையில், அதில்கூட வறுமைக் கோட்டிற்குக்கீழ் என்றும், வறுமைக் கோட்டிற்குமேல் என்றும் மத்திய அரசாங்கம் நமக்கு விலையை நிர்ணயம் செய்திருந்தாலும்கூட—வறுமைக் கோட்டிற்குக்கீழே இருப்பவர்களுக்கெல்லாம் 5 ரூபாய் 65 காசு, வறுமைக் கோட்டிற்குமேலே இருப்பவர்களுக்கு 8 ரூபாய் 30 காசு. ஆக, மத்திய அரசாங்கம் இந்த விலையிலே கொடுத்தாலும்கூட, மாநில அரசாங்கம் அதற்காகக் கிட்டத்தட்ட 1,950 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்து, இன்றைக்கு ஒரு கிலோ அரிசி இரண்டு ரூபாய் என்கிற நிலையிலே இந்தத் திட்டத்தைச் சிறப்பாகச் செய்துகொண்டிருக்கிறார்கள்.

இங்கே பல சட்டமன்ற உறுப்பினர்கள் சொன்னார்கள். அதிலும் குறிப்பாக, நம்முடைய கரூர் சட்டமன்ற உறுப்பினர் தன்னுடைய உரையிலே சொல்கிறபோது, அரிசி அங்கு சரியாக இல்லை, இங்கு சரியாக இல்லை என்பது போன்ற தோரணையில் பேசினார். அதுவல்ல உண்மை. ஆனால், இன்றைக்குத் தரமான அரிசி இருக்கிறது. தரமான அரிசியைத் தமிழ்நாட்டிலே கொடுக்க வேண்டும் என்கிற ஒரே காரணத்திற்காகத்தான் மத்திய அரசிலே இருக்கிற உணவுத் துறை அமைச்சர் மாண்புமிகு சரத் பவார் அவர்களைச் சந்தித்துவிட்டு முதலமைச்சர் வந்தார். நான் 17-7-2006 அன்று மாண்புமிகு சரத் பவார் அவர்களைச் சந்தித்தேன். அவரிடத்திலே சொன்னேன். ஆந்திராவிலேயிருந்து வருகிற 80 சதவிகித அரிசியும் நன்றாக இருக்கிறது; சட்டீஸ்கர் மாநிலத்திலேயிருந்து வருகிற அரிசி 20 சதவிகிதம்; அதுவும் பழுப்பாக இருக்கிறது. ஆனால், விலை ஒன்றுதான்; நிறம்தான் மாறி இருக்கிறதேயொழிய, சுவையும் ஒன்றுதான் என்று சொன்னேன். அப்போது சரத் பவார் அவர்கள் சொன்னார்கள்; 'மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய தூதுவராக நீங்கள் வந்திருக்கிற காரணத்தினால் ஒன்றைச் சொல்ல விரும்புகின்றேன்; நான் சட்டீஸ்கர் மாநிலத்திலே இருக்கிற விவசாயிகளையெல்லாம் திருப்திப்படுத்த வேண்டும்; எனவே, மத்திய அரசாங்கம் சட்டீஸ்கருக்குப் பண உதவி செய்து, அங்கிருக்கிற ஆலைகளையெல்லாம் நாங்கள் புதுப்பித்து, தரமான அரிசி கொடுப்பதற்கு முயற்சி செய்கிறேன்' என்று சொன்னார்கள். இன்றைக்கு நாங்கள் கேட்டிருக்கிறோம். எனக்கு நேற்றைக்கு வந்த செய்தி என்னவென்று சொன்னால், சட்டீஸ்கர் மாநிலத்திலே இருக்கிற அத்தனை அரிசி ஆலைகளையும் இன்றைக்குப் புதுப்பித்து, நல்ல அரிசியைக் கொடுப்பதற்கு நம்முடைய சரத் பவார் அவர்கள் முயற்சித்து, அது நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. எனவே, தரமான அரிசிதான் இன்றைக்குத் தமிழ்நாட்டிற்கு வருகிறது.

இன்னொன்றையும் இங்கே இருக்கிற சட்டமன்ற உறுப்பினர்களுக்கு நான் சொல்ல விரும்புகின்றேன். உணவுத் துறை அமைச்சர் அலுவலகத்திலே நாம் Fax வைத்திருக்கிறோம்; அதற்கான எண்ணையும் கொடுத்திருக்கிறோம்; பத்திரிகையிலே விளம்பரப்படுத்தினோம்; சட்டமன்ற உறுப்பினராக இருந்தாலும், நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தாலும், ஏன், பொது மக்களாக இருந்தாலும்கூட, ஏதாவது குறைபாடு இருக்கிறது என்று சொன்னால், அதைத் தொலைநகலில் நீங்கள் அனுப்புங்கள்; 48 மணி நேரத்திலே நாங்கள் நடவடிக்கை எடுக்கிறோம் என்று அறிக்கை கொடுத்தோம்.



பிற்பகல் 1-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** பல சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், பொது மக்கள், உள்ளாட்சித் தேர்தலில் வெற்றி பெற்றிருக்கிற மக்கள் எல்லாம் அதைப் பயன்படுத்தியதன்மூலமாக எங்களுக்கு நேரடியாக இந்த ஆண்டு, இந்த 8 மாத காலத்தில் 160 புகார்கள் fax மூலமாக வந்தன. அந்த 160 புகார்களின்மீதும் நேரடியாக நடவடிக்கை எடுத்திருக்கிறோம். ஆனால், அப்படிப் பல வசதிகள் செய்தும்கூட, பல நண்பர்கள், பல சட்டமன்ற உறுப்பினர்கள், இந்த ஆட்சிக்குச் சுட்டிக்காட்ட வேண்டுமென்றில்லாமல், இட்டுக்கட்டிச் சொல்ல வேண்டுமென்ற ஒரே காரணத்திற்காக இன்றைக்குக் குறை சொல்கிறார்கள். எனவே, குறை சொல்கிற நண்பர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புவது, Fax வைத்திருக்கிறோம் இந்தத் துறையின் சார்பாக. எந்தக் குறையாக இருந்தாலும் அனுப்புங்கள், 48 மணி நேரத்திலே இந்தத் துறையின் சார்பாக நடவடிக்கை எடுப்போம் என்ற உத்தரவாதத்தையும் இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

அடுத்து, கோதுமை. கோதுமையைப் பொறுத்தளவிற்கு, எங்களுக்கு ஒரு மாதத்திற்கு 3,783 மெட்ரிக் டன்தான் கொடுக்கப்படுகிறது. ஆனால், தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் அண்ணன் கலைஞர் அவர்கள் டெல்லிக்குப் போகிறபோது, தமிழ்நாட்டிற்குப் போதுமான கோதுமை தேவை என்று கடிதம் கொடுத்தார்கள். அதன்மூலமாக இப்போது மாதத்திற்கு, 4,000, 5,000, 6,000 மெட்ரிக் டன் என்று கூடுதலாக வருகிறது; இன்னும் நிரந்தரம் செய்யப்படவில்லை. ஆனால், முதலமைச்சருடைய கடிதத்திற்கு மரியாதை வழங்கி, மத்திய அரசு இப்போது, 5,000, 6,000 மெட்ரிக் டன் என்கிற அடிப்படையிலே கோதுமையை அனுப்பிக்கொண்டிருக்கிறார்கள். அதே நேரத்திலே, போதுமான கோதுமை வர வேண்டுமென்று இன்றைக்குக் கடிதம் எழுதப்பட்டிருக்கிறது. அதோடு மட்டுமல்ல, இந்த முறை 15,000 மெட்ரிக் டன் கோதுமையை மத்திய அரசாங்கம் நமக்குப் பொது விநியோகத் திட்டத்திற்காகக் கூடுதலாகக் கொடுத்தது. அந்தக் கோதுமையை எடுத்துத்தான் இப்போது ரவையாக, மைதாவாக அதைப் பக்குவப்படுத்தி, ஒவ்வொரு கடைக்கும் இந்தத் துறையின்

சார்பாக நாங்கள் அனுப்பிக்கொண்டிருக்கிறோம். இந்த மாபெரும் சாதனையை, பொது விநியோகத் திட்டத்தின்மூலமாக, கிட்டத்தட்ட தமிழ்நாட்டிலே இருக்கிற ஒரு கோடியே 89 இலட்சத்து 93 ஆயிரத்து 206 குடும்ப அட்டைகளை வைத்து நடத்திக்கொண்டிருக்கிறோம். அதே நேரத்திலே, 28,995 கடைகளை வைத்து, அவற்றின்மூலமாக இந்தப் பொது விநியோகத் திட்டம் இப்போது சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

போன முறை சட்டமன்ற உறுப்பினர்கள் பலர் சொன்னார்கள், மின்னணு இயந்திரத்தை வைக்கலாம் என்று. ஆங்காங்கு போகிறபோது, எடை சரியாக இல்லை, எடை குறைவாக இருக்கிறது என்று சொன்னார்கள். அதைத் தலைவர் கலைஞர் அவர்கள் கவனத்தில் எடுத்துக்கொண்டு, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திலே கிடங்குகள் 209-க்கு மின் தராசுகளும், முழுநேர நியாய விலைக் கடைகள் 1,090, பகுதிநேரக் கடைகள் 63, ஆக 1,153 கடைகளுக்கு மின்னணு இயந்திரத்தையும் நாங்கள் இப்போது வைத்துவிட்டோம். அதன்மூலமாகத்தான் இன்றைக்கு எடைகளை எல்லாம் பார்த்துக் கொண்டிருக்கிற ஒரு நிலையைப் பார்க்கிறோம்.

அடுத்து, மண்ணெண்ணெய்ப் பிரச்சினை அவ்வப்போது இந்தச் சட்டமன்றத்திலே ஒலித்துக்கொண்டிருக்கும். தமிழக அரசைப் பொறுத்தளவிற்கு, இன்றைக்கு சுமார் 59,000 மெட்ரிக் டன் மண்ணெண்ணெயை வாங்கிக் கொடுத்துக்கொண்டுதான் இருக்கிறோம். ஆனால், அதே நேரத்தில், 39 இலட்சம் கார்டுகளுக்கு மண்ணெண்ணெய் கொடுக்கப்படவில்லை என்ற ஒரு குறைபாடு இருக்கிறது. இங்கேகூடப் பல சட்டமன்ற உறுப்பினர்கள் சொன்னார்கள். Bogus cards என்ற அடிப்படையிலே தமிழ்நாட்டிலே பல கார்டுகள் இருக்கின்றன. அப்படி நாங்கள் கண்டறிந்ததிலே, 25 மாவட்டங்களிலே இப்போது கண்டறிந்திருப்பது, கிட்டத்தட்ட 15½ இலட்சம் bogus cards. கண்டுபிடித்ததோடு மட்டுமல்ல, அவற்றிற்கு stoppage ஆணை போட்டிருக்கிறோம். துறை அதிகாரிகள் அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை நாங்கள் எடுத்துக்கொண்டிருக்கிறோம். அதே நேரத்திலே, திடீரென்று நிறுத்திவிட முடியாது. திடீரென்று நிறுத்திவிட்டால், இதே சட்டமன்ற உறுப்பினர்களிடத்திலே பல மனுக்கள் வரும். நீங்கள்தான் பரிந்துரை செய்ய வேண்டிய ஒரு சூழ்நிலை வரும். எனவே, அலசி ஆராய்ந்து பார்த்துத்தான் அவற்றையெல்லாம் நீக்க வேண்டும். திடீரென்று நீக்க முடியவில்லை,



ஆனால், கண்டறிந்து இருக்கிறோம். கிட்டத்தட்ட 15 இலட்சம் கார்டுகளைக் கண்டறிந்து இருக்கிறோம். அதை உடனே நிவர்த்தி செய்துவிட்டால், இப்படிப்பட்ட bogus cards-ஐ எல்லாம் அகற்றிவிட்டாலே, கொடுக்கிற மண்ணெண்ணெய் அளவு நமக்குப் போதும். இருந்தாலும், நாங்கள் தொடர்ந்து மத்திய அரசாங்கத்திற்குக் கடிதம் எழுதிக்கொண்டிருக்கிறோம். அதற்கு வேண்டிய முயற்சிகளையும் எடுத்துக்கொண்டிருக்கிறோம் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 1-35

அடுத்து, இந்தத் துறையின் சார்பாக—நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் சார்பாக, நம்முடைய தஞ்சைப் பகுதியிலே, நம்முடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் வேல்துரை அவர்கள் குறிப்பிட்டதைப்போல, நேரடிக் கொள்முதல் நிலையங்களை நாங்களே திறந்து வைத்திருக்கிறோம். தமிழ் மூதாட்டி அவ்வையார் குறிப்பிட்டதைப்போல,

"வானுயர வரப்புயரும்
வரப்புயர நீருயரும்
நீருயர நெல்லுயரும்
நெல்லுயரக் குடியுயரும்
குடியுயரக் கோனுயர்வான்"

என்ற வாக்கிற்கிணங்க, தமிழினம் உயர்ந்தால்தான் தமிழகம் உயரும் என்ற அந்த மேன்மை தங்கிய பார்வையோடு, தமிழ்நாட்டிலே முதன்முதலாகத் தலைவர் கலைஞர் அவர்களால்தான் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் என்கின்ற ஒரு மாபெரும் நிறுவனம் 24-4-1972 அன்று அவருடைய திருக்கரத்தால் தொடங்கப்பட்டது. அது தொடங்கப்பட்டபோது, அன்றைக்கு 12 கோடி ரூபாய்க்குத்தான் கொள்முதல் செய்தோம். ஆனால், இன்றைக்கு என்ன நிலைமை தெரியுமா? பல இடங்களிலே விவசாயிகளுடைய நிலையை அறிந்து கொள்முதல் நிலையங்களை நாங்கள் திறந்த காரணத்தினால்தான், 1,200-க்கும் மேற்பட்ட கொள்முதல் நிலையங்களைத் திறந்து, இந்த ஆண்டைப் பொறுத்தளவுக்கு 3,441 கோடி ரூபாய்க்கு இப்போது கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது. எனவே, அந்த அளவுக்குக் கொள்முதல் செய்வதில் நாம் முன்னேறியிருக்கிறோம். அதை இல்லையென்று மறுக்க முடியாது.

விவசாயிகளின் குறுவைப் பருவத்தின்போது மழை பெய்துகொண்டிருந்தது. இங்கே மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. சிவபுண்ணியம் அவர்கள் அடிக்கடி, தினந்தோறும் என்னிடம் தொலைபேசியிலே தொடர்புகொண்டேயிருப்பார்கள். ஈரப்பதம் 18 சதவிகிதம், 19 சதவிகிதத்திற்குமேல் சென்றதே கிடையாது. ஆனால், இந்த முறை தலைவர் கலைஞர் அவர்கள் டெல்லியிலே பேசியதன் விளைவாக, இந்த ஆண்டுதான் 22 சதவிகிதம் ஈரப்பதம் உள்ள நெல்லும், விவசாயிகளுக்கு உதவ வேண்டுமென்ற அடிப்படையிலே வாங்கப்பட்டது. அப்படி வாங்கும்போது, ஒரு குறிப்பிட்ட தேதி வரை நாம் ஊக்கத் தொகை ரூ.40/- கொடுத்தோம். அதாவது, 31-3-2007 வரை கொடுத்தோம். அதற்குமேல் ஊக்கத் தொகையைக் கொடுக்க மத்திய அரசாங்கம் அனுமதிக்கவில்லை. அவர்களுக்குக் கடிதம் எழுதினோம். ஆனாலும்கூட, தமிழ்நாட்டு முதலமைச்சர் மாண்புமிகு அண்ணன் கலைஞர் அவர்கள் சொன்னார்கள், 'அவர்கள் அனுமதித்தாலும், அனுமதிக்காவிட்டாலும் பரவாயில்லை, எப்படியானாலும் வரட்டும். நாம் கொடுக்கலாம்' என்று சொல்லி, இப்போது ஊக்கத் தொகையைத் தொடர்ந்து கொடுத்துக்கொண்டேயிருக்கிறோம். அவ்வாறு விவசாயிகளுக்கு ஊக்கத் தொகையாக ரூ.61.60 கோடி அளவிற்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

அது மட்டுமல்ல, இந்தக் கொள்முதல் நிலையங்களைப் பொறுத்தவரை, ஆண்டுக்காண்டு பார்த்தோமென்றால், நாம் தொலைக்காட்சியிலே பார்க்கின்றபோது, 'நெல் எடுக்கவில்லை, விவசாயிகள் ரோட்டில் நெல்லை விற்றுக்கொண்டிருக்கிறார்கள்; பஸ் போக முடியவில்லை' என்ற நிலைகளெல்லாம் ஒரு காலத்தில் இருந்தன. ஆனால் இந்த முறை, இதற்கென்று நாங்கள் துறையின் சார்பாகத் தனிக் கவனம் எடுத்து, 11-7-2006 அன்று தஞ்சாவூரிலே, விவசாயிகள், மாவட்ட ஆட்சித் தலைவர், சம்பந்தப்பட்ட சட்டப் பேரவை உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மக்கள் பிரதிநிதிகள் என அனைவரையும் ஒரு நாள் வரவழைத்து, என்ன செய்யலாம் என்பதற்காக, விழிப்புணர்வு ஏற்படுத்தக் கருத்தரங்கை நடத்தினோம். அவ்வாறு கருத்தரங்கை நடத்தியதன் வாயிலாக, விவசாயப் பெருங்குடி மக்கள் இந்த ஆண்டு எவ்விதக் குறையும் சொல்லாத அளவிற்கு, இந்த முறை பெரும்பான்மையான விவசாயிகளுக்கு உதவுகின்ற வகையில் கொள்முதல் செய்தோம். அதை இல்லையென்று மறுக்க முடியாது.



அதேபோன்று, இங்கே மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அண்ணாச்சி பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். அங்கே நெல் தூற்றுகின்ற winnowing machine-க்கு, 20 ரூபாய், 25 ரூபாய் வாங்குகின்றார்கள் என்று ஒரு கணக்கைச் சொன்னார்கள். அதைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்ற ஒரே காரணத்திற்காக, எங்கள் துறைத் தலைவராக இருக்கின்ற திரு. சண்முகம், I.A.S., அவர்களை அனுப்பி, ஓர் அறிக்கையைக் கொடுத்து, ஒரு நாள் முழுவதும் அந்தப் பகுதியிலே நீங்கள் நேரடியாகக் கொள்முதலைப் பார்க்க வேண்டுமென்று சொன்னேன். சொன்னதோடு மட்டுமல்ல, நேரடியாகத் திடீர், திடீரென்று தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர் போன்ற பகுதிகளிலே இரவென்றும், பகலென்றும் பாராமல், முதலமைச்சர் அவர்களுடைய ஆணையை ஏற்று, நாங்கள் சுற்றிச் சுற்றி வந்தோம். அதன் விளைவாக, நேரடி நெல் கொள்முதல் நிலையங்களிலே சிறு தவறுகூட நடக்காத அளவிற்கு, இந்த முறை விவசாயிகளெல்லாம் மகிழ்ச்சியடையக்கூடிய அளவிற்குக் கொள்முதல் சீராகச் செய்யப்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோலப் பல முறைகேடுகளை நாங்கள் கண்டுபிடித்தோம். அவ்வாறு கண்டுபிடித்ததன்மூலம், 301 பேர் முறைகேடு செய்திருப்பது தெரிந்து, அவர்களைத் தற்காலிக வேலை நீக்கம் செய்தோம். அதே நேரத்திலே, உயர் அதிகாரிகளுடைய தவறையும் களைவதற்காக, அதுவும் கண்டுபிடிக்கப்பட்டு, துறையின் சார்பாக 36 அதிகாரிகள்மீது நாங்கள் நடவடிக்கை எடுத்திருக்கிறோம். ஆக, கொள்முதல் நிலையங்களிலே, எந்த ஆண்டும் இல்லாத அளவிற்கு விவசாயப் பெருங்குடி மக்களெல்லாம் பாராட்டுகின்ற வகையில் இப்போது காவிரி டெல்டா பகுதியிலே கொள்முதல் நடைபெற்றிருக்கிறது என்பதைத் தோழமைக் கட்சியைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்களும், நம்முடைய மற்ற சட்டமன்ற உறுப்பினர்களும், பொது மக்களும் அறிவார்கள். இதற்கெல்லாம் உந்து சக்தியாக இருப்பவர் நம்முடைய முதலமைச்சர் அருமை அண்ணன் கலைஞர் அவர்கள் என்று சொன்னால், அது மிகையாகாது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-40

இங்கே இன்னொரு கருத்தையும் சொன்னார்கள். ஏதோ அரிசி கொள்ளை போகிறது, இந்த அரசு கண்டுகொள்ளவில்லை என்பது போல் இங்கே தொனித்தது. அது உண்மையல்ல. மிக வேகமாக

இந்தத் துறை செயல்பட்ட காரணத்தினால்தான், இன்றைக்குக் கிட்டத்தட்ட 5 பேர்மீது குண்டர் சட்டத்தின்கீழ் வழக்குப் போடப்பட்டு, அவர்களைக் கைது செய்திருக்கிறோம். அதோடு மட்டுமல்ல, சென்ற ஆண்டு டிசம்பர் வரையில் கிட்டத்தட்ட 57 cases நாங்கள் கள்ளச் சந்தைத் தடுப்புச் சட்டத்திலே போட்டோம். இந்த ஜனவரி மாதம் முதல், இன்றைக்கு ஏப்ரல் 17 ஆம் தேதி வரை கிட்டத்தட்ட 30 வழக்குகளை நாங்கள் போட்டிருக்கிறோம். கிட்டத்தட்ட 87 வழக்குகள். ஆனால், என்ன சொல்வீர்கள்? 87 வழக்குகள் போட்டார்களே, உங்கள் ஆள்தான் செய்தார்கள் என்று, சில பத்திரிகைகளில் தவறான செய்தியைப் பார்க்கிறேன். அதுவல்ல உண்மை. நாங்கள் கைது செய்து சிறையில் அடைத்தவர்கள் ஒவ்வொருவருடைய history-ஐ எல்லாம் எடுத்தோம். அவர்களுடைய சரித்திரத்தை எல்லாம் எடுத்துப் பார்க்கிறபோது, இரண்டே இரண்டை மட்டும் சுட்டிக்காட்டிச் சொல்கிறேன். கைது செய்யப்பட்டவர்களைப் பார்க்கிறபோது, அவர்கள் ஒவ்வொருவரும் என்ன சொன்னார்கள் என்று சொன்னால், நான் 3 ஆண்டு காலமாகச் செய்துகொண்டிருக்கிறேன், நான் 4 ஆண்டு காலமாகச் செய்துகொண்டிருக்கிறேன், நான் 5 ஆண்டு காலமாகச் செய்துகொண்டிருக்கிறேன் என்றுதான் அவனுடைய சரித்திரம் சொல்கிறதே தவிர, இந்த 8 மாத காலத்திலே செய்ததாக எந்தச் சரித்திரமும் இங்கே இல்லை என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள நான் விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, அந்த அளவிற்கு இன்றைக்கு 87 பேரைக் கைது செய்திருக்கிறோம் என்று சொன்னாலும்கூட, பழைய கேடிகளைக் கண்டறிந்து, அவர்களைச் சிறைகளிலே அடைத்துக் கொண்டிருக்கிறோம் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

அதிலே குறிப்பாக, சென்னையைப் பொறுத்தவரை ஒரு மூன்று பேர் 5 ஆண்டு காலம் அப்படியிருக்கிறார்கள். கோயம்புத்தூரைப் பொறுத்தளவிற்கு 3 பேர் 3 ஆண்டு காலமாகச் செய்துகொண்டிருக்கிறார்கள். தருமபுரியிலே இரண்டு பேருடைய சரித்திரத்தை எடுத்தோம். அவர்களைக் கேட்டால், இரண்டரை ஆண்டு காலமாகச் செய்துகொண்டிருப்பதாகச் சொல்கிறார்கள். இப்படித்தான் அவர்கள் செய்துகொண்டிருக்கிறார்கள். எனவே, அவற்றையெல்லாம் இந்தத் துறையின் சார்பாகக் களைவதற்கு இன்னும் விழிப்புடன் அரசு செயல்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள நான் விரும்புகின்றேன்.



அடுத்து, உணவு மானியத்தைப் பொறுத்தளவிற்கு, உணவுக் கொள்கையைப் பொறுத்தளவிற்கு, தமிழகத்தினுடைய முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்கள், சீரான முறையிலே தரமான அரிசி தர வேண்டும், விவசாயிகளுக்கு உதவுகின்ற வகையில் நெல் கொள்முதல் செய்ய வேண்டும், தவறு செய்பவர்களைக் களைய வேண்டும் என்பதிலே கண்ணும்கருத்துமாக இருக்கிறார். அவருடைய அறிவுரையை ஏற்று இந்தத் துறை இன்னும் சிறப்பாகச் செயல்படும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள நான் விரும்புகின்றேன்.

அடுத்து, கூட்டுறவுத் துறை, கூட்டுறவு என்று சொன்னாலே நாட்டுயர்வு என்று சொன்ன காலம ஒரு காலம். ஆனால் இடையிலே கூட்டுறவு நாட்டை உயர்த்தியதா என்று சொன்னால், இல்லை, இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். அந்த நிலைமைக்குத் தள்ளப்பட்டது. ஆனால், அறிஞர் அண்ணா சொல்வார், "கூட்டுறவில் ஈடுபட்டுள்ளவர்கள் தங்கள் சொந்த நலனை முன்வைக்காமல் பிறர் நலனைக் கருதிப் பாடுபட வேண்டும்" என்று அண்ணா சொல்வார். "கூட்டுறவு என்பது பொருளாதாரம் மற்றும் சமுதாயச் சிந்தனைக்கு ஏற்ற ஒன்றாகும், சமத்துவ நிலையை அறியப் பயன்படுத்தும் முதல் படியே கூட்டுறவு" என்று பண்டித நேரு சொல்வார். நம்முடைய தலைவர் டாக்டர் கலைஞர் சொல்வார், "காகங்களைப்போலக் கரைந்து, ஒன்று கூடி உண்டு செல்லுகிற நிலையில்லாமல், வளம் கொழிக்கக் கூடுகிற மேகங்களைப்போல் கூட்டுறவு இருக்க வேண்டும்" என்று தலைவர் கலைஞர் அவர்கள் அவ்வப்போது குறிப்பிடுவார். அப்படித்தான் கூட்டுறவு இருக்க வேண்டும். ஆனால், இருந்ததா? இல்லை.

நான் இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். அந்த ஐந்தாண்டு காலம், ஏற்கெனவே பல வகைகளிலே விவசாயிகளுக்கு உதவுவதற்காக வட்டித் தள்ளுபடி என்கிற ஆணையெல்லாம் வந்திருக்கிறது, இல்லை என்று மறுக்கவில்லை. ஆனால், போடப்பட்ட ஆணைகளுக்கெல்லாம் பணம் கொடுத்திருந்தால், அரசாங்கம் பணம் கொடுத்து, அது வங்கிகளுக்குப் போயிருந்தால் இந்த அவல நிலை கூட்டுறவிற்கு வந்திருக்காது. பணம் கொடுத்திருக்கிறீர்கள், ஒரு ஐநூறு கோடி ரூபாயைக் கொடுத்தீர்கள். ஆனால், சொன்னது என்ன? 4 ஆயிரத்து சொச்சம் கோடி ரூபாய் சொன்னீர்கள். மீதிப் பணம் போகாத காரணத்தினால்தான் கூட்டுறவு வங்கிகள் எல்லாம் கீழே போயின. சம்பளம் கிடைப்பதில்லை. வைக்கப்பட்ட வைப்புத்

தொகை கிடைக்கவில்லை. இந்த நிலைதான் இருந்தது. எனவே, தலைவர் கலைஞர் அவர்கள் பொறுப்பேற்றவுடனேயே, இன்றைக்குத் தமிழ்நாட்டைப் பொறுத்தளவிற்கு சுமார் 7 ஆயிரம் கோடி ரூபாயைத் தள்ளுபடி செய்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இது எதைக் காட்டுகிறது என்று சொன்னால்,

*"வாடித் தொழிலின்றி வறுமையால் சாவதெல்லாம்,
கூடித் தொழில் செய்யா குற்றத்தால் தோழர்களே"*

என்று பாரதிதாசன் சொல்லுவார். கூடித் தொழில் செய்யவில்லை என்று சொன்னால், கூட்டுறவு நிறுவனம் இல்லை என்று சொன்னால் என்ன நடக்கும் என்றால், வளம் கொழித்த மாநிலம் மகாராஷ்டிரா மாநிலம். ஆனால், வளம் கொழித்த மகாராஷ்டிரா மாநிலத்திலே யவத்மால், அமராவதி, சந்திரப்பூர், இவைகளெல்லாம் மாவட்டங்கள். நாம் பத்திரிகையிலே படிக்கிறோம், என்ன படிக்கிறோம் என்றால், அந்த மாவட்டங்களில் இருக்கின்ற விவசாயிகள் எல்லாம் கடன் தொல்லை தாங்க முடியாமல் தினம், தினம் செத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதையும் நாம் பார்க்கிறோம்.

தலைவர் கலைஞர் அவர்கள் அதை உணர்ந்த காரணத்தினால்தான், அந்த நிலை தமிழ்நாட்டிற்கு வந்துவிடக் கூடாது என்ற உணர்வோடுதான், அவர் தேர்தல் அறிக்கையிலே, சிறு, குறு விவசாயிகளுக்குக் கடனைத் தள்ளுபடி செய்கிறேன் என்று சொன்னார். அதைத்தான் சொன்னார். நாம் இப்பொழுதும் சொல்வோம், சொல்லாததையும் செய்பவர்தான் தலைவர் கலைஞர். சிறு, குறு என்று இல்லாமல், அனைத்து விவசாயிகளுக்கும்—விவசாயிகளைப் பாகுபாடு பார்க்க வேண்டாம், அனைத்து விவசாயிகளுக்கும்—(மேசையைத் தட்டும் ஒலி) மின்சாரத்தைக் கொடுக்கிறபோதுகூட ஐந்து horse power உள்ள பம்ப்செட்டுக்கா, மூன்று H.P.-க்கா என்றெல்லாம் அப்பொழுது விவாதம் வந்தது. தலைவர் கலைஞர் சொன்னார், விவசாயிகளில் சின்ன விவசாயி, பெரிய விவசாயி எல்லாம் என்ன? அனைத்து விவசாயிகளும் ஒரே விவசாயிகள்தான் என்று எப்படி இலவச மின்சாரத்தைத் தலைவர் கலைஞர் அவர்கள் கொடுத்தாரோ, அதைப்போல, சிறிய விவசாயி,



பெரிய விவசாயி என்று பார்க்காமல், சுமார் 7,000 கோடி ரூபாயைத் தலைவர் கலைஞர் அவர்கள் தள்ளுபடி செய்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-45

"சுமை சுமந்து சோர்ந்து போயிருப்பவர்களே, எல்லோரும் என்னிடம் வாருங்கள், நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருகிறேன்" என்று பைபிளிலே ஒரு வாசகம் உண்டு. "சுமை சுமந்து சோர்ந்து போயிருப்பவர்களே, எல்லோரும் என்னிடம் வாருங்கள். நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருகிறேன்" என்ற அந்த பைபிள் வாசகத்தை மெய்ப்பிக்கின்ற வகையில், கடன்பட்டிருந்தவர்களின் சுமைகளையெல்லாம் இன்றைக்கு அகற்றிவிட்டு, (மேசையைத் தட்டும் ஒலி) விவசாயப் பெருங்குடி மக்கள் இளைப்பாறுகின்ற வகையிலே தலைவர் கலைஞர் அவர்கள் விவசாயிகளுடைய உன்னதத் தலைவராக இன்றைக்கு வாழ்ந்துகொண்டிருக்கிறார். அவர் வாழுகிற காலம்தான் தமிழருக்கு என்றைக்கும் ஒரு பிரகாசமான காலமாக இருக்கும். (மேசையைத் தட்டும் ஒலி)

அண்ணன் துரைமுருகன்போன்றவர்கள், இலக்கியத்தைப் பற்றிப் புரிந்துகொண்டவர்கள் சொல்வார்கள். கடனைப் பற்றிப் பேசுகிறபொழுது என்ன சொல்வார்கள் என்று சொன்னால், "கடன் பட்டார் நெஞ்சம்போல் கலங்கினான் இலங்கை வேந்தன்"—அந்த இலங்கை வேந்தன் இருக்கிறாரே, அவன் ஒரு பெரிய வீரன். மூன்று உலகத்தையும் வென்றதாக அவனுக்கு வரலாறு உண்டு. எட்டுத் திக்கும் சென்று அவன் வென்றதாக வரலாறு உண்டு. அந்த வரலாற்று நாயகன் இலங்கேஸ்வரன், அவன் என்ன சொல்வான் என்று சொன்னால், அவன் அனைத்தும் இழக்கிறான், விபீஷணனை இழக்கிறான்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வரலாறு இல்லை, புராணம் என்று சொல்வார்கள்.

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** புராணம். நான் history என்று சொன்னேன். புராணம் என்றே வைத்துக்கொள்ளலாம். நாங்கள் பகுத்தறிவாளர்கள். அதை நம்பியதால் அல்ல, இருக்கிற கூற்றைச் சொல்கிறேன். இருக்கிற நடைமுறையைச் சொல்கிறேன். நான் பகுத்தறிவாளன். தந்தை பெரியாரை ஏற்றுக்கொண்டவன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** ஒரு வகையில் பார்த்தால், பண்டித நேரு அவர்கள் இராமாயணமே ஆரிய—திராவிடப் போராட்டம்தான் என்று எழுதியிருக்கிறார். அந்த வகையிலே பார்த்தால், அது ஒரு வரலாறு.

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** இலங்கேஸ்வரன் தன்னிடமிருந்த விபீஷணனை இழந்து, கும்பகர்ணனை இழந்து, காலாட்படையை இழந்து, தேர்ப் படையை இழந்து, குதிரைப் படையை இழந்து, அனைத்தையும் இழந்து நிற்கிறபோது இராமன் சொன்னதாகச் சொல்லப்படுகிறது. 'இன்று போய் நாளை வா' என்று சொன்னான் என்று சொல்லப்படுகிறது. அந்த வீரன் இரவு நேரத்திலே போய் விம்மினானாம். நான் ஒரு வீரன், சுத்த வீரன். ஆனால், நம்மைப் போய், இன்று போய் நாளை வா என்று சொல்லிவிட்டானே என்று இரவெல்லாம் விம்மி, விம்மி அழுததாக இராமாயணம் சொல்கிறது. அதைப்போலத்தான், விவசாயி அந்த நிலையில்தான் இருந்தான். அதனால்தான் ஒப்பிட்டார்கள். 'கடன் பட்டார் நெஞ்சம்போல் கலங்கினான் இலங்கை வேந்தன்' என்று ஒப்பிட்ட காரணத்தினால், 'விவசாயப் பெருங்குடி மக்களே, நீங்கள் கலங்க வேண்டாம்; உங்கள் அண்ணன், சகோதரன் நான் இருக்கிறேன்' என்று தலைவர் கலைஞர் அவர்கள் இன்றைக்கு விவசாயிகளுக்குப் பெரும் உதவியாக இருந்திருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி)

தலைவர் கலைஞர் அவர்கள் இன்னொரு கருத்தையும் சொல்வார். 'கூட்டுறவு இயக்கத்திலே அரசியல்வாதிகள் இருக்கலாம், ஆனால், அங்கே அரசியல் இருந்துவிடக் கூடாது' என்று சொல்வார். அரசியல் இருந்துவிடக் கூடாது என்று எண்ணிய காரணத்தினால்தான், எங்களுடைய மாவட்டத்திலேகூட நான் இந்தக் கடன் தள்ளுபடி செய்யப்பட்டவர்களுடைய பட்டியலை வாங்கிப் பார்த்தேன். பார்த்தால், சட்டமன்ற உறுப்பினர்கள், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் என்று அப்படிப் பார்க்கவில்லை என்பதால்தான், அரசியலைப் பார்க்காததால்தான், பல முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள், நம்முடைய எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவராக இருக்கிற மாண்புமிகு பன்னீர்செல்வம் அவர்களுடைய இயக்கத்தைச் சார்ந்தவர்கள், ஒன்றியக் குழுத் தலைவராக இருந்தவர்கள், கிளைக் கழகத்தினுடைய செயலாளர்களாக இருந்தவர்கள் எல்லோரும்கூட அனுபவித்துக்கொண்டிருக்கிறார்கள். இல்லை என்று சொல்ல முடியாது. அதைத் தவறு என்று சொல்லவில்லை. (குறுக்கீடு) இல்லை, இல்லை, தவறு என்று



சொல்லவில்லை. அதிலே கட்சியில்லை. விவசாயிகளைப் பொறுத்தளவுக்கு, கூட்டுறவிலே அரசியல் வேண்டாம் என்று சொல்வதற்காக இதை உதாரணமாகச் சொல்கிறேன். அதைப் பார்க்கவில்லை இந்த அரசு. அரசியலாகப் பார்க்கவில்லை. அனைவருக்கும் சலுகைகள் வழங்கி இருக்கிறோம் என்பதற்காகச் சொல்ல விரும்புகின்றேன். எனவே, அந்த வகையில் இப்போது விவசாயிகளுடைய கடனைத் தள்ளுபடி செய்தோம்.

இங்கேகூடக் கேட்டார்கள். எத்தனை விவசாயிகள் அனுபவித்தார்கள் என்று கேட்டார்கள். நான் பத்திரிகையிலேகூட சில செய்திகளைப் பார்க்கிறேன். ஏதோ சிறு விவசாயிகளே இதிலே பலன் பெறவில்லை அதிகமாக என்ற செய்திகளை நாம் பார்க்கிறோம். அதுவல்ல உண்மை. உண்மை என்னவென்று சொன்னால், ஒட்டுமொத்தமாகத் தமிழ்நாட்டிலே 22 இலட்சத்து 57 ஆயிரத்து 491 நபர்கள், விவசாயப் பெருமக்கள் இதை அனுபவித்திருக்கிறோம், பலனை அனுபவித்திருக்கிறோம். அதிலே குறிப்பாக, 17 இலட்சத்து 731 சிறு விவசாயிகள், குறு விவசாயிகள், இதை நாம் அனுபவித்துக் கொண்டிருக்கிறோம். அதை இல்லையென்று மறுக்க முடியாது. அதற்குப் பட்டியல் இருக்கிறது. 17 இலட்சத்து 731 சிறு, குறு விவசாயிகளும் இதிலே அனுபவித்துக்கொண்டிருக்கிறோம். இல்லையென்று சொல்ல முடியாது.

பிற்பகல் 1-50

அதே நேரத்திலே, 2006-2007-ல் 1,435 கோடி ரூபாய் கூட்டுறவு வங்கிகளுக்கு, நபார்டுக்கு, மத்திய அரசுக்கு நிதி ஒதுக்கப்பட்டது. ஆனால், நாம் எந்த அளவிற்குக் கட்டினோம் என்று சொன்னால்— இங்கே கேட்டார்கள். நம்முடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் சொன்னார், நீங்கள் எல்லாம் பணத்தை ஒழுங்காக வங்கிகளுக்கெல்லாம் அனுப்பியிருந்தால், வங்கிகள் நலிந்திருக்காது என்று குறிப்பிட்டார். அதைச் சொல்லிவிட்டுக்கூடச் சொன்னார், திருநெல்வேலியிலே ஒரு வங்கியிலே இப்படியொரு நிலை இருக்கிறது என்று சொன்னார். நாங்கள் ஆணை பிறப்பித்திருக்கிறோம். என்ன சொல்லியிருக்கிறோம்? 14 இலட்சத்து 32 ஆயிரத்து 100 ரூபாய் பணத்தை அனுப்பி, அந்த 32 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்களைக் கடன் கொடுக்கச் சொல்லியிருக்கிறோம். ஆணை என்னுடைய கையிலே இருக்கிறது. கடன் கொடுக்கச் சொல்லியிருக்கிறோம். (குறுக்கீடு) இதோ என்னிடம் ஆணையிருக்கிறது.

திருநெல்வேலியிலே—உங்களுக்கு வந்த ஆணையிருக்கலாம். என்னிடம் ஆணையிருக்கிறது. நான் கொடுக்கத் தயாராக இருக்கிறேன். ஆக, கடனைக் கொடுக்கச் சொல்லியிருக்கிறோம். சரி, இந்தப் பணம் எப்படி வந்தது? வங்கியைப் பொறுத்தளவுக்கு 1,435 கோடி ரூபாய்தான் சென்ற முறை நாம் ஒதுக்கினோம், நிதிநிலையிலே. ஆனால், எவ்வளவு கொடுத்தோம் தெரியுமா? கூடுதலாகக் கொடுத்திருக்கிறோம் என்றால், 1,674.4 கோடி ரூபாயை. நிதிநிலையிலே சொன்னதைவிடக் கூடுதலாக 239.04 கோடி ரூபாயை, அதிகமாகவே நம்முடைய வங்கிகளுக்குக் கொடுத்திருக்கிறோம், எந்தெந்த வங்கிகளுக்கு? மத்திய வங்கிக்கு, தொடக்க வங்கிக்கு, மத்திய அரசாங்கத்திற்கு, நபார்டுக்கு. ஆக, பணத்தைக் கொடுத்திருக்கிறோம்.

அதோடு மட்டுமல்லாமல், 2007-2008—இந்த ஆண்டு, 1,628 கோடி ரூபாயை நாம் ஒதுக்கியிருக்கிறோம். இந்தப் பணமெல்லாம் போகப் போகிறது. வங்கிக்குத்தான் போகப் போகிறது. நபார்டுக்குக் கொடுக்கப் போகிறோம். சென்ற முறை சொன்னதைவிடக் கூடுதலாகக் கொடுத்தோம் என்பதை நீங்கள் நம்ப வேண்டும். அது வராது என்றெல்லாம் நினைக்கக் கூடாது. கட்டாயம் செய்வோம். அதிலே நம்பிக்கை வையுங்கள். தலைவர் கலைஞர்மீது நம்பிக்கை வையுங்கள், அவரை நம்பியவர்கள் யாரும் கெட்டதாக வரலாறே கிடையாது. (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, இந்த ஆண்டு சொன்னபடியும் அந்தப் பணம் போய்ச் சேரும் என்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

பயிர்க் கடனைப் பொறுத்தளவிற்கு, சென்ற ஆண்டு, 2006-2007-லே 1,235 கோடி ரூபாய் இலக்கு என்று சொன்னோம். நிதிநிலை அறிக்கை விவாதத்தில்கூட, 1,235 கோடி ரூபாய் இலக்கு என்று சொன்னீர்களே, குறைவாகக் கொடுத்திருக்கிறீர்களே என்று நம்முடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் இங்கே குறிப்பிட்டார். நான் சொன்னேன், இன்னும் இருக்கிறது, நாள் இருக்கிறது, அவசரப்படாதீர்கள். இன்னும் 30 ஆம் தேதி வரை இருக்கிறது மார்ச்சுக்கு என்று சொன்னேன். ஆனால், மார்ச் கணக்குப் பிரகாரம் இன்றைக்கு எடுத்துக்கொண்டால், சொன்னது 1,235 கோடி. ஆனால், மார்ச் முடிய நாம் விவசாயிகளுக்காக கொடுத்திருப்பது 1250.62 கோடி ரூபாய். அதிகமாகவே நாம் கொடுத்திருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) சொல்லாததைச் செய்வதுதானே தலைவர் கலைஞருடைய அரசு? ஆகவே, கூடுதலாகக் கொடுத்திருக்கிறோம் என்பதை மறுக்க முடியாது.



காவிரி டெல்டா பகுதி. அங்கே தஞ்சை, கும்பகோணம் என்று இரண்டு மாவட்ட மைய வங்கிகள் இருக்கின்றன. அந்த வங்கிகளிலே இதுவரைக்கும் இல்லாத அளவிற்கு—கணக்கெடுத்துப் பாருங்கள்—இதுவரைக்கும் இல்லாத அளவிற்கு 167 கோடி ரூபாயைக் காவிரி டெல்டா விவசாயிகளுக்காகத் தலைவர் கலைஞர் அரசு கொடுத்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதனால், பிரச்சினையே இல்லை. பணம் கொடுத்தோம், நிறைய உற்பத்தியாகியது. உரத்தின் விலையைக் கட்டுப்படுத்த வேண்டும் என்பதற்காகக் கிட்டத்தட்ட 3 இலட்சம் மெட்ரிக் டன் உரத்தைக் கொடுத்தோம். உரத்தினுடைய விலையைக் கட்டுப்படுத்தினோம் அதுபோன்ற பகுதிகளிலே. உரம் கொடுக்கவில்லையென்றால் என்னவாகும்? சில நேரங்களில் பணம் கொடுப்போம், உரம் கிடைக்காது. உரம் உரிய நேரத்திலே விவசாயிகளுக்குப் போகவில்லையென்று சொன்னால், உரத்தின் விலை ஏறிவிடும். அதனால் தலைவர் கலைஞர் அவர்கள் அவர்களுக்கு முன்னுரிமை அளித்து, காவிரி டெல்டா பகுதி உட்பட மாநிலத்திலே சுமார் 3 இலட்சம் மெட்ரிக் டன் உரத்தையும் கொடுத்து, உரத்தின் விலையையும் கட்டுப்படுத்தினார் என்று சொன்னால், அது மிகையாகாது.

2006-2007-லே அரசு அறிவித்தது, 9 சதவிகிதத்திலிருந்து 7 சதவிகிதமாக நாம் குறைக்கிறோம் என்று சொன்னோம். அப்படிக் குறைத்ததனுடைய விளைவாக, இந்த மாநில அரசு, வங்கிகளுக்கு 18.28 கோடி ரூபாயை இன்றைக்கு அந்த வட்டிக் குறைப்புக்காக மட்டும் பணம் கொடுத்திருக்கிறோம். இப்போது சொல்லியிருக்கிறோம். என்ன சொல்லியிருக்கிறோம்? ஒழுங்காக விவசாயி திரும்பப் பணத்தைக் கட்டிவிட்டால், அவனைப் பாராட்டுகின்ற வகையில், 'ஆஹா, correct ஆகப் பணம் கட்டிவிட்டாய்! சபாஷ்!" என்று சொல்வதற்கு, அவனுக்கு இன்றைக்கு 7 சதவிகிதத்திலிருந்து 5 சதவிகிதமாகக் குறைத்து, அந்த வட்டியையும் தமிழக அரசு, தலைவர் கலைஞர் அரசு வங்கிகளுக்குக் கட்டாயம் தரும். அதிலே ஒன்றும் மாற்றமில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) நாங்கள் ஏமாற்றிவிடமாட்டோம். விவசாயிகளுக்குக் கட்டாயம் தருவோம். எனவே, அந்த வகையில் விவசாயிகளுக்கு, அவர்களுடைய தோழனாக இந்த அரசு இருக்கிறது என்று சொன்னால், அது மிகையாகாது.

[திரு. எ.வ. வேலு] [2007 ஏப்ரல் 17

சென்ற ஆண்டைப் பொறுத்தளவிற்கு ஏன் விவசாயிகளுக்கு மட்டும்தான் செய்தீர்களா, வேறு எதுவும் செய்யவில்லையா என்று கேட்பவர்களுக்கும் திரும்பச் சொல்ல விரும்புகின்றேன். நகைக் கடன் கொடுக்கப்பட்டது. சுய உதவிக் குழுவிற்குப் பெரும்பான்மையாகக் கடன் கொடுக்கப்பட்டது. பண்ணைசாராக் கடன் கொடுக்கப்பட்டது. இப்படித் தமிழ்நாட்டிலே கடன் கொடுக்கப்பட்ட மொத்த விவசாயிகளின் எண்ணிக்கை 65,72,918. 9,071.81 கோடி ரூபாய் இன்றைக்குக் கடனாகக் கொடுக்கப்பட்டு இருக்கிறது என்று சொன்னால், அது மிகையாகாது.

*பிற்பகல் 1-55*

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கம். நம் ஊரிலே தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கம் என்றே பல பேர் சொலலமாட்டோம், L.D. bank, L.D. bank என்றுதான் சொல்வோம். அதுதான் ஏற்கெனவே நடைமுறையில் இருந்தது. தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் முடங்கிப் போய்க் கிடந்தன. அங்கு இருந்தவர்கள் என்ன பண்ணுவது என்று தெரியாமல் இருந்தார்கள். நான்கூட அமைச்சராகப் பொறுப்பேற்றவுடனே அந்த வங்கிகளைக் கேட்டுப் பார்த்தேன். தலைவர் கலைஞர் அவர்கள், இந்த முறை அந்த வங்கிகள் எல்லாம் முடக்கப்படக் கூடாது. மீண்டும் அவை புத்துயிர் பெற வேண்டும் என்கிற ஒரே காரணத்திற்காக, தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளுக்காக 100 கோடி ரூபாயை இப்போது நீர்ப்பாசன வசதிக்காகத் தலைவர் கலைஞர் அவர்கள் கொடுத்து இருக்கிறார் என்று சொன்னால், அது மிகையாகாது.

அதேபோன்று, சென்ற அரசாங்கம் 199 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்களைக் கலைத்து விடலாம் என்று முடிவு செய்துவிட்டது. முடிவு செய்து, கோப்புகள் எல்லாம்கூட வந்து விட்டன. தலைவர் கலைஞர் சொன்னார், 199 சங்கங்களைக் கலைத்துவிட்டால் அந்தப் பகுதியில் இருக்கிற விவசாயிகளின் நிலைமை என்ன என்பதை உணர்ந்து, சென்ற முறை நம்முடைய மாண்புமிகு அண்ணன் கோ.சி. மணி அவர்கள் இதே மாமன்றத்திலே அறிவித்தார்கள். 199 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நாங்கள் புத்துயிர் கொடுத்து, அதை நடைமுறைப்படுத்துவோம் என்று சொன்னார். 199 சங்கங்களில் 190 சங்கங்கள் இப்போது நடைமுறைப்படுத்தப்பட்டு, அந்த வங்கிகளில் இப்போது கடன்கள் எல்லாம் கொடுக்கப்பட்டு இருக்கின்றன



2007 ஏப்ரல் 17] [திரு. எ.வ. வேலு]

என்பதையும் இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மீதி இருப்பது 9 சங்கங்கள். அந்த 9 சங்கங்களில் இருக்கிற விவசாயிகள்கூட பக்கத்தில் இருக்கிற சங்கங்களைப் பார்த்து, அவர்களுக்கும் கடன் கொடுக்கச் சொல்லியாகிவிட்டது. இருந்தாலும்கூட, இன்னும் இரண்டொரு மாதங்களிலே அந்தச் சங்கங்களும் தொடர்ந்து இயங்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகளைத் துறையின் சார்பாக முனைப்போடு இன்றைக்கு எடுத்துக்கொண்டு இருக்கிறோம் என்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இங்கே பேசிய சட்டமன்ற உறுப்பினர்கள் சிலர் சொன்னார்கள். கருணை அடிப்படையில் பல பேருக்கு இன்னும் வேலை கொடுக்கப்படாமல் இருக்கிறது என்று சொன்னார்கள். இந்த ஆண்டு 244 பேர்கள் இப்போது பணியில் அமர்த்தப்பட்டு இருக்கிறார்கள்; கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்டிருக்கிறார்கள். சிலருக்குத் தகுதி இல்லை. ஏனென்று சொன்னால், இது கூட்டுறவு இயக்கம். ஒரு unit இருக்கிறது என்று சொன்னால், செயலாளர் ஒருவர் இறந்துவிட்டார் என்று சொன்னால், அவருடைய பிள்ளைக்குத் தகுதி இருக்க வேண்டும் செயலாளராவதற்கு. இல்லையென்றால், ஒன்றும் செய்ய முடியாது. அதனால், இதையெல்லாம்கூட முதலமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, இதை ஒரு District Unit ஆக்கலாமா, Divisional Unit ஆக்கலாமா, அப்படி இருப்பவர்களுக்கு வேறு இடங்களிலே மாற்று வேலை தர முடியுமா என்கிற ஆய்விலே அது இருக்கிறது. எனவே, அந்த ஆய்வையெல்லாம் நிறைவு செய்த பின்பு, இன்னும் துறையிலே இருப்பவர்களுக்கெல்லாம், எஞ்சியிருப்பவர்களுக்கும் கருணை அடிப்படையிலே வேலை கொடுப்பதற்கு இந்த அரசு முயற்சிக்கும் என்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

பணி வரன்முறை பற்றி சென்ற முறை சொன்னோம். பணி வரன்முறையைப் பொறுத்தளவிற்கு நம்முடைய அரசாங்கம்—எனக்கு நேற்றைய வரை கொடுத்திருக்கிற கணக்கு, அரசாங்கம் சொல்லியிருக்கிற கணக்கு, துறையின் சார்பாக வந்திருக்கிற எண்ணிக்கை, 25,060 பேருக்குப் பணி வரன்முறைப்படுத்திவிட்டோம்; இன்னும் ஒரு சிலர்தான் எஞ்சியிருக்கிறார்கள். அவர்களுக்கும், அவர்களுடைய தகுதியின் அடிப்படையிலே பணிகளைக் கொடுப்பதற்கு இந்த அரசாங்கம் வேண்டிய முயற்சிகளைச் செய்யும் என்று இந்த நேரத்திலே தெரிவித்துக்கொண்டு. சில அறிவிப்புகளை

நான் சொல்ல விரும்புகின்றேன். காலமும், நேரமும் ஆகிவிட்டது என்று எனக்குத் தெரிகிறது. பசி தேவன் ஒவ்வொருவருடைய வயிற்றிலே நுழைந்துகொண்டு எதை எதையோ செய்கிறான் என்பதை, செய்கைமூலமாகச் சட்டமன்ற உறுப்பினர்கள் காட்டுவதையும் நான் பார்க்கிறேன். இருந்தாலும், மகிழ்ச்சிகரமான செய்தி, இதைத்தான் நீங்கள் எல்லாம் விரும்புவீர்கள் என்று எனக்குத் தெரியும். எனவே, (குறுக்கீடுகள்) பசி தேவனும், பசி அரக்கனும் ஒன்று. அப்படித்தான். பசி அரக்கன் வயிற்றிலே நுழைந்துகொண்டாலும் சரி, ஏதோ ஒன்று. பசி எனக்குப் புரிகின்றது. ஆனாலும், ஆண்டுக்கொரு முறைதான் அமைச்சர் தன்னுடைய துறையின் சார்பாக உரையை நிகழ்த்த முடியும். எனவே, பொறுமையாக இருங்கள் என்று நான் உங்களிடத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

**உணவுத் துறையின் சார்பாக,**

1. தற்போது எல்காட் நிறுவனம்மூலம் மாநிலத்தின் அனைத்துப் பகுதிகளுக்குமான புதிய குடும்ப அட்டைகள் அச்சிடும் பணி சென்னையில் நடைபெற்று வருகிறது. அச்சிடுதலைப் பரவலாக்கினால் துரிதமாகப் புதிய அட்டைகள் வழங்க ஏதுவாகும். எனவே, ஒவ்வொரு மாவட்டத்திலும் புதிய குடும்ப அட்டைகள் மாவட்ட ஆட்சியர்மூலமாகவே அச்சிட்டு வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) சென்னை மாவட்டத்தைப் பொறுத்தவரை, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையினுடைய முதன்மை ஆணையாளர் மற்றும் ஆணையாளர்மூலமாகக் குடும்ப அட்டைகள் சென்னையில் மட்டும் வழங்கப்படும். பிற மாவட்டங்களிலே மாவட்ட ஆட்சித் தலைவருடைய கட்டுப்பாட்டிலே வழங்கப்படும். அநேகமாக இந்த செய்தி அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் ஒரு மகிழ்ச்சிகரமான செய்தியாக இருக்கும் என்று நான் கருதுகின்றேன்.

பிற்பகல் 2-00

2. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் நடத்தப்படும் நியாய விலைக் கடைகள் மற்றும் இதர நியாய விலைக் கடைகளுக்கு வாராந்திர விடுமுறை நாள் வெள்ளிக்கிழமை என்பதற்குப் பதிலாக ஞாயிற்றுக்கிழமை என மாற்றியமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

3. பொது விநியோகத் திட்டத்திற்கான பொருட்கள் மத்திய உணவுக் கழகக் கிட்டங்கிகளிலிருந்து தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகக் கிட்டங்கிகளுக்கும், தமிழ்நாடு நுகர்பொருள்



வாணிபக் கழகக் கிட்டங்கியிலிருந்து பொது விநியோகக் கடைகளுக்கும் நகர்வு செய்வது மின்னணுச் செய்திகள் (SMS) மூலமாகக் கண்காணிக்கப்படும்.

4. பொது விநியோகத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் பொருட்கள் கடத்தப்படுவதைத் தடுக்க, பொருட்கள் எடுத்துச் செல்லும் லாரிகளில், அந்த வாகனங்களின் நகர்வு குறித்தும், அவை செல்லும் பாதைகள் குறித்தும் கண்டறியும் கருவிகள் (GPS) பொருத்தப்பட்டு, அந்த வாகனங்களின் நகர்வினை முழுமையாகக் கண்காணிக்கும்பொருட்டு, ஒரு பரிட்சார்த்தத் திட்டமாக கிருஷ்ணகிரி மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

5. எரிவாயு இணைப்பு மற்றும் அடுப்பு வழங்கும் திட்டத்தின்கீழ்ப் பயனாளிகளைத் தேர்வு செய்தல் மற்றும் திட்டத்தை நடைமுறைப்படுத்துதல் ஆகியவற்றை மாவட்ட ஆட்சியர்களே மேற்கொள்கிறார்கள். சென்னை நகரைப் பொறுத்தளவிற்கு மேற்கொள்கிறார்கள். சென்னை மாவட்ட ஆட்சியரால் மேற்கொள்ளப்பட்டு இப்பணிகள், சென்னை மாவட்ட ஆட்சியரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சென்னை நகரைப் பொறுத்தளவில் இனி எரிவாயு இணைப்பு மற்றும் அடுப்பு வழங்கும் திட்டம் சென்னை மாநகராட்சி ஆணையர்மூலமாகச் செயல்படுத்தப்படும்.

6. எரிவாயு இணைப்பு மற்றும் அடுப்பு வழங்கும் திட்டத்தின்கீழ் இணைப்புகள் மற்றும் சிலிண்டர்களை உரிய நேரத்தில் வழங்குவதற்கு முகவர்களின் சேவை சிறப்பாக இல்லாத இடங்களில், கூட்டுறவுச் சங்கங்களே எரிவாயு முகவர்களாகச் செயல்பட்டால் இத்திட்டத்தை நல்ல முறையில் செயல்படுத்தலாம் எனக் கருதப்படுகிறது. இதுபோன்ற இடங்களில் கூட்டுறவுச் சங்கங்கள் எரிவாயு முகவர்கள் உரிமத்தைப் பெற வேண்டும். கூட்டுறவுச் சங்கங்கள் இப்பணியை மேற்கொள்ளப் போதிய நிதி ஆதாரம் இல்லையென்றால், அந்த இடங்களில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் முகவராகச் செயல்படும்.

7. குறுவைப் பருவத்தில் மழை தொடர்ந்து பெய்யும்பொழுது, திறந்தவெளி சேமிப்புக் கிட்டங்கிகளில் அதிக ஈரப்பதம் உள்ள நெல்லைக் காற்றோட்டம் செய்ய வசதியின்மையால் ஏற்படும் இழப்பைத் தவிர்க்க, தஞ்சாவூர் மாவட்டத்தில் பிள்ளையார்பட்டி மற்றும் புதுக்கோட்டை மாவட்டத்தில் புனக்குளம் ஆகிய இடங்களில் கான்கிரீட் தளத்துடன்கூடிய தற்காலிகக் கூரை அமைப்புடன் 20,000 மெட்ரிக் டன் கொள்ளளவுகொண்ட சேமிப்புக் கிட்டங்கிகள் ரூ.3 கோடி செலவில் அமைக்கப்படும்.

[திரு. எ.வ. வேலு] [2007 ஏப்ரல் 17

8. வேலூர் மாவட்டம், குடியாத்தத்தில் 1,500 மெட்ரிக் டன் கொள்ளளவுகொண்ட புதிய கிட்டங்கி ஒன்று ரூபாய் 40 இலட்சம் செலவில் கட்டப்படும்.

9. மூட்டைகளைக் கிட்டங்கிகளில் சுமை தூக்குவோர் சுமந்து செல்வதிலுள்ள சிரமத்தையும், காலதாமதத்தையும் கருத்தில்கொண்டு, பரிட்சார்த்தமாக, சென்னை, அண்ணா நகர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகக் கிட்டங்கியில் மூட்டைகளை இறக்குதல், நகர்வு செய்தல் மற்றும் ஏற்றுதல் பணிகளுக்கான தானியங்கி இயந்திர இழுவை ரூபாய் 25 இலட்சம் செலவில் அமைக்கப்படும்.

10. நெல் கொள்முதல் பணிக்கான கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் நோக்குடன், திருச்சி மாவட்டம், இருங்களூர் மற்றும் அதவத்தூரில் முறையே 10,000 மெட்ரிக் டன் கொள்ளவுடன்கூடிய திறந்த வெளி சேமிப்பு கான்கிரீட் தளங்கள் ரூபாய் 80 இலட்சம் செலவில் அமைக்கப்படும்.

11. நெல் கொள்முதல் செய்யப்படும்போது விவசாயிகளே நேரடியாக எடையை எளிதில் சரிபார்த்துக்கொள்ளும் வகையில், தற்போதுள்ள இயந்திரத் தராசுகளுக்குப் பதிலாக ரூபாய் 100 இலட்சம் செலவில் மின்னணுத் தராசுகள் வாங்கிப் பயன்படுத்தப்படும்.

12. சென்ற ஆண்டு முதல் நெல் கொள்முதல் நிலையக் கட்டடங்களை மீண்டும் கட்ட இந்த அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. சென்ற ஆண்டு சுனாமி நிதியில் 15 நெல் கொள்முதல் நிலையங்களும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிதியில் 10 நிலையங்களும் கட்டப்பட்டு வருகின்றன. இதைத் தொடர்ந்து, நடப்பாண்டிலும் 10 இடங்களில் நேரடி நெல் கொள்முதல் நிலையக் கட்டடங்கள் ஒவ்வொன்றும் ரூபாய் 12 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்படும்.

13. நெல் கொள்முதல் பணிகளில் ஈடுபட்டு வரும் கொள்முதல் நிலையப் பணியாளர்களில் பட்டியல் எழுத்தர்கள், உதவியாளர்கள் மற்றும் காவலர்கள் ஆகியோர் பல ஆண்டுகள் பணிபுரிந்தாலும், பணியில் சேர்ந்தவர்கள் வாங்கும் அதே தொகுப்பூதிய அளவைப் பெற்று வருகின்றனர். பல வருடங்கள் பணிபுரியும் அலுவலர்களுக்குக கூடுதல் தொகுப்பூதியம் வழங்கப் பல ஆண்டுகளாகக் கோரிக்கை விடுத்து வருகின்றனர். இவர்களின் கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு, இவர்களுக்கு வழங்கப்படும் தொகுப்பூதியத்தில் 5 வருடத்திற்குக் குறைவாக அனுபவம் உள்ளவர்கள், 5 வருடம் முதல் 10 வருடம் வரை



2007 ஏப்ரல் 17] [திரு. எ.வ. வேலு]

அனுபவம் உள்ளவர்கள், 10 வருடத்திற்குமேல் அனுபவம் உள்ளவர்கள் என்ற மூன்று நிலைகளில் இவர்களின் தொகுப்பூதியம் திருத்தியமைக்கப்படும்.

14. நெல் கொள்முதல் நிலையங்களில் பணிபுரியும் சுமை தூக்குவோர் தற்போது நெல்லினை சாக்குகளில் பிடித்துத் தைத்து அடுக்குவதற்கு, குவிண்டாலுக்கு 1 ரூபாய் 80 பைசா மட்டுமே கையாளுதல் கூலியாகப் பெற்று வருகின்றனர். இந்தக் கையாளுதல் கூலியை உயர்த்தித் தரக் கோரி வந்த கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு, தற்போதுள்ள கையாளுதல் கூலி, நெல்லைத் தூற்றி சுத்தம் செய்வதற்கும் சேர்த்து, குவிண்டாலுக்கு 2 ரூபாய் 40 காசாகத் திருத்தியமைக்கப்படும்.

15. நுகர்வோர்களுக்கு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தும்விதமாகக் குறும்படங்கள் தயாரித்து, தொலைக்காட்சிமூலமாக ஒளிபரப்பப்படும். மகளிர் சுய உதவிக் குழுக்கள்மூலமாக நுகர்வோர் விழிப்புணர்ச்சி ஏற்படுத்தப்பட நடவடிக்கை எடுக்கப்படும்.

16. தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தால், தூத்துக்குடி மாவட்டம், மீளவிட்டானில் 5,000 மெட்ரிக் டன் கொள்ளளவுகொண்ட கிடங்கு ஒன்று ரூ.2.50 கோடி செலவிலே கட்டப்படும்.

பிற்பகல் 2-05

17. குடிமைப் பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுப் பிரிவில் உள்ள அனைத்து துணை காவல் கண்காணிப்பாளர்களுக்கும், ஆய்வாளர்களுக்கும் தொலைபேசி வசதி செய்து தரப்படும்.

அடுத்து, **கூட்டுறவுத் துறை:**

1. 31-3-2006-ல் நிலுவையிலிருந்த விவசாயக் கடன்களையும் தள்ளுபடி செய்து அரசு ஆணை பிறப்பித்தது. இவ்வாறு தள்ளுபடிக்குத் தகுதியான கடன் தொகைகளை 1-4-2006-க்குப் பிறகும் சில விவசாயிகள் செலுத்தியுள்ளார்கள். அவ்வாறு செலுத்தப்பட்ட தொகைகள், அவ்விவசாயிகளுக்குத் திருப்பி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

2. முதிர்வடைந்த வைப்பீட்டுத் தொகைகளைத் திரும்ப வழங்க இயலாத கூட்டுறவு வங்கிகளுக்கு, கடன் தள்ளுபடித் திட்டத்தின்கீழ் வழங்க வேண்டிய நிதியுதவியை அரசு உடனடியாக வழங்கும்.

மாவட்ட அளவில் கூட்டுறவுத் துறை அலுவலர்கள் மற்றும் வங்கி அலுவலர்கள் அடங்கிய குழு அமைக்கப்பட்டு, வைப்பீட்டுதாரர்களுக்கு அவர்கள் வைப்பீடு செய்துள்ள தொகைகளைத் திரும்ப வழங்குவதற்கான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

3. கூட்டுறவு நியாய விலைக் கடைகளில் பணியாற்றும் விற்பனையாளர்களின் ஊதிய உயர்வு குறித்துப் பரிசீலிக்க ஒரு குழு அமைக்கப்படும். இக்குழு 1 மாத காலத்தில் அறிக்கையை அரசுக்கு அளித்தவுடனே இதைக் கொடுப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முடிவு செய்திருக்கிறார்கள். எனவே, அது ஒரு மாத காலத்திலே அறிக்கையை அரசுக்கு அளிக்க வேண்டும்.

4. கூட்டுறவு நியாய விலைக் கடைகளில் அத்தியாவசியப் பொருட்கள் சரியான எடையில் வழங்கப்படுவதை உறுதி செய்ய, அனைத்து நியாய விலைக் கடைகளுக்கும் நவீன மின்னணு எடை இயந்திரம் வாங்குவதற்கு நடப்பாண்டில் அரசு ரூ.11.50 கோடி நிதி வழங்கும்.

5. கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல் பணிகள் நடப்பாண்டு ஜூன் மாதம் 8 ஆம் தேதி முதல் தொடங்கப்படும்.

6. கூட்டுறவு வங்கிகள் வழியாக வழங்கப்பட்டு நிலுவையிலுள்ள சமையல் எரிவாயுக் கடன்கள் அறவே இரத்துச் செய்யப்பட்டு, இத்தொகை மூன்று ஆண்டுத் தவணையாக அரசால் வங்கிகளுக்கு வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

7. தமிழ்நாட்டின் தலைநகரிலுள்ள, தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியின் வாடிக்கையாளர்களின் வசதிக்காக, சென்னையில் 40 கிளைகளில் தானியங்கி பணம் வழங்கும் கருவிகள் (ATM) நிறுவப்பட்டு, எந்த வாடிக்கையாளரும், எந்தக் கிளையிலும் பணம் பெறும் வசதி செயல்படுத்தப்படும்.

8. நடப்பாண்டில் இரண்டு இலட்சம் மகளிருக்கு சுய உதவிக் குழுக்கள்மூலமாகக் கூட்டுறவு வங்கிகளால் கடன் வழங்கப்படும். குறிப்பாக, கறவை மாட்டுக் கடன்கள் வழங்க முன்னுரிமை அளிக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

9. தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளின் பெண் உறுப்பினர்களின் கடன் பெறும் திறனை



அதிகரிக்க ஏதுவாக, கூடுதல் பங்கு மூலதனம் பெறுவதற்கு, உறுப்பினர் ஒருவருக்கு ரூ.1,000/- வீதம் ஐந்து ஆண்டு சம தவணைகளில் திருப்பிச் செலுத்தும் வகையில் வட்டியில்லாக் கடனாக 500 மகளிருக்கு, மொத்தம் ரூ.5 இலட்சம் நடப்பாண்டில் வழங்கப்படும்.

நான் ஒன்பதாவது அறிவிப்பைப் படித்திருக்கிறேன். கிட்டத்தட்ட 27 அறிவிப்புகள் இருக்கின்றன. (குறுக்கீடு) அதைத்தான் சொல்லப் போகிறேன்.

24. சிதம்பரம், விழுப்புரம், தாராபுரம், சங்ககிரி, ஓசூர், இராணிப்பேட்டை, குளித்தலை மற்றும் திருப்பூர் ஆகிய இடங்களில் வருவாய்க் கோட்டங்களுக்கு இணையாக, தேவையின் அடிப்படையில் 8 புதிய சரகத் துணைப் பதிவாளர் அலுவலகங்கள் உருவாக்கப்படும்.

25. கரூர், திண்டுக்கல், சிவகங்கை, நாகப்பட்டினம் மற்றும் வேலூர் ஆகிய 5 மாவட்டங்களிலும் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தைச் செயல்படுத்த ஏதுவாக, உரிய திட்ட அறிக்கைகள் தயாரிக்கப்படும்.

எனவே, நான் படித்ததுபோக மீதமிருக்கும் அறிவிப்புகள், @ எண்கள் உட்பட அனைத்தையும் நான் இந்த மாமன்றத்திலே படித்ததாகக் கருதி, பதிவு செய்துகொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கின்றேன். (குறுக்கீடு) அதற்குள் வெட்டுத் தீர்மானத்திற்குப் போக இயலாது.

இங்கே நம்முடைய கரூர் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். Off take 35 சதவிகிதம் ஆகிவிட்டது, அங்கே யாரும் எடுக்கவில்லை என்று சொன்னார்கள். அதுவல்ல உண்மை நிலை. ஜூன் 2005-லிருந்து ஒரு கணக்கு இருக்கிறது. சராசரி 64 சதவிகிதம் இப்போது off take எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். சென்ற மாதம் மார்ச்சில் 61 சதவிகிதம் off take எடுத்திருக்கிறார்கள். அதை ஒன்றும் தவறு என்று சொல்ல முடியாது. நான் இங்கே சொல்கிறபோது பல செய்திகளைச் சொல்லியிருக்கிறேன். இங்கே சட்டமன்றத்திலே நான் பார்க்கிறேன். பல நேரங்களிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே இருக்கிறபோது, இந்தத் தீர்மானங்களை நிறைவேற்றிப் பணங்களை ஒதுக்குகிறபோது, இங்கே பல சட்டமன்ற உறுப்பினர்கள், நம்முடைய அண்ணாச்சி பீட்டர் அல்போன்ஸ், நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அண்ணாச்சி சுதர்சனம், இங்கே இருக்கிற

@ 270 முதல் 272 வரையிலான பக்கங்களில் இணைப்பு-III ஆக அச்சிடப்பட்டுள்ளது.

நம்முடைய கோவிந்தசாமி, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சிவபுண்ணியம், நம்முடைய ஜி.கே. மணிபோன்றவர்கள் எல்லாம் எழுந்து பல்வேறு கோரிக்கைகளை ஒவ்வொன்றாகக் கேட்கிறபோது, தலைவர் அவ்வப்போது சில நேரங்களில் இல்லை என்று சொன்னாலும்கூட, உடனுடனே வழங்குகிற அந்தக் காட்சியைப் பார்க்கிறேன்.

*பிற்பகல் 2-10*

நபிகள் நாயகம் ஒன்றைச் சொல்லியுள்ளார்கள். "கூடாரங்கள் வேண்டுமானால் தனித்தனியாக இருக்கட்டும்." இது நபிகள் நாயகத்தினுடைய வாக்கு. "கூடாரங்கள் வேண்டுமானால் தனித்தனியாக இருக்கட்டும்; நம் இதயங்கள் மட்டும் எப்போதும் இணைந்தே இருக்கட்டும்" என்று நபிகள் நாயகம் சொல்லியுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எதிர்க்கட்சியிலே இருக்கிற, தோழமைக் கட்சிகளின் தலைவர்களெல்லாம், நீங்களெல்லாம் அப்படி இருந்தாலும்கூட, சேவை செய்வதிலே, உங்களுடைய மனதைத் திருப்திப்படுத்துவதிலே, மக்களுடைய உணர்வு அறிந்து, அவர்களுக்குச் செயலாற்றுவதிலே தலைவர் கலைஞர் அவர்கள் உங்கள் அனைவரையும் அரவணைத்துக்கொண்டு, இதயம் மட்டும் எப்போதுமே இணைந்தே இருக்கட்டும் என்ற நபிகள் நாயகத்தின் வழியிலே இன்று தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சி நடத்திக்கொண்டிருக்கின்றார்கள். எனவே, அந்த வகையில் பல்வேறு அறிவிப்புகளை நான் செய்திருக்கின்றேன். பல சட்டமன்ற உறுப்பினர்கள், இங்கே பேசியவர்களெல்லாம்கூட சொன்னவற்றுக்கு அறிவிப்புகளை இங்கே பதிலாக நான் தந்திருக்கின்றேன்.

இந்தத் துறையைப் பொறுத்தளவிற்கு நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் புதிய குடும்ப அட்டைகள் வழங்க வேண்டுமென்றும், புதிய பகுதிநேரக் கடைகள் வழங்க வேண்டுமெனவும், குடும்ப அட்டைகளுக்கு மண்ணெண்ணெய் வழங்க வேண்டும், அத்தியாவசியப் பொருட்கள் கடத்தலைத் தடுக்க வேண்டும், நெல் கொள்முதல் செய்ய வேண்டும், நிலையங்கள் அமைக்க வேண்டும், நுகர்பொருள் வாணிபக் கழகம் கண்காணிப்பு அமைக்க வேண்டும், கூட்டுறவுத் தேர்தலை நடத்த வேண்டும், விவசாயிகளுக்கு உரிய நேரத்திலே பயிர்க் கடன்களை வழங்க வேண்டும் என இப்படிப் பல்வேறு கோரிக்கைகளை இங்கே சட்டப் பேரவை உறுப்பினர்கள் சொல்லியிருக்கிறார்கள்.



நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஜி.கே. மணி அவர்கள், திரு. சி. ஞானசேகரன் அவர்கள், திரு. கோவை தங்கம் அவர்கள், திருக்கச்சூர் திரு. ஆறுமுகம் அவர்கள், திரு. எதிரொலி மணியன் அவர்கள், செல்வி பாலபாரதி அவர்கள், திரு. சிவபுண்ணியம் அவர்கள், திருமதி லதா அவர்கள், திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்கள், திரு. வேலுமணி அவர்கள், திரு. பழனிச்சாமி அவர்கள், திரு. மகேந்திரன் அவர்கள், முனைவர் ஜெயக்குமார் அவர்கள்போன்ற பல்வேறு சட்டமன்ற உறுப்பினர்கள் உணவுத் துறையிலே 271 வெட்டுத் தீர்மானங்களும், கூட்டுறவுத் துறையிலே 301 வெட்டுத் தீர்மானங்களும், ஆக மொத்தம் 572 வெட்டுத் தீர்மானங்களைத் தந்திருக்கிறார்கள். நான் சொன்ன பதில் எல்லாம் உங்களுக்குத் திருப்தி அளிக்கும் என்று நான் கருதுகிறேன். என்னுடைய துறையிலே இருக்கிற அதிகாரிகளெல்லாம் என்னோடு இரவென்றும், பகலென்றும் பாராது, இந்தத் திட்டங்களெல்லாம் வருவதற்காக எனக்கு உறுதுணையாக இருந்தார்கள். அவர்களெல்லாம் இந்த வெட்டுத் தீர்மானங்களையெல்லாம் குறித்து வைத்திருக்கிறார்கள். யாருக்காவது நடைபெறவில்லை என்று சொன்னால், எங்களுடைய அதிகாரிகளை வைத்துக்கொண்டு, தமிழக அரசின் சார்பாக, தலைவர் கலைஞர் அவர்களுடைய அரசின் சார்பாக, உங்கள் மனம் நிறைகின்ற அளவிற்கு இந்தத் திட்டங்களில் எல்லாம் செயலாற்றுவேன். எனவே, நீங்கள் இந்த வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்று, மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தந்திட வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டு, என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற சட்டமன்றக் கூட்டத் தொடரில் மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்களிடம் நாங்களெல்லாம் 39 இலட்சம் ரேஷன் கார்டுகளுக்கு மண்ணெண்ணெய் வழங்க வேண்டுமென்று கோரிக்கைகளை வைத்தபோது, அந்த கார்டுகளுக்கு மண்ணெண்ணெய் வழங்க வேண்டுமென்று டெல்லிக்குக் கடிதம் எழுதப்பட்டு, 16,000 கிலோ லிட்டர் மண்ணெண்ணெய் வழங்கியிருப்பதாகச் சட்டமன்றத்திலே அன்றைக்குத் தெரிவிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து, அந்த கார்டுகளுக்குத் தொடர்ந்து மண்ணெண்ணெய் வழங்கப்படும் என்றும் சட்டமன்றத்திலே அன்றைக்குச் சொல்லப்பட்டது. ஆனால்,

இப்போது ஒரு வருட காலமாக அவர்களுக்கு மண்ணெண்ணெய் இதுவரை வழங்கப்படவில்லை. ஆனால், இன்றைக்கும் நம்முடைய மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் தொடர்ந்து அந்த 39 இலட்சம் ரேஷன் கார்டுகளுக்கும் மண்ணெண்ணெய் வழங்குவதற்கு டெல்லிக்குக் கடிதம் எழுதிக்கொண்டிருக்கின்றோம் என்று சொல்லிக்கொண்டிருக்கின்றார்கள். எப்போது டெல்லிக்கு அந்தக் கடிதம் போய்ச் சேரும்? (மேசையைத் தட்டும் ஒலி) 39 இலட்சம் ரேஷன் கார்டுகளுக்கும் மண்ணெண்ணெய் எப்போது டெல்லியிலேயிருந்து இங்கு வந்து சேரும் என்பதை மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்கள்மூலமாக மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்களிடம் கேட்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடிதம் எழுதியதும் உண்மை. 16,000 கிலோ லிட்டர் மண்ணெண்ணெய் வந்ததும் உண்மை. ஆனால், one time—ஒரு வாரம் கொடுத்துவிட்டு, மீதிப் பேருக்குக் கொடுக்காமல் இருக்க முடியாது. அதனாலே, பொங்கல் தினம், தீபாவளி தினம், இதுபோன்ற தினங்களிலே அந்த மண்ணெண்ணெய் கூடுதலாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இது ஒன்று. இரண்டாவது, 39 இலட்சம் கார்டுகளுக்குக் கொடுக்கப்படவில்லை என்று சொல்கிற அதே நேரத்திலே நாங்கள் இன்னொன்றையும் சொல்லிக் கொண்டிருக்கிறோம். என்னவென்று சொன்னால், சென்ற முறை bogus கார்டுகள் நிறையவே உலவவிடப்பட்டிருக்கின்றன; அவற்றைக் கண்டுபிடிக்க வேண்டுமென்று. அது டெல்லி வரைக்கும் தெரிகிறது. மாண்புமிகு மத்திய அமைச்சர் முரளி தியோரா அவர்களைச் சந்திக்கின்றபோது அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால், தமிழ்நாட்டிலே போலி கார்டுகள் நிறையவே இருக்கின்றன. அவற்றை ஒழித்துவிட்டுக் கேளுங்கள் என்று அவர்கள் ஒரு கண்டிஷனைப் போடுகிறார்கள். எனவேதான், கடிதம் எழுத வேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கிறது.

அதனாலே என்னவென்று கேட்டீர்கள் என்று சொன்னால், bogus கார்டை ஒழிப்பதற்கு, உதாரணத்திற்கு ஒன்றே ஒன்றை மட்டும் சொல்கிறேன். நேற்று முன்தினம்கூட விக்கிரமங்கலம் என்கிற பகுதியிலே சென்று நாங்கள் பார்க்கிறோம். 1,000 குடும்பங்கள் இருக்கிற இடத்தில், 2,000 கார்டுகள் இருக்கின்றன. அதோடு மட்டுமல்ல, நேற்றையதினம் கமுதி பகுதியிலே ஓர் இடத்திலே இங்கேயிருந்து நேரடியாக என்னுடைய Special Force-ஐ அனுப்பிப் பார்த்ததிலே ஓர்



ஊரிலே 100 வீடுகள்தான் இருக்கின்றன. அந்த 100 வீடுகளிலே இருப்பவர்களெல்லாம் முழுவதுமே நாயக்கர்மார்கள். ஆனால், அங்கே பிற இனத்தைச் சேர்ந்தவர்களுக்கு 400 கார்டுகள் பதிவு செய்யப்பட்டிருப்பதைக் கண்டுபிடித்து வந்திருக்கிறோம். ஆக, இது கொடுக்கப்பட்டது ஏற்கெனவே உங்கள் ஆட்சிக் காலத்திலே. நாங்களா bogus card கொடுத்தோம்? (குறுக்கீடுகள்) கொடுத்தது பூராவும் உங்கள் ஆட்சிக் காலத்திலே கொடுத்தீர்கள், கொடுத்ததைக் கண்டுபிடித்துக்கொண்டிருக்கிறோம். அதையெல்லாம் கண்டுபிடித்து ஒழித்தால்தான் அந்த மண்ணெண்ணெய் எல்லாம் கொடுக்கப்படும். உங்கள் ஆட்சிக் காலத்திலே கொடுத்ததைத்தான் கண்டுபிடித்துக்கொண்டிருக்கிறோம். கொடுக்கப்படும்.

பிற்பகல் 2-15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுதர்சனம்.

***திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுக் கடைகள்மூலமாக அரிசிக் கடத்தல் செய்வது நீண்ட காலமாக இருந்து வருகிறது. அப்படிப்பட்ட கடத்தல்காரர்களைத் தடுக்கின்ற வகையிலே, உண்மையாகப் பயன்படுத்துகிறவர்களுக்கு கூப்பன்கள் வழங்கி, அந்த கூப்பன்கள்மூலமாக அவர்கள் உணவுப் பொருட்களைப் பெறுவதற்கு ஆவன செய்ய இந்த அரசு முன்வருமா? இந்தக் கடைகளிலே பணியாற்றுகிறவர்கள் சில பேர், அரிசி வாங்காதவர்கள் எல்லோரும் அரிசி வாங்கிவிட்டதாகக் கணக்குக் காட்டிவிட்டு இந்த அரிசியைக் கடத்துவதாகச் செய்தி சொல்கிறார்கள். அதற்கு, ஒவ்வொருவருக்கும் கூப்பன்கள் கொடுத்து, இத்தனை கிலோதான் நாங்கள் வாங்குகிறோம் என்கிற வகையில் ஒவ்வொரு வீட்டிற்கும் தனித்தனியாக கூப்பன்கள் கொடுக்க அரசு முன்வருமா என்பதையும், கூட்டுறவு வங்கிகள்மூலமாகக் கடன் பெற்று சில பேர் உபயோகப்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் மொத்தமாகக் கடன் கட்டுகிறபோது அபராத வட்டியையும், வட்டியையும் தள்ளுபடி செய்ய அரசு ஆவன செய்யுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நில வள வங்கிகளில்தான் இதுபோன்ற பிரச்சினைகள் அதிகமாக இருக்கின்றன, எல்லா இடங்களிலும். அது சம்பந்தமாக ஆய்வு செய்து, இன்றைக்கு அதற்காக ஒரு குழுவை

[திரு. எ.வ. வேலு] [2007 ஏப்ரல் 17

அமைத்து இருக்கிறோம். அந்தக் குழுவின்மூலமாக ஆய்வு செய்துகொண்டிருக்கிறோம், எவ்வளவு அபராத வட்டி இருக்கிறது என்று. அதையெல்லாம் கணக்கிட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைச் சந்தித்து, அதற்கு நல்லதொரு விடையைக் கொடுப்போம் என்று இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

### (அ) கோரிக்கை எண் 12—கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 12—கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை). வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என அறிய விரும்புகின்றேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகின்றன.

"கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.400,59,34,000/-, மூலதனக் கணக்கில் ரூ.1,325,67,18,000/- மற்றும் கடன் கணக்கில் ரூ.2,19,76,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.



2007 ஏப்ரல் 17]

### (ஆ) கோரிக்கை எண் 13—உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 13—உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை). வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என அறிய விரும்புகின்றேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகின்றன.

"உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.2,101,04,91,000/-, மூலதனக் கணக்கில் ரூ.1,93,00,000/- மற்றும் கடன் கணக்கில் ரூ.600,00,00,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (18-4-2007) புதன்கிழமை காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2-18 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும் ஆணைகளும்

46. 2005-2006 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் இருபத்தாறாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

47. 2005-2006 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தின் முப்பத்திரண்டாவது ஆண்டறிக்கை. [1972 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலாளர் நல நிதியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 36/1972) 35 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

85. மானியக் கோரிக்கை எண் 12-கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2007-2008. (தமிழ், ஆங்கிலம்)

86. மானியக் கோரிக்கை எண் 13-உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2007-2008. (தமிழ், ஆங்கிலம்)



## இணைப்பு I

(120 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

## மானியக் கோரிக்கை எண் 12-கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2007-2008

### அத்தியாயம்-1

**முன்னுரை**

உலகிலேயே மிகப் பெரிய சமூகப் பொருளாதார இயக்கமான கூட்டுறவு இயக்கம், நாட்டில் வறுமையை ஒழிக்கவும், உற்பத்தியுடன் இணைந்த வேலைவாய்ப்பினை உருவாக்குவதிலும், சமூக ஒருமைப்பாட்டை மேம்படுத்துவதிலும் முக்கியப் பங்காற்றி வருகிறது. கூட்டுறவுச் சங்கங்கள் பெரும்பாலும் கிராமப்புற மக்களுக்குச் சேவை புரிந்து வருவதால், அவைகளுக்கு சிறப்புக் கவனம் அளிக்க வேண்டியது அவசியமாகும். பொருளாதார வளர்ச்சியில், குறிப்பாக வேளாண் கடன், உரம் மற்றும் வேளாண் இடுபொருள் விநியோகம், வேளாண் விளைபொருட்கள் கொள்முதல் மற்றும் விற்பனை, பால் வளம், மீன்வளம், சர்க்கரைத் துறை, துணி நூல் மற்றும் தொழில்கள் ஆகிய பல துறைகளின் வளர்ச்சிக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் முக்கியப் பங்காற்றியுள்ளன.

கடன் வழங்குதல் மற்றும் நுகர்வோர் சேவை ஆகிய இரு பிரிவுகளில், கூட்டுறவுச் சங்கங்களை முதன்முதலில் துவக்கி, இந்தியாவில் கூட்டுறவு இயக்கத்தில் தமிழகம் முன்னோடியாகத் திகழ்ந்தது என்பது தமிழர்களாகிய நமக்குப் பெருமையளிக்கக் கூடியதாகும். தமிழ்நாட்டில் உள்ள கூட்டுறவுச் சங்கங்கள் பொது விநியோகத் திட்டத்தின்கீழ் நியாய விலைக் கடைகள்மூலம் அத்தியாவசியப் பொருட்களை விநியோகம் செய்வதிலும் ஈடுபட்டுள்ளன. இவ்வாறாக, தமிழ்நாட்டில் உள்ள கூட்டுறவுச் சங்கங்கள் கிராமப்புற மக்களின் அன்றாட வாழ்க்கையுடன் இணைந்துள்ளன.

[2007 ஏப்ரல் 17

இருப்பினும், கடந்த சில ஆண்டுகளாக நமது நாட்டிலும், தமிழகத்திலும் கூட்டுறவுச் சங்கங்களின் செயல்பாடுகள் திருப்தி அளிப்பதாக இல்லை. வேளாண் கடன் வழங்குவதில் கூட்டுறவுச் சங்கங்களின் பங்கு கடந்த ஆண்டுகளில் குறைந்துள்ளது. தொடர்ந்து சில ஆண்டுகளாகப் பருவ நிலை பாதிக்கப்பட்டு, பயிர் விளைச்சல் குறைந்ததன் காரணமாக வேளாண் பொருளாதார வளர்ச்சியில் மந்த நிலை ஏற்பட்டதால், கூட்டுறவுச் சங்கங்களின் வணிக நடவடிக்கைகள் குறைந்தன. கடன் சங்கங்களில் ஏற்படும் அதிகப்படியான பணியாளர் செலவு மற்றும் வணிக வங்கிகளின் கடும் போட்டி ஆகியவை வேளாண் கூட்டுறவுக் கடன் நிறுவனங்களின் கடன் வழங்குதல் குறைவதற்குக் காரணமாய் அமைந்தன. இத்தகைய சூழ்நிலையில், தற்போதைய மாநில அரசு விவசாயக் கூட்டுறவுக் கடன்களைத் தள்ளுபடி செய்ததால், தமிழ்நாட்டில் வேளாண் கடன் பிரிவு புத்துயிரூட்டப்பட்டு, 22 இலட்சத்திற்கும் மேற்பட்ட விவசாயிகள் கடன் சுமையிலிருந்து நிவாரணம் கிடைக்கப்பெற்றனர். தள்ளுபடி செய்யப்பட்ட தொகையைக் கூட்டுறவு நிறுவனங்களுக்கு 5 தவணைகளில் 8 சதவீத வட்டியுடன் திரும்ப அளிப்பது என்ற அரசு மேற்கொண்ட முடிவால் கூட்டுறவு நிறுவனங்களுக்கு அதிக அளவிலான நிதி ஆதாரம் வரப்பெற்று, தமிழகத்தில் உள்ள கூட்டுறவுக் கடன் அமைப்புகள் அதிக நிதிப் புழக்கம் மற்றும் நிதி நிலைத் தன்மை பெறுவதற்கான வழிவகுத்துள்ளது.

கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறைக் கட்டுப்பாட்டின்கீழ் செயல்பட்டு வரும் கூட்டுறவுச் சங்கங்களைப் பின்வருமாறு ஐந்து வகையாகப் பிரிக்கலாம்:—

1. கூட்டுறவுக் கடன் சங்கங்கள்
2. நுகர்வோர் சங்கங்கள்
3. வேளாண் விளைபொருள் விற்பனைச் சங்கங்கள்
4. கூட்டுறவுக் கல்வி, பயிற்சி மற்றும் ஆராய்ச்சிப் பணியில் ஈடுபட்டுள்ள சங்கங்கள்
5. தனி வகைச் சங்கங்கள்.

கூட்டுறவுச் சங்கங்களின் செயல்பாடுகள் குறித்துப் பின்வரும் அத்தியாயங்களில் விரிவாகக் கொடுக்கப்பட்டுள்ளன:—



2007 ஏப்ரல் 17]

## அத்தியாயம்–2

## கூட்டுறவுக் கடன் கட்டமைப்பு

கூட்டுறவு நிறுவனங்கள் உரிய காலத்தில் நியாயமான வட்டி விகிதத்தில் கடன் வழங்குவதில் முக்கியப் பங்காற்றுவதால், விவசாயிகள் சாதாரணமாக அதிக வட்டி வீதத்தில் கடன் வழங்கும் நிதி நிறுவனங்களைச் சார்ந்திருப்பது தவிர்க்கப்படுகிறது.

தமிழ்நாட்டிலுள்ள கூட்டுறவுக் கடன் கட்டமைப்பு கீழ்க்கண்டவற்றை உள்ளடக்கியதாகும்:—

(அ) குறுகிய மற்றும் மத்திய காலக் கடன் கட்டமைப்பு

(ஆ) நீண்ட காலக் கடன் கட்டமைப்பு

(இ) நகரக் கூட்டுறவு வங்கிகள்

### (அ) குறுகிய காலக் கடன் கட்டமைப்பு

குறுகிய காலக் கடன் கட்டமைப்பு மூன்றடுக்காகச் செயல்பட்டு வருகிறது. அவையாவன:—

(i) தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி *(மாநில அளவில்)*

(ii) மத்தியக் கூட்டுறவு வங்கிகள் *(மாவட்ட அளவில்)*

(iii) தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் *(கிராம அளவில்)*

### (i) தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி

மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் இணையமான தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி 1905 ஆம் ஆண்டு துவக்கப்பட்டு மூன்றடுக்கு அமைப்பு முறையில் அதன் இணைப்பு வங்கிகள் மூலமாக, வேளாண்மை மற்றும் வேளாண்சாராப் பணிகளுக்காகக் கடன்கள் வழங்கி வருகிறது. இவ்வங்கி தனது சொந்த நிதியிலிருந்து மாவட்ட மத்திய வங்கிகளுக்கு நிதி வழங்கி, அவைகளின் இணைப்பு வங்கிகளுக்கு நிதி வழங்க வழி செய்வதுடன், வேளாண் நோக்கங்களுக்காக தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி வழங்கும் குறுகிய கால மற்றும் மத்திய காலக் கடனுக்கான நிதியுதவியைப் பெற்று, கடன் வழங்குதலை முறைப்படுத்துகிறது.

தமிழகத்தில் உள்ள கூட்டுறவு நூற்பாலைகள்/சர்க்கரை ஆலைகள் ஆகியவற்றிற்குத் தவணைக் கடனும், இதர தலைமைக் கூட்டுறவு நிறுவனங்களுக்கு நேரடிக் கடனுதவியும் தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியால் அளிக்கப்படுகிறது. இவ்வங்கி, சென்னை மற்றும் அதன் சுற்றுப்புறத்தில் உள்ள 45 கிளைகள்மூலமாக சென்னைப் பெருநகர மக்களின் வங்கித் தேவைகளை நிறைவு செய்கிறது.

31-3-2007 அன்று நிலவரப்படி அரசின் பங்கு மூலதனம் ரூபாய் 0.26 கோடியையும் சேர்த்து, தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியின் பங்கு மூலதனம் 56.60 கோடி ரூபாயாக உள்ளது. இவ்வங்கியின் ஒதுக்கீடுகள் 583.79 கோடி ரூபாயாகவும், வைப்புகள் 3,217 கோடி ரூபாயாகவும் இருக்கிறது. இவ்வங்கி 2006-2007-ல் தோராயமாக ரூபாய் 32 கோடி நிகர இலாபம் ஈட்டியுள்ளது.

மாநிலத்திலுள்ள தொடக்கக் கூட்டுறவு வங்கிகளின் அடிப்படை வசதியை வலுப்படுத்த **“தொடக்கக் கூட்டுறவு மேம்பாட்டு நிதி”** என்ற ஒரு நிதி தலைமை வங்கியால் பராமரிக்கப்பட்டு வருகிறது. இந்நிதியிலிருந்து தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கு இதுவரை மொத்தம் ரூபாய் 21.81 கோடி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

**(ii) மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள்**

மாநிலத்திலுள்ள 23 மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளும், பெரும்பாலும் ஊரகப் பகுதிகளில் அமைந்துள்ள அவைகளின் கிளைகளும், இணைப்புச் சங்கங்களுக்கும், கிராமப்புற மக்களுக்கும் சேவை புரிந்து வருகின்றன. மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள், தங்கள் சொந்த நிதி ஆதாரங்களிலிருந்தும், தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியிடமிருந்து தலைமை வங்கிமூலமாகப் பெறும் மறு நிதியுதவியைக் கொண்டும் வேளாண் நோக்கங்களுக்காகக் கடன் வழங்க தொடக்க வேள்ாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கு நிதி உதவி அளிக்கின்றன. தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியிடமிருந்து கடன் உதவி பெற்று, தொடக்கக் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் இவ்வங்கிகள் நிதியுதவி அளிக்கின்றன.

இவ்வங்கிகள் வேளாண்சாரா நோக்கங்களுக்கான லாரிகள், பேருந்துகள், நிலச்சமன்செய் இயந்திரங்கள், மண் வாரும் இயந்திரங்கள் போன்றவை வாங்கவும், வீடு கட்டவும், மருத்துவர்கள் சொந்த மருத்துவமனை அமைக்கவும், பொறியாளர்கள் சேவை மையங்கள் அமைக்கவும், தொழில் கல்வி பயில்வதற்காகக் கல்விக் கடன்களும் அளித்து வருகின்றன.



31-3-2007 அன்று உள்ளபடி, மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் மொத்தப் பங்கு மூலதனம் ரூபாய் 760.36 கோடியாகவும், ஒதுக்கிய நிதிகள் (Reserves) ரூபாய் 760.56 கோடியாகவும், வைப்பீடு செய்யப்பட்டுள்ள தொகை ரூபாய் 7,286.62 கோடியாகவும் மற்றும் நடைமுறை மூலதனம் ரூபாய் 11,822.50 கோடியாகவும் உள்ளன.

**(iii) தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள்**

இன்றைய நிலவரப்படி, மாநிலத்தில் 4,474 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் செயல்பட்டு வருகின்றன. இவ்வங்கிகள், 15 மாதங்களில் திருப்பிச் செலுத்தக்கூடிய வகையில், பயிர் சாகுபடிக்கான குறுகிய காலக் கடன்கள் வழங்கி வருகின்றன. பால் பண்ணை அமைத்தல், ஆடு வளர்ப்பு, கோழி வளர்ப்புபோன்ற வேளாண்சார்ந்த தொழில்களுக்காக 3 ஆண்டுகளிலிருந்து 5 ஆண்டுகளுக்குள் திருப்பிச் செலுத்தக்கூடிய மத்திய காலக் கடன்களையும் இவ்வங்கிகள் வழங்குகின்றன. கரும்பு தவிர, இதர பயிர்களுக்கு ரூபாய் 1 இலட்சம் வரை நிர்ணயிக்கப்பட்ட கடன் அளவீட்டின்படி (Scale of Finance) எவ்வித அடமானமும் இன்றிக் கடன்கள் வழங்கப்பட்டு வருகின்றன. பதிவு செய்யப்பட்ட கரும்பு சாகுபடிக்கு 10 ஏக்கர் வரை நிர்ணயிக்கப்பட்ட கடன் அளவீட்டின்படி எவ்வித அடமானமும் இன்றிக் கடன்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இவைகளுக்குமேல் தேவைப்படும் கடன்கள், சொத்து அல்லது நகை அடமானத்தின்பேரில் வழங்கப்படுகின்றன.

டிராக்டர்கள், பவர் டில்லர்கள் மற்றும் வேளாண் கருவிகள் வாங்குதல்போன்ற இதர விவசாய நோக்கங்களுக்காகவும் இவ்வங்கிகள் கடன்கள் வழங்குகின்றன. நுகர்வோர் பொருட்கள், இரு சக்கர வாகனங்கள், டெம்போ, டிரக்குகள், டிராக்டர்கள், பவர் டில்லர்கள், பேருந்துகள், சீருந்துகள், ஈப்புகள் ஆகியவை வாங்குவதற்கும், வீடு கட்டுதல் மற்றும் பழுதுபார்த்தல் மற்றும் பொறியாளர்கள், மருத்துவர்களுக்குச் சேவை மையங்கள் ஆரம்பித்தல் ஆகியவற்றிற்கும் இவ்வங்கிகள் கடன்கள் வழங்க அனுமதிக்கப்பட்டுள்ளன.

2006-2007 ஆம் ஆண்டு முடிவில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் 2,326.93 கோடி ரூபாய் அளவிற்கு வைப்புகள் வைத்துள்ளன.

[2007 ஏப்ரல் 17

குறைந்த வட்டியில் பயிர்க் கடன்கள் வழங்கப்பட வேண்டும் என்ற நோக்கத்துடன் 2006-2007 ஆம் ஆண்டில் பயிர்க் கடன்களுக்கான வட்டி வீதத்தை 9 சதவீதத்திலிருந்து 7 சதவீதமாகக் குறைத்து அரசு ஆணையிட்டுள்ளது. இவ்வாறு வட்டிக் குறைப்பால் கூட்டுறவு வங்கிகளுக்கு ஏற்பட்ட இழப்பீட்டினை ஈடு செய்ய 2006-2007 ஆம் ஆண்டில் ரூபாய் 18.28 கோடியை அரசு கூட்டுறவு வங்கிகளுக்கு வழங்கியுள்ளது.

பத்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் வழங்கப்பட்ட குறுகிய கால, மத்திய காலப் பயிர் மற்றும் பண்ணைசாராக் கடன் ஆகியவற்றின் விவரங்கள் பின்வருமாறு:—

(ரூபாய் கோடியில்)

| ஆண்டு | குறுகிய காலப் பயிர்க் கடன் | | வேளாண் சார்ந்த மத்திய காலக் கடன்கள் | | பண்ணை சாராக் கடன்கள் |
|---|---|---|---|---|---|
| | குறியீடு | சாதனை | குறியீடு | சாதனை | |
| 2002–03 | 1360.00 | 963.69 | 106.00 | 94.37 | 118.89 |
| 2003–04 | 1251.45 | 616.59 | 194.88 | 72.15 | 116.28 |
| 2004–05 | 1037.69 | 1080.58 | 94.37 | 50.19 | 83.93 |
| 2005–06 | 1097.50 | 1132.18 | 59.80 | 37.76 | 72.63 |
| 2006–07 | 1235.00 | 1250.62 | 70.00 | 44.02 | 59.81 |

குறைந்த வட்டி விகிதத்தில் அனைத்து விவசாயிகளுக்கும் கடன்கள் கிடைக்கச் செய்வது இன்றியமையாதது என்பதை முழுமையாக உணர்ந்து, வரும் நிதியாண்டிலிருந்து பயிர்க் கடன்களை உரிய காலத்தில் திருப்பிச் செலுத்தும் விவசாயிகளை உற்சாகப்படுத்த, இந்த வட்டி வீதம் 7 சதவீதத்திலிருந்து 5 சதவீதமாகக் குறைக்கப்படும்.

2006-2007 ஆம் நிதியாண்டிற்கான பயிர்க் கடன் குறியீட்டுத் தொகையான ரூபாய் 1,235 கோடியில், 31-3-2007 ஆம் தேதி முடிய 1,250 கோடி ரூபாய் கடன் வழங்கப்பட்டுள்ளது.



2007 ஏப்ரல் 17]

2007-2008 ஆம் ஆண்டில் ரூபாய் 1,360 கோடி அளவிலான பயிர்க் கடன்கள் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

**(ஆ) நீண்ட காலக் கடன் கட்டமைப்பு**

நீண்ட காலக் கடன் கட்டமைப்பு இரண்டடுக்குகளைக் கொண்டதாகும். அவையாவன:—

(1) தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி (மாநில அளவில்).

(2) தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி (வட்ட/ஊராட்சி ஒன்றிய அளவில்)

இவ்வங்கிகள் அவற்றின் அங்கத்தினர்களுக்கு சிறு பாசனம், தோட்டக் கலை, பயிர் மற்றும் மலைப் பயிர் சாகுபடி, கோழி வளர்ப்பு, பால் பண்ணை அமைத்தல், ஆடு வளர்த்தல், பட்டுப் பூச்சி வளர்த்தல், டயர் மாட்டு வண்டிகள் வாங்குதல்போன்ற வளர்ச்சி நோக்கங்களுக்காகத் திட்ட அடிப்படையில் கடன்கள் வழங்குகின்றன.

**1. தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி**

தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி, சாதாரண மற்றும் சிறப்புக் கடன் ஈட்டுப் பத்திரங்களை வெளியிடுதல்மூலம் கடன்கள் வழங்கத் தேவையான நிதியாதாரத்தைத் திரட்டுகிறது. சாதாரணக் கடன் ஈட்டுப் பத்திரங்களில் மாநில அரசு மற்றும் மத்திய அரசு, ஆயுள் காப்பீட்டுக் கழகம், பாரத் ஸ்டேட் வங்கி மற்றும் அதன் குழும வங்கிகள், வணிக வங்கிகள், தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி மற்றும் பிற மாநிலங்களின் வேளாண்மை மற்றும் கூட்டுறவு வங்கிகள் முதலீடு செய்கின்றன. நபார்டு வங்கி, மாநில மற்றும் மத்திய அரசுகள் சிறப்புக் கடனீட்டுப் பத்திரங்களில் முதலீடு செய்கின்றன.

திட்ட முதலீடுகள் ரூபாய் 15 இலட்சத்திற்கு அதிகமாகாமல் உள்ள திட்டங்களுக்கு நபார்டு வங்கியிடமிருந்து தன்னிச்சையாக மறு நிதியுதவி பெறும் வசதி உண்டு.

ஒவ்வொரு வரிசையிலும் வெளியிடப்படும் சாதாரணக் கடனீட்டுப் பத்திரங்களை அவை முதிர்வடைந்தவுடன் திரும்ப வழங்குவதற்கு ஏதுவாக "கடனீட்டுப் பத்திரம் திரும்பச் செலுத்தும் நிதி"யினை (Debenture Redemption Fund) இவ்வங்கி பராமரித்து வருகிறது.

31-3-2007 அன்று உள்ளபடி இந்நிதியில் ரூபாய் 22.58 கோடி இருப்புத் தொகையாக உள்ளது.

இவ்வங்கியால் பல்வேறு திட்டங்களைச் செயலாக்குவதில் உள்ள சிரமங்களை அறிந்தும், இத்திட்டங்களின் பயனாக விவசாயிகள் பெற்ற பலன்களை மதிப்பீடு செய்வதற்கும் தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியில் கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டுப் பிரிவு ஒன்று உள்ளது.

## 2. தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள்

வட்ட/ஊராட்சி ஒன்றிய அளவில் 180 தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் செயல்பட்டு வருகின்றன. தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் நீண்ட காலக் கடன்கள் வழங்கத் தேவையான நிதி ஆதாரத்தை மாநில நிறுவனமான தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிமூலமாகப் பெறுகிறது.

தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் கிணறுகள் பழுதுபார்த்தல், குழாய் பதித்தல், டிராக்டர்கள் மற்றும் பவர் டில்லர்கள் வாங்குதல், கால்நடைக் கொட்டகை மற்றும் பண்ணை வீடு கட்டுதல்போன்ற நோக்கங்களுக்காக சாதாரணக் கடன் வழங்கு திட்டத்தின்கீழ் நீண்ட காலக் கடன்கள் வழங்கி வருகின்றன. இக்கடன்களைத் திரும்பச் செலுத்தும் காலம் 5 ஆண்டுகளிலிருந்து 15 ஆண்டுகள் வரை ஆகும்.

இதர நிதி நிறுவனங்கள் சூழலுக்குத் தக்கவாறு கடன் வழங்கும் கொள்கைகளில் மாற்றங்கள் ஏற்படுத்தியதன் காரணமாக எழுந்த போட்டியினைச் சமாளிக்கும்விதத்தில் பண்ணைசாராத் திட்டங்களுக்கும், கிராமப்புறங்களில் சிறு போக்குவரத்து நடத்துவதற்கும் கடன் வழங்குவதற்குத் தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் அனுமதிக்கப்பட்டுள்ளன.

நீண்ட காலக் கடன்கள் வழங்கும் கூட்டுறவு நிறுவனங்கள் குறைந்த அளவிலேயே வைப்பீடுகளைத் திரட்டியதாலும், புதிய கடன் வழங்குவதற்கு நபார்டு வங்கி மறு நிதியுதவி வழங்க மறுத்ததாலும், இவ்வங்கிகளின் செயல்பாடுகள் கடந்த 5 ஆண்டுகளாகத் திருப்திகரமாக இல்லை. விவசாயிகளின் நலனில் அக்கறைகொண்டுள்ள இவ்வரசு புதிய கடன்கள் வழங்க முடிவு செய்துள்ளது.





விவசாயிகள் நீர்ப்பாசன வசதிகளை அமைப்பதற்காக நடப்பு நிதியாண்டில் தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள்மூலமாக ரூபாய் 100 கோடி கடனுதவி வழங்கப்படும்.

## 3. நகரக் கூட்டுறவு வங்கிகள்

நகரக் கூட்டுறவு வங்கிகள் நகரம் மற்றும் நகர்ப்புறங்களில் வசிக்கும் மக்களின் கடன் தேவைகளை நிறைவேற்றும் நிதி நிறுவனங்களாக செயல்பட்டு வருகின்றன. தற்போது மாநிலத்தில் 120 நகரக் கூட்டுறவு வங்கிகள் செயல்பட்டு வருகின்றன. அவை பொது மக்களிடமிருந்து வைப்பீடுகள் பெற்று, குறிப்பிட்ட நோக்கங்களுக்காகக் கடன்கள் வழங்குகின்றன. இவ்வங்கிகள் சிறு வியாபாரிகளுக்கும், கைவினைஞர்களுக்கும், நடுத்தரக் குடும்பங்களைச் சார்ந்தவர்களுக்கும் வீடுகளை விரிவுபடுத்தல்/பழுதுபார்த்தல் ஆகியவற்றிற்கும், சிறு குடிசைத் தொழில்கள் நிறுவுதல்போன்ற நோக்கங்களுக்காகக் கடன் வசதிகள் அளிக்கின்றன. நகரம் மற்றும் நகர்ப்புற மக்களுக்கு 2006-2007 ஆம் ஆண்டில் ரூ.2,004.36 கோடி அளவில் குறுகிய கால மற்றும் தவணைக் கடன்களை இவ்வங்கிகள் வழங்கியுள்ளன. 31-3-2007 அன்று உள்ளபடி, நகரக் கூட்டுறவு வங்கிகளில் உள்ள வைப்புத் தொகை ரூ.2,448.19 கோடியாகும். இந்திய ரிசர்வ் வங்கி வெளியிட்டுள்ள வழிகாட்டிக் குறிப்புகளின்படி, மொத்தம் வழங்கப்படும் கடன்களில் 60 சதவீதத்திற்கும் குறையாமல் முன்னுரிமைப் பிரிவினருக்கும், அம்முன்னுரிமைப் பிரிவினருக்கு வழங்கப்படும் கடன்களில் குறைந்தபட்சம் 25 சதவீதம் சமூகத்தில் நலிவடைந்த பிரிவினருக்கும் பயன்படும் வகையில் வழங்கப்பட வேண்டும்.

மாநிலத்தில் 41 நகரக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இவை நகரம் மற்றும் நகர்ப்புறப் பகுதிகளில் வசித்து வரும் அங்கத்தினர்களுக்குக் கடன்கள் வழங்குகின்றன.

## கூட்டுறவுக் கடன் கட்டமைப்பின்மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள்

### 1. விவசாயிகள் பெற்ற கூட்டுறவுக் கடன்கள் தள்ளுபடி

இயற்கைச் சீற்றங்களால் தொடர்ந்து பயிர்கள் சேதமடைந்த காரணத்தால், விவசாயிகள் கூட்டுறவு வங்கிகளில் வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்த இயலாத நிலையைக் கருத்தில்கொண்டு, 31-3-2006 அன்று கூட்டுறவு வங்கிகளில் நிலுவையில் இருந்த கடன் மற்றும்

[2007 ஏப்ரல் 17

வட்டி முழுவதையும் அரசு தள்ளுபடி செய்து ஆணை பிறப்பித்தது. அதே நேரத்தில் கூட்டுறவு வங்கிகள் தொடர்ந்து விவசாயிகளுக்குக் கடன்கள் வழங்கிச் சேவை செய்வதற்காகத் தள்ளுபடி செய்யப்பட்ட தொகையை 5 ஆண்டுத் தவணைகளில் 8 சதவிகித வட்டியுடன் கூட்டுறவுகளுக்குத் திருப்பிச் செலுத்த அரசு முடிவு செய்தது.

மேலும், நபார்டு வங்கிக்குத் தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி மற்றும் தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி செலுத்த வேண்டிய கடன் தொகையையும் அரசே திருப்பிச் செலுத்துவதற்கு பொறுப்பேற்றுக்கொண்டது. 31-3-2007 வரை தள்ளுபடி செய்யப்பட்ட தொகைக்காக இவ்வரசு கூட்டுறவு வங்கிகளுக்கு ரூபாய் 1,044.63 கோடி விடுவித்துள்ளது. மேலும், நபார்டு வங்கிக்குத் திருப்பிச் செலுத்த வேண்டிய தொகைக்காக ரூபாய் 613.59 கோடியையும் விடுவித்துள்ளது.

2007-2008 ஆம் ஆண்டில், கூட்டுறவு நிறுவனங்கள் புதிய கடன்கள் வழங்குவதற்காகவும், நபார்டு வங்கிக்குக் கொடுக்க வேண்டிய தொகைக்காகவும் ரூபாய் 1,628 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**2. பண்ணைசாராக் கடன்களுக்கான வட்டி விகிதம் குறைப்பு**

கூட்டுறவு வங்கிகளிலிருந்து பண்ணைசாரா நோக்கங்களுக்காகக் கடன் பெற்ற அங்கத்தினர்களுக்கு நிவாரணம் அளிக்கும்பொருட்டு இவ்வரசு, தவணை தவறிய கடன்தாரர்களுக்கு அபராத வட்டியைத் தள்ளுபடி செய்ததோடு, 31-3-2001 ஆம் தேதியிலிருந்து அக்கடன்களின் மீதான வட்டியை 18 சதவீதத்திலிருந்து 12 சதவீதமாகக் குறைத்துள்ளது. இவ்வசதியைப் பெறுவதற்கு 30-6-2007-க்குள் கடன்தாரர்கள் 25 சதவீதத் தவணை தவறிய தொகையைச் செலுத்தி மீதமுள்ள 75 சதவீதத் தொகையை 31-12-2007-க்குள் செலுத்துவதற்குக் கூட்டுறவு வங்கியுடன் ஒப்பந்தம் செய்துகொள்ள வேண்டும். மேலும், 27-12-2006-லிருந்து அபராத வட்டி 1.5 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு குறைக்கப்பட்ட வட்டி 27-12-2006-லிருந்து புதிதாக வழங்கப்படும் கடன்களுக்கும், தவணை தவறாது கடன்களைச் செலுத்தி வந்துள்ளவர்களுக்கும் பொருந்தும்.

**3. நகைக் கடன்கள்**

கூட்டுறவு வங்கிகள் வேளாண் நோக்கங்களுக்காகவும், வேளாண் சாரா நோக்கங்களுக்காகவும் நகைகள் அடமானத்தின் பேரில் கடன்கள் வழங்குகின்றன. நலிவடைந்த பிரிவினர், குறிப்பாகக் கிராம மக்கள்,



2007 ஏப்ரல் 17]

தனியார் கடன் வழங்குபவர்களின் வலையில் வீழ்ந்துவிடாமல் தடுக்கும் நோக்கத்துடன், அவர்களின் அவசரத் தேவைகளுக்குக் கூட்டுறவு வங்கிகள் நகைக் கடன்கள் வழங்குகின்றன. விவசாய நோக்கங்களுக்காக நகைக் கடன்கள் 7 சதவீத வட்டியிலும், இதர நோக்கங்களுக்கான கடன் 12 சதவீத வட்டியிலும் வழங்கப்படுகின்றன.

**4. விவசாயக் கடன் அட்டைத் திட்டம்**

விவசாயிகளின் கடன் தேவைகளைக் குறிப்பிட்ட நேரத்தில் நிறைவேற்றுவதற்காக விவசாயக் கடன் அட்டைத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 31-12-2006 அன்றுள்ளபடி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் 16,03,845 விவசாய அங்கத்தினர்களுக்கு விவசாயக் கடன் அட்டைகள் வழங்கியுள்ளன.

**5. நலிந்த பிரிவினருக்குக் கடன் வழங்குதல்**

மாநிலத்தில் உள்ள நலிந்த பிரிவினரின் கடன் தேவைகளை நிறைவு செய்வதில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் உரிய கவனம் செலுத்தி வருகின்றன. தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் வழிமுறைகளின்படி கூட்டுறவு வங்கிகளால் வழங்கப்படும் குறுகிய காலக் கடனில் 30 சதவீதத்திற்குக் குறையாமல் சிறு விவசாயிகளுக்கு, அதாவது 5 ஏக்கர் அல்லது அதற்குக் குறைவாக நஞ்சை அல்லது புஞ்சை நிலங்கள் சொந்தமாக உள்ளவர்களுக்கு அல்லது சாகுபடி செய்பவர்களுக்கு வழங்கப்பட வேண்டும்.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரைச் சார்ந்த அங்கத்தினர்களுக்கு குறுகியகாலக் கடன்களில் 14 சதவீதமும், மத்திய காலக் கடன்களில் 30 சதவீதமும் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

**6. மகளிர் சிறு வணிகக் கடன்**

இதற்கு முன்னர் செயல்படுத்தப்பட்ட சேமிப்புடன் இணைந்த மகளிர் சிறு வணிகத் திட்டம் திருத்தியமைக்கப்பட்டு, சிறு வணிகம் செய்யும் மகளிர் அதிக அளவில் பயன்பெறும் வகையில் கடனுக்கான வட்டி விகிதம் 15 சதவீதத்திலிருந்து 12 சதவீதமாகக் குறைக்கப்பட்டு, இத்திட்டத்தின்கீழான சேவைக் கட்டணங்களும் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன. மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளும், நகரக் கூட்டுறவு வங்கிகளும் இத்திட்டத்தினைச் செயல்படுத்தி வருகின்றன.

[2007 ஏப்ரல் 17

இத்திட்டத்தின்கீழ் பூக்கள், காய்கறிகள், பழங்கள் வியாபாரம் செய்தல் மற்றும் பெட்டிக் கடை நடத்துதல்போன்ற சிறு வணிகம் செய்யத் தேவைக்குத் தகுந்தவாறு ரூ.100 முதல் ரூ.5,000 வரை மகளிர் கடன் பெற்றுக்கொள்ளலாம்.

இத்திட்டத்தின்கீழ் கடன் பெறும் பயனாளிகள் ஒருவருக்கு ஒருவர் பிணையம் வைத்துக் கடனைத் திருப்பிச் செலுத்தப் பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டும். மேலும், பயனாளிகள் அவர்களது வசதிக்கேற்ப கடன் தவணைகளை நேரடியாக வங்கியிலோ அல்லது அவர்கள் வியாபார எல்லையிலுள்ள வங்கி அலுவலர்கள் மூலமாகவோ திரும்பச் செலுத்தலாம்.

தமிழ்நாட்டிலுள்ள மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் நகரப் பஞ்சாயத்துப் பகுதிகளில் 2006-2007 ஆம் ஆண்டில் சிறு வணிகத் திட்டத்தின்கீழ் 69,867 பயனாளிகளுக்கு ரூபாய் 27.63 கோடி வழங்கப்பட்டுள்ளது.

2006-2007 ஆம் ஆண்டு முதல் இத்திட்டம் ஆடவர்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

### 7. மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு உதவி

தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியிடமிருந்து மறு நிதியுதவி பெற்று தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகத்துடன் இணைந்து ஊரகப் பகுதிகளில் சுய உதவிக் குழுக்களுக்கான சிறு வணிகக் கடன் திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. சுய உதவிக் குழுக்களை மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்ள அரசு அனுமதி அளித்துள்ளது. 2006-2007 ஆம் ஆண்டில் இவ்வங்கிகள் சுய உதவிக் குழுக்களுக்கு ரூபாய் 138.63 கோடி அளவிற்குக் கடன்கள் வழங்கியுள்ளன.

### 8. மகளிர் தொழில் முனைவோர் கடன் திட்டம்

இத்திட்டத்தின்கீழ் மகளிர் தொழில் முனைவோர்கள் சிறு தொழில்கள் தொடங்கவும், சேவை மையங்கள் ஆரம்பிக்கவும் 12 சதவீத வட்டி வீதத்தில் ரூபாய் 10 இலட்சம் வரையில் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் நகரக் கூட்டுறவு வங்கிகள் மூலமாகக் கடன்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இவ்வாறு வழங்கப்படும் கடன்கள் 60 மாதத் தவணைகளில் திரும்பச்



2007 ஏப்ரல் 17]

செலுத்தப்பட வேண்டும். 2006-2007ஆம் ஆண்டில் 2,400 மகளிர் தொழில் முனைவோருக்கு ரூபாய் 7.59 கோடி அளவிற்குக் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.

### 9. பணிபுரியும் மகளிர் கடன் திட்டம்

இத்திட்டத்தின்கீழ் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளும், நகரக் கூட்டுறவு வங்கிகளும் மாதச் சம்பளம் பெறும் மகளிருக்கு ரூபாய் 1 இலட்சம் வரை 12 சதவீத வட்டியில் கடன்கள் வழங்குகின்றன. இக்கடன்களை 36 மாதத் தவணையில் திரும்பச் செலுத்த வேண்டும். 2006-2007 ஆம் ஆண்டில் 4,651 பணிபுரியும் மகளிர் ரூபாய் 5.74 கோடி அளவிற்கு இத்திட்டத்தின்கீழ் கடன் பெற்றுள்ளனர்.

### 10. பேறு காலக் கடன் திட்டம்

மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள், நகரக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் 11 சதவீத வட்டி விகிதத்தில் ரூபாய் 2,000 வரை மகளிருக்கு பேறு காலக் கடனாக வழங்கி வருகின்றன. 2006-2007ஆம் ஆண்டில் 2,207 மகளிருக்கு ரூபாய் 44 இலட்சம் இத்திட்டத்தின்கீழ் வழங்கப்பட்டுள்ளது.

### 11. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு வட்டியில்லாப் பங்கு மூலதனக் கடன்

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் இனத்தைச் சார்ந்த அங்கத்தினர்கள் கடன் வாங்கும் சக்தியை அதிகரித்துக்கொள்ள ஏதுவாக வட்டியில்லாப் பங்கு மூலதனக் கடன் வழங்கப்படுகிறது. 2006-2007 ஆம் ஆண்டில், வட்டியில்லா மூலதனக் கடனாக ஒரு அங்கத்தினருக்கு ரூபாய் 250/- வீதம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் அங்கத்தினர்களாக உள்ள 8,000 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் இனத்தைச் சார்ந்த உறுப்பினர்களுக்கு வழங்குவதற்கு ரூ.20 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், நகரக் கூட்டுறவு வங்கிகளைச் சார்ந்த 1,000 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின அங்கத்தினர்களுக்கு வட்டியில்லா மூலதனக் கடனாக ஒரு அங்கத்தினருக்கு ரூ.500/- வீதம் வழங்க ரூபாய் 5 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 12. தொழில் கடன்

மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள், மருத்துவர்களுக்கும், பொறியாளர்களுக்கும் 12 சதவீத வட்டியில் ரூபாய் 100 இலட்சம்

[2007 ஏப்ரல் 17

வரையில் கடன்கள் வழங்கி வருகின்றன. இக்கடனை 15 ஆண்டுகளில் திருப்பிச் செலுத்த வேண்டும்.

**13. மகளிர் அங்கத்தினர்களுக்கு வட்டியில்லா மூலதனக் கடன் வழங்குதல்**

கூட்டுறவு வங்கிகளில் அங்கத்தினர்களின் கடன் வாங்கும் திறன் அவர்கள் செலுத்தும் மூலதனத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. கிராமப்புறங்களிலுள்ள நலிவடைந்த பிரிவினைச் சேர்ந்த மகளிரின் குறைந்த நிதி நிலைமையைக் கருத்திற்கொண்டு, மகளிர் உறுப்பினர்களுக்கு அவர்களின் கடன் வாங்கும் சக்தியை அதிகரிக்க ஏதுவாக வட்டியில்லா மூலதனக் கடன் வழங்கப்படுகிறது. இதன் பயனாக, செலுத்தப்பட்ட மூலதனத்தின் 20 மடங்கிலிருந்து 40 மடங்கு வரை அவர்கள் கடன் பெற்றுக்கொள்ள இயலும். இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் கடனை 5 ஆண்டுத் தவணைகளில் திரும்பச் செலுத்த வேண்டும்.

2006-2007 ஆம் ஆண்டில் மூலதன நிதியுதவி வழங்கிய விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன:—

| வ. எண் | கூட்டுறவு நிறுவனத்தின் பெயர் | ஒருவருக்கு அளிக்கப் படும் கடன் தொகை | பயனாளிகள் எண்ணிக்கை | மொத்தக் கடன் தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1. | தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் | ரூ. 500 | 2,000 | 10.00 |
| 2. | தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் | ரூ. 1,000 | 500 | 5.00 |
| 3. | நகரக் கூட்டுறவு வங்கிகள் | ரூ. 500 | 1,000 | 5.00 |
| 4. | மேலே குறிப்பிட்ட வங்கிகள்மூலமாக உடல் ஊனமுற்ற மகளிர்க்குக் கடன்கள் | ரூ. 500 | 1,000 | 5.00 |

இத்திட்டம் 2007-2008 ஆம் ஆண்டிலும் தொடரும்.



2007 ஏப்ரல் 17]

**14. பண்ணைசாராக் கடன்களுக்கு நிதியுதவி**

தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் கிராமக் கைவினைஞர்கள், கைத்திறன் பெற்றோர், சிறு தொழில் முனைவோர்போன்றவர்களுக்கு 1990-91 ஆம் ஆண்டிலிருந்து பண்ணைசாராத் திட்டத்தின்மூலம் கடன்கள் வழங்கி வருகின்றன. இவ்வாறு அளிக்கப்படும் நிதியுதவியால், பயனுள்ள தொழில்கள் துவங்கி வருமானத்தைப் பெருமளவில் பெருக்கிக்கொண்டு கிராமப்புற மக்கள் பயனடைந்து வருகின்றனர். நபார்டு வங்கி தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளுக்குக் கடன் வழங்குவதற்காக விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளைத் தளர்த்தி இத்திட்டத்திற்காக 100 சதவீத மறு நிதியுதவி அளிக்கிறது.

கூட்டுக் கடன் திட்டத்தின்கீழ் அதிக அளவாக ரூபாய் 2 இலட்சம் வரை தனி நபருக்குக் கடன் வழங்கப்படும். ஒருங்கிணைந்த கடன் திட்டத்தின்கீழ் ரூபாய் 15 இலட்சம் வரை கடன் வழங்கப்படும்.

**15. நகரக் கூட்டுறவு வங்கிகளால் வழங்கப்படும் பண்ணைசாராக் கடன்கள்**

நகரக் கூட்டுறவு வங்கிகள் குடிசைத் தொழில் மற்றும் சிறு தொழில்களுக்குப் பண்ணைசாராக் கடன்கள் வழங்கி வருகின்றன. 2006-2007 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் ரூபாய் 105.75 கோடி அளவிற்குக் கடன் வழங்கப்பட்டுள்ளது. இதன்மூலம் 36,271 நபர்கள் பயன்பெற்றுள்ளனர்.

**16. தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டம்**

பயிர்க் காப்பீட்டிற்கான தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டம், 2000 ஆம் ஆண்டு காரிப் பருவத்திலிருந்து மாநில அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் அறிவிக்கை செய்யப்பட்ட இடங்களில் விளையும் அறிவிக்கை செய்யப்பட்ட பயிர்கள் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்குப் பயிர்க் காப்பீடு செய்யப்பட்டு நிதியுதவி அளிக்கப்படுகிறது. இயற்கைச் சீற்றத்தாலோ, பூச்சித் தாக்குதலினாலோ, நோயினாலோ பயிர்கள் அழிந்துவிடும் நிலையில் இத்திட்டத்தின்கீழ் மாநில சராசரி மகசூலின் மதிப்பில்

[2007 ஏப்ரல் 17

150 சதவீதம் வரை அதிகபட்சமாக ஒரு விவசாயி காப்பீடு செய்து கொள்ளலாம். இத்திட்டத்தின்கீழ் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு 10 சதவீதம் தவணைக் கட்டணத்திற்குச் (Premium) சமமான தொகை மானியமாக வழங்கப்படுகிறது. இத்தொகையை மத்திய அரசும், மாநில அரசும் சம அளவில் பகிர்ந்து கொள்கின்றன.

2006-2007 ஆம் ஆண்டில் தவணைக் கட்டணம் (Premium) மானியமாக ரூ. 17.60 இலட்சமும், 100 சதவீதத் தவணைக் கட்டணத் தொகைக்கு அதிகமான பயிர்க் காப்பீட்டுக் கேட்புத் தொகைக்காக ரூபாய் 20.82 கோடியும் வழங்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு முதல் விவசாயிகளுக்கான சிறப்புத் திட்டமாக, வறட்சி, வெள்ளம்போன்றவற்றால் ஏற்படும் பயிர் இழப்பிலிருந்து விவசாயிகளைப் பாதுகாக்கும் வகையில் வரும் நிதியாண்டில் 10 இலட்சம் விவசாயிகளுக்குப் பயிர்க் காப்பீடு செய்துகொள்ள நிதியுதவி அளிக்கப்படும். இதற்காக ரூபாய் 1.5 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



2007 ஏப்ரல் 17]

## அத்தியாயம்-3

## நுகர்வோர் கூட்டுறவு

நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் பொது மக்களுக்குத் தரம் வாய்ந்த பொருட்களை நியாயமான விலையில் கிடைப்பதை உறுதி செய்வதில் முக்கியப் பங்கு வகிக்கின்றன. தனியார் வியாபாரிகளால் நுகர்வோர்களின் உரிமைகள் பாதிப்பதை இச்சங்கங்கள் தடுக்கின்றன. இச்சங்கங்கள் சந்தை விலைகளைக் கட்டுப்படுத்துவதிலும், நிலைநிறுத்துவதிலும் முக்கிய அங்கம் வகிக்கின்றன.

தமிழ்நாட்டில் நுகர்வோர் கூட்டுறவுக் கட்டமைப்பானது மூன்றடுக்காக அமைந்துள்ளது.

(அ) தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம் (மாநில அளவில்)

(ஆ) மொத்த விற்பனைப் பண்டகசாலைகள் (மாவட்ட அளவில்) மற்றும்

(இ) தொடக்கக் கூட்டுறவுப் பண்டகசாலைகள் (தொடக்க நிலையில்)

### (அ) தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம்

தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம், மாநில அளவில் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களின் தலைமைச் சங்கமாகும். தற்போது இவ்விணையம் காகிதத்தைக் கொள்முதல் செய்து மாவட்டக் கூட்டுறவுப் பண்டகசாலைகளுக்கும், கூட்டுறவு அச்சகங்களுக்கும் மொத்த விநியோகம் செய்து வருகிறது. பண்டிகைக் காலங்களில் பட்டாசுக் கொள்முதல் செய்தும் விற்பனை செய்து வருகிறது.

2006-2007 ஆம் ஆண்டில் இவ்விணையத்தின் மொத்த விற்பனை அளவு ரூ.113.25 இலட்சம் ஆகும்.

### (ஆ) கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகள்

தமிழ்நாட்டில் மாவட்ட அளவில் 34 கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகள் செயல்பட்டு வருகின்றன. இந்தக் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகள், நுகர்வோர் பொருட்களை நேரடியாக உற்பத்தி மையங்களிலிருந்தும், விற்பனைச் சங்கங்களிடமிருந்தும் மொத்தமாகக் கொள்முதல் செய்து நுகர்வோர்களுக்கு நியாயமான

[2007 ஏப்ரல் 17

விலையில் விற்பனை செய்கின்றன. இக்கூட்டுறவுப் பண்டகசாலைகள் மருந்து விற்பனை, சமையல் எரிவாயு விநியோகம், பெட்ரோல் மற்றும் டீசல் விற்பனை ஆகியவற்றிலும் ஈடுபட்டுள்ளன.

இந்நுகர்வோர் கூட்டுறவுகள், தங்களது வழக்கமான பணியான கொள்முதல் மற்றும் விநியோகம் தவிர, முதன்மைச் சங்கங்களாக இருந்து அத்தியாவசியப் பொருட்களை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகக் கிடங்குகளிலிருந்து எடுத்து, நியாய விலைக் கடைகள் மூலம் பொது மக்களுக்கு விநியோகம் செய்கின்றன.

2006-2007 ஆம் ஆண்டில் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகள் ரூ. 1,006.52 கோடி அளவிற்குக் கட்டுப்பாடு மற்றும் கட்டுப்பாடற்ற பொருட்களை விற்பனை செய்துள்ளன.

**(இ) தொடக்கக் கூட்டுறவுப் பண்டகசாலைகள்**

மாணவர் கூட்டுறவுப் பண்டகசாலைகள், பணியாளர் கூட்டுறவுப் பண்டகசாலைகள் மற்றும் மகளிர் கூட்டுறவுப் பண்டகசாலைகள் உள்ளிட்ட 3,255 தொடக்கக் கூட்டுறவுப் பண்டகசாலைகள் உள்ளன. இந்தத் தொடக்கக் கூட்டுறவுப் பண்டகசாலைகள் நுகர்வோர் பொருட்களை அதன் அங்கத்தினர்களுக்கும், பொது மக்களுக்கும் விநியோகம் செய்யும் மையங்களாகச் செயல்பட்டு வருகின்றன. இப்பண்டகசாலைகள் பொது விநியோகத் திட்டத்தின்கீழ் இன்றியமையாப் பொருட்களைப் பொது மக்களுக்கு விநியோகம் செய்து வருகின்றன.

2006-2007 ஆம் ஆண்டில் கூட்டுறவுச் சங்கங்கள் ரூபாய் 2,391.85 கோடி அளவிற்குக் கட்டுப்பாடு மற்றும் கட்டுப்பாடற்ற பொருட்களைச் சில்லறை விற்பனை செய்துள்ளன.



2007 ஏப்ரல் 17]

## அத்தியாயம்–4

## பொது விநியோகத் திட்டத்தில் கூட்டுறவுச் சங்கங்களின் பங்கு

தமிழ்நாட்டில் பொது விநியோகத் திட்டமானது மக்களுக்கு உணவுப் பாதுகாப்பிற்கு உத்தரவாதம் அளிப்பதற்கும், அத்தியாவசியப் பொருட்களின் விலைகளைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதற்கும் ஒரு கருவியாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. அத்தியாவசியப் பொருட்களை விநியோகம் செய்வதில் கூட்டுறவுச் சங்கங்கள் பெரும் பங்கு வகிக்கின்றன. கூட்டுறவுச் சங்கங்கள் மாநிலம் முழுவதும் 27,017 நியாய விலைக் கடைகளை நடத்தி வருகின்றன. கூட்டுறவுச் சங்கங்களின்மூலம் நடத்தப்பட்டு வரும் நியாய விலைக் கடைகள் மாநிலத்தில் மொத்தமுள்ள 1.90 கோடி குடும்ப அட்டைதாரர்களில் 1.68 கோடி குடும்ப அட்டைதாரர்களுக்கு அரிசி, சர்க்கரை, கோதுமை, மண்ணெண்ணெய்போன்ற அத்தியாவசியப் பொருட்களை வழங்கி வருகின்றன. இப்பணி 86 முதன்மைச் சங்கங்கள், 4,540 இணைப்புச் சங்கங்கள் மற்றும் 434 சுய எடுப்புக் கூட்டுறவுச் சங்கங்கள் (Self Lifting Societies) உள்ளடக்கிய 5,060 கூட்டுறவுச் சங்கங்களால் நடத்தப்படும் 21,599 முழுநேர நியாய விலைக் கடைகள்மூலம் செயல்படுத்தப்படுகிறது. இது தவிர, கூட்டுறவுச் சங்கங்களால் 5,418 பகுதிநேர நியாய விலைக் கடைகளும், 36 நடமாடும் நியாய விலைக் கடைகளும் மற்றும் 266 மண்ணெண்ணெய் வழங்கு நிலையங்களும் நடத்தப்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டில் நியாய விலைக் கடை நடத்தும் உரிமம் தனிப்பட்ட வியாபாரிகளுக்கு வழங்கப்படவில்லை என்பது நமது பொது விநியோகத் திட்டத்தின் தனித் தன்மையாகும்.

2006-2007 ஆம் ஆண்டில் கூட்டுறவுச் சங்கங்களால் நடத்தப்படும் நியாய விலைக் கடைகள் ரூபாய் 1,513.02 கோடி அளவிற்கு அத்தியாவசியப் பொருட்களைக் குடும்ப அட்டைதாரர்களுக்கு விற்பனை செய்துள்ளன. இதன் விவரங்கள் பின்வருமாறு:—

| வ. எண். | பொருட்கள் | விநியோகிக்கப்பட்ட அளவு (மெட்ரிக் டன்/ கிலோ லிட்டர்) | மதிப்பு (ரூபாய் கோடியில்) |
|---|---|---|---|
| 1. | அரிசி | 25,21,614 | 564.85 |
| 2. | சர்க்கரை | 3,24,410 | 437.95 |
| 3. | கோதுமை | 66,176 | 49.63 |
| 4. | மண்ணெண்ணெய் | 5,48,320 | 460.59 |
| | மொத்தம் | | 1,513.02 |

[2007 ஏப்ரல் 17

அனைத்து நியாய விலைக் கடைகளிலும் விநியோகம் செய்யப்படும் அத்தியாவசியப் பொருட்களின் எடை சரியாக இருப்பதை உறுதி செய்யும் நோக்கத்தில் 23,601 கூட்டுறவு நியாய விலைக் கடைகளுக்கு நவீன எடை இயந்திரங்கள் வாங்குவதற்காக இந்த ஆண்டு ரூபாய் 11.50 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**(i) மகளிர் சுய உதவிக் குழுக்களால் நடத்தப்படும் நியாய விலைக் கடைகள்**

மகளிர் சமூக நிலையிலும், பொருளாதார நிலையிலும் மேம்பாடு அடைந்தால்தான் அவர்களுக்கு உண்மையிலேயே சம உரிமை கிடைத்ததாகக் கூற முடியும். சில நியாய விலைக் கடைகளை மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வழங்குவது என்ற அரசின் முடிவு இதற்கான முதல் கட்டமாகும். 31-3-2007 அன்றுள்ளபடி, 630 நியாய விலைக் கடைகள் மகளிரால் நடத்தப்பட்டு வருகின்றன.

**(ii) இதர அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றத்தைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வர எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்**

பொது மக்கள் அன்றாடம் பயன்படுத்தும் அத்தியாவசியப் பொருட்களான பருப்பு வகைகள் மற்றும் சமையல் எண்ணெய் ஆகியவற்றின் விலை உயர்விலிருந்து ஏழை மற்றும் நடுத்தர வருவாய்க் குடும்பங்களைப் பாதுகாக்க உடனடித் தற்காலிக நடவடிக்கையாக இப்பொருட்களை அரசே கொள்முதல் செய்து நியாய விலைக் கடைகள்மூலமாகப் பொது மக்களுக்கு வழங்கிட முடிவு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் கூட்டுறவுச் சங்கங்கள் பெரும் பங்கு வகிக்கின்றன.

**(iii) கூட்டுறவு நியாய விலைக் கடைகள்மூலம் ஊட்டி தேயிலை விற்பனை**

நீலகிரி மாவட்டத்திலுள்ள சிறு தேயிலை உற்பத்தியாளர்களின் இன்னல்களை நீக்கும் வகையில் நியாய விலைக் கடைகளில் இன்கோசர்வ் (INDCOSERVE) மூலம் பதப்படுத்தப்பட்ட தேயிலை விற்பனை செய்யும் திட்டத்தை அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. 2006-07 ஆம் ஆண்டில் கூட்டுறவுச் சங்கங்கள் 2,960 மெட்ரிக் டன் ஊட்டி தேயிலையை விற்பனை செய்துள்ளன.

**(iv) கூட்டுறவு நியாய விலைக் கடைகள்மூலம் அயோடின் கலந்த அரசு உப்பு விற்பனை**

அயோடின் குறைபாடு காரணமாக ஏற்படும் கழலை நோயைத் தடுக்கும் முகத்தான், நியாய விலைக் கடைகள்மூலம் அயோடின் கலந்த அரசு உப்பு கிலோ ரூ. 2.50 என்ற விலையில் விற்பனை செய்யும் திட்டத்தை அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. நியாய விலைக்



2007 ஏப்ரல் 17]

கடைகள்மூலம் சராசரியாக மாதம் ஒன்றுக்கு 1,869 மெட்ரிக் டன் உப்பு விற்பனை செய்யப்படுகிறது.

2006-07 ஆம் ஆண்டில் 23,886 மெட்ரிக் டன் அரசு அயோடின் உப்பு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

**(v) நியாய விலைக் கடைகள்மூலம் காதிப் பொருட்கள் விற்பனை**

ஊரகத் தொழில்களை ஊக்கப்படுத்தி வளர்ச்சி அடையச் செய்யும் நோக்கத்தில் தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியத்தால் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் கூட்டுறவு நியாய விலைக் கடைகள்மூலம் விற்பனை செய்யப்படும் என அரசு அறிவித்துள்ளது. 10 வகையான காதிப் பொருட்களை நியாய விலைக் கடைகளில் விற்பனை செய்வதன்மூலம் இத்திட்டம் மாநிலத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. 2006-2007 ஆம் ஆண்டில் கூட்டுறவுச் சங்கங்களால் விற்பனை செய்யப்பட்ட காதிப் பொருட்களின் மதிப்பு ரூபாய் 178.69 இலட்சமாகும்.

**(vi) பொது விநியோகத் திட்டம்—முறைப்படுத்தலும், கண்காணித்தலும்**

நியாய விலைக் கடைகளை உரிய நேரத்தில் திறந்து கட்டுப்பாட்டுப் பொருட்களை எவ்விதத் தட்டுப்பாடுமின்றி மக்களுக்கு விநியோகம் செய்வதை முறைப்படுத்துவதையும், பொது விநியோகத் திட்டம்மூலம் குடும்ப அட்டைதாரர்களுக்கு விநியோகம் செய்யும் அத்தியாவசியப் பொருட்கள் சரியான அளவுகளில் தரமாக வழங்கப்படுவதை உறுதிப்படுத்தவும், கணக்குகள் முறையாகப் பராமரிப்பதைக் கண்காணிக்கவும், சென்னையைப் பொறுத்தவரையில் இரண்டு இணைப் பதிவாளர்கள் (பொது விநியோகத் திட்டம்) தலைமையிலும், பிற மாவட்டங்களில் மண்டல இணைப் பதிவாளர்களின் தலைமையிலும், 35 பொது விநியோகத் திட்டத் துணைப் பதிவாளர்கள், 391 பொது விநியோகத் திட்டக் கூட்டுறவு சார் பதிவாளர்கள், 72 பொது விநியோகத் திட்டக் முதுநிலை ஆய்வாளர்கள் மற்றும் முதன்மைச் சங்கத் தனி அலுவலர்கள் உட்பட மொத்தம் 708 ஆய்வு அலுவலர்கள் செயல்பட்டு வருகின்றனர்.

இவர்களோடு பதிவாளரால் நியமிக்கப்பட்ட 30 மாவட்ட விழிப்புப் பணிக் குழுக்கள் மற்றும் பறக்கும் படை ஆகியவற்றின் மூலமும் மாதந்தோறும் சராசரியாக 17,563 கூட்டுறவு நியாய விலைக் கடைகள் ஆய்வு செய்யப்பட்டு பொது விநியோகத் திட்டம் முறையாகச் செயல்படுவது கண்காணிக்கப்பட்டு வருகிறது.

## அத்தியாயம்-5

## கூட்டுறவு விற்பனை, பதனிடுதல் மற்றும் சேமிப்பு

வேளாண் இடுபொருட்கள் விநியோகம், வேளாண் விளைபொருட்கள் பதனிடுதல், சேமிப்பு மற்றும் விற்பனை ஆகியவற்றிற்கான கூட்டுறவுச் சங்கங்கள் இரண்டு அடுக்காகச் செயல்படுகின்றன.

(அ) தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் (மாநில அளவில்)

(ஆ) தொடக்க விற்பனைச் சங்கங்கள் (தொடக்க அளவில்)

### தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம்

1959 ஆம் ஆண்டு ஒரு தலைமைச் சங்கமாக ஆரம்பிக்கப்பட்ட தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம், நீலகிரி, தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்கள் நீங்கலாக மீதமுள்ள மாவட்டங்களில் உள்ள பொது மக்களுக்குத் தொடக்க விற்பனைச் சங்கங்கள்மூலம் சேவை செய்து வருகிறது. தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் மொத்த விற்பனையாளராகத் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் மூலமாக உரங்கள் மற்றும் பூச்சிக் கொல்லி மருந்துகளை விற்பனை செய்கிறது. இவ்விணையம் 1970 ஆம் ஆண்டு திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி அருகிலுள்ள பாமணி என்ற இடத்தில் ஒரு உரக் கலவை ஆலையை நிறுவியது. இந்த இணையம் 28,640 மெட்ரிக் டன் கொள்திறன்கொண்ட 38 கிடங்குகளைச் சொந்தமாகவும், 3,450 மெட்ரிக் டன் கொள்திறன்கொண்ட 9 வாடகைக் கிடங்குகளையும் வைத்துள்ளது. சென்னையில் 2 குளிர்பதனக் கிடங்குகளை இந்நிறுவனம் பராமரித்து வருகிறது. 1,350 மெட்ரிக் டன் கொள்திறன்கொண்ட ஒரு குளிர்பதனக் கிடங்கு சென்னை பேசின் பிரிட்ஜிலும், 2,500 மெட்ரிக் டன் கொள்திறன்கொண்ட மற்றொரு கிடங்கு கோயம்பேடு மொத்த வணிக வளாகத்திலும் அமைந்துள்ளன.

### தொடக்கக் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள்

தமிழ்நாட்டில் தற்போது 113 தொடக்கக் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன.





### தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையம்

தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் உள்ள விவசாயிகளுக்கு, தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையம் அதனுடன் இணைக்கப்பட்டுள்ள 12 தொடக்க விற்பனைச் சங்கங்கள் மூலம் சேவை செய்து வருகிறது.

### நீலகிரி கூட்டுறவு விற்பனைச் சங்கம்

நீலகிரி கூட்டுறவு விற்பனைச் சங்கம், ஒரு தனி வகைக் கூட்டுறவுச் சங்கமாகும். இச்சங்கம் நீலகிரி மாவட்டத்தின் விவசாயிகளுக்கு அவர்களின் வேளாண் விளைபொருட்களை விற்பனை செய்வதற்கு உதவி புரிகிறது. இந்தச் சங்கம் கலவை உரங்களைத் தயாரித்து விவசாயிகளுக்கு அவர்கள் வாங்கக்கூடிய விலையில் விற்பனை செய்து வருகிறது. மேலும், 18 விற்பனை மையங்கள்மூலமாக விவசாயிகளுக்கு வேளாண் கருவிகளை விநியோகம் செய்கிறது.

### துடியலூர் கூட்டுறவு விவசாய சேவைச் சங்கம்

துடியலூர் கூட்டுறவு விவசாய சேவைச் சங்கம் மாநிலத்தில் ஒரு தனி வகைத் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கமாகும். இச்சங்கம் மாநிலம் முழுமையிலும் உள்ள விவசாயிகளுக்கு விதை, பூச்சி மருந்து மற்றும் விவசாயக் கருவிகள் ஆகியவற்றை விற்பனை செய்து வருகிறது. இச்சங்கம் வங்கிப் பணிகளையும் மேற்கொண்டு வருகிறது.

### கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் பணிகள்

#### (I) வேளாண் விளைபொருட்கள் விற்பனை

கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் அதன் அங்கத்தினர்கள் உற்பத்தி செய்த பொருட்களைப் பதனிட்டு, சேமித்து வைத்து ஆதாயத்தில் விற்பனை செய்வதற்கு உதவி புரிகின்றன. விற்பனைச் சங்கங்கள் வேளாண் விளைபொருட்களை ஏலம்மூலம் விற்பனை செய்வதற்கு ஏற்பாடு செய்வதுடன் அதன் அங்கத்தினர்களிடமிருந்து உடனடி ரொக்கக் கொள்முதல் செய்து நுகர்வோர்களுக்கு விற்பனை செய்கின்றன. தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம், வேளாண் பொருட்களைக் கட்டுறவு விற்பனைச் சங்கங்களிடமிருந்து வாங்கி நுகர்வோர் கூட்டுறவுகளுக்கும் அல்லது விலைகள் சாதகமாய் இருக்கும் நேரங்களில் தனியார் வியாபாரிகளுக்கும் விற்பனை செய்கின்றன. இக்கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் உற்பத்தியாளர்களுக்கும், நுகர்வோர்களுக்கும் ஒரு பாலமாக விளங்குகின்றன.

2006-2007 ஆம் ஆண்டில், கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் ரூபாய் 882 கோடி மதிப்புள்ள வேளாண் விளைபொருட்களை விற்பனை செய்துள்ளன.

**(ii) விற்பனையுடன் இணைந்த கடன் திட்டம்**

இத்திட்டத்தின்படி, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் கடன்பெற்றவர்கள், கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் அங்கத்தினர்களாகச் சேர்க்கப்பட்டுள்ளனர். கடன்பெற்ற அங்கத்தினர்களின் உற்பத்திப் பொருட்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள்மூலம் பகிரங்க ஏலத்தில் உற்பத்தியாளர்களுக்குத் திருப்தி அளிக்கும் வகையில் விற்பனை செய்யப்பட்டு, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்குச் சேர வேண்டிய தொகை விற்பனைத் தொகையிலிருந்து வசூலிக்கப்பட்டு, அக்கூட்டுறவு வங்கிகளில் செலுத்தப்படும். இத்திட்டத்தின்கீழ் 2006-2007 ஆம் ஆண்டில் ரூபாய் 199 இலட்சம் அங்கத்தினர்களிடமிருந்து வசூலிக்கப்பட்டு, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்குச் செலுத்தப்பட்டுள்ளது.

**(iii) விற்பனையுடன் இணைந்து நுகர்வோர் கூட்டுறவு**

உற்பத்தியாளர்கள் தாங்கள் உற்பத்தி செய்த பொருட்களுக்கு ஆதாயமான விலை கிடைக்கின்ற வகையிலும், நுகர்வோர்கள் இன்றியமையாப் பொருட்களை நியாயமான விலையில் பெறுவதற்கு ஏதுவான வகையிலும், கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகளுடன் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் இணைந்து செயலாற்றுகின்றன.

2006-2007 ஆம் ஆண்டு கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் ரூபாய் 1,668 இலட்சம் மதிப்புள்ள உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்துள்ளன.

**(iv) உற்பத்திப் பொருட்களை ஈடு வைத்துக் கடன் வழங்குதல்**

கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் அதன் உறுப்பினர்களுக்கு வேளாண் விளைபொருட்கள் ஈட்டின் பேரில் கடன்கள் வழங்குகின்றன. இதனால் அவர்களுடைய உற்பத்திப் பொருட்களைச் சாதகமான சந்தை நிலவரங்களின்போது நல்ல விலையில் விற்பதற்கு ஏதுவாகிறது. இத்திட்டத்தின்கீழ் 2006-2007 ஆம் ஆண்டில் ரூபாய் 2,287 இலட்சம் மதிப்பிற்குக் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.



**(v) பதனிடும் அலகுகள்**

கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் கட்டுப்பாட்டில் இயங்கும் சில கூட்டுறவுச் சங்கங்கள், அரிசி ஆலைகள், பஞ்சு அரைவை ஆலைகள், மாவு ஆலைகள், பருப்பு ஆலைகள்போன்ற பதனிடும் அலகுகளை நடத்தி வருகின்றன. இந்த அலகுகள் விவசாயிகளுக்கு நியாயமான விலையில் பதனிடும் வசதிகளைச் செய்து தருகின்றன.

2006-2007 ஆம் ஆண்டில் இந்த அலகுகளால் பதனீடு செய்யப்பட்ட பொருட்களின் அளவு 24,865.630 மெட்ரிக் டன் ஆகும்.

**(vi) ஆதரவு விலைத் திட்டத்தின்கீழ் கொப்பரைக் கொள்முதல்**

வெளிச்சந்தையில் கொப்பரை விலை குறைவாக உள்ள நேரங்களில் ஆதரவு விலைத் திட்டத்தின்கீழ் தேசிய வேளாண் விற்பனை இணையத்தின் சார்பாக மத்திய அரசு நிர்ணயம் செய்துள்ள ஆதரவு விலையில் தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் கொப்பரைக் கொள்முதல் செய்கிறது.

2006-2007 ஆம் ஆண்டில் தேசிய வேளாண் விற்பனை இணையத்தின் சார்பாக ரூபாய் 331.00 இலட்சம் மதிப்புள்ள 922 மெட்ரிக் டன் கொப்பரையைத் தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் கொள்முதல் செய்துள்ளது.

இத்திட்டம் 2007-2008 ஆம் ஆண்டிலும் செயல்படுத்தப்படும்.

[2007 ஏப்ரல் 17

## அத்தியாயம்-6

## கூட்டுறவுக் கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி

நமது நாட்டில் 100 ஆண்டுகளுக்கும் மேலாகச் செயல்பட்டு வரும் கூட்டுறவு இயக்கம், சமூகப் பொருளாதார மாற்றங்கள் கொண்டு வருவதில் ஆக்கபூர்வமான மற்றும் சக்திவாய்ந்த கருவி என்பதை நிரூபித்துள்ளது. மக்கள் மத்தியில் கூட்டுறவுகளின் சாதனைகளைத் தெளிவாகப் பரப்புவதற்கும், அவற்றின் வளர்ச்சிக்கும் தலைமைச் சங்கமான தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்துடன் மாவட்ட அளவில் 29 மாவட்டக் கூட்டுறவு ஒன்றியங்களும் உதவுகின்றன.

கூட்டுறவு இயக்கம் பற்றி மாணவர்களுக்குப் பயிற்சி அளித்தல், கூட்டுறவு நிறுவனங்களின் பணியாளர்களுக்கு மறு பயிற்சி வகுப்புகள் நடத்துதல், கூட்டுறவு இயக்கத்தில் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சியினை ஊக்கப்படுத்துதல், கண்காட்சிகள் மற்றும் இதர விளம்பர முறைகளின் மூலமாக கூட்டுறவு இயக்கத்தின் செய்திகளைப் பிரச்சாரம் செய்தல் ஆகியவை கூட்டுறவு ஒன்றியங்களின் முக்கியப் பணிகளாகும்.

### கூட்டுறவுப் பயிற்சி

தமிழ்நாட்டில் 20 கூட்டுறவுப் பயிற்சி நிலையங்கள் உள்ளன. அவற்றில் 11 பயிற்சி நிலையங்கள் தனித்தும், 9 பயிற்சி நிலையங்கள் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் அங்கமாகவும் செயல்படுகின்றன. இந்தப் பயிற்சி நிலையங்கள், மாணவர்களுக்கு 36 வார கூட்டுறவுப் பட்டயப் படிப்பை நடத்தி வருகின்றன. 2006-2007 ஆம் ஆண்டில் 1,326 மாணவர்கள் பயிற்சி பெற்றுள்ளனர். மேலும், அனைத்து வகையான கூட்டுறவுச் சங்கங்களின் பணியாளர்கள் பயன்பெறும்பொருட்டு, அஞ்சல் வழிக் கல்வியையும் இப்பயிற்சி நிலையங்கள் நடத்தி வருகின்றன. ஆண்டுதோறும் சுமார் 1,000 பணியாளர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இப்பயிற்சி நிலையங்கள், அனைத்து செயற்பதிவாளர்களின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கி வரும் கூட்டுறவுச் சங்கங்களின் பணியாளர்களின் பயனுக்காகக் குறுகிய காலப் பயிற்சியையும் நடத்துகின்றன. கணினிப் பயன்பாடு குறித்த பட்டயப் படிப்பு மற்றும் குறுகிய காலக் கணினிப் பயிற்சிகளும் நடத்தப்படுகின்றன. அனைத்து கூட்டுறவுப் பயிற்சி நிலையங்களிலும்



2007 ஏப்ரல் 17]

நகை மதிப்பீடு மற்றும் அதன் நுட்பங்கள் குறித்த பயிற்சி நடத்தப்பட்டு வருகிறது.

### கூட்டுறவு மேலாண்மையில் உயர் பட்டயப் பயிற்சி

புது டெல்லி தேசிய கூட்டுறவுப் பயிற்சிக் கழகத்தால் நடத்தப்படும் இரண்டு கூட்டுறவு மேலாண்மை நிறுவனங்களில் ஒன்று சென்னையிலும், மற்றொன்று மதுரையிலும் செயல்பட்டு வருகின்றன. இப்பயிற்சி நிலையங்கள் பட்டதாரி மாணவர்களுக்குக் கூட்டுறவு மேலாண்மையில் 36 வார உயர் பட்டயப் பயிற்சி வகுப்புகள் நடத்துகின்றன. 2006-2007 ஆம் ஆண்டில் 31 மாணவர்கள் இப்பயிற்சியினைப் பெற்றுள்ளனர்.

### தொழில்நுட்பக் கல்வி

தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் கட்டுப்பாடில் தருமபுரி மாவட்டத்தில் பர்கூரிலும், தஞ்சாவூர் மாவட்டத்தில் பட்டுக்கோட்டையிலும், விருதுநகர் மாவட்டத்தில் திருச்சுழியிலும் கூட்டுறவுத் தொழிற்பயிற்சி நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. இவை வேலையில்லா இளைஞர்களுக்குத் தொழில்நுட்பப் பயிற்சி அளிக்கின்றன. இந்தத் தொழிற்பயிற்சி நிலையங்கள்மூலமாக ஆண்டுதோறும் சராசரியாக 280 மாணவர்கள் தொழில்நுட்பப் பயிற்சி பெற்று வருகின்றனர். திருச்சிராப்பள்ளி மாவட்டம், லால்குடியில் கூட்டுறவுத் தொழில்நுட்பக் கல்லூரி ஒன்று தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் கட்டுப்பாட்டில் செயல்பட்டு வருகிறது.

### கூட்டுறவு ஆராய்ச்சி

தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தால், சென்னைப் பல்கலைக்கழகம், காமராசர் பல்கலைக்கழகம், பாரதியார் பல்கலைக்கழகம் மற்றும் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் ஆகிய பல்கலைக்கழகங்கள் ஒவ்வொன்றிலும் ரூ. 5.00 இலட்சம் செலுத்தப்பட்டு, அதிலிருந்து கிடைக்கும் வட்டித் தொகையைக் கொண்டு கூட்டுறவு பற்றிய ஆராய்ச்சிகளை மேற்கொள்ளும் மாண்வர்களுக்கு உதவித் தொகை வழங்கப்படுகிறது.

[2007 ஏப்ரல் 17

**நிதி ஆதாரம்**

தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் கீழ்க்கண்ட இரு நிதிகளைப் பராமரித்து வருகிறது.

*(1)* கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதி

*(2)* கூட்டுறவுக் கல்வி நிதி

இவ்வொன்றியம், உறுப்பினர் சங்கங்களிடமிருந்து ஆண்டுச் சந்தா வசூலித்தல், வெளியீடுகள் விற்பனை மற்றும் கூட்டுறவுச் சங்கங்களின் இலாபத்திலிருந்து வசூலிக்கும் பங்கு ஆகியவற்றின்மூலம் தனது நிதி ஆதாரத்தைத் திரட்டுகிறது.



2007 ஏப்ரல் 17]

## அத்தியாயம்–7

## தனி வகைக் கூட்டுறவுச் சங்கங்கள்

**கூட்டுறவு அச்சகங்கள்**

நமது மாநிலத்தில் கூட்டுறவுத் துறையின்கீழ் 26 கூட்டுறவு அச்சகங்கள் நிறுவப்பட்டுள்ளன. இக்கூட்டுறவு அச்சகங்கள் அரசு, அரசுசார்ந்த நிறுவனங்கள், உள்ளாட்சி நிறுவனங்கள் மற்றும் பொது மக்களின் அச்சுத் தேவைகளைப் பூர்த்தி செய்து வருகின்றன.

31-3-2007 அன்றைய நிலவரப்படி இக்கூட்டுறவு அச்சகங்கள் 12,645 உறுப்பினர்களைக் கொண்டு ரூபாய் 2.09 கோடி செலுத்தப்பட்ட பங்கு மூலதனத்துடன் இயங்கி வருகின்றன.

**உப்புத் தொழிலாளர் கூட்டுறவு உற்பத்தி மற்றும் விற்பனைச் சங்கங்கள்**

உப்புத் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் வகையில் 11 உப்புத் தொழிலாளர்கள் கூட்டுறவு உற்பத்தி மற்றும் விற்பனைச் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டன. மாநிலத்தில் தற்போது செயல்பட்டு வரும் 6 சங்கங்களில் 4 சங்கங்கள் ஆதி திராவிட உறுப்பினர்களுக்காக நடத்தப்பட்டு வருகின்றன. அயோடின் உப்பு தயாரித்தல் உட்படப் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்துவதற்காகக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு தாட்கோ திட்டத்தின்கீழ் அரசு நிதியுதவி வழங்குகிறது.

**தொழில் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்கள்**

தமிழ்நாட்டில் மொத்தம் 113 தொழில் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. பெரும்பாலான தொழில் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் காஞ்சிபுரம், கன்னியாகுமரி, தருமபுரி, சேலம் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களில் துவக்கப்பட்டுள்ளன. இக்கூட்டுறவுச் சங்கங்கள் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் இன மக்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் வேலை வாய்ப்பு அளித்து, அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக நிறுவப்பட்டுள்ளன. இச்சங்கங்களுக்கு பங்கு மூலதனம், நடைமுறை மூலதனம் மற்றும் மேலாண்மை ஊக்குதவித் தொகை ஆகியவற்றிற்காக மத்திய அரசிடமிருந்து பெறப்படும் நிதியிலிருந்து நிதியுதவி வழங்கப்படுகின்றது.

[2007 ஏப்ரல் 17

**பிற தனி வகைச் சங்கங்கள்**

சமுதாயத்தில் நலிவடைந்த பிரிவினர்களான முடி திருத்துவோர் மற்றும் சலவைத் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காக 6 முடி திருத்துவோர் கூட்டுறவுச் சங்கங்களும், 3 சலவைத் தொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களும் துவக்கப்பட்டுள்ளன. நலிவடைந்த பிரிவினர் பயன்பெறும் வகையில் 35 கூட்டுறவு அருந்தகங்கள் இயங்கி வருகின்றன.

வேலையற்ற இளைஞர்களுக்கு சுய வேலைவாய்ப்பு அளிக்கும்பொருட்டு, சென்னை துரிதத் தபால் பட்டுவாடா கூட்டுறவுச் சங்கம் மற்றும் தமிழ்நாடு வேலையில்லா இளைஞர்கள் விரைவுத் தபால் (Courier) சங்கம் என இரண்டு தனி வகைச் சங்கங்கள் சென்னையில் செயல்பட்டு வருகின்றன.

**பெரும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள்**

மலைவாழ் பழங்குடியினர் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் வகையில் தற்போது தமிழகத்தில் 19 பெரும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வருகின்றன. இச்சங்கங்களில் மலைவாழ் பழங்குடியினத்தைச் சேர்ந்த 81,298 நபர்களும், மலைவாழ் பழங்குடியினரல்லாத 9,267 நபர்களும் உறுப்பினர்களாக உள்ளனர். பெரும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்குப் பழங்குடியினர் துணைத் திட்டத்தின்கீழ் அரசு நிதியுதவி அளித்து வருகிறது. இப்பெரும் பலநோக்குச் சங்கங்கள் பழங்குடியின உறுப்பினர்களுக்கு விவசாயம் மற்றும் உற்பத்தி நோக்கங்களுக்காக வட்டியில்லாக் கடன்கள் வழங்கி வருகின்றன. இப்பெரும் பலநோக்குச் சங்கங்களுக்குப் பங்கு மூலதன மானியம், வட்டி மானியம், போக்குவரத்து மானியம், ஓட்டுநர் ஊதியம் மற்றும் வாகனப் பராமரிப்பு மானியம்போன்ற இனங்களுக்கு பழங்குடியினர் துணைத் திட்டத்தின்கீழ் ஆண்டுதோறும் தொடர்ந்து அரசு மானியம் அளித்து வருகின்றது.



2007 ஏப்ரல் 17]

## அத்தியாயம்–8

## ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம்

ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம் கூட்டுறவுச் சங்கங்களின் உற்பத்தித் திறனைப் பெருக்குவதற்கான உள்கட்டமைப்பை மேம்படுத்தவும், கூட்டுறவுச் சங்கங்களின் அடிப்படை மூலதனத்தைப் பெருக்கி வியாபாரத்தை அதிகரிப்பதற்காக விளிம்புத் தொகை வழங்குவதற்கும் ஒரு முழுமையான அணுகுமுறையை ஒருமுகப்படுத்திச் செயல்படுத்துகிறது. இத்திட்டம் அனைத்து நிலைகளிலும் கூட்டுறவுச் சங்கங்கள் மேம்பாடு அடையவும், கூட்டுறவுச் சங்கங்கள் ஒட்டுமொத்த வளர்ச்சிபெறவும் வழிவகுக்கிறது.

தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்திடமிருந்து கடன் நிதியுதவியைப் பெற்று ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தினைச் செயல்படுத்த அரசு நிதியுதவி வழங்குகிறது. இவ்வாறு பெறப்படும் நிதியுதவி வேளாண்மை மற்றும் வேளாண்சார்ந்த தொழில்களான மீன் வளர்ப்பு, கோழி வளர்ப்பு, பால் பண்ணை, கைத்தறி மற்றும் ஊரகத் தொழில்போன்றவற்றிற்கு மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள்மூலமாக வழங்கப்படுகிறது. பொதுவாக இத்திட்டம் ஐந்து ஆண்டுகளில் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

**திட்டம் செயல்படுத்தப்பட்ட விவரங்கள்**

(அ) ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம் கீழ்க்கண்ட 8 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டுள்ளது:

(ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண் | மாவட்டத்தின் பெயர் | காலம் | தொகை |
|---|---|---|---|
| 1. | விருதுநகர் | 1989–1995 | 862.51 |
| 2.<br>3. | கடலூர் } ஒருங்கிணைந்த<br>விழுப்புரம் } தென் ஆற்காடு மாவட்டம் | 1992–1997 | 1,506.97 |
| 4. | கோயம்புத்தூர் | 1995–2001 | 1,080.99 |
| 5. | தருமபுரி | 1995–2001 | 1,160.25 |
| 6. | திருவண்ணாமலை | 1996–2001 | 816.58 |
| 7. | காஞ்சிபுரம் | 1998–2004 | 1,123.88 |
| 8. | இராமநாதபுரம் | 2000–2004 | 687.03 |
| | | மொத்தம் | 7,238.21 |

[2007 ஏப்ரல் 17

(ஆ) ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம் கீழ்க்கண்ட 6 மாவட்டங்களில் தற்போது செயல்படுத்தப்பட்டு வருகிறது:

**திட்ட ஒதுக்கீடு மற்றும் விடுவிக்கப்பட்ட தொகை**

(ரூபாய் இலட்சத்தில்)

| வரிசை எண் | மாவட்டத்தின் பெயர் | திட்ட மதிப்பீடு | அரசால் விடுவிக்கப்பட்ட தொகை |
|---|---|---|---|
| 1. | திருச்சிராப்பள்ளி | 1,216.98 | 1,216.98 |
| 2. | தஞ்சாவூர் | 1,101.09 | 1,101.09 |
| 3. | பெரம்பலூர் | 937.81 | 937.81 |
| 4. | திருவாரூர் | 1,222.44 | 1,222.44 |
| 5. | தேனி | 987.73 | 493.34 |
| 6. | தூத்துக்குடி | 942.08 | 452.24 |
| | மொத்தம் | 6,408.13 | 5,423.90 |

(இ) சேலம், ஈரோடு, மதுரை, புதுக்கோட்டை மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தினைச் செயல்படுத்துவதற்கு அரசு தெரிவு செய்துள்ளது. திருநெல்வேலி மாவட்டத்தைத் தவிர மீதமுள்ள மாவட்டங்களில் இத்திட்டத்தைச் செயல்படுத்துவது குறித்து திட்ட அறிக்கைகளுக்கு மாநில ஒருங்கிணைப்புக் குழு ஏற்பு அளித்துள்ளது. சமீபத்தில் இத்திட்டங்களுக்கு தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகமும் ஒப்புதல் அளித்துள்ளது. திருநெல்வேலி மாவட்டத்திலும் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தைச் செயல்படுத்த தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் அனுமதி அளித்துள்ளது.

(ஈ) 2006 ஆம் ஆண்டு திண்டுக்கல், கரூர், வேலூர், சிவகங்கை மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தினைச் செயல்படுத்தலாம் என அரசு தெரிவு செய்துள்ளது. தற்பொழுது புது டெல்லியிலுள்ள தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் இத்திட்டங்களைச் செயல்படுத்துவதற்குக் கொள்கையளவில் ஒப்புதல் அளித்துள்ளது.



2007 ஏப்ரல் 17]

(உ) எஞ்சியுள்ள மாவட்டங்களில் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம் படிப்படியாக அடுத்த இரண்டாண்டுகளில் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இதுவரை இத்திட்டத்தின்கீழ் சராசரி ஒதுக்கீடு ரூபாய் 7 கோடியிலிருந்து ரூபாய் 12 கோடி வரை மட்டுமே இருந்தது. இனி செயல்படுத்தப்படும் திட்டங்களின் மதிப்பு ரூபாய் 14 கோடியிலிருந்து ரூபாய் 36 கோடி வரை செயல்படுத்த ஏதுவாகத் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

**திட்டத்தினைக் கண்காணித்தல்**

மாநில அளவில் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தின் செயல்பாடுகள், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறைச் செயலாளரைத் தலைவராகக்கொண்ட மாநில ஒருங்கிணைப்புக் குழுவால் கண்காணிக்கப்பட்டு வருகிறது. மாவட்ட அளவில், மாவட்ட ஆட்சித் தலைவரைத் தலைவராகவும், சம்பந்தப்பட்ட துறைகளின் அலுவலர்களை உறுப்பினர்களாகவும்கொண்ட மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கண்காணித்து வருகிறது. இது தவிர, கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் அலுவலகத்தில் கூடுதல் பதிவாளர் (ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம்) தலைமையில் ஒரு பிரிவு இயங்கி வருகிறது. இப்பிரிவு திட்டத்தின் ஒட்டுமொத்தச் செயலாக்கத்தை ஒவ்வொரு மாதமும் ஆய்வு செய்து, மேற்பார்வை செய்து வருகிறது.

கூட்டுறவுகளின் உள்கட்டமைப்புகள் குறிப்பிடத் தகுந்த அளவில் மேம்பட்டுள்ளதன்மூலம் இத்திட்டத்தின் பயனை உணர முடிகிறது.

## அத்தியாயம்-9

## கூட்டுறவு அமைப்புகளுக்குத் தேர்தல் நடத்துதல்

இவ்வரசு ஜனநாயக நெறிசார்ந்த நிருவாக அமைப்பின்மீது அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டுள்ளது. தொடக்க நிலைக் கூட்டுறவு நிறுவனங்களுக்கான தேர்தல்கள் 1996 ஆம் ஆண்டு நடத்தப்பட்டன. மாவட்டம் மற்றும் மாநில அளவிலான சங்கங்களுக்குத் தேர்தல்கள் முறையே 1998 மற்றும் 1999 ஆம் ஆண்டுகளில் நடத்தப்பட்டன. இருப்பினும், தேர்ந்தெடுக்கப்பட்ட நிருவாகக் குழுக்களின் பதவிக் காலம் 2001 ஆம் ஆண்டு முடிக்கப்பட்டு கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தனி அலுவலர்கள் நியமிக்கப்பட்டனர். இத்தனி அலுவலர்களின் பதவிக் காலம் சட்டத் திருத்தங்களின் வாயிலாக அவ்வப்போது நீட்டிக்கப்பட்டு, கடைசியாக தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும், மத்திய நிலை கூட்டுறவுச் சங்கங்களுக்கும் முறையே 24-5-2007 மற்றும் 25-5-2007 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களைச் சேர்ப்பதற்குத் தனி அலுவலர்களுக்கு அதிகாரம் வழங்கும்பொருட்டு, கூட்டுறவுச் சங்கங்களின் சட்டத்தில் பிரிவு 89-ஏ-வைச் சேர்ப்பதற்காக 12-6-2001 அன்று ஓர் அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் 3/2001) பிறப்பிக்கப்பட்டது. இந்த அவசரச் சட்டத்தை எதிர்த்து சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன. அவசரச் சட்டம்மூலமாகச் சேர்க்கப்பட்ட பிரிவு 89-ஏ ஜனநாயக நெறிமுறைகளுக்கு முரணாக இருப்பதால் இப்பிரிவினை நீக்க சென்னை உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது. சென்னை உயர் நீதிமன்றத்தின் மேற்கண்ட தீர்ப்பினை எதிர்த்து முந்தைய அரசு உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு மனுவினைத் தாக்கல் செய்தது. சென்னை உயர் நீதிமன்றத்தின் முடிவினை இவ்வரசு ஏற்றுக்கொண்டு, உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீட்டு மனுவைத் திரும்பப்பெற்றதுடன், கூட்டுறவுச் சங்கங்களின் சட்டப் பிரிவு 89-ஏ-வைச் சட்டத் திருத்தத்தின் வாயிலாக நீக்கியது.

நிதிநிலை அறிக்கையில் அறிவித்துள்ளவாறு, 2007 ஆம் ஆண்டு மே-ஜூன் மாதங்களில் மாநிலத்திலுள்ள கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேர்தல்கள் நடத்தப்படும்.



## இணைப்பு II

(120 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

## மானியக் கோரிக்கை எண் 13—உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2007–2008

## அத்தியாயம்-I

**முகவுரை**

*"பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்*
*தொகுத்தவற்றுள் எல்லாம் தலை" – ( குறள் எண் 322)*

வள்ளுவர் நமக்கு வழங்கிய வாழ்க்கை நூலான திருக்குறள் பேசும் நன்னெறி - இந்நெறி.

"உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர்"--இது பழங்காலப் பழமொழி மட்டுமல்ல. எக்காலத்திற்கும் பயனளிக்கும் உயிர் மொழி. மக்கள் உயிர் வாழ அவசியமானது உணவு. உணவில்லையேல் எதுவுமில்லை. உணவுத் துறை உயிர்த் துறையாகச் செயல்பட்டு வருகிறது.

இவ்வரசு பதவியேற்ற அன்றே ஆணையிட்ட முதலாவது திட்டம், ஏழை எளிய மக்கள் முகத்தில் புன்முறுவல் பூக்கும்வண்ணம் ஒரு கிலோ அரிசி இரண்டு ரூபாய்க்கு வழங்கும் திட்டம். இத்திட்டத்தினால் ஏறக்குறைய 28,995 நியாய விலைக் கடைகள் மூலம் அத்தியாவசியப் பொருட்களை ஏழை எளிய நடுத்தர மக்கள் மன நிறைவுடன் பெற்றுச் செல்லும் காட்சி நம் கண்களுக்கும், மனதிற்கும் இன்பம் பயப்பதாய் உள்ளது.

தமிழகத்தில் செயல்படுத்தப்படும் பொது விநியோகத் திட்டம் ஒரு தனிச் சிறப்புடன் உயரிய அம்சங்களைக் கொண்டு நடைபெறும் திட்டமாகும். மத்திய அரசு வறுமைக் கோட்டிற்குக்கீழ், வறுமைக் கோட்டிற்குமேல் என்று இரு வேறு வழி முறையில் அரிசியை

வழங்கினாலும், தமிழக அரசு அவ்வாறில்லாமல் உலக நாடுகள் பாராட்டும்வண்ணம் குடும்ப அட்டைதாரர்களின் விருப்பத்தின் அடிப்படையில் 1,89,93,206 குடும்ப அட்டைகளுக்கு 28,995 நியாய விலைக் கடைகள்மூலம் வழங்கி வருகிறது. வழங்கப்படும் அரிசியின் விலையை இந்தியாவிலேயே மிகக் குறைவான விலையில் பொது விநியோகத் திட்டத்தின்கீழ் ஒரு கிலோ அரிசி இரண்டு ரூபாய்க்கு வழங்கப்படுவதன் காரணமாக, கடந்த 10 மாதங்களாக வெளிச் சந்தையில் விற்கப்படும் அரிசியின் விலை உயராமல் கட்டுப்பாட்டில் உள்ளது. ஏழை எளிய, நடுத்தர மக்களின் வருமான நிலையைக் கருத்திற்கொண்டு, உடனடி தற்காலிக நடவடிக்கையாக அன்றாடப் பயன்பாட்டிற்குத் தேவையான உணவுப் பொருட்களான பருப்பு வகைகள், சமையல் எண்ணெய், ரவை, மைதாபோன்றவற்றின் விலைகளைக் கட்டுப்படுத்துவதற்கென இவற்றை அரசே கொள்முதல் செய்து நியாய விலைக் கடைகள்மூலமாக வழங்க தமிழ்ப் புத்தாண்டு திருநாளான 14-04-2007 அன்று சென்னை மாநகரத்தில் இத்திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது. பின்னர் படிப்படியாக மே மாதம் முதல் வாரத்திலிருந்து தமிழகத்திலுள்ள அனைத்து நியாய விலைக் கடைகளுக்கும் இத்திட்டத்தை விரிவுபடுத்த இவ்வரசு ஏற்பாடு செய்துள்ளது.

தமிழக மக்களுக்கு உணவுப் பாதுகாப்பு வழங்குவதும், நுகர்வோர் நலனைப் பேணிக் காப்பதும் உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் அடிப்படை நோக்கங்களாகும். பாமர மக்களுக்கு உணவுப் பாதுகாப்பு அளித்திடப் பொது விநியோகத் திட்டத்தை இவ்வரசு சிறந்த முறையில் செயல்படுத்தி வருகிறது. ஏழை எளிய மக்களின் உள்ளம் மகிழத்தக்க வகையில், அவர்களின் அன்றாட வாழ்க்கைக்கு அத்தியாவசியமான பொருட்களான அரிசி, கோதுமை மற்றும் ஏனைய பொருட்களை நியாய விலைக் கடைகள்மூலம் மானிய விலையில் வழங்குவதே பொது விநியோகத் திட்டத்தின் முதன்மையான பணியாகும். பொது விநியோகத் திட்டத்தின்கீழ் ஒவ்வொரு குடும்பத்திற்கும் குடும்ப அட்டை வழங்கப்பட்டு, அனைவரும் எளிதாக அணுகக்கூடிய வகையில் நியாய விலைக் கடைகள் அமைக்கப்பட்டுள்ளன. குடும்ப நபர்களின் எண்ணிக்கைக்கு ஏற்பவும், வாழும் பகுதி நகர்ப்புறமா அல்லது கிராமப்புறமா என்பதைப் பொறுத்தும், ஒரு குடும்பத்திற்கு வழங்கப்பட வேண்டிய அத்தியாவசியப் பொருட்களின் அளவு அரசால் நிர்ணயம் செய்யப்படுகிறது. ஒவ்வொரு குடும்பத்திற்கும்





எடை குறைவில்லாமலும், அரசு நிர்ணயித்துள்ள விலையிலும் தரமான அத்தியாவசியப் பொருட்கள் கிடைக்க வேண்டும் என்பதே அரசின் நோக்கமாகும். எனவே, தரம் வாய்ந்த பொருட்களைப் போதுமான அளவு கையிருப்பு வைத்து, பொது விநியோகத் திட்டத்தினை இவ்வரசு சீரிய முறையில் செயல்படுத்தி வருகிறது.

கடந்த பல ஆண்டுகளாக நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் நுகர்வோர் நலனை மேம்படுத்தும் பணிகளில் இத்துறை ஈடுபாட்டோடு பணியாற்றி வருகிறது. நுகர்வோர் விழிப்புணர்வினைப் பொது மக்கள் மத்தியில் ஏற்படுத்தி நுகர்வோரின் குறைகளைக் களைவதற்கான அமைப்புகளை மேம்படுத்தி, அவர்களின் நலனைப் பாதுகாக்க இத்துறை திறம்படச் செயலாற்றி வருகிறது.

## அத்தியாயம்–II

### பொது விநியோகத் திட்டம்

தமிழகத்தில் செயல்படுத்தப்படும் பொது விநியோகத் திட்டம் தனிச் சிறப்பு வாய்ந்ததாகும். நமது மாநிலத்தில் குடும்ப அட்டைதாரர்களின் விருப்பத்தின் அடிப்படையில் அனைவருக்கும் குடும்ப அட்டைகள் வழங்கப்படுகின்றன. மத்திய அரசு பின்பற்றும் வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ள குடும்பங்களுக்கு மட்டுமே பயன் தரும் பொது விநியோகத் திட்டத்திற்குப் பதிலாக, அனைத்துத் தரப்பினரும் பயன்பெறத்தக்க பொது விநியோகத் திட்டம் நமது மாநிலத்தில் செயல்படுத்தப்படுகிறது. வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ள குடும்பங்களுக்கு மட்டுமே பயன் தரும் பொது விநியோகத் திட்டத்தின்படி, வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ள மக்களுக்கு வழங்கப்படும் இன்றியமையாப் பொருட்களின் விலைகள், வறுமைக் கோட்டிற்குமேல் உள்ள மக்களுக்கு வழங்கப்படும் பொருட்களின் விலைகளைவிடக் குறைவாக நிர்ணயிக்கப்படுகின்றன. ஆனால், நமது மாநிலத்தில் அனைத்துத் தரப்பினரும் பயன்பெறத்தக்க வகையில் செயல்படுத்தப்பட்டு வரும் பொது விநியோகத் திட்டத்தின்கீழ் குடும்பங்களை வறுமைக் கோட்டிற்குமேல் உள்ளவை என்றும், வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ளவை என்றும் பிரிக்காமல், பாகுபாடின்றி ஒரே விலையில் இன்றியமையாப் பொருட்கள் குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

#### வழங்கப்படும் பொருட்கள்

தமிழகத்தில் பொது விநியோகத் திட்டத்தின்கீழ் அரிசி, கோதுமை, சர்க்கரை, மண்ணெண்ணெய் மற்றும் இதர இன்றியமையாப் பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றன. பொது விநியோகத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் பொருட்கள், அவற்றின் விலை மற்றும் அளவு பற்றிய விவரங்கள் பின்வரும் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன:-

| வ எண் | பொருள் | கிலோ/விலை | வழங்கப்படும் பொருட்களின் அளவு |
|---|---|---|---|
| 1. | அரிசி | 3-6-2006 முதல் ஒரு கிலோ அரிசி ரூ.2.00 | ஒரு குடும்ப அட்டைக்கு, வயது வந்த ஒருவருக்கு நான்கு கிலோ மற்றும் ஒரு குழந்தைக்கு இரண்டு கிலோ மாதத்துக்குக் குறைந்தபட்சம் 12 கிலோ, அதிகபட்சம் 20 கிலோ. நீலகிரி மாவட்டத்தில் மட்டும் குறைந்தபட்சம் 16 கிலோ, அதிக பட்சம் 24 கிலோ. |





| வ எண் | பொருள் | கிலோ/விலை | வழங்கப்படும் பொருட்களின் அளவு |
|---|---|---|---|
| 2. | சர்க்கரை | ரூ.13.50 | ஒரு குடும்ப அட்டைக்கு ஒரு மாதத்திற்கு அதிகபட்சமாக 2 கிலோ. |
| 3. | கோதுமை | ரூ. 7.50 | சென்னை மற்றும் மாவட்டத் தலைநகரங்களில் ஒரு குடும்ப அட்டைக்கு மாதத்துக்கு 10 கிலோ. மற்ற பகுதிகளில் 5 கிலோ. |
| 4. | மண்ணெண்ணெய் | ஒரு லிட்டரின் விலை ரூ. 8.40–லிருந்து ரூ.9.00 வரை | |
| | | (லிட்டரில்) | |
| | இடங்கள் | எரிவாயு உருளை இணைப்பு இல்லாத குடும்பங்கள் | ஒரு எரிவாயு உருளை இணைப்பு உள்ள குடும்பங்கள் |
| | சென்னை மாநகரம் மற்றும் மாவட்டத் தலைமையிடங்கள் | 10 | 3 |
| | ஏனைய் நகராட்சிகள் | 6 | 3 |
| | பேரூராட்சிகள் மற்றும் நகரியம் | 5 | 3 |
| | ஊரகப் பகுதிகள் | 3 | 3 |

| மலைப் பிரதேசங்கள் (நீலகிரி மாவட்டம் மற்றும் கோயம்புத்தூர் மாவட்டத்தில் வால்பாறைப் பகுதி) | | |
|---|---|---|
| மாவட்டத் தலைமையிடம், ஏனைய நகராட்சிகள் | 15 | 3 |
| பேரூராட்சிகள் மற்றும் நகரியம் | 10 | 3 |
| கிராமப் பகுதிகள் | 5 + 5 | 3 |

#### குடும்ப அட்டைகள்

அனைத்துத் தரப்பினருக்கும் பொது விநியோகத் திட்டத்தில் பொருட்கள் கிடைக்க உறுதி செய்வது, அனைத்துக் குடும்பங்களுக்கும் குடும்ப அட்டை வழங்கப்பட்டுள்ளதா என்பதையும், நியாய விலைக் கடை எவ்வளவு தூரத்தில் அமைந்துள்ளது என்பதையும் பொறுத்தே

அமைகிறது. இம்மாநிலத்தில் குடும்ப அட்டைகள் வழங்கப்படுவது அட்டைதாரர்களின் விருப்பத்தைப் பொறுத்து இருப்பதால், பெரும்பாலான குடும்ப அட்டைதாரர்கள் பொது விநியோகத் திட்டத்தின்கீழ் அரிசியையே வாங்க விரும்புகிறார்கள். அரிசி வாங்க விரும்புகிறவர்களுக்குப் பச்சை வண்ணக் குடும்ப அட்டைகளும், சர்க்கரை மட்டும் அல்லது எந்தப் பொருளும் வாங்க விரும்பாதவர்களுக்கு வெள்ளை நிறக் குடும்ப அட்டைகளும் வழங்கப்பட்டு உள்ளன. வெள்ளை நிறக் குடும்ப அட்டை வைத்துள்ளவர்கள், அவர்களின் விருப்பத்தின் பேரில் மாதம் ஒன்றுக்கு 3 கிலோ சர்க்கரை கூடுதலாகப் பெறத் தகுதியுடையவர்கள் ஆவர். தகுதி வாய்ந்த குடும்பங்களுக்குக் குடும்ப அட்டை வழங்குவது என்பது ஒரு தொடர் நடவடிக்கையாகும்.

தற்போது தமிழ்நாட்டில் 31-3-2007 அன்று புழக்கத்தில் உள்ள குடும்ப அட்டைகளின் விவரம் வருமாறு:-

| வ.எண் | அட்டை வகைகள் | பெறத் தகுதியுடைய பொருட்கள் | குடும்ப அட்டைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | பச்சை நிற அட்டைகள் | அனைத்துப் பொருட்கள் | 1,78,69,509 |
| 2. | வெள்ளை நிற அட்டைகள் (சர்க்கரை அட்டைகள்) | சர்க்கரை | 10,31,523 |
| 3. | காக்கி நிற அட்டைகள் (காவலர் அட்டைகள்) | மண்ணெண்ணெய் | 40,246 |
| 4. | கௌரவ அட்டைகள் (None Cards) | எந்தப் பொருளும் வாங்காதவர்கள் | 51,928 |
| | **மொத்தம்** | | **1,89,93,206** |

குடும்ப அட்டைகள் இல்லாதோர் புதிய குடும்ப அட்டைகள் பெறுவதற்குச் சிரமப்படுகின்றனர் என அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதால், இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அரசு அளவில் பரிசீலனை மேற்கொள்ளப்பட்டு, புதிய குடும்ப அட்டைகளுக்கான விண்ணப்பங்களைப் பெற்று, அவற்றை உரிய ஆய்வு மற்றும் தணிக்கைக்கு உட்படுத்தி, அவற்றில் தகுதி வாய்ந்த குடும்பங்களுக்குப் புதிய குடும்ப அட்டைகள் அச்சடித்து வழங்க வேண்டும் என்று 8-8-2006-ல் இவ்வரசு ஆணையிட்டது. அதன்படி மனுக்கள் பெறப்பட்டு குடும்ப அட்டைகள் வழங்கும் பணி தொடர்ந்து நடைபெற்று





வருகிறது. இதன்படி, இதுவரை 14,90,945 விண்ணப்பங்கள் பெறப்பட்டு, இவற்றில் 2,19,050 குடும்ப அட்டைகள் அச்சடிக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளன. மீதமுள்ள விண்ணப்பங்களில், தகுதி வாய்ந்த விண்ணப்பங்களின் பேரில் புதிய குடும்ப அட்டைகள் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**போலி குடும்ப அட்டைகளைக் களைதல்**

1997-98 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட குடும்ப அட்டைகள், 31-12-2003 உடன் முடிவடைந்தன. இதனை மீண்டும் செல்லுபடியாகும் வகையில் 2004 ஆம் ஆண்டு மற்றும் 2005 ஆம் ஆண்டுகளில் உட்தாள்கள் இணைக்கப்பட்டன. பின்னர், 2005 ஆம் ஆண்டில் தலத் தணிக்கை செய்யாமலேயே புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டன. தலத் தணிக்கை செய்யாததால், பல போலி குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டன. இவற்றைக் களைவதற்கான அவசியத்தை உணர்ந்து அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

தமிழகத்தில் உள்ள 234 சட்டமன்றத் தொகுதிகளில் ஒவ்வொரு தொகுதியிலும் அதிக எண்ணிக்கையில் குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டுள்ள நகராட்சியில் ஒரு நியாய விலைக் கடையையும், கிராமப்புறத்தில் ஒரு நியாய விலைக் கடையையும் தேர்ந்தெடுத்து, அதில் புதிதாக உள்ள குடும்ப அட்டைகளின் "இ" பதிவேட்டுடன் வாக்காளர் பட்டியலை ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும் என்றும், அதன் பின்னர் அக்கடையில் உள்ள 100% குடும்ப அட்டைகளை வீடுதோறும் சென்று சரிபார்க்க வேண்டும் என்றும் அரசு அறிவுரை வழங்கியது. இதன்படி 19-06-2006 முதல் இப்பணி அனைத்து மாவட்டங்களிலும் தொடங்கப்பட்டு, தலத் தணிக்கை முடிவுபெற்றுள்ளது. தலத் தணிக்கை முடிவில் கண்டறியப்பட்ட, நகர்ப்புறத்தில் உள்ள 5 விழுக்காடு போலி குடும்ப அட்டைகள் (20,420) மற்றும் கிராமப்புறத்தில் உள்ள 4 விழுக்காடு போலி குடும்ப அட்டைகளுக்குப் (13,023) பொருள் வழங்கல் நிறுத்தம் செய்யப்பட்டது. இவற்றில் உண்மையான குடும்ப அட்டைதாரர்கள் இருப்பின், அவர்கள் வட்ட வழங்கல் அலுவலகத்திற்குச் சென்று தமது உரிய சான்று ஆவணங்களைக் காட்டிக் குடும்ப அட்டையைப் புதுப்பித்துக்கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது. மேலும், போலி குடும்ப அட்டை வைத்திருப்போர் குறித்து சரியான தகவல் அளிப்பவர்களுக்கு ரூ.200/- சன்மானம் வழங்கவும் அரசு உத்தரவிட்டுள்ளது. போலி

[2007 ஏப்ரல் 17

குடும்ப அட்டைகளைக் களையும்பொருட்டும், குடும்ப அட்டைகளின் உண்மை நிலவரத்தை மக்கள் அறியும்பொருட்டும் ஒவ்வொரு நியாய விலைக் கடையிலும் குடும்ப அட்டைதாரர்களின் பட்டியலை வெளியிடுமாறு அரசு ஆணையிட்டுள்ளது.

போலி குடும்ப அட்டைகளைக் களையும் இப்பணியின் விரிவாக்கமாக, புழக்கத்திலுள்ள போலி குடும்ப அட்டைகளைக் களைய, பொது விநியோக திட்டத்தில் பணியாற்றும் அலுவலர்கள் மற்றும் பொது மக்களின் பிரதிநிதிகள், தன்னார்வு நுகர்வோர் அமைப்பினர் முதலானோர் பங்கேற்ற கருத்தரங்கம் 6-11-2006 அன்று சென்னையிலும் 7-11-2006 அன்று கோயம்புத்தூரிலும், 04-12-2006 அன்று மதுரையிலும் நடைபெற்றது. மேற்படி கருத்தரங்கங்களில் தெரிவிக்கப்பட்ட கருத்துகளின் அடிப்படையில் போலி குடும்ப அட்டைகளைக் களைய அரசு தீவிர நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

**நியாய விலைக் கடைகள்**

நமது மாநிலத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் பொது விநியோகத் திட்டத்தில் காணப்படும் உன்னதமான அம்சம், அனைத்து நியாய விலைக் கடைகளையும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகமும், கூட்டுறவுச் சங்கங்களும் மற்றும் சுய உதவிக் குழுக்களும் மட்டுமே நடத்துவதாகும். தனியார் இம்மாநிலத்தில் நியாய விலைக் கடைகளை நடத்துவதற்கு அனுமதிக்கப்படுவதில்லை.

அனைத்து மக்களும் அணுகத்தக்க வகையில் நியாய விலைக் கடைகளை அமைப்பதே இவ்வரசின் நோக்கமாகும். எனவே, நிர்ணயிக்கப்பட்ட விதிமுறைகளின்படி நியாய விலைக் கடைகளைத் [illegible]கு மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்குத் தகுந்த அதிகாரங்கள் [illegible]ள்ளன. [illegible]ங்களில் 1,000 குடும்ப அட்டைகளுக்கு மிகாமலும், 800 குடும்ப அட்டைகளுக்குக் குறையாமலும் ஒரு நியாய விலைக் கடையில் இணைக்க வேண்டுமென்றும், கிராமப் புறங்களில் 800 குடும்ப அட்டைகளுக்கு மிகாமலும், 500 குடும்ப அட்டைகளுக்குக் குறையாமலும் ஒரு கடையில் இணைக்க வேண்டுமென்றும் ஆணையிடப்பட்டுள்ளது. மேலும், அட்டைதாரர்கள் பொருட்களைப் பெறுவதற்கு 2 கி.மீ.-க்கு மேல் செல்வதற்கு அவசியம் இல்லாத வகையில் நியாய விலைக் கடைகள் அமைக்கப்பட்டுள்ளன.



2007 ஏப்ரல் 17]

இவற்றையும் மீறி சிரமங்கள் ஏற்பட்டால், பொது மக்களின் நன்மைக்காகப் பகுதிநேர நியாய விலைக் கடைகளைத் திறப்பதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். பகுதிநேரக் கடைகளைத் திறப்பதற்கான விதிமுறைகளை மேலும் தளர்த்தி, 150 குடும்ப அட்டைகளே உள்ள கிராமங்களிலும், அவை தற்போதைய நியாய விலைக் கடையிலிருந்து 1½ கிலோ மீட்டர் தொலைவில் இருந்தால், புதிதாகப் பகுதிநேரக் கடை திறக்க அரசு உத்தரவிட்டது. இதன்படி 31-3-2007 அன்றைய நிலவரப்படி, 318 புதிய பகுதிநேரக் கடைகள் திறக்கப்பட்டுள்ளன. 31-3-2007 அன்று தமிழ்நாட்டில் செயல்பட்டு வரும் நியாய விலைக் கடைகளின் விவரங்கள் பின்வருமாறு:-

| வ. எண். | முகவர் | முழுநேரக் கடைகள் | பகுதிநேரக் கடைகள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1. | தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் | 1,092 | 65 | 1,157 |
| 2. | கூட்டுறவுச் சங்கங்கள் | 21,599 | 5,418 | 27,017 |
| 3. | மற்ற கூட்டுறவுச் சங்கங்கள் (மீன் வளம் மற்றும் மலைத் தோட்டச் சங்கங்கள்) | 141 | 14 | 155 |
| 4. | மகளிர் நியாய விலைக் கடைகள் (மகளிர் சுய உதவிக் குழுக்களையும் சேர்த்து) | 548 | 82 | 630 |
| 5. | கூட்டுறவுச் சங்கங்களால் நடத்தப்படும் நடமாடும் நியாய விலைக் கடைகள் | 36 | 0 | 36 |
| | மொத்தம் | 23,416 | 5,579 | 28,995 |

**பொது விநியோகத் திட்டத்தில் அத்தியாவசியப் பொருட்கள் கிடைப்பதை உறுதிப்படுத்துதல்**

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகமானது அரிசி மற்றும் கோதுமையை இந்திய உணவுக் கழகத்திடமிருந்து பெற்று, அதனுடைய கிடங்குகளில் சேமித்து வைத்து, தேவைப்படும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஒதுக்கீட்டின்படி வழங்குகின்ற மொத்த விற்பனையாளராகச் செயல்படுகின்றது. பொது விநியோகத் திட்டத்திற்குத் தேவையான சர்க்கரையினை சர்க்கரை ஆலைகளில் இருந்து மத்திய அரசின் ஒதுக்கீடாகப் பெற்று, கூட்டுறவுச் சங்கங்களுக்கு

[2007 ஏப்ரல் 17

வழங்குகிறது. கூட்டுறவுச் சங்கங்கள், மண்ணெண்ணெயினை மொத்த முகவருடைய வைப்பு முனையிலிருந்து எடுத்து பீப்பாய்கள்மூலம் நியாய விலைக் கடைகளுக்கு எடுத்துச் செல்கின்றன. சில இடங்களில் மண்ணெண்ணெய் மொத்த முகவர், இதனை டேங்கர்மூலம் எடுத்துச் சென்று, நியாய விலைக் கடைகளில் உள்ள பீப்பாய்களில் நிரப்பி வழங்குகின்றார்கள்.

பொது விநியோகத் திட்டத்தில் ஈடுபட்டுள்ள 4,540 இணைப்புக் கூட்டுறவுச் சங்கங்கள், 86 முன்னணிக் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் 434 சுய சார்புக் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகிய 5,060 கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்று நடத்தும் 27,017 கடைகள்மூலம் இன்றியமையாப் பொருட்களை அட்டைதாரர்களுக்கு வழங்குகின்ற முக்கியமான பணியினைச் செய்கின்றன. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திடமிருந்து, கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்படும் இன்றியமையாப் பொருட்களுக்குத் தேவைப்படும் நிதி உதவியினைக் கூட்டுறவு வங்கிகள் கடனாக வழங்குகின்றன. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், பொருளாதாரரீதியாக நலிவடைந்த ஒரு சில கூட்டுறவுச் சங்கங்களுக்குப் பொருட்களை நியாய விலைக் கடைகளுக்குச் சரியான நேரத்தில் கொண்டு செல்வதற்காகக் கடன் அடிப்படையில் வழங்குகிறது. நட்டத்தில் இயங்கும் நியாய விலைக் கடைகளால் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஏற்பட்ட இழப்பினை முழுவதுமாக ஈடு கட்ட அரசு ரூ.97 கோடி மானியமாக வழங்கியுள்ளது.

நுகர்பொருள் வழங்கல் ஆணையர் தலைமையில் இயங்கும் இத்துறையின் அலுவலர்கள் செய்யும் ஒதுக்கீட்டின் அடிப்படையில் அத்தியாவசியப் பொருட்கள் நுகர்வு செய்யப்படுகின்றன. மாவட்ட ஆட்சியர்கள், நுகர்பொருள் வழங்கல் அலுவலர்கள் மற்றும் வருவாய்த் துறை அலுவலர்கள் இப்பணிகளை மேற்பார்வையிட்டு ஒதுக்கீடுகளின்படி அனைத்து அத்தியாவசியப் பொருட்கள் எடுத்துச் செல்லப்படுகின்றனவா என்பதையும், நியாய விலைக் கடைகளில் போதுமான இருப்பு உள்ளதா என்பதையும் கண்காணிக்கின்றனர். இவைமூலம் பொது விநியோகத் திட்டத்தின்கீழ் அனைத்துப் பொருட்களும் கிடைப்பது உறுதி செய்யப்படுகிறது.



2007 ஏப்ரல் 17]

## அத்தியாயம்—III

## பொது விநியோகத் திட்டத்தின்கீழ் அரிசி வழங்குதல் மற்றும் கிலோ அரிசி ரூ. 2/—க்கு வழங்கும் திட்டம்

பொது விநியோக முறையில் கிலோ அரிசி ரூ.2/-க்கு வழங்கும் திட்டம் 3-6-2006 முதல் இம்மாநிலத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டு, மக்கள் விரும்பும் திட்டமாகச் செயல்பட்டு வருகிறது. 31-3-2007 நிலவரப்படி மொத்தம் 1,78,69,509 குடும்ப அட்டைதாரர்கள் பொது விநியோகத் திட்டத்தின்கீழ் அரிசி பெறத் தகுதியுள்ளவர்கள் ஆவர்.

மத்திய அரசின் நலத் திட்டமான அந்தியோதயா அன்னயோஜனா திட்டத்தின்கீழ் ஏழை மக்களுக்கு வழங்கப்படும் அரிசியின் விலையை விட இத்திட்டத்தின்கீழ் வழங்கப்படும் அரிசியின் விலை மிகக் குறைவாகும். இத்திட்டமானது, தமிழ்நாட்டில் பஞ்சம், பட்டினி ஆகியனவற்றை அறவே ஒழித்து, ஏழை எளிய மக்களின் துன்பத்தினை நீக்கும் ஒரு தொலைநோக்குப் பார்வைகொண்ட ஒரு சீரிய திட்டமாகும். இதனால், ஏழை எளிய மக்களின் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்திட உத்தரவாதம் வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டம் துவக்கப்பட்ட மாதத்தில் அரிசியின் நுகர்வு உயர்ந்தது. மே 2006-ல் 2.75 இலட்சம் டன்னாக இருந்த அரிசியின் நுகர்வு, ஜூன் 2006-ல் 3.08 இலட்சம் டன்னாக அதிகரித்தது. அதன் பிறகு, மாதந்தோறும் அரிசியின் நுகர்வு 2.75 இலட்சம் டன்னிலிருந்து 2.85 இலட்சம் டன் அளவில் அமைந்துள்ளது. பொது விநியோகத் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட அரிசியின் அளவின் விவரங்கள் பின்வருமாறு:

(மெட்ரிக் டன்னில்)

| மாதம் | அரிசியின் அளவு |
|---|---|
| ஏப்ரல், 2006 | 2,72,428 |
| மே, 2006 | 2,68,578 |
| ஜூன், 2006 | 3,08,077 |
| ஜூலை, 2006 | 2,85,232 |
| ஆகஸ்ட், 2006 | 2,80,754 |
| செப்டம்பர், 2006 | 2,80,674 |
| அக்டோபர், 2006 | 2,79,175 |

| | |
|---|---|
| நவம்பர், 2006 | 2,79,057 |
| டிசம்பர், 2006 | 2,78,821 |
| ஜனவரி, 2007 | 2,74,530 |
| பிப்ரவரி, 2007 | 2,75,285 |
| மார்ச், 2007 | 2,76,399 |

இத்திட்டம் சிறப்பாக அமைந்துள்ளபோதிலும், அவ்வப்போது அரிசியின் தரம் குறைவாக இருப்பது குறித்துப் புகார்கள் பெறப்பட்டன. தமிழ்நாட்டிற்கு மத்தியத் தொகுப்பிலிருந்து பெறப்படும் அரிசி நல்ல தரம் வாய்ந்ததாக இருக்க வேண்டும் என்பதற்காக இந்த அரசு ஆந்திர மாநிலத்திலிருந்து தரம் வாய்ந்த அரிசியைத் தமிழகத்திற்கு அனுப்பி வைக்குமாறு மத்திய அரசைக் கேட்டுக் கொண்டதன் பயனாக, மைய அரசு வழங்கும் அரிசி பெருமளவு ஆந்திர மாநிலத்திலிருந்து பெறப்படுகிறது. மேலும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் நமது மாநிலத்தில் மேற்கொள்ளும் நெல் கொள்முதல்மூலம் பெறப்படும் அரிசி தரம் வாய்ந்ததாகவே உள்ளது. எனவே, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் தரம் வாய்ந்த அரிசியை அதனுடைய எல்லாக் கிடங்குகளிலும் வைத்துள்ளது. எனவே, தரமுள்ள நல்ல அரிசியே நியாய விலைக் கடைகளுக்கு அனுப்பப்பட்டு, அங்கு பொது மக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இதையும் மீறித் தரம் குறைந்த அரிசி நியாய விலைக் கடைகளில் காணப்பட்டால், அதை மாற்றி, தரமுள்ள அரிசியை வழங்க தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது

**அந்தியோதயா அன்னயோஜனா திட்டம்**

அந்தியோதயா அன்னயோஜனா திட்டம், மத்திய அரசின் திட்டங்களில் முக்கியமான ஒன்றாகும். இத்திட்டம் 1-11-2001 முதல் நகர்ப்புறங்களிலும், 1-12-2001 முதல் கிராமப்புறங்களிலும் செயல் படுத்தப்பட்டு வருகின்றது. அந்தியோதயா அன்னயோஜனா திட்டத்தின்கீழ் பயன்பெறும் பயனாளிகள் கண்டறியப்பட்டு, அந்தப் பயனாளிகளின் குடும்ப அட்டைகளில் அந்தியோதயா அன்னயோஜனா திட்டத்தின்கீழ் பயனடையும் பயனாளிகள் என முத்திரையிடப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ், 18,39,869 குடும்பங்கள் பயனடைகின்றனர். இவர்களுக்கு மாதந்தோறும் 35 கிலோ அரிசி வழங்கப்படுகிறது. 3-6-2006 முதல் இத்திட்டத்தின்கீழ் வழங்கப்படும் அரிசியின் விலை குறைக்கப்பட்டு, கிலோ ஒன்றுக்கு ரூ.2/- என இவ்வரசு வழங்கி வருகிறது.



அந்தியோதயா அன்னயோஜனா திட்டத்தின்கீழ் பயன்பெறும் பயனாளிகளைத் தேர்வு செய்ததில் பல குறைபாடுகள் உள்ளதாகக் கண்டறியப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் மிகவும் வறியவர்கள் மட்டுமே பயன்பெறலாம் என்று இருப்பதால், வறியவர்கள் அல்லாதோர் இத்திட்டத்தின்கீழ் பயன்பெறுவது குறித்துத் தகவல்கள் பெறப்பட்டால், ஆய்வு செய்து, தகுதியற்றவர்களை நீக்குவதற்கு அரசு ஆணை வழங்கியுள்ளது. இதுவரை 24,731 தவறான பயனாளிகள் கண்டறியப்பட்டு, பட்டியலிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

**அரிசிக் கொள்முதல்**

இந்திய அரசு, வறுமைக் கோட்டிற்குமேல் உள்ள மக்களுக்கு வழங்கப்படும் அரிசியை குவின்டால் ஒன்றுக்கு ரூபாய் 830 என்ற விலையிலும், வறுமைக் கோட்டுக்குக்கீழ் உள்ள மக்களுக்கு வழங்கப்படும் அரிசியை குவின்டால் ஒன்றுக்கு ரூ.565 என்ற விலையிலும் வழங்கி வருகிறது. மேலும், அந்தியோதயா அன்னயோஜனா திட்டத்தின்கீழ் வழங்கப்படும் அரிசியை குவின்டால் ஒன்றுக்கு ரூ. 300/- என்ற விலையில் மத்திய அரசு வழங்கி வருகிறது.

வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ளவர்களுக்கும், அந்தியோதயா அன்னயோஜனா திட்டத்தின்கீழும் 1.70 இலட்சம் மெட்ரிக் டன் அரிசியை மைய அரசு மாதந்தோறும் ஒதுக்கீடு செய்கிறது. மேலும், 3 இலட்சம் மெட்ரிக் டன் அரிசியைப் பொது விநியோகத்தில் வறுமைக் கோட்டிற்குமேலேயுள்ள குடும்பங்களுக்கு வழங்க ஒதுக்கீடு செய்கிறது.

பொது விநியோகத் திட்டத்தின்கீழ் விருப்பம் தெரிவித்துள்ள அனைத்துக் குடும்ப அட்டைதாரர்களுக்கும் அரிசி வழங்குவதற்கு முழு ஒதுக்கீடு செய்வதற்குத் தேவையான அரிசிக் கையிருப்பு அரசிடம் உள்ளது.

**நெல் கொள்முதல்**

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் அரசால் நிர்ணயிக்கப்பட்ட கொள்முதல் விலையில் விவசாயிகளிடமிருந்து நெல்லைக் கொள்முதல் செய்கிறது. இக்கொள்முதல் இந்திய உணவுக் கழகத்தின் சார்பாக மேற்கொள்ளப்படுவதால், 'பரவலாக்கப்பட்ட

[2007 ஏப்ரல் 17

கொள்முதல் திட்டம்' என்று இது அழைக்கப்படுகிறது. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் இந்திய உணவுக் கழகத்தின் முகவராகச் செயல்பட, தமிழக அரசு இந்திய அரசுடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தினைச் செய்துள்ளது. நடப்புக் கொள்முதல் பருவம் 2006-07-க்கு சென்ற ஆண்டு நிர்ணயித்த விலையைவிட குவின்டாலுக்கு ரூ.10/- உயர்த்தி மைய அரசு கீழ்க்கண்டவாறு நெல் கொள்முதல் விலைகளை நிர்ணயித்துள்ளது:—

| நெல் வகை | 2005–06 | 2006–07 |
|---|---|---|
| சன்ன ரகம் | 600 | 610 |
| சாதாரண ரகம் | 570 | 580 |

மேலும், விவசாயிகளுக்கு ஊக்கத் தொகையாக இந்த ஆண்டு குவின்டாலுக்கு ரூ.40/- வீதம் வழங்கப்பட்டு வருகிறது. மத்திய அரசு இந்த ஊக்கத் தொகையை 31-3-2007 வரைதான் வழங்கியது. இதனை 30-9-2007 வரை நீட்டிக்க மத்திய அரசுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடிதம் எழுதியுள்ளார்கள். எனினும், விவசாயிகள் பாதிக்கப்படக் கூடாது என்பதைக் கருத்தில்கொண்டு மத்திய அரசு ஊக்கத் தொகையை வழங்கும் ஆணையை எதிர்நோக்கி, மாநில அரசே ஊக்கத் தொகையை குவின்டால் ஒன்றுக்கு ரூ.40/- வீதம் தொடர்ந்து வழங்கி நெல் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. கொள்முதல் செய்யப்பட்ட நெல் அரிசியாக்கப்பட்டு, பொது விநியோகத் திட்டத்திற்கு வழங்கப்பட்டு வருகிறது. 2006-2007 ஆம் ஆண்டிற்கான சம்பா சாகுபடிப் பருவத்தில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் 31-3-2007 ஆம் நாளைய நிலவரப்படி 14,93,643 மெட்ரிக் டன் நெல்லினைக் கொள்முதல் செய்துள்ளது.

**உணவு மானியம்**

தமிழகத்தில் பொது விநியோகத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் அரிசியின் விலை மத்திய அரசு நிர்ணயித்துள்ள விலையைவிட மிகக் குறைவாக உள்ளது. எனவே, இதற்கெனத் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு அரசு மானியம் வழங்கி வருகிறது.



2007 ஏப்ரல் 17]

2003-2004 ஆம் ஆண்டு முதல் உணவு மானியத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை விவரம் பின்வருமாறு:—

| ஆண்டு | (ரூபாய் கோடிகளில்) தொகை |
|---|---|
| 2003–2004 | 800 |
| 2004–2005 | 1,035 |
| 2005–2006 | 1,200 |
| 2006–2007 | 1,950 |
| 2007–2008 | 1,950 |
| | (வரவு–செலவுத் திட்ட மதிப்பீடு) |

பொது விநியோகத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் அரிசியின் விலையை வெகுவாகக் குறைத்ததாலும், வழங்கப்படும் அரிசியின் அளவு அதிகரித்துள்ளதாலும் உணவிற்கான மானியம் 2006-2007ஆம் ஆண்டைப்போலவே இந்த ஆண்டின் வரவு-செலவுத் திட்டத்திலும் இதற்கென ரூ.1,950 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

[2007 ஏப்ரல் 17

## அத்தியாயம்—IV

## பொது விநியோகத் திட்டத்தின்கீழ் கோதுமை, சர்க்கரை மற்றும் மண்ணெண்ணெய் வழங்குதல்

இம்மாநிலத்தில் பொது விநியோகத் திட்டத்தின்கீழ் அரிசி மட்டுமின்றி, கோதுமை, சர்க்கரை மற்றும் மண்ணெண்ணெய் ஆகியவை குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்படுகின்றன.

### கோதுமை

பொது விநியோகத்தில் வழங்குவதற்கு 6,000 மெ.டன் கோதுமை மாதந்தோறும் தேவைப்படுகிறது. மே 2006 வரை மைய அரசின் மாதாந்திர ஒதுக்கீடு 10,000 மெ. டன்னாக இருந்தது. ஆனால், ஜூன், 2006-லிருந்து மத்திய அரசு, கோதுமை மாத ஒதுக்கீட்டை 3,783 மெட்ரிக் டன்களாகக் குறைத்துள்ளது. இவ்வாறு குறைத்து வழங்கப்படும் கோதுமையின் அளவானது இம்மாநிலத்தின் தேவையைப் பூர்த்தி செய்வதாக இல்லாததால் இந்நிலை மத்திய அரசின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு கூடுதல் ஒதுக்கீடு கோரப்பட்டதன் அடிப்படையில், மைய அரசால் ஆகஸ்டு, 2006 முதல் மார்ச், 2007 வரை 37,750 மெட்ரிக் டன் கோதுமை அதிகப்படியாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு ஒதுக்கீடு செய்யப்பட்ட கோதுமையானது நியாய விலைக் கடைகளில் உள்ள குடும்ப அட்டைகள் மற்றும் அட்டைதாரர்களின் நுகர்வினைப் பொறுத்து ஒதுக்கீடு செய்யப்பட்டு விநியோகம் செய்யப்படுகிறது. மேலும், மத்திய அரசு வெளிச்சந்தை விற்பனைத் திட்டத்தின்கீழ் 2007 ஆம் ஆண்டு பிப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களுக்கு குவிண்டால் ஒன்றுக்கு ரூ.986.06 வீதத்தில் 15,000 டன் கோதுமையை ஒதுக்கீடு செய்துள்ளது. இதை கோதுமைப் பொருட்களாக மாற்றி பொது விநியோகத் திட்டத்தின்கீழ் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும், பொது விநியோகத் திட்டத்தின்கீழ் கோதுமையின் நுகர்வு அதிகமாகி வருவதால், பிரதி மாதம் 10,000 மெட்ரிக் டன் கோதுமையை ஒதுக்கீடு செய்யுமாறு மத்திய அரசிடம் கோரப்பட்டுள்ளது.

### சர்க்கரை

மத்திய அரசு மாதந்தோறும் தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் உள்ள சர்க்கரை ஆலைகளில் உற்பத்தியாகும் சர்க்கரையின் அளவினைப் பொறுத்து, மாதாந்திரத் திட்டத்தின் அடிப்படையில், சர்க்கரையினைத் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு



2007 ஏப்ரல் 17]

ஒதுக்கீடு செய்து வருகிறது. இவ்வாறு ஒதுக்கீடு செய்யப்படும் சர்க்கரையின் விலை கிலோ ஒன்றிற்கு ரூ.14.35 ஆகும். பொது விநியோகத் திட்டத்தின்கீழ் குடும்பம் ஒன்றுக்கு மாதம் 2 கிலோவுக்கு மிகாமல், நபர் ஒன்றுக்கு 500 கிராம் என்ற அளவில் கணக்கிடப்பட்டு, கிலோ ஒன்றுக்கு ரூ.13.50 என்ற விலையில் சர்க்கரை வழங்கப்பட்டு வருகிறது.

அரிசிக்குப் பதிலாக சர்க்கரையினைப் பெற விருப்பம் தெரிவித்த குடும்ப அட்டைதாரர்களுக்கு மாதம் ஒன்றுக்கு 3 கிலோ சர்க்கரை கூடுதலாக வழங்கப்படுகிறது. 31-3-2007 நிலவரப்படி இத்தகைய சர்க்கரை அட்டைகளின் மொத்த எண்ணிக்கை 10,31,523 ஆக இருந்தது.

தற்பொழுது புழக்கத்தில் உள்ள குடும்ப அட்டைகளின் அடிப்படையில் தேவைப்படும் மாதாந்திர சர்க்கரையின் அளவு 36,810 டன்னாகும். ஜூலை 2005 வரை மத்திய அரசு 10,830 மெட்ரிக் டன் சர்க்கரையை மாதந்தோறும் ஒதுக்கீடு செய்து வந்தது. அதன்பின், மைய அரசின் ஒதுக்கீடு நவம்பர், 2005-லிருந்து குறைந்து வறுமைக் கோட்டிற்குகீழ் உள்ளவர்களுக்கு மட்டும் 7,607.1 மெ.டன் ஒதுக்கீடு பெறப்படுகிறது. இருந்தபோதிலும், அனைத்துக் குடும்ப அட்டைதாரர்களுக்கும் சர்க்கரையினைத் தொடர்ந்து வழங்குவதற்கு, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் கூட்டுறவு இணையத்திலிருந்து வெளிச்சந்தை விலையில் சர்க்கரையினைக் கொள்முதல் செய்து இப்பற்றாக்குறையினை ஈடு செய்கிறது. மத்திய அரசு ஒதுக்கீடு செய்த லெவி சர்க்கரையின் அளவு குறைந்த காரணத்தினாலும், நுகர்வு செய்யப்படும் சர்க்கரையின் அளவு உயர்ந்துள்ளதாலும், பொது விநியோகத் திட்டத்தின்கீழ் சர்க்கரை விநியோகத்திற்காக அரசு வழங்கும் மானியம் அதிகரித்துள்ளது. ஆண்டொன்றுக்கு இதற்காக அரசு ரூ. 180 கோடி அளவில் மானியம் வழங்குகிறது

### மண்ணெண்ணெய்

பொது விநியோகத் திட்டத்தின்கீழ் எரிவாயு இணைப்பு இல்லாத குடும்ப அட்டைதாரர்களுக்கு சென்னை மாநகரம் மற்றும் மாவட்டத் தலைநகரங்களில் 10 லிட்டரும், ஏனைய நகராட்சிகளில் 6 லிட்டர் வீதமும், பேரூராட்சிகளில் 5 லிட்டர் வீதமும், கிராமப் பஞ்சாயத்துக்களில் 3 லிட்டர் வீதமும் மண்ணெண்ணெய் வழங்கப்படுகிறது. ஒரு சிலிண்டர் எரிவாயு இணைப்பு உள்ள அனைத்துப் பகுதி குடும்ப அட்டைதாரர்களுக்கும் 3 லிட்டர் மண்ணெண்ணெய் வழங்கப்படுகிறது. 2 சிலிண்டர் எரிவாயு இணைப்பு உள்ள குடும்ப

அட்டைதாரர்களுக்குப் பொது விநியோகத் திட்டத்தின்கீழ் மண்ணெண்ணெய் வழங்கப்படுவதில்லை. மேற்குறிப்பிட்ட விநியோக அளவுகளின்படி பொது விநியோகத் திட்டத்தின்கீழ் மண்ணெண்ணெய் வழங்க மாதத்திற்கு 76,000 கி.லி. மண்ணெண்ணெய் தேவைப்படுகிறது. ஆனால், மத்திய அரசு மாநிலத்திற்கு சராசரியாக 59,852 கி.லி. மட்டுமே ஒதுக்கீடாக வழங்கி வருகிறது. இந்த ஒதுக்கீடு 2004 ஆம் ஆண்டு நடப்பிலிருந்த குடும்ப அட்டைகளுக்கு வழங்குவதற்கு மட்டுமே போதுமானதாக உள்ளது. எனவே, 2004 ஆம் ஆண்டு இறுதியில் மாநிலத்தில் வழங்கப்பட்ட 39.38 இலட்சம் புதிய குடும்ப அட்டைதாரர்களுக்கு மண்ணெண்ணெய் வழங்கப்படுவதில்லை. இவர்களுக்கு மண்ணெண்ணெய் தவிர இதர பொருட்கள் மட்டுமே பொது விநியோகத் திட்டத்தின்கீழ் வழங்கப்படுகின்றன. இவர்களில் மண்ணெண்ணெய் பெறத் தகுதி உடைய அட்டைதாரர்களுக்குத் தேவையான 17,000 கி.லி மண்ணெண்ணெய் மத்திய அரசிடம் இருந்து பெற்றபின் அவர்களுக்கும் மண்ணெண்ணெய் வழங்கப்படும் என அரசு அறிவித்துள்ளது. இது குறித்து, இவ்வரசு மாநிலத்திற்கான மாதாந்திர மண்ணெண்ணெய் ஒதுக்கீட்டை 59,852 கி.லிட்டரிலிருந்து 76,000 கி.லிட்டராக அதிகரித்து வழங்கும்படித் தொடர்ந்து மைய அரசை வலியுறுத்தியது. இதன் விளைவாக, மைய அரசு 30-6-2006 அன்று மாநிலத்திற்கு 12,000 கி.லி மண்ணெண்ணெய் சிறப்பு ஒதுக்கீடாக வழங்கியது. ஆகஸ்ட், நவம்பர், 2006 மாதங்களில் அனைத்துக் குடும்ப அட்டைதாரர்களுக்கும் 1 லிட்டர் மண்ணெண்ணெய் கூடுதலாக வழங்கப்பட்டது. மேலும், டிசம்பர், 2006 மாதத்தில் நகர்ப்புறக் குடும்பங்களுக்குக் கூடுதலாக 2 லிட்டர் மண்ணெண்ணெயும், மார்ச், 2007 ஆம் மாதம் அனைத்துக் குடும்ப அட்டைதாரர்களுக்கும் கூடுதலாக ஒரு லிட்டர் மண்ணெண்ணெயும் வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது.

பொது விநியோகத் திட்டத்தில் மண்ணெண்ணெய் வழங்குவதற்காக மாநில அரசு ஆண்டொன்றுக்கு ரூ.40 கோடி அளவில் மானியம் வழங்கி வருகிறது. 1-1-2007 முதல் அமல்படுத்தப்பட்டுள்ள மதிப்புக் கூட்டு வரியிலிருந்து (VAT) பொது விநியோகத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் மண்ணெண்ணெய்க்கு விலக்கு அளிக்கப்பட்டுள்ளதால், சில்லறை விற்பனை விலையில் மாற்றம் ஏதுமில்லை.

**மண்ணெண்ணெய் வழங்கு நிலையங்கள்**

பெட்ரோல் வழங்கு நிலையங்கள்போல, மண்ணெண்ணெய் வழங்கு நிலையங்களை நிறுவி, சரியான முறையில் மண்ணெண்ணெயை



விநியோகிக்கும் திட்டம் தமிழகத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஒரு மண்ணெண்ணெய் நிலையம் அதிகப்படியாக 2 கிலோ மீட்டர் சுற்றளவிலுள்ள 12,000 குடும்பங்களுக்குப் பயனளிக்கும். நமது மாநிலத்தில் 309 மண்ணெண்ணெய் நிலையங்கள் செயல்படுகின்றன. குறிப்பிட்ட குடும்ப அட்டைதாரர்களுக்குக் குறிப்பிட்ட நாட்களில் மண்ணெண்ணெய் வழங்கும் திட்டம் 2,000 அட்டைகளுக்கு மேல் உள்ள நியாய விலைக் கடைகளிலும். மண்ணெண்ணெய் வழங்கு நிலையங்களிலும் பொது மக்கள் வசதிக்காக நடைமுறைப்படுத்தப்பட்டது. இதன் காரணமாக, மண்ணெண்ணெய் நிலையங்களிலும், நியாய விலைக் கடைகளிலும் பொது மக்கள் காத்திருப்பது தவிர்க்கப்படுகிறது.

பொது மக்களுக்கு மண்ணெண்ணெய் வழங்குவதைச் சீரமைப்பதற்கும், கண்காணிப்பதற்கும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் கட்டுப்பாட்டில் இயங்கி வரும் 36 மண்ணெண்ணெய் நிலையங்களும் கணினிமயமாக்கப்பட்டுள்ளன.

பொது விநியோகத் திட்டத்தில் சென்ற ஆண்டு (2006-2007) பொருட்கள் வழங்கப்பட்ட விவரங்கள் பின்வருமாறு:—

| | (மெட்ன்னில்) | | (கி.லிட்டரில்) |
|---|---|---|---|
| மாதம் | கோதுமை | சர்க்கரை | மண்ணெண்ணெய் |
| ஏப்ரல், 2006 | 6,296 | 29,753 | 53,639 |
| மே, 2006 | 6,059 | 29,744 | 55,086 |
| ஜூன், 2006 | 6,042 | 30,845 | 57,958 |
| ஜூலை, 2006 | 4,781 | 30,605 | 55,247 |
| ஆகஸ்ட், 2006 | 3,791 | 30,484 | 55,019 |
| செப்டம்பர், 2006 | 3,453 | 30,132 | 54,525 |
| அக்டோபர், 2006 | 12,783 | 30.164 | 54.529 |
| நவம்பர், 2006 | 8,783 | 29,142 | 55,361 |
| டிசம்பர், 2006 | 8,783 | 29.105 | 55,161 |
| ஜனவரி, 2007 | 10,033 | 28,601 | 54,931 |
| பிப்ரவரி, 2007 | 10,033 | 27.428 | 53.578 |
| மார்ச், 2007 | 9,211 | 26,997 | 54,658 |

[2007 ஏப்ரல் 17

## அத்தியாயம்—V

## பொது விநியோகத் திட்டத்தினை ஒழுங்குபடுத்துதல் மற்றும் விலைவாசிக் கட்டுப்பாடு

பொது விநியோகத் திட்டத்தின்கீழ் முறைகேடுகள் செய்வோர்மீது மிகக் கடுமையாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. பொது விநியோகத் திட்டத்தின்பால் இந்த அரசு காட்டும் பொறுப்புணர்வுக்கு மாறாக, அரிசிபோன்ற உணவுப் பொருட்களைக் கடத்தி அப்பாவி ஏழை மக்களின் வயிற்றில் அடிக்கும் கொள்ளையர்கள்மீது குண்டர் சட்டம்போன்ற கடுமையான சட்டங்களின்மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

1-5-2006 முதல் 31-3-2007 வரை பல்வேறு துறைகளினால் பறிமுதல் செய்யப்பட்டுள்ள பொருட்களின் விவரம் பின்வருமாறு:—

| வ.எண் | பொருட்கள் | அளவு |
|---|---|---|
| 1. | அரிசி | 1,18,343 குவிண்டால் |
| 2. | மண்ணெண்ணெய் | 4,65,742 லிட்டர் |
| 3. | பெட்ரோல் | 23,378 லிட்டர் |
| 4. | டீசல் | 75,876 லிட்டர் |
| 5 | உருளை எரிவாயு | 22,501 எண்ணிக்கை |

கள்ளச் சந்தைத் தடுப்பு மற்றும் இன்றியமையாப் பொருட்கள் வழங்கல் பராமரிப்புச் சட்டம், 1980-ன்கீழ் 1-6-2006 முதல் 31-12-2006 வரை 63 நபர்களும், 1-1-2007 முதல் 31-3-2007 வரை 24 நபர்களும் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டனர். மேலும், 2006 ஆம் ஆண்டில் குண்டர் தடுப்புச் சட்டத்தின்கீழ் 5 நபர்களும் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டனர்.

பொது விநியோகத் திட்டத்தில் வழங்கப்படும் பொருட்களைக் கடத்துவது பற்றிய தகவல்களைச் சரியான நேரத்தில் முழுமையாகத் தெரிவிப்பவர்களுக்கு ஊக்கத் தொகையாக ரூ.500/- வழங்கப்பட்டு வருகிறது. கடத்தல் பற்றிய தகவல்களை உணவுத் துறை அமைச்சர் அலுவலகம், உணவுத் துறைச் செயலாளர், உணவுப் பொருள் வழங்கல் ஆணையர், நுகர்பொருள் வாணிபக் கழகத் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குனர், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர், மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் காவல் துறைக் கண்காணிப்பாளர்கள்



2007 ஏப்ரல் 17]

ஆகியோருக்குத் தெரிவிக்கலாம். மேற்கண்ட அலுவலர்களின் தொலைபேசி எண்கள் பத்திரிகைகள்மூலம் விளம்பரப்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாறு தகவல் தெரிவிப்பவர்களின் விவரங்கள் இரகசியமாக வைக்கப்படுகின்றன. இந்நோக்கத்திற்காக இரகசியக் காப்பு நிதி ஒன்று மாவட்ட ஆட்சித்தலைவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பொது விநியோக நிர்வாகத்தினை முழுவதும் கணினிமயமாக்கும் பொருட்டு, உணவுப் பொருள் வழங்கல் துறை, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மற்றும் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவற்றின் பணிகளை ஒருங்கிணைத்துக் கணினிகள்மூலம் மேற்கொள்வதற்கான திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தினைச் செயல்படுத்த ரூபாய் 298.86 கோடி செலவு ஏற்படும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இத்தொகையை தேசிய மின்னணு நிர்வாக செயல் முறைத் திட்டத்தின்கீழ் மத்திய அரசிடமிருந்து பெறுவதற்குக் கருத்துருக்கள் அனுப்பப்பட்டுள்ளன.

உணவுப் பொருள் கடத்தல் தடுப்பு நடவடிக்கைகளைச் சிறந்த முறையில் மேற்கொள்வதற்கு 24 ஈப்புகள் (jeep) உணவுப் பொருள் கடத்தல் தடுப்பு பறக்கும் படைக்கு வழங்கப்பட்டுள்ளன. பொது விநியோகத் திட்டம் செயல்படுவதைக் கண்காணிக்க மாவட்ட அளவிலும், வருவாய் கோட்ட அளவிலும் மக்கள் பிரதிநிதிகள், தன்னார்வ நுகர்வோர் அமைப்புகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவானது குறைந்தபட்சம் மாதம் ஒரு முறை கூடி, பொது விநியோகத் திட்டத்தினைக் கண்காணித்து, அதில் உள்ள குறைபாடுகளைக் களைவதற்காகச் செயல்படுகிறது.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்கீழ், பொது விநியோகத் திட்டம் தொடர்பாகப் பொது மக்களின் குறைகளைப் போக்குவதற்கான அலுவலர்கள் மற்றும் மேல்முறையீட்டு அலுவலர்கள் அறிவிக்கப்பட்டுள்ளனர்.

### பணியாளர்களும் கட்டமைப்பு வசதிகளும்

குடும்ப அட்டைதாரர்களின் எண்ணிக்கையும், நியாய விலைக் கடைகளின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளதால், கடந்த சில ஆண்டுகளாகப் பணிச் சுமை அதிகரித்துள்ளது. எனவே, பொது விநியோகத் திட்டங்களைச் சிறப்பாக நிறைவேற்றுவதற்குத் தேவையான வசதிகளைச் செய்து கொடுப்பது அவசியமான ஒன்றாகும்.

சென்னையில் உள்ள உணவுப் பொருள் வழங்கல் ஆணையர் அலுவலகத்திலும், மற்ற உணவுப் பொருள் வழங்கல் அலுவலகங்களிலும் காலியாக உள்ள 129 பணியிடங்களை நிரப்புவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. 14 வாகனங்கள் மாவட்ட வழங்கல் அலுவலர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. மேலும், பொது விநியோகத் திட்டம் சிறப்பாக நடைபெறுவதற்காக உணவுப் பொருள வழங்கல் ஆணையாளர்/துணை ஆணையாளர்கள் மற்றும் மாவட்ட வழங்கல் அலுவலர்களுக்கு செல்லிடத் தொலைபேசிகள் வழங்கப்பட்டுள்ளன.

பொது விநியோகத்தினைச் சிறப்பாகக் கண்காணிப்பதற்கும், அரிசிக் கடத்தலைக் கட்டுப்படுத்துவதற்கும், பறக்கும் படை வட்டாட்சியர்கள் அனைவருக்கும் வாகன வசதி செய்து தரப்பட்டுள்ளது.

**விலைகளைக் கட்டுப்படுத்துதல்**

நமது நாட்டில் உற்பத்தி குறைந்துள்ளதாலும், கணினிமூலமான 'ஆன்-லைன்' வர்த்தகத்தினாலும், கோதுமை மற்றும் கோதுமைப் பொருட்கள், பருப்பு வகைகள் மற்றும் சமையல் எண்ணெய்போன்ற அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் கடந்த சில மாதங்களாக உயர்ந்துள்ளன. தமிழகத்தில் இப்பொருட்களின் உற்பத்தி நமது தேவையைப் பூர்த்திசெய்யப்போதுமானதாக இல்லை என்பதால், இவை பிற மாநிலங்களிலிருந்து கொள்முதல் செய்யப்பட்டு விநியோகிக்கப்பட வேண்டியுள்ளன. எனினும், விலைவாசிகளைக் கட்டுப்படுத்தும் நோக்கத்துடனும், ஏழை எளிய மக்கள் விலைவாசி உயர்வினால் பாதிக்கப்படக் கூடாது என்பதற்காகவும், இப்பொருட்களைக் கொள்முதல் செய்து பொது விநியோகத் திட்டத்தின்மூலம் தற்காலிகமாக வழங்க அரசு முடிவு செய்துள்ளது. அதன்படி, துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு, ரவை, மைதா மற்றும் பாமாயில் ஆகியனவற்றை சென்னை நகரில் தமிழ்ப் புத்தாண்டு தினமான 14-4-2007 முதல் குறைந்த விலையில் நியாய விலைக் கடைகள்மூலம் வழங்க அரசு உத்தரவிட்டுள்ளது. மேலும், இத்திட்டம் மே, 2007 முதல் பிற மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்படும். மைய அரசு, வெளிச்சந்தையில் விற்பதற்காக 15,000 டன் கோதுமையை ஒதுக்கீடு செய்துள்ளது. இதைக் கோதுமைப் பொருட்களாக மாற்றி விலைவாசியைக் கட்டுப்படுத்துவதற்காக நியாய விலைக் கடைகள் மூலமாகவும், கூட்டுறவு மொத்த விற்பனை நிலையங்கள்மூலமாகவும் மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின்மூலமாகவும் விநியோகம் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.





## அத்தியாயம்–VI

## இலவச எரிவாயு இணைப்பு மற்றும் அடுப்பு வழங்குதல்

சென்னையில் 15-8-2006 அன்று நடைபெற்ற சுதந்திர தின விழாவில் தமிழக முதல்வர் அவர்கள் ஏழைக் குடும்பங்களுக்கு இலவச எரிவாயு இணைப்பு அடுப்புடன் வழங்கப்படும் என அறிவித்தார். இதன்படி 2006*07 ஆம் ஆண்டில் மூன்று இலட்சம் பயனாளிகளுக்கு இலவச எரிவாயு இணைப்புகள் எரிவாயு அடுப்புடன் வழங்க உத்தரவிடப்பட்டது. இப்பயனாளிகளுக்கு வழங்குவதற்கான 2 எரிப்பான்கள்கொண்ட எரிவாயு அடுப்புகளையும், இந்தியத் தரக் கட்டுப்பாடு நிறுவனம் நிர்ணயித்துள்ள தரத்திலான ரப்பர் குழாய்களையும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தின்மூலம் கொள்முதல் செய்து விநியோகம் செய்வதற்கான வழிமுறைகள் குறித்தும் உத்தரவிடப்பட்டது.

இதன்படி, மாநிலம் முழுவதும் முதற்கட்டமாக 34,500 பயனாளிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, 14-1-2007 அன்று தமிழக முதல்வர் அவர்களால் சென்னையில் இத்திட்டம் துவக்கி வைக்கப்பட்டது. இதற்கான இரண்டாம் கட்ட விழா, திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி வட்டம், சென்னாவரம் கிராமத்தில் முதலமைச்சர் அவர்களால் 17-3-2007 அன்று நடத்தப்பட்டது. 31-3-2007 வரை 2,15,285 இணைப்புகளும், அடுப்புகளும் வழங்கப்பட்டுள்ளன. திட்டமிட்டபடி 3 இலட்சம் இணைப்புகளும், அடுப்புகளும் வழங்கப்பட்டு வருகின்றன. 2006-07 ஆம் ஆண்டில் இதற்குரிய செலவினமாக அரசு 60 கோடி ரூபாய் அனுமதி அளித்து உத்தரவிட்டுள்ளது. மேலும், 2007-08 ஆம் ஆண்டில் 5 இலட்சம் இணைப்புகள் மற்றும் அடுப்புகள் வழங்க வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.100 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

[2007 ஏப்ரல் 17

## அத்தியாயம்–VII

## தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம்

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் 24-4-1972 அன்று இந்திய நிறுமச் சட்டம், 1956-ன்கீழ் ஆரம்பிக்கப்பட்டது. பின்னர் 1975 ஆம் ஆண்டில் தமிழக அரசின் முழு ஆளுமைக்கு உட்பட்ட பொது நிறுவனமாக இது மாற்றப்பட்டது. தமிழகத்தில் உள்ள நியாய விலைக் கடைகளுக்குத் தேவையான இன்றியமையாப் பொருட்களைத் கொள்முதல் செய்வது, கொள்முதல் செய்யப்பட்ட பொருட்களை சேமிப்புக் கிடங்குகளில் சேமித்து வைப்பது, கிடங்குகளில் இருந்து இன்றியமையாப் பொருட்களை நியாய விலைக் கடைகளுக்கு எடுத்துச் செல்வது ஆகியவை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் முக்கியப் பணிகளாகும். தமிழக அரசின் பல்வேறு நலத் திட்டங்களுக்குத் தேவையான பருப்பு மற்றும் இதர அத்தியாவசியப் பொருட்களைக் கொள்முதல் செய்து அரசுக்கு வழங்கும் பணியிலும் இக்கழகம் தன்னை ஈடுபடுத்திக்கொண்டுள்ளது.

இந்நிறுவனத்தின் தலைவர் மற்றும் இயக்குனர் குழுவைத் தமிழக அரசு நியமனம் செய்கிறது. நிர்வாக வசதிக்காக இந்நிறுவனம் 31 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு, முதன்மை மண்டல மேலாளர் / மண்டல மேலாளர்கள், மாவட்ட வருவாய் அலுவலர் / துணை ஆட்சியர் தகுதியில் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. இந்நிறுவனத்தில் 8,563 நிரந்தரப் பணியாளர்கள் பணியாற்றி வருகின்றனர்.

பரவலாக்கப்பட்ட நெல் கொள்முதல் திட்டத்தின்கீழ் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் உள்ள நேரடிக் கொள்முதல் நிலையங்களின் மூலம் உழவர் பெருமக்களிடமிருந்து அரசு நிர்ணயம் செய்துள்ள ஆதார விலையில் நெல்லினைக் கொள்முதல் செய்து, அதனைத் திறம்பட சேமிப்புக் கிடங்குகளில் சேமித்து, இக்கழகத்தின் கட்டுப்பாட்டிலுள்ள 23 நவீன அரிசி ஆலைகளிலும் மற்றும் தனியார் அரைவை ஆலைகளிலும் நெல்லினை அரைத்துப் பெறப்படும் அரிசியினை, மத்தியத் தொகுப்பில் ஈடு செய்து, அதனை இக்கழகம் பொது விநியோகத் திட்டத்திற்குப் பயன்படுத்துகிறது.

தமிழக அரசால் நடத்தப்படும் பல்வேறு நலத் திட்டங்களான புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம், முதியோர்



2007 ஏப்ரல் 17]

ஓய்வூதியத் திட்டம், ஒருங்கிணைந்த குழந்தைகள் ஊட்டச் சத்து வளர்ச்சித் திட்டம், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவ மாணவிகள் விடுதிகள்போன்றவற்றுக்குத் தேவையான அரிசி மற்றும் இதர உணவுப் பொருட்களை மாதந்தோறும் இந்நிறுவனம் வழங்குகிறது. காவல் துறை, தீயணைப்புத் துறை, சிறைத் துறை மற்றும் வனத் துறை ஆகியோருக்குத் தேவைப்படும் அத்தியாவசியப் பொருட்களையும் இக்கழகம் கொள்முதல் செய்து விநியோகம் செய்கிறது.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் பொது விநியோகத் திட்டத்தின்கீழ் மண்ணெண்ணெய் வழங்கும் நிலையங்கள் மற்றும் சில்லறை விற்பனை நிலையங்கள் ஆகியவற்றை நடத்துகிறது. மேலும், கடலூர், வேலூர் மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களில் எரிவாயு அலகுகளை நடத்துதல், பெட்ரோல், டீசல் சில்லறை விற்பனை நிலையங்களை நடத்துதல்போன்ற பணிகளையும் இக்கழகம் மேற்கொண்டுள்ளது.

அமுதம் பல்பொருள் அங்காடிகளின்மூலம் தரமான பொருட்களைக் கொள்முதல் செய்து நியாயமான விலையில் பொது மக்களுக்கு விற்பனை செய்து வருகிறது. மத்திய அரசின் நலத் திட்டங்களான சம்பூர்ண கிராமின் ரோச்கர் யோஜனா திட்டம், அன்னபூர்ணா திட்டம், அந்தியோதயா அன்னயோஜனா திட்டம் போன்ற நலத் திட்டங்களுக்குத் தேவைப்படும் அரிசியினை இந்திய உணவுக் கழகக் கிடங்குகளிலிருந்து எடுத்து விநியோகிக்கிறது.

மேலும், இக்கழகம் இலவச எரிவாயு இணைப்பு மற்றும் அடுப்பு வழங்கும் திட்டத்தின்கீழ் பயனாளிகளுக்கு வழங்குவதற்கான எரிவாயு அடுப்புகளையும், ரப்பர் குழாய்களையும் கொள்முதல் செய்து விநியோகம் செய்கிறது.

### நெல் கொள்முதல்

நடப்பு 2006-07 கொள்முதல் பருவம் 1-10-2006 முதல் தொடங்கியது. இப்பருவத்தில் மத்திய அரசு நெல்லுக்குண்டான குறைந்தபட்ச ஆதார விலையைக் கீழ்க்கண்டவாறு நிர்ணயித்துள்ளது:—

நெல் சாதாரண ரகம் .. ரூ.580/- (குவின்டால் ஒன்றுக்கு)

நெல் சன்ன ரகம் .. ரூ.610/- (குவின்டால் ஒன்றுக்கு)

[2007 ஏப்ரல் 17

விவசாயிகளுக்கு ஊக்கத் தொகையாக குவின்டால் ஒன்றுக்கு ரூ.40/- வழங்கப்பட்டு வருகிறது.

நடப்புக் கொள்முதல் 2006-07 ஆம் பருவத்தில், மொத்தம் 1,200 கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு, 31-3-2007 வரை 14,93,643 மெ.டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

**நவீன அரிசி ஆலைகள்**

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் கட்டுப்பாட்டில் 23 நவீன அரிசி ஆலைகள் உள்ளன. இவற்றின் சராசரி அரைவைத் திறன் மாதம் ஒன்றுக்கு 35,000 மெ.டன் ஆகும். 2005-06 ஆம் ஆண்டில் இந்த நவீன அரிசி ஆலைகள் அரைவை செய்த நெல்லின் அளவு 2,51,716 மெ.டன் ஆகும். இந்த அரிசி ஆலைகளின் அரைவை அளவைக் கூடுதலாக்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு 31-3-2007 வரை 2,95,407 மெ.டன் நெல் அரைவை செய்யப்பட்டுள்ளது.

இந்த அரிசி ஆலைகளின் செயல் திறனை மேம்படுத்தவும், மாசுக் கட்டுப்பாட்டிற்காகவும் அடவத்தூர், பட்டுக்கோட்டை, கடச்சநேந்தல், சுந்தரக்கோட்டை, அம்மன்பேட்டை, எருக்கூர்-1, எருக்கூர்-2, திருநாகேஸ்வரம், சித்தர்காடு மற்றும் மானாமதுரை ஆகிய இடங்களில் உள்ள நவீன அரிசி ஆலைகளில் உருளை வடிவ அடுப்புகள் நிர்மாணித்து இயக்கப்பட்டு வருகின்றன.

**கிடங்குகள்**

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் கட்டுப்பாட்டில் 253 கிடங்குகள் செயல்பட்டு வருகின்றன. இவற்றில் 169 கிடங்குகள் இக்கழகத்திற்குச் சொந்தமானவை. கூடுதல் சேமிப்பு வசதிகளை ஏற்படுத்த வால்பாறை, பேரையூர் மற்றும் பவானி ஆகிய இடங்களில் ரூ.90 இலட்சம் செலவில் கிடங்குகளை மேம்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது.

**நிதி ஆதாரம்**

இக்கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் ரூ.35 கோடி ஆகும். செலுத்தப்பட்ட மூலதனம் ரூ.33.39 கோடி ஆகும். 2006-2007-ல் இக்கழகம் மாநில அரசிடமிருந்து ரூ.1,950 கோடி மானியமாகவும், ரூ.500 கோடி வழிவகை முன்பணமாகவும், (Ways and Means Advance) ரூ.400 கோடி சிறப்பு வழிவகை முன்பணமாகவும் (Special Ways and Means Advance) இதுவரை பெற்றுள்ளது.



2007 ஏப்ரல் 17]

## அத்தியாயம்-VIII

## தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம்

தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம் 1957 ஆம் ஆண்டில் வேளாண் உற்பத்தி நிறுவனச் (வளர்ச்சி மற்றும் சேமித்தல்) சட்டம், 1956-ன்படி தோற்றுவிக்கப்பட்டது. 1962 ஆம் ஆண்டில், இச் சட்டமானது சேமிப்புக் கிடங்கு நிறுவனச் சட்டம் என மாற்றி அமைக்கப்பட்டது. தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம் 02-05-1958 முதல் இயங்கி வருகிறது. சென்னையைத் தலைமையிடமாகக்கொண்ட இந்நிறுவனம், கடலூர், திண்டுக்கல், காஞ்சிபுரம், மேட்டுப்பாளையம், சேலம், திருச்சி மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் 7 மண்டல அலுவலகங்களை ஏற்படுத்திச் செயல்பட்டு வருகிறது. விஞ்ஞானரீதியான சேமிப்புக் கிடங்குகளை அமைத்து வேளாண் பொருட்கள் வீணாகாமல் விவசாயிகளுக்கும், வியாபாரிகளுக்கும் சேவை செய்வதே இந்நிறுவனத்தின் நோக்கமாகும்.

**இந்நிறுவனத்தின் பணிகள் பின்வருமாறு:-**

1. தமிழ்நாடு முழுவதும் 63 சேமிப்புக் கிடங்குகளை இயக்குதல்.
2. சேமிப்பு இழப்பினைக் குறைத்திடும் நோக்குடன் சந்தை நிலவரங்களை ஆய்வு செய்து, தேவைப்படும் இடங்களில் சொந்தக் கிடங்கு வசதியினை ஏற்படுத்தும் பணியினைச் செய்தல்.
3. விவசாயிகள் மற்றும் வியாபாரிகளுக்கு மாற்றக்கூடிய சேமிப்புக் கிடங்குப் பற்றுச் சீட்டுகள் வழங்கி வங்கிகளில் கடன் வசதியினைப் பெற ஏற்பாடு செய்தல்.
4. சரக்குகளை ஏற்றி, இறக்கும் பணிக்கு ஒப்பந்தக்காரர்களை நியமித்து சரக்கு வைப்பாளர்களின் தேவையைப் பூர்த்தி செய்தல்.
5. பூச்சித் தடுப்புப் பணியினை மேற்கொள்ளுதல்.

**நிர்வாகக் கட்டமைப்பு**

இந்நிறுவனத்தின் பொதுவான கண்காணிப்பு மற்றும் மேலாண்மைப் பணிகள் அனைத்தும் இயக்குநர் குழுமத்தின் அதிகாரத்திற்கு உட்பட்டதாகும்.

[2007 ஏப்ரல் 17

இயக்குனர் குழுவானது மத்திய சேமிப்புக் கிடங்கு நிறுவனம் மற்றும் தமிழக அரசால் அவ்வப்போது அளிக்கப்படும் வழிகாட்டுதல் மற்றும் விதிமுறைகளின்படியும் செயல்பட்டு வருகிறது.

**இருப்பு வைப்புக் கொள்ளளவு மற்றும் அதன் பயன்பாடு**

தமிழ்நாடு முழுவதுமாக 63 இடங்களில் உள்ள சேமிப்புக் கிடங்குகளின் இட வசதியைப் பல்வேறு அரசுத் துறைகளுக்கும், நிறுவனங்களுக்கும், வணிகர்கள் மற்றும் விவசாயிகளுக்கும் வாடகைக்கு வழங்கி சேவை செய்து வருகிறது. இந்நிறுவனத்தின் சொந்தக் கிடங்குகளின் கொள்ளளவு 6,32,203 மெ.டன் ஆகவும், வாடகைக்கு எடுக்கப்பட்ட கிடங்குகளின் கொள்ளளவு 36,000 மெ.டன் ஆகவும் உள்ளது. சென்ற ஆண்டு பயன்படுத்தப்பட்ட மொத்தக் கொள்ளளவு இட வசதி 74 விழுக்காடு ஆகும்.

**புதிய / கூடுதல் கிடங்குகள் கட்டுதல்**

நடப்பு ஆண்டில் 6,250 மெ.டன் கொள்ளளவுகொண்ட கிடங்கு ஒன்றினைத் தருமபுரியிலும், 3,400 மெ.டன் கொள்ளளவுகொண்ட கிடங்கினைப் பல்லடத்திலும், 2000 மெ.டன் கொள்ளளவுகொண்ட கிடங்கினை அவினாசியிலும் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**நிதி**

இந்நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஆதார மூலதனம் ரூ.800 இலட்சமாகும். தற்போது செலுத்தப்பட்ட மூலதனம் ரூபாய் 761/- இலட்சமாகும். இந்நிறுவனத்தில் தமிழ்நாடு அரசு மற்றும் மத்திய சேமிப்புக் கிடங்கு நிறுவனம் சம பங்குதாரர்களாக உள்ளனர். இந்நிறுவனம் தொடர்ந்து இலாபகரமாகச் செயல்பட்டு வருகிறது. 2006-07 ஆம் ஆண்டிற்கான நிகர இலாபம் ரூ.450/- இலட்சம் ஆக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.



2007 ஏப்ரல் 17]

## அத்தியாயம்—IX

## நுகர்வோர் பாதுகாப்பு

**நுகர்வோர் விழிப்புணர்வு**

பொது மக்களிடையே நுகர்வோர் உரிமைகள் பற்றிய விழிப்புணர்வை வளர்க்கும்பொருட்டு மாநில அரசு பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. மாநிலம் முழுவதும் தன்னார்வ நுகர்வோர் அமைப்புகள் நுகர்வோர் உரிமைகள்மீதான விழிப்புணர்வைப் பரப்பும் பணியில் ஈடுபட்டுள்ளன. பொது மக்களிடையே நுகர்வோர் உரிமைகள் பற்றிய விழிப்புணர்வை வளர்க்கும் திட்டங்களைச் செயல்படுத்தத் தமிழக அரசு தன்னார்வ நுகர்வோர் அமைப்புகளுக்கும், பல்வேறு பல்கலைக்கழகங்களிலுள்ள தேசிய சேவைத் திட்ட ஒருங்கிணைப்பாளர்களுக்கும் மற்றும் மாவட்ட ஆட்சியர்களுக்கும் நிதியுதவி அளித்து வருகிறது. ஒவ்வொரு வருடமும், உலக நுகர்வோர் தினத்தினைக் கொண்டாட, மாநில அளவிலான கருத்தரங்கினையும், தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு மாவட்டத்தில் கண்காட்சியையும் அரசு நடத்தி வருகிறது. நுகர்வோர் விழிப்புணர்வை வலுவாக்க நடத்தப்படும் கருத்தரங்கிலும், கண்காட்சியிலும் அனைவரும் கலந்துகொள்ளலாம். மேலும், மாவட்டந்தோறும் ஒவ்வொரு வருடமும் தேசிய நுகர்வோர் தினம் டிசம்பர் 24 ஆம் தேதியன்று கொண்டாடப்படுகிறது.

நுகர்வோர் நலன் குறித்த "நுகர்வோர் கவசம்" என்ற காலாண்டு இதழ், உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையால் வெளியிடப்படுகிறது. இவ்விதழ், தன்னார்வ நுகர்வோர் அமைப்புகள், நுகர்வோர் மன்றங்கள், அரசு மற்றும் பொது நிறுவனங்கள், அனைத்துப் பொது நூலகங்கள் மற்றும் அரசு அலுவலகங்கள் முதலானவைகளுக்கு இலவசமாக விநியோகிக்கப்படுகிறது. மேலும், நுகர்வோர் விழிப்புணர்வை வளர்க்கும் நோக்குடன், தொலைக்காட்சி, வானொலி, பத்திரிகைகள் மற்றும் விளம்பரப் பலகைகள் வாயிலாக விளம்பரம் செய்யப்பட்டு வருகிறது.

ஊரகப் பகுதியிலுள்ள நுகர்வோர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்திடும்பொருட்டு, மைய அரசு "ஜக்ரிதி ஷிவிர் யோஜனா" எனும் திட்டத்தினை ஆரம்பித்துள்ளது. இந்த நுகர்வோர் விழிப்புணர்வு முகாம்களில் பட்டிமன்றம், பேச்சுப் போட்டிகள்,

[2007 ஏப்ரல் 17

கட்டுரைப் போட்டிகள், ஓவியப் போட்டிகள் மற்றும் வினாடி வினாப் போட்டிகள் ஆகியன இடம்பெறும்.

நுகர்வோர்களுக்குக் குறிப்பிட்ட துறைகளில் ஏற்படும் பிரச்சினைகளைக் கண்டறியும் நோக்குடன், உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையினால் தொடர்புடைய துறைகளின் ஒத்துழைப்புடன் கருத்தரங்குகள் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

**நுகர்வோர் மன்றங்கள் (Consumer Clubs)**

கல்வி நிறுவனங்களில் நுகர்வோர் மன்றங்களைத் துவங்குவதன் மூலமாக, பள்ளிக் குழந்தைகளைப் பல்வேறு நுகர்வோர் நலன் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தி; நுகர்வோர் கல்வி புகட்டிடவும் அரசு முடிவு செய்துள்ளது. நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம், 1986-ல் வழங்கப்பட்டுள்ள நுகர்வோர் உரிமைகள் குறித்துப் பள்ளிக் குழந்தைகளுக்கு அறிவூட்டுவதும், இளம் வயதினர் நுகர்வோர் பாதுகாப்புத் தொடர்பான பிரச்சினைகளைப் புரிந்துகொள்ள முயல்வதற்கு அவர்களைத் திரட்டுவதும் இத்திட்டத்தின் நோக்கமாகும். மாநிலத்திலுள்ள 500 பள்ளிகளில் நுகர்வோர் மன்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. 'நுகர்வோர் மன்றங்களுக்கான கையேடு' என்னும் தலைப்பில் உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையால் அச்சடிக்கப்பட்ட புத்தகத்தை வழிகாட்டியாகப் பயன்படுத்தும்பொருட்டு அனைத்து நுகர்வோர் மன்றங்களுக்கும் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது.

**நுகர்வோர் பாதுகாப்பு இணையதளம்**

நுகர்வோர்களுக்குத் தகவலளிக்கும்பொருட்டு ஓர் இணையதளம் உருவாக்கப்பட்டு வருகிறது. தேசிய தகவல் மையத்துடன் (NIC) இணைந்து நுகர்வோர் பாதுகாப்புப் பிரிவினால் இந்த இணையதளம் நிர்வகிக்கப்படும். இந்த இணையதளத்தில் 'ஆன்-லைன்' முறையில் விவாதத்திற்கும், குறை தீர்ப்பிற்கும் வழிவகை செய்யப்படும். இப்பணியினை CORE மற்றும் மைய அரசால் ஏற்படுத்தப்பட்ட நுகர்வோர் ஒருங்கிணைப்புக் குழுவும் செய்யும்.

**தமிழ்நாடு மாநில நுகர்வோர் நல நிதி**

தமிழ்நாடு மாநில நுகர்வோர் நல நிதியினை ஏற்படுத்தி, மாநில அரசின் பங்காக ரூ.50 இலட்சத்தைத் தமிழக அரசு வழங்கியுள்ளது.



2007 ஏப்ரல் 17]

இதற்கு இணையான தொகையை மைய அரசு வழங்கும். இந்த நல நிதியின்கீழ் பல்வேறு நுகர்வோர் பாதுகாப்புத் திட்டங்களைச் செயல்படுத்தத் தேவையான வழிகாட்டிகள் அடங்கிய தமிழ்நாடு மாநில நுகர்வோர் நல நிதி விதிகளை அரசு அறிவித்துள்ளது.

**நுகர்வோர் அமைப்புகளுக்கான விருதுகள்**

நுகர்வோர் விழிப்புணர்வுக்கு ஆற்றிய பணியின் அடிப்படையில் ஒவ்வோர் ஆண்டும் 3 தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் தேர்வு செய்யப்பட்டு, அரசால் விருதளித்துக் கௌரவிக்கப்படுகின்றன. இதே போல், மூன்று சிறந்த மாவட்ட நுகர்வோர் பாதுகாப்புக் குழுமங்களுக்கும் விருது வழங்கப்படுகின்றது.

**மாநில மற்றும் மாவட்ட நுகர்வோர் பாதுகாப்புக் குழுமங்கள்**

நுகர்வோர்களின் நலனைப் போற்றி வளர்த்திட, உணவு அமைச்சர் தலைமையில் மாநில நுகர்வோர் பாதுகாப்புக் குழுமத்தினை அரசு ஏற்படுத்தியுள்ளது. மாநிலத்தின் அனைத்து மாவட்டங்களிலும், மாவட்ட ஆட்சியர்கள் தலைமையில் மாவட்ட நுகர்வோர் பாதுகாப்புக் குழுமங்களையும் அரசு ஏற்படுத்தியுள்ளது. சென்னையைப் பொறுத்தமட்டில், நுகர்வோர் பாதுகாப்புக் குழுமத்தின் தலைவராக உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் ஆணையர் உள்ளார். மாவட்ட வழங்கல் அலுவலர்கள் மற்றும் துணை ஆணையர்கள் (சென்னை மாநகரம்) ஆகியோருக்கு மாவட்ட நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர்கள் எனவும் கூடுதலாகப் பதவிப் பெயர் வழங்கப்பட்டுள்ளதால், நுகர்வோர் நலன் தொடர்பான இனங்களில் அவர்களுக்குப் பயிற்சியளிக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம் மற்றும் மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றங்கள்**

1986 ஆம் வருட நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் தமிழகத்தில் மாநில மற்றும் மாவட்ட நிலைகளில் பின்வரும் நீதிமுறைச் சார்புடைய அரசு இயந்திரங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. இவற்றின்மூலம் நுகர்வோர் குறைகள் விரைவாகவும், மிகவும் எளிமையாகவும் தீர்க்கப்படுகின்றன.

**தமிழ்நாடு மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம்**

இவ்வாணையம் ஒவ்வொரு மாநிலத் தலைநகரிலும் உள்ளது. ரூபாய் இருபது இலட்சத்திற்குமேல் மற்றும் ரூபாய் ஒரு கோடிக்குள்

நிவாரணம் வேண்டும் நுகர்வோர் இவ்வாணையத்தில் முறையிடலாம். இவ்வாணையத்தின் தலைவர், உயர் நீதிமன்றத்தின் ஓர் ஓய்வுபெற்ற நீதிபதியாவார். இவ்வாணையம் ஓர் ஆண் உறுப்பினர் மற்றும் ஒரு பெண் உறுப்பினர், ஆக இரண்டு உறுப்பினர்களைக்கொண்டதாகும். மேலும், இவ்வாணையம் மாநிலத்தில் உள்ள அனைத்து மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றங்களில் பதிவு செய்யப்படும் வழக்குகளின் மீது செய்யப்படும் மேல்முறையீடுகளில் தீர்ப்பளிக்கும் அதிகாரமும், மேலும் மாவட்ட மன்றங்களின் ஆணைகளைச் சீராய்வு செய்யும் அதிகாரமும் படைத்ததாகும்.

2007 ஆம் ஆண்டில் இவ்வாணையத்தில் பதிவு செய்யப்பட்ட மற்றும் முடிக்கப்பட்ட வழக்குகளின் விவரம் கீழ்க்கண்டவாறு:—

| மாதம் | மேல்முறையீட்டு மனுக்கள் | | | | அசல் மனுக்கள் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மாதத்தின் துவக்கத்தில் நிலுவையிலுள்ள வழக்குகள் | இம்மாதத்தில் பதிவான வழக்குகள் | முடிவு செய்யப்பட்ட வழக்குகள் | மாத இறுதியில் நிலுவையிலுள்ள வழக்குகள் | மாதத்தின் துவக்கத்தில் நிலுவையிலுள்ள வழக்குகள் | இம்மாதத்தில் பதிவான வழக்குகள் | முடிவு செய்யப்பட்ட வழக்குகள் | மாத இறுதியில் நிலுவையிலுள்ள வழக்குகள் |
| ஜனவரி, 2007 | 2,232 | 170 | 49 | 2,353 | 385 | 1 | 3 | 383 |
| பிப்ரவரி, 2007 | 2,353 | 51 | 59 | 2,345 | 383 | 7 | 6 | 384 |
| மார்ச், 2007 | 2,345 | 50 | 68 | 2,327 | 384 | 5 | 8 | 381 |

**மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றங்கள்**

நீதிச் சார்புடைய இம்மாவட்ட மன்றங்கள் முப்பது மாவட்டங்களில் செயல்படுகின்றன. இவற்றில் தனது எல்லைக்குட்பட்ட நுகர்வோர் ரூபாய் இருபது இலட்சம் வரையிலான மதிப்புள்ள நிவாரணங்களுக்கு வழக்குகள் தொடரலாம். இம்மாவட்ட மன்றத்தின் தலைவரோடு இரு உறுப்பினர்கள் உள்ளனர். உறுப்பினர்களில் ஒருவர் ஆண் உறுப்பினர், மற்றொருவர் பெண் உறுப்பினராகவும் உள்ளனர். இந்த அரசு மே 2006-ல்



பொறுப்பேற்றபோது மொத்தமுள்ள 60 மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்ற உறுப்பினர் பணியிடங்களில், 52 பணியிடங்கள் பல மாதங்களாக காலியாக இருந்தன. இவற்றில் 49 பணியிடங்களில் நியமனங்கள் செய்யப்பட்டு, இம்மன்றங்களின் நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டுள்ளன. இவ்வரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளின் பயனாக நுகர்வோரின் நலன்களில் மேம்பாடு ஏற்படும்.

2007 ஆம் ஆண்டில் மாவட்ட மன்றங்களில் பதிவு செய்யப்பட்ட மற்றும் முடிவுற்ற வழக்குகளின் விவரங்கள் பின்வருமாறு:—

| மாதம் | மாதத்தின் துவக்கத்தில் நிலுவையிலுள்ள வழக்குகள் | இம்மாதத்தில் பதிவான வழக்குகள் | மொத்தம் | முடிவு செய்யப்பட்ட வழக்குகள் | நிலுவையிலுள்ள வழக்குகள் |
|---|---|---|---|---|---|
| ஜனவரி, 2007 | 7,228 | 336 | 7,564 | 306 | 7,258 |
| பிப்ரவரி, 2007 | 7,258 | 315 | 7,573 | 339 | 7,234 |
| மார்ச், 2007 | 7,234 | 331 | 7,565 | 375 | 7,190 |

மேலும், இம்மன்றங்களுக்குத் தேவையான கட்டடங்கள் மற்றும் இதர அடிப்படை வசதிகளைப் பூர்த்தி செய்ய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

[2007 ஏப்ரல் 17

## இணைப்பு III

(195 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

## மானியக் கோரிக்கை எண் 12—கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)

## அறிவிப்புகள்—2007—2008

10. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளின் பெண் உறுப்பினர்களின் கடன்பெறும் திறனை அதிகரிக்க ஏதுவாக, கூடுதல் பங்கு மூலதனம் பெறுவதற்கு உறுப்பினர் ஒருவருக்கு ரூ.500/-வீதம் ஐந்து ஆண்டு சம தவணைகளில் திருப்பிச் செலுத்தும் வகையில் வட்டியில்லாக் கடனாக 2,000 மகளிருக்கு மொத்தம் ரூ.10 இலட்சம் நடப்பாண்டில் வழங்கப்படும்.

11. நகர மற்றும் புறநகர்ப் பகுதிகளிலுள்ள நகரக் கூட்டுறவு வங்கிகளின் பெண் உறுப்பினர்களின் கடன்பெறும் திறனை அதிகரிக்க ஏதுவாக, கூடுதல் பங்கு மூலதனம் பெறுவதற்கு உறுப்பினர் ஒருவருக்கு ரூ.500/- வீதம் ஐந்து ஆண்டு சம தவணைகளில் திருப்பிச் செலுத்தும் வகையில் வட்டியில்லாக் கடனாக 1,000 மகளிருக்கு மொத்தம் ரூ.5 இலட்சம் நடப்பாண்டில் வழங்கப்படும்.

12. கூட்டுறவு வங்கிகளில் உறுப்பினராக உள்ள உடல் ஊனமுற்ற நபர்கள், அவர்களது கடன்பெறும் திறனை அதிகரிக்க ஏதுவாக, நபர் ஒன்றுக்கு ரூ.500/- வீதம் ஐந்து ஆண்டு சம தவணைகளில் திருப்பிச் செலுத்தும் வகையில் வட்டியில்லாப் பங்கு மூலதனக் கடனாக 1,000 நபர்களுக்கு மொத்தம் ரூ.5 இலட்சம் நடப்பாண்டில் வழங்கப்படும்.

13. சிறு வணிகக் கடன் திட்டத்தின்கீழ் ஏற்கெனவே மகளிர் சிறு வணிகக் கடன் வழங்கப்பட்டு வந்தது. இந்தச் சிறு வணிகக் கடன் திட்டம் சிறு வணிகம் செய்யும் ஆடவர்களுக்கும் பயனளிக்கும் வகையில் கடந்த ஆண்டு விரிவாக்கப்பட்டு வாராந்திரக் கடனாகத் தலா ரூ.2,000/- வழங்க ஆவன செய்யப்பட்டது. நடப்பாண்டில் தலா ரூ.5,000/- வரை சிறு வணிகக் கடனாக 25,000 நபர்களுக்குக் கூட்டுறவு வங்கிகள்மூலம் கடன் வழங்கப்படும்.



2007 ஏப்ரல் 17]

14. சென்னை மாநகரத்தில் பொது மக்களின் வசதிக்காகத் தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியின் ஐந்து புதிய கிளைகள் துவக்கப்படும்.

15. கூட்டுறவு நிறுவனங்கள்மூலம் நடத்தப்படும் 50 மண்ணெண்ணெய் வழங்கு நிலையங்கள் கணினிமயமாக்கப்படும்.

16. கூட்டுறவுத் துறையில் மண்டல இணைப் பதிவாளர் அலுவலகங்கள் மற்றும் சரகத் துணைப் பதிவாளர் அலுவலகங்களில் கணினிகள் நிறுவி மின் ஆளுமைத் திட்டம் செயல்படுத்தப்பட நடப்பாண்டில் கணினிமயமாக்க ரூ.50 இலட்சம் வழங்கப்படும்.

17. நகரக் கூட்டுறவு வங்கிகளில் பணியாற்றும் பணியாளர்களுக்கும், பணியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள்/ பணியாளர்கள் கூட்டுறவு வங்கிகளில் பணியாற்றும் பணியாளர்களுக்கும் தற்போது வழங்கப்பட்டு வரும் தனி நபர் கடன் ரூ.2 இலட்சமாக உயர்த்தி வழங்கப்படும்.

18. பணியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கு வழங்கப்படும் வீட்டு வசதிக் கடன் தற்போதுள்ள ரூ.1 இலட்சம் அளவிலிருந்து ரூ.3 இலட்சமாக உயர்த்தப்படும்.

19. தற்போது கூட்டுறவு நிறுவனங்களில் பணியாற்றும் பணியாளர்கள் இறந்தால், அவர் குடும்பத்திற்கு ரூ.1 இலட்சம் வழங்கப்பட்டு வருகிறது. இத்தொகை இனி ரூ.1.50 இலட்சமாக உயர்த்தப்படும்.

20. பணியாளர் கூட்டுறவுக் கடன் சங்கங்களின் பணியாளர்களுக்குத் தேர்வு நிலை மற்றும் சிறப்பு நிலை வழங்கப்படும்.

21. மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளில் பணிபுரியும் வாகன ஓட்டுனர்களுக்கு வழங்கப்பட்டு வந்த சிறப்புப் படி 2003 ஆம் ஆண்டில் நிறுத்தப்பட்டது. இந்தச் சிறப்புப் படி மாதம் ஒன்றுக்கு ரூ.200/- ஆக மீண்டும் வழங்கப்படும்.

22. மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிப் பணியாளர்களுக்கு வழங்கப்படும் பண்டிகை முன்பணம் ரூ.5,000/-லிருந்து ரூ.7,500/- ஆக உயர்த்தப்படும்.

23. சென்னையில் உள்ள திருவல்லிக்கேணி நகரக் கூட்டுறவுச் சங்கம் (டியூசிஎஸ்.) பூங்கா நகர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலை, மதுரை பாண்டியன் நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலை, கோவை சிந்தாமணி நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலை, திருச்சி சிந்தாமணி நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலை ஆகிய 5 நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகளின் வியாபார வளர்ச்சியினை மேம்படுத்தும் வகையில், அவற்றின் இடர்ப்பாடுகளைக் கண்டறிந்து, வளர்ச்சிக்குரிய புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டம் வகுத்து, அவை முறையாகச் செயல்படுத்தப்படுவதைக் கண்காணிக்க உயர் நிலைக் குழு அமைக்கப்படும்.

26. கூட்டுறவுச் சங்கங்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கு ஆண்டுக்கு ஒரு முறை மருத்துவப் பரிசோதனை செய்ய மருத்துவ முகாம்கள் நடத்தப்படும்.

27. தாம்பரம் மற்றும் கொமாரபாளையம் நகரக் கூட்டுறவு வங்கிகளுக்கு இவ்வாண்டு சொந்தக் கட்டடம் கட்டப்படும்.

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
227569
சென்னை-600 008
நூலகம்

அரசு மைய அச்சகம், சென்னை-600 079.

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
110, Anna Salai,
Chennai-600 002.

©

Published under Rules 280 and 283 of
the Tamil Nadu Legislative Assembly Rules
and printed by the
Commissioner of Stationery and Printing,
Chennai-600 002.